# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES
ISSN : 2278 - 7550



ஜூலை - 2014

# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

**INTERNATIONAL JOURNAL FOR TAMIL STUDIES ISSN : 2278-7550**

மலர் : 2 விலை: ரூ.150/- ஜுலை - 2014 இதழ் : 3



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் அ. அறிவுநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

**சிறப்பாசிரியர்**

**முனைவர் சொ. சுப்பையா**
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

**ஆசிரியர்**

**முனைவர் சி. தியாகராசன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**இணை ஆசிரியர்**

**முனைவர் க. இரமேஷ்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.

**துணை ஆசிரியர்கள்**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.

**முனைவர் தா.க. அனுராதா**

**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**
தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

**ஆசிரியர் குழு**

**முனைவர் மு.குருவம்மாள்**
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.

**முனைவர் உ. அலிபாவா**
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.

**முனைவர் ப.சு. மூவேந்தன்**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்**
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

**முனைவர் கோ. பாலசுப்ரமணியன்**
திராவிடப்பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரபிரதேசம்.

**மன்னர் மன்னன் மருதை**
மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், மலேசியா.

**முனைவர் சீதாலட்சுமி**
நன்னியாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.

**முனைவர் ஐ. சாமிக்கண்ணு ஜெபமணி**
சுல்தான் ஐடிரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.

**முனைவர் துரை முத்து சுப்ரமணியன்**
அம்பவுன் அஃப்ஜான்ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, மலேசியா.

**முனைவர் இரா. விஜயராணி**
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி.

**முனைவர் ரெ. முத்துராஜன்**
அண்ணாமலைப்பல்கலைக்கழகம், சிதம்பரம்.

**முனைவர் பா. ஆரோக்கியதாஸ்**
போப் ஜான் பால் கல்வியியல் கல்லூரி, புதுச்சேரி.

**கவிஞர் தங்கம் மூர்த்தி**
சாகித்திய அகாதெமி உறுப்பினர், புதுக்கோட்டை.

**திரு. பா. கு. சண்முகம்**
உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், மலேசியா.

**முனைவர் ஷே. நாகூர்கனி**
ஜமால் முகமது கல்லூரி, திருச்சி.

**வெ.ச.சீனிவாசன்**
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.

**இரா. சந்திரசேகரன்**
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.

**முனைவர் க.தமிழ்ச் செல்வன்**
வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்.

**முனைவர் இ.ஆர். இரவிச்சந்திரன்**
உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சி.

**Dr. P.T.Kingston**
Fakulti Bahasadan Komunikasi University
Pendidikam, Sultan Idris, Malaysia.

**முனைவர் துரை.மணிகண்டன்**
பாரதிதாசன் உறுப்பு கல்லூரி, திருச்சி.

**முனைவர் சி.சிதம்பரம்**
காந்தி கிராமம் பல்கலைக்கழகம், திண்டுக்கல்.

**முனைவர் எஸ்.கவிதா**
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.



**Visit us https//www.pallavipathippakam.in**

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** - *காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.*

*கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.*

## வழிமுறைகள்

1.MS WORD இல், A4 அளவில் பக்கங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

எழுத்துரு பாமினி, செந்தமிழ், ஸ்ரீலிபி ஆகிய ஏதேனும் ஒன்றில் 11புள்ளி எழுத்துருவில் அமையலாம்.

2. வாக்கிய இடைவெளி ஒற்றை இடைவெளியில் (Single Space -1.0) அமையவேண்டும்.

3. கட்டுரைகள் மூன்று முதல் 6 பக்கங்களுக்குள் இருக்கலாம்.

4. கட்டுரைத்தலைப்பானது 20 புள்ளி அளவில் முதல் பக்கத்தின் மையப் பகுதியில் (Center Alignment) அமையவேண்டும். துணைத்தலைப்புகள் (Sub Headings) 12 புள்ளி அளவில் பெரிதாக (Bold) அமையலாம். ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதற்குப் பயன்பட்ட நூல்கள், இதழ்கள், இணையதளங்களின் முகவரி ஆகியன 10 புள்ளி எழுத்துரு அளவில் கட்டுரையின் இறுதிப்பகுதியில் அமைதல் நலம்.

5. கட்டுரைத்தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியன இடம்பெறவேண்டும். ஒரு கட்டுரையை ஒன்றுக்கு மேற்பட்டவர் எழுத நேர்ந்தால்(Co-authors) அதிகபட்சம் இரண்டு நபர்கள் இடம்பெறலாம்.

6. மின்னஞ்சல் முகவரி கட்டாயம் இடம்பெறுதல் வேண்டும்.

7. கட்டுரைகளை ***ayidhaezhuthu@gmail.com*** (அ) என்ற முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்பலாம். குறுந்தகட்டில் (CD) அல்லது தட்டச்சு செய்து அனுப்புவதாக இருந்தால் உறையின் மேல் ***ஆய்த எழுத்து*** என்று குறிப்பிட்டு **பல்லவி பதிப்பகம்**, 194, கண்ணா காம்ப்ளக்ஸ், மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011. என்ற முகவரிக்கு தபாலில் / கூரியரில் அனுப்ப வேண்டும்.

9. பதிப்புக் கட்டணம்(Publications Charges) : ஆய்த எழுத்து இதழுக்கு அரசாங்கத்திடமிருந்தோ, அரசு சாராத தொண்டு நிறுவனங்களிடமிருந்தோ அல்லது தமிழ் அமைப்புகளிடமிருந்தோ நிதி உதவி ஏதும் கிடைக்கப் பெறாததால் அச்சுப்பணி மற்றும் நிர்வாகச் செலவுகளுக்காக கட்டுரையாளரிடமிருந்து கட்டுரை ஒன்றுக்கு ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) பெறப்படுகிறது. வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் செலுத்தியுள்ளவர்கள் இப்பதிப்புக் கட்டணத்தை செலுத்த தேவையில்லை.

10. தனி இதழ் விலை ரூ.150/- இதழைத்தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 4 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | |
|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம்(தனி நபர்) | ரூ. 500 |
| 1 ஆண்டுக்கட்டணம்(நூலகம்/கல்வி நிறுவனங்கள்/ சங்கங்கள் மற்றும் பிற...) | ரூ. 800 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.5000 |
| புரவலர் கட்டணம் | ரூ.10,000 |

உறுப்பினர்/பதிப்புக் கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (D.D) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் அனுப்பலாம். இணையவழி, அலைபேசிவழி, வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் NEFT முறையிலும் பணம் செலுத்தலாம்.**A/C Name:** PALLAVI PATHIPPAKAM. **A/C Type**: CA **A/C No : 33679969977**.**Bank**: STATE BANK OF INDIA, Sathy Road, Erode -638 011. **IFSC** : **SBIN0016100.**


## பல்லவி பதிப்பகம்

194, கண்ணா காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம்,
மேட்டூர் சாலை, ஈரோடு - 638 011.
அலைபேசி:9442251549,9042202211,0424-2263197.
மின்னஞ்சல்: ayidhaezhuthu@gmail.com
pallavipublications@gmail.com

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி நிலப்பண்பாடும் உணவு முறைகளும் | - முனைவர் சு.அரங்கநாதன் | 5 |
| 2. ஆசிரியர் கல்வியில் இணையத்தின் பயன்பாடு | - த.சம்பத்குமார் | 10 |
| 3. தமிழில் பயண இலக்கியம் | - முனைவர் மு.வையாபுரி | 14 |
| 4. அண்ணாவின் படைப்புகளில் நிகழ்ச்சித்திறன் | - வ.ஸ்ரீதர் | 17 |
| 5. கீழ்க்கணக்கு நீதிநூல்களில் அறம் நுவலும் தனிமனித ஒழுக்கம் | - முனைவர் ப.திலீப்குமார் | 21 |
| 6. சங்க இலக்கியத்தில் புராணங்கள் | - சு.விமலா | 26 |
| 7. கடையெழு வள்ளல்கள் | - அ.கார்முகிலன் | 29 |
| 8. சங்க இலக்கியத்தில் சூழலியல் | - செ.மாரிமுத்து | 32 |
| 9. திருமுறைகளின் பார்வையில் காமன் | - ம.எழில் பரமகுரு | 35 |
| 10. சங்க இலக்கியங்களில் வண்ணங்களின் செல்வாக்கு | - ப.சிலம்பரசன் | 39 |
| 11. இரட்டைக்காப்பியத்தில் மணிமேகலையின் பாத்திரவளர்ச்சி நிலை | - ப.மாலதி | 42 |
| 12.நற்றிணையில் தமிழர்களின் பழக்க வழக்கங்கள் | - இரா.வனிதா | 46 |
| 13. தலித் இலக்கியத்தில் முற்போக்கு கோட்பாடு | - முனைவர் அ.கோவிந்தராஜன் | 50 |
| 14. சங்க இலக்கியத்தில் கடவுள் கோட்பாடு | - சு.சுமதி | 52 |
| 15. திருக்குறளில் பெண்மையக் கருத்தியல்கள் | - முனைவர் ப.சு.மூவேந்தன் | 55 |
| 16. தமிழன்பன் கவிதைகளில் எண் வகை மெய்ப்பாடுகள் | - மு.அனு | 62 |
| 17. கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன் | - தி.மணிமொழி | 71 |
| 18. தொல்காப்பியர் காலச் சமூக அமைப்பு | - ஜெ.கோபிகிருஷ்ணா | 75 |
| 19. நாலடியாரில் வினைப்பயன் நிலைப்பாடு | - ந.இராசேந்திரன் | 78 |
| 20. கடவுள் முருகனோடு தமிழ் ஒப்பாய்வு | - ஆ.சுரேஷ் | 82 |
| 21. அகநானூறு மருதத்திணைப் பாடல்களில் மக்கட்பேறு | - செ.மணிகண்டன் | 85 |
| 22. வைரமுத்து கவிதைகளில் கிராமியம் | - பா.சரவணகாந்தி | 88 |
| 23. தற்காலக் கவிதைகளில் பெண் தொழிலாளர்கள் | - வீ.தனலெட்சுமி | 91 |
| 24. தேவாரத்தில் வழிபாட்டு முறைகள் | - ப.ஆனந்த் | 95 |
| 25. தற்காலக் கவிதைகளில் தாய்மொழி வழிக்கல்வி | - சி.அனிதா | 99 |
| 26. ஐம்பெருங்காப்பியங்களில் மனித நேயப் பண்புகள் | - த.குமுதவள்ளி | 103 |

# குறிஞ்சி நிலப்பண்பாடும் உணவு முறைகளும்

**முனைவர் சு.அரங்கநாதன்**

*உதவிப் பேராசிரியர்,*
*தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,*
*தமிழ்நாடு திறந்தநிலைப்*
*பல்கலைக்கழகம்,*
*சென்னை - 15.*

மனித இனம் உணவு, உடை, உறைவிடம் என்ற மூன்றையும் அடிப்படைத் தேவைகளாக கொண்டுள்ளது. மனித இனத்திற்கு மட்டுமல்ல அனைத்து உயிரினங்களுக்கும் உணவு இன்றியமையா அடிப்படைத் தேவையாகும். அதன் பொருட்டுத்தான் உணவு முதன்மையாகச் சுட்டப்படுகிறது. ஒவ்வொரு உயிரினமும் அப்படித்தான் உணவு தேடுவதை அடிப்படையாக கொண்டு செயல்படுகின்றன. மானுட சமூக வளர்ச்சி பற்றிய சமூகவியலார் விளக்கும் போது உணவு சேகரிப்பிலிருந்து வேட்டைச் சமூகம், ஆநிரைச் சமூகம், வேளாண் சமூகமாகப் பரிணமித்தது என்பர். பழந்தமிழர் உணவு தேடுதல், உற்பத்தி செய்தல் எனும் இருமுறைகளைக் கொண்டிருந்தனர். இவர்களின் வாழ்வின் அடிப்படை ஆதாரமே நிலம். அந்த வகையில் நிலமும் பொழுதும் மனிதனின் செயல்பாடுகளையும், நுண்ணிய உணர்வுகளையும் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணிகளாகும். அந்த நிலையையே சங்ககால மனிதனின் வாழ்க்கை அடிப்படையில் நிலத்தை மையமிட்டதாக அமைந்திருந்தது. தான் வாழும் நிலத்தின் தகவமைப்பிற்கேற்ப தமது வாழ்நிகழ்வுகளைக் கட்டமைத்துக் கொண்டதனாலேயே நிலம்சார்ந்த பண்பாடாக நம் பழந்தமிழர் பண்பாடு அடையாளப்படுகிறது.

**உணவு என்ற சொல்லின் வேறு பெயர்கள்**

ஒரு மொழியில் இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கையைப் பல நிலைகளில் வெளிப்படுத்தும் கருவியாகும். தமிழ் இலக்கியங்களில் தமிழரின் உணவு முறைகள் நிரம்பக் கிடைக்கின்றன. இந்நிலையில் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவு பல பெயர்களால் அழைக்கப்பட்டதை,

*“உணவு வல்சி யுண்டி யோதன*
*முசனம் பதமே யிரையோ கார*
*முறையோ யூட்ட முணவெனலாகும்”* (பிங்கல நிகண்டு, பக்கம் - 1153)

என பிங்கல நிகண்டு குறிப்பிடுகின்றது. அதில் உணா, வல்சி, உண்டி, ஓதனம், அசனம், கதம், இரை, ஆகாரம், உரை, ஊட்டம் என்பவை உணவின் பெயர்களாகச் சுட்டப்பட்டுள்ளன. உணவு என்பது மருந்து, உணவு, இனியது எனும் மூன்று பண்புகளையுடையது என்பதை,

*"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா*
*மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"* *(குறள் - 82)*

*"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்"* *(குறள் - 61)*

எனும் குறள்கள் உணர்த்துகின்றன.

*"குறமகள் ஆக்கிய வால் அவிழ் வல்சி"*
(மலைபடுகடாம் 183)

என்பதிலிருந்தும் அவிழ் என்னும் சொல் உணவுப் பொருளாகிய சோற்றைக் குறிக்கும் என்பதும் பெறப்படுகிறது. இவ்வாறு உணவைக் குறிக்க ஏராளமான சொற்கள் தமிழ் இலக்கிய, இலக்கணங்களில் கிடைக்கின்றன.

**குறிஞ்சி நில உணவு முறைகள்**

சங்க கால மக்கள் நிலம், நிலத்தில் கிடைக்கும் உணவுப் பொருட்கள், விளையும் பயிர்கள் போன்றவற்றை அறிந்து தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொண்டனர். அவ்வாறு அமைந்த வாழ்க்கை நிலம் சார்ந்த பண்பாடாக வளர்ந்திருக்கிறது. மனிதச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளங்கள் முக்கிய இடம் பெறுவது "உணவுப்பண்பாடு" ஆகும். இதில் நடைமுறை உணவு, விழாக்கால உணவு, குடும்ப உணவு, பிறந்தநாள் உணவு, இறப்பு உணவு, திருமண உணவு, படையல் உணவு என அனைத்துமே மனிதச் சமூகத்தின் குழுத்தன்மையையும், வேறுபாட்டையும் தீர்மானிக்கும் பண்பாட்டுக் கூறுகளாகும். குறிஞ்சி மக்கள் தினை, ஐவனநெல், அவரை போன்றவற்றைப் பயிர்செய்து உணவாகக் கொண்டனர். இவர்கள் ஐவன நெல்லை உரலில் போட்டுக் குத்தி அதன் பிறகு உணவாக சமைத்துண்டனர். இதனை,

*"மைபடு மால்வரை பாடினன் கொடிச்சி*
*ஐவன வெண்ணெல் சிறுஉம் நாடனொடு"*
(நற்றிணை - 373)

*"மைபடு சிலம்பின் ஐவனம் வித்தி"*
(குறுந்தொகை - 371)

*"சந்து மரத்தின் இயன்ற உலக்கையால்*
*ஐவன நெல் அறை உரலுள் பெய்து இருவாம்"*
(கலித்தொகை - 43)

எனும் வரிகள் பதிவுசெய்துள்ளன.

**தினை மாவு**

தினைப் பயிர் குறிஞ்சி நிலத்தின் தகவமைப்பினை ஏற்று வளரக்கூடியது. இன்றளவும் இப்பயிர் குறிஞ்சி நிலங்களிலேயே அமோக விளைச்சலைத் தருகிறது. குறிப்பாக கொல்லிமலையில் இப்பயிர் இன்றளவும் பயிரிடப்பட்டு வருகிறது. இத்தினை உணவு குறிஞ்சி மக்களின் பிரதான உணவாக இருந்திருக்கிறது. விளைந்த தினையினை இடித்து மாவாக்கி உணவாக உண்டனர் என்பது,

*" ...................... குறமகள்*
*மென் தினை நுவணை உண்டு தட்டையின் "*
*(ஐங்குறுநூறு - 285)*

எனும் வரிகளில் அறியப்படுகிறது.

**மாமிச உணவு**

அசைவ உணவு தமிழர்களின் பண்பாட்டில் மிகமுக்கிய இடத்தைப் பெறுகிறது. தங்களுக்குப் பயன்படக்கூடிய விலங்குகளை வேட்டையாடியும், வளர்த்தும் பழந்தமிழர் உணவாகப் பயன்படுத்தினர். இவ்வுணவை வேட்டையாடுதல் மூலம் பெற்றனர். நிணம் பொருந்திய நெய் மிக்கு விடப்பட்ட சோற்றினை உணவாகக் கொண்டனர். இதே போன்று கொழுப்புடன் சேர்ந்த மாமிச உணவுகளைக் குறிஞ்சி நிலப் பெண்களும் சேர்ந்து உண்டனர் என்பதை,

*"பைந்நிணம் ஒழுகிய அடிசில்"*
*(குறிஞ்சிப்பாட்டு - 204)*

*"வால்நிணப் புனவின் கானவர் தங்கை"*
*(அகநானூறு - 132)*

எனும் வரிகள் உணர்த்துகின்றன.

**எலிமாமிசம்**

எலியின் மாமிசத்தோடு நெய்யிடப்பட்ட வெண்ணிறச் சோற்றினையும் குறிஞ்சி மக்கள் உணவாகக் கொண்டனர். தினையினை மாவாகவும், அரிசியாகவும் பயன்படுத்தியுள்ளனர்.

*"மைஊன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்*
*எலி வான் சூட்டோடு மலியப் பேணும் "*
*(நற்றிணை - 83)*

எனும் வரிகள் சுட்டுகின்றன.

**முள்ளம் பன்றி மாமிசத்தோடு கிழங்குண்ணுதல்**

கிழங்ககழ்தல் குறிஞ்சி மக்களின் உணவுத் தேவையின் பெரும்பகுதியைப் பூர்த்தி செய்திருக்கிறது. இக்கிழங்கு மலைநிலங்களில் அமோக விளைச்சலைத்

தரும் தகவமைப்பினை உடையது. அதே போல் முள்ளம் பன்றியும் மலையும் மலையைச் சார்ந்த இடங்களில் பெரும்பாலும் வாழும் தகவமைப்பினை உடையது. வள்ளிக்கிழங்குகளை மாமிசத்தோடு சேர்த்துண்ணும் பண்பாடு நடைமுறையில் இன்றளவும் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இம்மக்கள் பழமையான குழிகளில் கிழங்குகளை அகழ்ந்தெடுத்து உண்டனர். இக்கிழங்கோடு கானவன் அம்பினால் எய்து கொன்ற முள்ளம் பன்றியின் இறைச்சியையும் குடியில் உள்ளோர் பகுத்து உண்ணும் வழக்கத்தை உடையவர்கள் குறிஞ்சி மக்கள் என்பதை,

*''பழங்குழி அகழந்த கானவன் கிழங்கினோடு''*
*(குறுந்தொகை - 379)*

*''கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை*
*தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு*
*காந்தள் அம்சிறு குடிப் பகுக்கும்''*
*(நற்றிணை - 85)*

எனும் வரிகள் காட்டுகின்றன. இங்கே உண்ணுதல் மட்டும் பண்பாடல்ல. கூடுதலாக எதோடு எதை உண்ணுகிறான் என்பதும், பகுத்து உண்ணும் பண்பாடும் வெளிப்படுகிறது. இது இனக்குழுச் சமூகத்தின் நடைமுறையாகும். இதே போன்று மற்றொரு இடத்திலும் இப் பண்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. தினைப் புனங்களில் தினைக் கதிரை உண்ண வரும் பன்றிகளை வில்லில் பூட்டி அம்பால் எய்து குடிகளில் உள்ளோருக்குப் பகுத்துக் கொடுத்து உண்ணும் மரபு,

*''வில்லில் தந்த வெண்கோட்டு ஏற்றை*
*புனை இருங் கதுப்பின் மனையோள் கொண்டி*
*குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட''*
*(நற்றிணை - 336)*

எனும் வரிகளில் வெளிப்படுகிறது.

**மூங்கில் நெல்குற்றல்**

மூங்கில் குறிஞ்சிநிலத்தில் வளரும் தாவரம். இம்மூங்கில் நெல்மிகவும் பிரசித்திப் பெற்ற அரிதான உணவாகும். ஆனால் இன்று அவ்வுணவு எட்டாக் கனியாக இருக்கிறது. இம்மூங்கில் நெல்லைக் குறிஞ்சி மக்கள் பாறையிலிட்டு யானைத் தந்தத்தை உலக்கையாகப் பயன்படுத்திக் குத்தினர் என்பதை,

*''கோடு உலக்கையாக நல்சேம்பின் இலை சுளகா*
*ஆடகமழ நெல்லை அறை உரலுள் பெய்து இருவாம்''*
*(கலித்தொகை - 41)*

*''கொல்யானைக் கோட்டால் வெதிர்நெல் குறுவாம் நாம்''*
*(கலித்தொகை - 42)*

என்ற வரிகள் கூறுகின்றன.

**பலாவுடன் சோறுண்ணல்**

பலா முக்கனிகளில் ஒன்று. இது தமிழர்களின் உணவு வகைகளில் சிறப்பிடம் பெறுகிறது. பலா சிறந்த உணவாக பழங்காலத்தில் குறிப்பாக மலை நில மக்களின் வாழ்வில் இருந்திருக்கிறது. இன்றும் பலாவின் பல்வேறு வளர்ச்சி நிலைகளிலும், பகுதிகளையும் உணவாகப் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம். பலாவின் பிஞ்சு பொரியலாகப் பயன்படுத்துகிறது. இது கொத்துக்காய் என்றழைக்கப்படுகிறது. பழுக்காத பலாச்சுளை சாம்பார், குழம்பு போன்ற உணவு வகைகளில் பயன்படுத்தப்படுகிறது. பலாக்கொட்டைகள் வேகவைத்து தாலிதம் செய்தும், குழம்புகளிலும், சுட்டும் உண்ணப்படுகிறது. இதனால் தான் பலா அதிகம் விளையும் மலை நிலத்தில் சிறப்புணவாக இருந்திருக்கிறது. பலா மிக்கு பயனுடையது. கனி வகைகளில் இவ்வளவு பருமனான பழம் வேறொன்றும் இல்லை. இக்கனியின் இனிமையால் மரத்திற்கும் சிறப்பு வந்தது. இன்று வருக்கைப் பழம், கூன்பழம் என்ற இருவகைகள் வழக்கில் உள்ளன. இப்பலாச்சுளையுடன் சோற்றினை உண்டனர்.

*''புடைத் தொடுபு உடையூப் பூநாறு பலவுக் கனி''*
*(குறுந்தொகை - 373)*

*''கொழுஞ் சுளைப் பலவின் பயம் கெழுகா அன்''*
*(நற்றிணை - 326)*

*''பல்கோட் பலவின் பயிர்ப்பு உறுதீம் கனி*
*அல்கு அறைக் கொண்டுஊண் அமலைச்சிறுகுடி''*
*(கலித்தொகை - 50)*

இதோடு பலாக் கொட்டையையும் உணவாகக் கொண்டதையும் காணமுடிகின்றது.

*''ஆய்சுளைப் பலவின் மய்கலை உதிர்த்த*
*துய்த்தலை வெண்காழ் பெறூஉங்''*
*(அகநானூறு - 7)*

**தேன்**

தேன் சிறந்த மருந்து உணவாகும். தேன் அதிகமாகக் கிடைக்கும் பகுதி குறிஞ்சி நிலமாகும். தேனீ மலர்களிலுள்ள பூந்தேனை உறிஞ்சியெடுத்து அதனைக் கூட்டில் சேமித்து வைக்கிறது. அதனை மக்கள்

பயன்படுத்தக் கற்றுக் கொண்டதோடு அதனை உணவாகப் பயன்படுத்தி பண்பாட்டு நிலையாகவும் மாறியுள்ளது. ''தேனும் தினைமாவும்'' என்பது நமது குறிப்பாக குறிஞ்சி மக்களின் தனித்த உணவுப் பண்பாட்டு அடையாளமாகும். குறிஞ்சி மக்கள் பாறை இடுக்குகளிலும், மர உச்சியிலும் இருக்கும் தேனை எடுத்து உணவாக உண்டனர்.

*''பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்''*
*(அகநானூறு - 2)*

*''புள்ளூற்றுக் கசிந்த தீம்தேன் கல் அளைக்*
*குறக் குறுமாக்கள் உண்ட மிகச்சிலைப்''*
*(நற்றிணை - 168)*

**தேனுடன் பால் கலந்து உண்ணல்**

பாலும் தேனும் தமிழர்கள் கண்ட சிறந்த சேர்ப்பு உணவாகும். பாலும் உடலுக்கு மிகஅதிகமான சக்தியைத் தரக்கூடியது. இவ்விரண்டையும் அதாவது தேனுடன் பால் கலந்து உண்ணுதலைக் குறிஞ்சி மக்கள் உணவுமுறையில் கொண்டிருந்தனர்.

*''தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு''*
*(ஐங்குறுநூறு - 203)*

*''........................................................................ கையை*
*''தேம் பெய்தீம் பால் வெளவலின் கொடிச்சி''*
*(நற்றிணை - 379)*

*''.................................................................. தேம் பெய்து*
*அளவுறு தீம்பால் அலைப்பவும் உண்ணாள்''*
*(அகநானூறு - 89)*

எனும் வரிகளில் தேனுடன் பால் கலந்து உண்ணும் குறிஞ்சி உணவுமுறை குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வுணவு முறை தமிழர்களின் நீண்ட நெடுங்கால உணவுத் தேடுதலின் முயற்சி விளைவாகும்.

**பால்**

குறிஞ்சி நிலப் பெண்களுக்குப் பால் உணவு கொடுத்தல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பாலை வள்ளம் எனும் பொன்னாலான பாத்திரத்தில் வைத்திருப்பதையும், குறிஞ்சி நிலப் பெண்ணுக்கு பால் உணவாக வழங்கப்பட்டதையும்,

*''பொன்செய் வள்ளத்துப் பால் கிழங்கு இருப்ப''*
*(நற்றிணை - 297)*

*''பாலும் உண்ணாள் பழங்கண் கொண்டு''*
*(அகநானூறு - 48)*

என்ற வரிகளால் அறியலாம்.

**வெற்றிலை**

வெற்றிலை என்பது உண்ட உணவினை விரைவில் ஜீரணிக்கவைக்கும் இயல்புடையது. இன்றும் உணவு உண்ட பிறகு வெற்றிலைப் பாக்கு போடுதல் மரபாகிவிட்ட ஒன்றாகும். அதிலும் குறிப்பாக திருமண உணவு, கோயில் விசேசங்களில் அசைவ உணவு முறைகளில் வெற்றிலைப் பாக்கு பண்பாட்டுக் கூறாக இருக்கிறது. இம்மரபு சங்ககாலம் தொட்டே வந்தமை,

*''தையால்! தம்பலம் தின்றியோ? என்று, தன்*
*பக்கு அழித்து, 'கொண்டீ' எனத் தரலும் - யாது ஒன்றும்''*
*(கலித்தொகை - 65)*

என்பதால் புலப்படுகிறது. மேலும், இன்றளவும் பழங்குடிகள் வயது வரம்பின்றி இருபாலரும் வெற்றிலைப் பாக்கு போடும் பழக்கத்தை இயல்பாகவே கொண்டிருக்கின்றனர்.

**மான் உணவு**

பழந்தமிழ் இலக்கியங்களில் இரலை, கடமா, நவ்வி, மரைமான் என்ற மானின் வகைகள் சுட்டப்படுகின்றன. தினைப்புனத்தில் மேயும் மானை வேட்டையாடி உண்டனர் என்பதையும் அறிய முடிகிறது.

*''கோடு துவையா கோள் வாய் நாயொடு*
*காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு''*
*(நற்றிணை - 276)*

*''............................ தன்னையர்*
*சிலைமான் கடுவிசைக் கலை நிறுத்து அழுத்திக்''*
*(குறுந்தொகை - 272)*

மான் முல்லை நிலத்தில் வாழும் விலங்கினம். ஆனால் குறிப்பிட்ட சில மான் இனங்கள் குறிஞ்சி நிலத்திலும் வாழும் தகவமைப்பினைப் பெற்றுள்ளன. மேலும், குறிஞ்சி நில மக்கள் முல்லை நிலங்களுக்குச் சென்று வேட்டையாடியும் மான் உணவினைப் பெற்றனர்.

**கள்**

கள் பிரதான உணவு இல்லை. கேளிக்கை உணவாக இருந்திருக்கிறது. உணவு உண்பதற்கு முன்

உண்ணக்கூடியதாகவும் இருந்திருக்கிறது. மொத்தத்தில் தமிழர்களின் உணவு முறைகளில் கள் எனும் நீர் உணவு தவிர்க்க முடியாததாக இருந்திருக்கிறது. இன்றும் கொல்லிமலைப் பழங்குடி மக்களின் திருமண உணவு முறையில் மது பிரதான இடத்தைப் பெறுகிறது. கள் நறவு, மது மற்றும் தேறல் என்ற சொற்கள் கள்ளினைக் குறிக்கும் சொற்களாகும். இவ்வுணவு போதை தரக்கூடியது. இதனைக் குறிஞ்சி மக்கள் பலாவுடன் தேனைச் சேர்த்து மூங்கில் குழாய்களில் அடைத்துத் தயாரித்தனர். இக்கள்ளை ஆண், பெண் இருபாலரும் குடித்து மகிழ்ந்தனர்.

*''பயிர்ப்புறப் பலவின் எதிர்ச்சுனை அளைஇ*
*இறாலொடு கலந்த வண்டுமூசு அரியல்*
*நெடுங்கண் ஆடு அமையப் பழுநி கடுந்திரள்*
*பாப்புக் கடுப்பு அன்ன தோப்பி வான்கோட்டு''*

*(அகநானூறு - 348)*

*''அம்பளை சவிளைந்த தேக்கட் தேறல்*
*வண்டுபடு கண்ணியர் மகிழும் சீறூர்''*

*(அகநானூறு - 368)*

தேனால் சமைத்த கள்ளினைப் பனங்குடையிலிட்டு வேட்டையாடும் போது உண்ணும் பழக்கத்தையும், வேங்கை மரத்தடியில் குரவையாடுதலைவயும் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலாகக் காணமுடிகிறது. இதனை,

*''தேம்பிழி தேறல் மாந்தி மகி சிறந்து''*

*(குறிஞ்சிப்பாட்டு - 155)*

*''பேர் இசை உருமொடு மாரி முற்றிய*
*புல் கிடைக் கள்ளின் வண் மகிழ்''* *(நற்றிணை - 253)*

*''அரியல் அம் புகவின் அம்கோட்டு வேட்டை''*

*(குறுந்தொகை - 258)*

*''வாங்கு அமைப் பழுமுறிய நறவு உண்டு*
*''வேங்கை முன்றில் குரவையும் கண்டே''*

*(நற்றிணை - 276)*

என்பதால் தெரியலாம். முல்லை நிலக் கானவனுடன் குறிஞ்சி நிலக் குறவரும் சேர்ந்து கள்ளுண்டனர் என்னும் செய்தியும், கள்ளினைக் கடவுளுக்குப் பலியாக இட்டதையும் காணமுடிகிறது.

*''கடவுள் ஓங்குவரைக்கு ஓக்கி குறுவர்*
*முறித்தழை மகளிர் மடுப்ப மாந்தி''*

*(அகநானூறு - 348)*

*''கழுதில் கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென''*

*(அகநானூறு - 102)*

*''தேம்பிழி நறவின் குறவர் முன்றல்''*

*(அகநானூறு - 78)*

இதே போல் அகநானூறு - 122, 172, 298. குறுந்தொகை - 165, 298. நற்றிணை - 156, 265, 297, 341 என்ற பாடல்களிலும் குறிஞ்சி மக்கள் கள்ளுண்டதற்கான சான்றுகள் கிடைக்கின்றன.

இவ்வாறு குறிஞ்சி நில மக்களின் உணவு முறைகள் அமைகின்றன. இது அவர்களின் தனித்தப் பண்பாட்டு அடையாளமாகவே சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், இவ்வுணவு முறைகள் அனைத்தும் அவர்களின் நிலம்சார்ந்த வாழ்வியலை முன்னிலைப்படுத்துகின்றன. மேலும், அவர்களின் சேர்ப்புணவு அதாவது தேன் - பலா, பால்-தேன், கிழங்கு - பன்றிறைச்சி போன்றன அவர்களின் பன்னெடுங்கால உணவுப் பாரம்பரியத்தின் கண்டுபிடிப்பாகும். மேலும், நிலம், நிலத்தில் கிடைக்கும் உணவுப்பொருட்களைப் பயன்படுத்தும் முறை போன்றவை குறிஞ்சி நில மக்களின் வாழ்வியல் கட்டமைப்பின் புரிதலை நமக்கு உணர்த்துகின்றன. இன்றைப் போலவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் முறைப்படுத்தப்பட்ட, ஆரோக்கியமான உணவுத்தேவையினையும், அவற்றைப் பூர்த்தி செய்யும் முறையினையும் நன்கு கற்றிருந்தனர். இயற்கை, அது தரும் உணவு என்னும் உன்னத வாழ்வே குறிஞ்சி நில மக்களின் உணவுப் பண்பாட்டிலிருந்து பெறப்படுகிறது. இயற்கையின் வழி வாழ்தல் என்பதே குறிஞ்சி மக்களின் வாழ்க்கை முறைக் கண்டுபிடிப்பு. இன்று?

**பயன்கொண்ட நூல்கள்**


1. சுப்பிரமணியன். கா.சங்க காலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. தங்கராசு. மு., சங்க இலக்கியத்தில் நிலவியல், தமிழர் மலர், 12-ஐ.சி.எல்
3. நமச்சிவாயம். சே., தமிழர் உணவு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை.

# ஆசிரியர் கல்வியில் இணையத்தின் பயன்பாடு

**த.சம்பத்குமார்**

*உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் (பொறுப்பு), கல்வியியற்பள்ளி, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 15.*

**கட்டுரைச் சுருக்கம்**

ஒரு நாட்டின் வளர்ச்சியானது கல்வியைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது. அனைத்து நிலை கல்வி வளர்ச்சிக்கும் ஆசிரியர் கல்வியே அடிப்படையாகத் திகழ்கிறது. ''அனைவருக்கும் இலவச கட்டாய ஆரம்பக்கல்வி திட்டம்'' அனைவருக்கும் இலவச கட்டாய உயர்நிலை கல்வி திட்டம்'' நிறைவேற்றப்பட்ட நாட்டிற்கு சிறந்த, தரமுள்ள நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றனர். இதனை பூர்த்தி செய்ய ஆசிரியர் கல்வியை உலகத் தரத்துடன் வழங்க வேண்டும்.

இணையம் ஒரு தகவல் தொடர்பு ஊடகமாக அல்லது கற்பித்தல் அல்லது கற்றல் கருவியாக அல்லது உத்தியாக பயன்படுத்தப்படுகிறது. ஆசிரியர் கல்லூரிகளில் வன்பொருள், மென்பொருள், கட்டமைப்பு வசதிகளுக்கு பற்றாக்குறையில்லை. ஆனால் உண்மையில் ஆசிரியர்களின் இணையதள பயன்பாட்டு திறன்களில் தான் பற்றாக்குறை உள்ளது.

தமிழ்நாட்டில் நேரடி, தொலைநிலை ஆசிரியர் கல்வி கலைத்திட்டத்தில் 'கணினி கல்வி' அல்லது 'கல்வியில் கணினி' பாடங்கள் விருப்பப்பாடமாக அல்லது சிறப்பு பாடமாக உள்ளன. ஆனால் கட்டாய பாடமாக இல்லை. கல்வியியல் கணினிசார் தொழில் நுட்பங்களின் பயன்பாடு, பயிற்சி குறித்து பாடங்களில் இடம்பெறவில்லை. இதனை மேம்படுத்த ஆசிரியர் கல்வியாளர்கள் - ஆசிரிய மாணவர்கள் - பள்ளி ஆசிரியர்கள் என பல மூன்று அடுக்கு முறையில் இணையதள பயிற்சியளிக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக நாட்டிலுள்ள பள்ளிகளிலுள்ள 1.2 இலட்சம் மாணவர்கள் ஆண்டு ஒன்றிக்கு இணையதள பயிற்சி பெறுவார்கள்.

**முன்னுரை:**

இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து பள்ளிக்கல்வி சிறந்த வளர்ச்சியை அடைந்துள்ளது. முழுமையான எழுத்தறிவு, கட்டுமான வளர்ச்சி, பொதுவான அனைவருக்கும் கல்வி ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும். அனைவருக்கும் ஆரம்பக்கல்வி 86 சட்டத்தின்படி (2002), 6-14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு (20 கோழ) எட்டாம் வகுப்பு வரை இலவச வழங்கப்பட்டு வருகிறது. சர்வ சிக்ஷா அபியான் (2002) திட்டத்தின்படி 'அனைவருக்கும் ஆரம்பக்கல்வி' எனும் இலட்சியம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அதுபோல இன்னமும் 5-10 ஆண்டுகளில்

அனைவருக்கும் கட்டாய உயர்நிலைக்கல்வி எனும் திட்டம் அமல்படுத்த உள்ளது. மேற்படி திட்டங்கள் முழுமையாக நிறைவேற வேண்டுமெனில், நாட்டிற்கு சிறந்த தரமுள்ள, நன்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்றனர்.

**தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வி:**

தமிழ்நாட்டில் ஆசிரியர் கல்வியானது இருவழி முறைகளில் வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகம் அங்கீகரித்த 656 கல்வியியல் கல்லூரிகளில் ஆண்டிற்கு சுமார் 10,000 மாணவர்கள் நேரடி ஆசிரியர் பயிற்சி முடித்து வெளியேறுகின்றனர். தொலைநிலை கல்விமுறை வாயிலாக சுமார் 12,000 பேர் பயிலுகின்றனர். ஆகவே, தமிழ்நாட்டில் மொத்தம் 22,000 பேர் ஆசிரியர் பயிற்சி (பிஎட்) எடுத்துக் கொள்கிறார்கள்.

**இணையம் வரையறை:**

உலகளாவிய அளவில் கணினிகள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு, கணினிகளிடையே தகவல்கள் பரிமாறப்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள உலகளாவிய வலையமைப்பு, ''இணையம்'' எனப்படுகிறது. இணையம் என்பது உலக மக்களின் கூட்டு முயற்சியாகும். உலகளவில் இணைக்கப்பட்டுள்ளதாலும், அனைவருக்கும் பொதுக் கட்டுப்பாடு உள்ளதாலும் அனைத்து தரப்பு மக்களையும் கலந்துள்ளது. தகவல்கள், தரவுகள், கணக்கு வழக்குகள், பரிமாற்றங்கள், ஒலி-ஒளி கோப்புகள் மற்றும் பலவற்றை இதன் மூலம் சுலபமாகக் கையாளலாம்.

உலகிலுள்ள இணையதள பயனாளிகளின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 2.2 மில்லியன் ஆகும். ஆசிய இணையதள பயனாளிகளின் எண்ணிக்கையானது 38% இருந்து 43% ஆக அதிகரிக்கும். அதுபோல உலக இணைய தள பயனாளிகளின் எண்ணிக்கையில் இந்தியா மூன்றாவது இடத்தை வகிக்கும். இந்திய ஆன்லைன் 2013 கணக்கீட்டின்படி இணைய தளத்தை பயன்படுத்தும் 26.2% மக்கள் ஆங்கில பயன்பாட்டையே விரும்புகின்றனர். அதற்கு அடுத்த நிலையில் இந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், மராத்தி, குஜராத்தி மற்றும் பெங்காளி போன்ற மொழிகளின் பயன்பாடு வரிசைப்படுத்தப்படுகிறது.

**ஆசிரியர் கல்வியில் இணையதளத்தின் பங்கு:**

இணைய பயன்பாட்டின் மூலம் கல்வியானது புதிய பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது. 21ம் நூற்றாண்டில் ஆசிரியர்கள் அனைவரும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை, குறிப்பாக இணையத்தை பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். இன்று மிகப்பெரிய பிரச்சனை என்னவெனில், கல்வித்துறையில் வன்பொருள், மென்பொருள் பற்றாக்குறை இல்லை. ஆனால், உண்மையில் ஆசிரியர்களின் இணையதள பயன்பாட்டுத் திறன்களில் பற்றாக்குறை உள்ளது. ஆகவே அனைத்து ஆசிரியர் கல்வியாளர்கள் - மாணவ ஆசிரியர்கள் - பள்ளி ஆசிரியர்கள் - பள்ளி மாணவர்களுக்கு படிப்படியாக இணையதளம் குறித்த அடிப்படை அறிவு, திறன்களில் கற்பிக்கவும் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும்.

**தொலைநிலை ஆசிரியர் கல்வியில் இணைய தளத்தின் பயன்பாடுகள்:**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியற் பள்ளியின் பல்வேறு செயல்பாடுகளில் இணையம் பயன்பட்டு வருகிறது.

1. முன்சேர்க்கை – பி.எட். சேர்க்கைக்கான தகுதிகள், கால அளவு, திட்டம், தேர்வுமுறை, கட்டணம் ஆகியவற்றை இணையம் வாயிலாக தெரிந்து கொள்ளலாம். இவ்வாண்டு CY 2015 - பி.எட் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை இணையத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

2. பி.எட் சேர்க்கை: பி.எட் சேர்க்கை குறித்த முழுவிவரங்கள், விதிமுறைகள் இணையத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. பி.எட் சேர்க்கை தரவரிசைப் பட்டியல் இணையத்தில் வெளியிடப்படுகிறது.

3. கலந்தாய்வு வகுப்புகள்: பி.எட் கலந்தாய்வு கால அட்டவணை முன்கூட்டியே இணையத்தில் வெளியிடப்படுகிறது.

4. ஒப்படைப்புகள்: பி.எட். முதல், இரண்டாம் ஆண்டுகளுக்கான ஒப்படைப்புகள் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன. கலந்தாய்வு வகுப்புகளுக்கு முன்பாக மாணவர்கள், ஒப்படைப்பு எழுதும் தயார் மனநிலையில் வருவார்கள்.

5. பயிற்சிப்பட்டறை: ஒவ்வொரு பி.எட். பயிற்சி மையத்திலும் நடைபெறும் பயிற்சிப்பட்டறை தேதி விவரங்கள் இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

6. கற்பித்தல் பயிற்சி: ஆசிரியர் பயிற்சியின் போது பல்வேறு பள்ளிசார் பயிற்சிகளில் இணையத்தை தேவைப்பட்டால், பயன்படுத்திக்கொள்ள பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர்.

7. பாடம்சார் தேர்வுகள்: பி.எட். தேர்வு கால அட்டவணை இணையத்தில் வெளியிடப்படுகிறது. இறுதி தேர்வுக்கான நுழைவுச்சீட்டு கிடைக்கப்பெறாதவர்கள் நகல் நுழைவுச்சீட்டை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

8. செய்முறைத் தேர்வுகள்: செய்முறை தேர்விற்கான விவரங்கள், தேதி, மற்ற பிற விவரங்கள் இணையத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

9. தேர்வு முடிவுகள்: பல்கலைக்கழக இணையதளம் மற்ற பிற இணையதளங்களில் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. மறு மதிப்பீடு செய்ய விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து, விண்ணப்பிக்கலாம்.

10. நிர்வாக செயல்பாடுகள்: பல்கலைக்கழகத்திலுள்ள கல்வியியல் பள்ளி – தேர்வுப்பிரிவு – புத்தகப்பிரிவு – பி.எட் பயிற்சி மையம் – மாணவர்கள் அனைவரும் இணையம் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக 4 இணைக்கப்பட்டு, திறம்பட செயல்படுத்தப்படுகிறது.

11. கல்வி செயல்பாடுகள்: பல்கலைக்கழக கல்வியியல் பள்ளி – 10 பி.எட் பயிற்சி மையம் – ஆசிரியர் மாணவர்கள் அனைவரும் மின்னஞ்சல், இணையம் வாயிலாக இணைக்கப்பட்டு அறிவு, அனுபவம், திறன்களில் மேம்பாட்டிற்கு வழிவகுக்கப்படுகிறது. ஆனால் இன்றளவில் ஆசிரியர் கல்வியில் இணையத்தின் பயன்பாடு குறைவாகவே உள்ளது.

இவ்வாறு பி.எட். விண்ணப்பம் முதல் பட்டமளிப்பு வரை அனைத்து செயல்பாடுகளிலும் இணையதள பயன்பாட்டின் பங்கு உள்ளது. ஆனால், கற்பித்தல் – கற்றலில் இணையதள பயன்பாட்டின் விகிதம் 5 – 10% என்ற அளவில் மிகக்குறைவாக இருக்கிறது. இணையதள பயனாளிகளால் கற்பித்தல், ஒருவழிக் கற்பித்தலிருந்து தப்பித்துக்கொள்ள முடிகிறது. நீண்டகால தொடர் இணையதள பயன்பாடுகளின் விளைவாக ஒரு மாணவ – ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் பாணி, சுயசிந்தனை, சுய–நோக்கு, கற்றல் திறன் வளர்ப்பு அடைகிறார்.

**பல்–அடுக்கு பயிற்சிமுறை:**

ஆசிரியர் கல்வியாளர்கள் – மூத்த பயிற்சி ஆசிரியர் – ஆசிரிய மாணவர்கள் – பள்ளி மாணவர் என வரிசைப்படி இணையதளப் பயிற்சி பல் அடுக்கு முறையில் தொலைநிலை ஆசிரியர் கல்வி வழங்கப்பட வேண்டும். தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பள்ளியில் பணிபுரியும் 10 உதவிப் பேராசிரியர்களும் 10 பி.எட் பயிற்சி மையத்தின் பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் ஆவர். பி.எட் பயிற்சி மையத்திலுள்ள 10 கல்வியியல் ஆசிரியர்களுக்கு இணையதள பயிற்சியளித்து இதன் வாயிலாக 100 ஆசிரிய மாணவர்களுக்கு பயிற்சியை தொடர்ந்தளிக்க முடிகிறது. இவ்வாறு பி.எட். பயிற்சி முடித்த 100 மாணவர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் 50–100 பள்ளி மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆசிரியரும் ஆசிரிய இணையதள பயிற்சியளிக்க இயலும், தமிழகத்தில் 34,658 பள்ளிகளில் கிராமங்களிலும் 13,782 பள்ளிகள் நகரங்களிலும் உள்ளன. இவ்வாறு இத்திட்டத்தை செயல்படுத்தினால், சுமார் 1.2 இலட்சம் பள்ளி மாணவர்கள் இணையதளங்களை வருங்காலங்களில் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படுத்த இயலும் என்பதே கட்டுரையாளரின் நம்பிக்கையாகும்.

**மாணவ–ஆசிரியர்கள் பயிற்சி மூலம் பெறும் திறன்கள் பின்வருமாறு:**

i) இணைய தளத்தை முழுமையாக பயன்படுத்துதல்.

ii) அனைத்து கணினி மென்பொருள்கள் – சொல்லி செயலி, விரிதாள், தரவு தளங்கள் புள்ளியியல் மென்பொருள் பயன்படுத்துதல்.

iii) மின்னஞ்சல் அனுப்பி, பெறுதல். தொலைத்தொடர் மின்தொடர் கொள்ளும் முறையை புரிந்து கொள்ளுதல்.

iv) மின்னணு காமரா, வீடியோ காமேராவை கணினியுடன் சேர்த்து கையாளுதல்.

v) கற்பித்தல் மென்பொருள்கள் பயன்படுத்துதல், தொலை தொடர்பு இடைவிளை வகுப்புகள் நடத்துதல்.

vi) கற்பித்தலுக்கு தேவையான வளங்களை உருவாக்குதல்.

vii) தேடும் தளங்கள் இயங்குதளங்கள் அடையாளம் காணுதல்.

viii) தமிழ் இணைய தளங்களில் தமிழ் கற்பித்தல் தளங்களைப் பயன்படுத்துதல்.

ix) வன்தட்டு தயார்படுத்துதல், கோப்பு மாற்றுகள், வன்தட்டு மேலாண்மை, வருடி, அச்சு இயந்தரத்தை இலகுவாக கையாளுதல்.

x) உலக விரிதளத்தில் தேடு தளங்களில் தகவல்களை பெறுதல்

xi)கணினி துணையுடன் கற்றல் கற்பித்தல்

xii)இணைய பக்கங்களை உருவாக்கி, சீர் செய்து, பராமரித்தல்.

xiii) கற்பிக்கும் பாடங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்தல்

மேற்படி திறன்களில் மாணவ-ஆசிரியர்களுக்கு பயிற்சியளிப்பது ஆசிரியர் கல்வியாளர்களின் கடமையாகும்.

**ஆசிரியர் கல்வி கலைத்திட்டத்தில் கணினிக் கல்வி – இன்றைய நிலை:** தமிழ்நாடு ஆசிரிய கல்வி பல்கலைக்கழகத்தின் பிஎட் கலைத்திட்டத்தில் 11 சிறப்பு பாடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 'கல்வியில் கணினி' எனும் கணினிக்கல்வி ஒரு பாடமாக உள்ளது. இதனை மொத்தமாக சுமார் 5-6% மாணவர்கள் மட்டுமே விருப்ப/சிறப்பு பாடமாக தேர்வு செய்திருக்கிறார்கள். அதுபோல தொலைநிலை ஆசிரியர் கல்வியின் இரண்டாம் ஆண்டில் 'கணினி கல்வி' சிறப்பு பாடங்களுள் ஒன்றாக இருக்கிறது. ஆகவே, இவர்கள் மருத்திற்காகக்கூட கணினி கல்வியை பயிலவில்லை. எனவே, எதிர்காலத்தில் பணிபுரியும் பள்ளிகளில் கணினி மற்றும் இணைய தொழில்நுட்பங்களை கற்பித்தல், அதைத் துணை செயல்பாடுகளில் பயன்படுத்தப் போவதில்லை என்பது உறுதி.

''கணினி கல்வி'' கலைத்திட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில் 2 தொகுதியானது கணினி அறிவியலைப் பற்றியே கூறுகிறது. ஒரே ஒரு தொகுதி மட்டும் கல்வியில் கணினி மற்றும் கணினி துணையுடன் கற்றலை விளக்குகிறது. மேலும் ஒரு பாடப்பிரிவு மட்டுமே கல்வியியலை விளக்குகிறது. போதிய செய்முறை பயிற்சி, கணினி-இணையத்தை கையாளும் திறன்களில் பயிற்சியளிக்கப்படவில்லை.

ஆகவே, ஆசிரியர் பயிற்சியில் கட்டாயமாக ''கணினி கல்வி'' எனும் ஒரு பாடம் புகுத்தப்பட வேண்டும். இப்பாடத்தில் உள்ள 4 தொகுதிகளில் ஒரு தொகுதியை 'இணையம்' என ஒதுக்க வேண்டும். அவற்றிலுள்ள பாடப்பிரிவுகள் பின்வருமாறு அமைக்கலாம். 1: இணையம்-முன்னுரை, வளர்ச்சி, 2: கல்வியில் இணையதள பயன்பாடுகள் 3: ஒருங்குறியீட்டுமுறை முன்னுரை, வளர்ச்சி 4: ஒருங்குறிமுறையின் பயன்பாடுகள் - சிக்கல்கள், தீர்வுகள் இடம்பெற வேண்டும். இவை செய்து கற்றல் முறைப்படி கற்பிக்கப்பட வேண்டும்.

**முடிவுரை:**

இவ்வாறு ஆசிரியர் மற்றும் மாணவர்கள் தங்களது கற்பித்தல் - கற்றலில் கணினி மற்றும் இணைய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஆசிரியர் கல்வி மூலம் மேம்படுத்தலாம். இதன் விளைவாக பள்ளி மாணவர்கள் அனைவரும் இணைய தொழில்நுட்பங்களை தமிழில் பயன்படுத்த தேவையான அறிவு, பயிற்சி கிடைக்கப் பெறுவார்கள். மேலும் கணினி மற்றும் இணையத்தை ஊடகமாக அல்லது கருவியாக பயன்படுத்த ஆசிரியர் கல்வியாளர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். தமிழ் இணைய தள பயன்பாட்டின் முக்கியத்துவத்தை ஆசிரியர்களை உணரச் செய்ய வேண்டும்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Berners - Lee T.with Ficchelti (1999) Weaving the web: the past, present and future of the world wide web by its inventor, Orion Books, London.

2. Intel Education., & NCTE. (2007). Hand book for teacher educators. Bangalore: NCTE.

3. Pankaj Sharma. (2004). Computer Networking. APH Publishing Corporation.

4. Rajasekar, S. (2005). Computer Education and Educational Computing, Hyderabad, Neelkamal Pub.Pvt.Ltd.

5. Siddiqui M.H. (2004). Distance Learning Technologies in Education, APH Publishing Corporation, New Delhi.

6. Sampathkumar,T. (2009) computers in Education, Chennai, Paavai Printers Pvt.Ltd.,

7. Sampathkumar,T.(2006) Computer in Education (Tamil and English) B.Ed, book, Tamil Nadu Open University.

8. Rajaraman V., (1998), Fundamentals of Computers, Prentice-Hall of India Pvt.Ltd

9. Verma, Romesh et.al, (1998), Modern Trends in Teching Technology, Bhargava Publications.

# தமிழில் பயண இலக்கியம்

**முனைவர் மு.வையாபுரி**

*உதவிப் பேராசிரியர்,*
*தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம்,*
*தமிழ்நாடு திறந்தநிலைப்*
*பல்கலைக்கழகம்,*
*சென்னை – 15.*

**பயணம் – சொற்பொருள் விளக்கம்**

''பயண இலக்கியம்'' என்பது தமிழுக்கு புதிய இலக்கிய வகை அல்ல எனலாம். தமிழ் இலக்கியப் பின்புலத்தில் ''பயண இலக்கியம்'' என்ற பொருளில் இலக்கியங்கள் இல்லை எனினும் அதன் கூறுகளை உள்ளடக்கிய இலக்கியங்களான ஆற்றுப்படை, வழிநடைச் சிந்து ஆகியவற்றை இவ்வகைப்பாட்டில் அடக்கலாம். பயணம், சுற்றுலா, செலவு, சேத்ராடனம், பிரயாணம் என்பன ''பயணம்'' என்னும் பொருளை உள்ளடக்கிய சொற்களே ஆகும். தமிழ் மொழி அகராதி, செலவு என்ற சொல்லுக்கு உத்தரவு, செலவிடுதல், பயணம், பெருங்காப்பிய உறுப்புகளுள் ஒன்று, போக்கு, போதல், முடிவு, வழி என்று பொருள் தருகிறது. வழிச்செலவு என்னும் சொல் மக்கள் வழக்கில் இருப்பொருளிலேயே ஆளப்படுகிறது.

**பயண இலக்கியத்தின் நோக்கம்**

நிலப்படங்களும் நிலப்பட வரைவியலும் இல்லாத முற்காலத்தில் பயணிகள் பாதைகளைக் கண்டறிவதும் அதன் வழி செல்வதும் அவர்களுக்கு பெரும் இடையூறு தரும் ஒன்றாகவே அமைந்தது எனலாம். எனினும் பல்வேறு இடையூறுகளுக்கிடையே அவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய தேசங்களுக்கும் ஊர்களுக்கும் சென்று வந்து, அந்த அனுபவத்தை தமக்குப் பின்பு வருவோர் பயன்படுமாறு குறிப்பேடுகளில் பதிவு செய்து வைத்தனர். இன்னும் அரசர்கள் சார்பில் வெளி தேசங்களுக்கு பயணம் மேற்கொண்ட பயணிகளுடைய குறிப்புகளும் ஒரு வகையில் பயண இலக்கியத்தின் இயல்புகளைக் கொண்டிருந்தன. இவை வெறும் பயண அனுபவங்கள் என்ற அளவில் மட்டும் கருதத்தக்கவை அல்ல. தாங்கள் சென்றுவந்த தேசத்தின், புனித இடங்களின், அரசவைகளின், இயற்கை சார்ந்த பகுதிகளின் சமூக, அரசியல், பொருளாதார நிலைமைகளை பதிவுசெய்வதோடு, அவற்றை தாம் சார்ந்த சமூகத்தின் பார்வைக்கும் படைத்தளிக்கும் அரிய செயலாகும். அவ்வகையில் பயண இலக்கியத்தின் நோக்கம் பிற இலக்கியங்களின் நோக்கங்களினின்றும் வேறுபட்டதும் தனித்துவமிக்கதுமாகும் எனலாம்.

**தமிழில் பயண இலக்கியம் மிகுதியாக படைக்கப்பட்ட காலம்**

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே தமிழில் பயண இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின எனலாம். 19 ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய உலகில் மட்டுமின்றி இந்திய இலக்கிய உலகிலும் புதிய மாற்றங்கள் நிகழ்ந்த காலமாகும். ஐரோப்பியர்களின் கிறித்தவ பாதிரியார்களின் வருகையால் இந்தியச் சூழலில் குறிப்பாக, தமிழ்ச் சூழலில் அச்சு என்கிற ஒரு புதிய முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அது தமிழ்ச் சமூகத்தின் இங்கு தளங்களில் பல்வேறு புதிய பரிமாணங்களை தோற்றுவித்தது. அதுவரை ஓலைச் சுவடிகளில் தனிப்பட்ட மனிதர்களுக்கே உரிய ஒன்றாக இருந்த இலக்கியங்களை அனைவருக்குமானதாக

மாற்றியதில் அச்சு முறைமைக்கு முக்கிய இடமுண்டு. இதன் விளைவாக தாள் பயன்பாடு பரவலானது, மக்களிடையே வாசிக்கும் பழக்கம் அதிகமானது. தாங்கள் பார்ததை, படித்ததை, கேட்டதை தாங்கள் விரும்பிய மொழியில் எழுதவும் பிரசுரிக்கவும் சுதந்திரம் கிடைத்தது. இதன் விளைவாக புத்தகங்கள் கிடைப்பது எளிதானது. புத்தகங்களின் வரவால் மேலை, கீழை நாட்டு இலக்கியங்கள் பற்றிய அறிமுகம் கிடைத்தது. படித்த நடுதர வர்கம் என்று சமூகத்தில் ஒரு புதிய வகை மக்கள் தோன்றினார். கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு என்று ஒவ்வொரு துறையிலும் புதிய திசையை கண்டறிவது அவசியம் ஆனது. புதிய இலக்கிய வகை அறிமுகம் அனைத்து மொழிகளுக்கும் கிடைத்தது. இந்தப் பின்புலத்தில் பல்வேறு புதிய இலக்கியங்கள் படைக்கப்பட்டன. அவ்வகையில் பயண இலக்கியமும் பெருமளவில் தோன்றத் தொடங்கியது எனலாம்.

எனினும் இருபதாம் நூற்றாண்டில் தான் தமிழில் மிகுதியாக பயண இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. குறிப்பாக, கி.பி.1988 முதல் 2008 வரையிலான காலப்பகுதியில் தமிழில் ஏறத்தாழ 600 புத்தகங்கள் வெளிவந்துள்ளன. ஜான் மர்டாக் என்பவர் தமிழில் வெளியான நூல்களை எல்லாம் பல்வேறு வகைப்படுத்திய பட்டியலிட்டதை போன்று, தமிழ்ச் சூழலில் இதுவரை வெளிவந்துள்ள பயண நூல்கள் பற்றிய பட்டியலை வகைப்படுத்தி தொகுப்பதன் மூலம் பயண இலக்கியம் பற்றிய முழுமையான புரிதலை நாம் பெற இயலும்.

1888 ஆம் ஆண்டு சேலம் பகடலு நரசிம்மலு நாயுடு என்பவர் எழுதிய ஆரிய திவ்யதேச யாத்திரையின் சரிதம் என்ற நூலே புதிய தமிழின் முதல் பயண இலக்கியம் எனக் குறிப்பிடப்படுகிறது. இது மட்டுமல்லாது, எனுகுல வீராசாமி ஐயரின் காசி யாத்திரை, அ.க. செட்டியாரின் ''சுற்றும் உலகம் தமிழன்'', ''பிரயாண நினைவுகள்'', ''கடனா முதல் கரிபியன் வரை'', ''மகாத்துமாவின் அடிச்சுவட்டில்'', போன்ற நூல்களும் சோமலேவின் ''எனது பிரயாண நினைவுகள்'' நெ.து சுந்தரவடிவேலுவின் ''பிரிட்டனில்'', ''புதிய ஜெர்மனியில்'', ''சோவியத் நாட்டில்'', ''சோவியத் மக்களோடு'', ''உலகத் தமிழ்'' பாரதியாரின் ''பாபநாசம்'', ''எங்கள் காங்கிரஸ் யாத்திரை'', உ.வே.சாவின் ''திருமலைராயன் பட்டணம்'', கல்கியின் ''கோடிக்கரை'', ''ஐந்து நாடுகளில் அறுபது நாள்'', சு.ந.சொக்கலிங்கத்தின் ''ஜப்பானில் நான் கண்டதும் கேட்டதும்'', அரு.சோமசுந்தரத்தின் ''வட இந்தியப் பயணம்'', தி.க சண்முகத்தின் ''கலை கண்ட மலேசியா'', மணியனின் ''இதயம் பேசுகிறது'', சாரதா நம்பியாரூரானின் ''அலைகடலுக்கு அப்பால்'', சாவியின் ''நவகாளி யாத்திரை'', கவிஞர் வைரமுத்துவின் ''வடுகபட்டி முதல் வால்கா வரை'', வா.மு.சேதுராமனின் ''கொய்ரோவில்'', அ.திருமலைமுத்துசுவாமியின் ''நூலக நாட்டில் நூற்றியிருபது நாட்கள்'', தொ.மு.பாஸ்கர தொண்டைமானின் ''வேங்கடம் முதல் குமரி வரை'' – 4 பாகங்கள், ''வேங்கடத்திற்கு அப்பால்'' சா. கணேசனின் ''முன்னேறிய நாடுகளில் முப்பது நாள்'' போன்ற நூல்கள் குறிப்பிடத்தகுந்தவையாகும்.

### பயண இலக்கியமும் கடித இலக்கியமும்

வாழும் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஏதாவது காரணம் பற்றிச் செல்லுதல் பயணம் ஆகும். பயணம் சென்ற ஒருவர், தான் சென்ற இடத்தில் பார்த்தவை, கேட்ட செய்திகள், அனுபவங்கள், அதன் சிறப்பியல்பு, அங்கு வாழ்வோர் போன்றவற்றைச் சுவையாக எழுதும்போது அது பயண இலக்கியமாக மலர்கிறது. தமிழ் இலக்கியத்தில் இதனைத் தனித்துறையாக வளர்க்க உதவியவர்கள் ஏ.கே.செட்டியாரும், சோமலெயும் ஆவார்.

ஒரு செய்தியை ஒருவர் குறிப்பிட்ட நபருக்குக் குறித்து ஏதேனும் அனுப்புவது கடிதத்தின் இயல்பாகும். கடிதம் உரிய வடிவுடன் பொருட் செறிவாலும் கற்பனை நயத்தாலும் சிறக்கும் போது கடித இலக்கியமாக உருப்பெறுகிறது. கடித இலக்கியத்தை முற்றிலும் உரைநடைக்கே உரியது எனக் கூறமுடியாது. காப்பியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கடித இலக்கியத்தின் தோற்றுவாய் உள்ளது. செய்யுள் உலகிலோ சீட்டுக்கவி என அது புகழ் பெற்றது. எனவே பயண இலக்கியமும் கட்டுரை இலக்கியமும் உரைநடையில் எழுதப்படுபவை என்பதைத் தவிர இரண்டின் நோக்கமும் உள்ளடக்கமும் வேறுபட்டது எனலாம்.

### இலங்கையில் பயண இலக்கியம்

தமிழ் இனம் உலகின் பல்வேறு பகுதிகளில் பரவி தங்களுக்கான அடையாளங்களை இழக்காமல் கலை இலக்கிய வடிவில் தமது சமூக இருப்புகளை படைத்தளித்து வருகிறார்கள். அவ்வகையில் தமிழ் இலக்கியத்தின் பரப்பையும் வீச்சையும் தமிழகம் என்ற அளவில் குறுகியப் பார்வையோடு நாம் பார்க்க இயலாது. இன்றைய தமிழ் இலக்கியமானது, இலங்கை தமிழ் இலக்கியம், சிங்கப்பூர் தமிழ் இலக்கியம், மலேசிய தமிழ் இலக்கியம் மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்களின் இலக்கியம் என்ற பரந்த அளவில் நாம் தமிழ் இலக்கியத்தின் வீச்சை உள்வாங்கிக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் பயண இலக்கியம் படைக்கப்பட்டது போன்றே இலங்கைத் தமிழர்களும் (ஈழத் தமிழர்கள்) பல்வேறு பயண இலக்கியங்களைப் படைத்துள்ளனர். அதனை பற்றிய முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை எனலாம். காரணம் அவை, பிற நாடுகளில் வெளியிடப் பட்டமை, இலங்கைத் தமிழ் பயண இலக்கிய நூல்கள் பட்டியல் இல்லாமை போன்றவைகளாக இருக்கலாம்.

இலங்கையில் இஸ்லாமியப் படைப்பாளிகளே, ஆரம்ப கால ஈழத்தமிழ்ப் பயண இலக்கியப் படைப்பாளிகளாக உள்ளனர் என தெரிய வருகிறது. பல நாடுகளின் வரலாறுகள் பயண இலக்கியங்களினூடாகவே பெரிதும் அறியப்படுகின்றன. இலங்கையின் வரலாறும் சீனாவைச் சேர்ந்த ஹீவான்சீ மன்னர் காலத்தில் பாஹியன் என்ற பிக்குவும், பின்னர் யுவான் சுவாங்கின் குறிப்புகளும், ஐரோப்பியரான மார்க்கபோலோவின் குறிப்புக்களும், போத்துக்கேயரான பெனான்டி குவைறோஸ் மற்றும் பல்தேயூ, றொபட்நொக்ஸ், பிரயர் போன்றவர்களின் பயணக் குறிப்புகள் வாயிலாகவும் அறியப்பட்டன. அதுபோலவே இஸ்லாமிய அறிஞர்களான இப்னு பதூதா, பாரசீத் தளபதியான கர்ஸாப் போன்றோரின் குறிப்புகள் மூலம் இலங்கை வரலாற்று குறிப்புகளையும் யாழ்ப்பாண தமிழ் இராச்சியம் பற்றிய குறிப்புக்களையும் சமூக, சமய, கலை பண்பாட்டுக் குறிப்புகளையும் அறிய முடிகிறது. இலங்கைத் தமிழ் பயண இலக்கியத்தில் ஆரம்ப படைப்புகளாக தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த் தூது (1952), ஒன்றே உலகம் (1966), கே.வைகுந்தவாசனின் நான் கண்ட சீனா (1953), கதிர் வேலுப்பிள்ளையின் மேலைநாட்டு தரிசன வரலாற்றின் சுருக்கம் (1953), சோ.சிவபாதசுந்தரம் உருவாக்கிய மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் (1947) என்பனவற்றைச் சுட்டலாம். இவர்கள் மட்டுமல்லாது, ஏ.எம்.ஏ.அஸிஸ் (1967/1968), எஸ்.எம்.கமால்தீன், (1968), எஸ்.எம்.ஏ.ஹசன் (1975) ஆகிய இஸ்லாமியர்களும் பயண இலக்கியம் படைத்துள்ளனர்.

**தற்கால பயண தமிழ் இலக்கியத் தன்மைகள்**

தமிழில் வழங்கும் பயண இலக்கியங்கள் இருநிலைகளில் அமைகின்றன. மதத்திற்கு முக்கியத்துவம் அளித்து சமயச் செய்திகள் மட்டும் பேசப்படுவது ஒருநிலை. தொழில், சமூகநோக்கு, கல்வி பற்றிய செய்திகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பது மற்றொரு நிலை. பயண இலக்கியங்களில் சிட்டியும் ஜானகிராமனும் இணைந்து படைத்த நடந்தாய் வாழி காவேரி என்பது ஒரு புதுமைப்படைப்பாகும். காவிரியின் முகத்துவாரத்தில் இருந்து அது கடலில் கலக்கும் இடம் வரை பயணம் செய்து, அதனிரு கரைகளிலும் உள்ள சிறப்பான இடங்கள், வாழும் மக்களின் இயல்புகள், வழங்கும் கதைகள் போன்றவற்றைத் தந்துள்ளனர். வா.மு.சேதுராமன் எழுதிய மலைநாட்டு மீதினிலே என்ற நூல் காவிய வடிவம் கொண்டு பழமையை நினைவூட்டுகிறது. மு.வ.தன் இலங்கைப் பயணக் கட்டுரையைக் கடித வடிவில் அளித்துள்ளார்.

பயண அனுபவங்கள், நாவல், சிறுகதை, படைப்பிற்கும் உதவியுள்ளதற்கு சாவிளின் தெப்போ 76, வாஷிங்டனில் திருமணம், ராஜம் கிருஷ்ணனின் வளைக்கரம், அகிலனின் தாஷ்கண்டில் ஒரு தங்கை என்பன எடுத்துக்காட்டுகளாகும். பிலோ இருதயநாத் எழுதியுள்ள பயணம் ஒரு கலை, ஆனால்... என்பது பயணம் மேற்கொள்வோர்க்குப் பயனுள்ள குறிப்புகள் தருவது. பிரயாண இலக்கியம் என்ற நூலை ஒரு தொகுப்பாக வாசகர் வட்டம் வெளியிட்டுள்ளது.

**முடிவுரை**

அண்மைக் காலங்களில் வலைப் பதிவுகள் வழி உலகம் முழுவதிலிருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் தங்கள் தனிப்பட்ட பயண அனுபவங்களை ஒளிப்படங்களுடன் கட்டுரையாக பதிவு செய்து வெளியிட்டு வருகிறார்கள். ஜெயமோகன் போன்ற பல எழுத்தாளர்களும் தங்களின் பயண அனுபவங்களை தங்களுடைய வலைப் பதிவுகளில் எழுதி வருகின்றனர். பல்கலைக்கழகங்கள் போன்ற உயராய்வு நிறுவனங்களில் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பயணம், பயண இலக்கியம் குறித்த கூறுகளை ஆய்வு செய்து வருகின்றனர். வளர்ந்து வரும் தமிழ் உரைநடை இலக்கியத்தில் பயண இலக்கியம் ஒரு இன்றியமையாத அங்கமாக விளங்குகிறது. அவ்வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் பயண இலக்கியத்திற்கு மிகமுக்கிய இடம் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

**துணைநின்ற நூல்கள்:**

1. சிலம்பில் பயணம், மகா லட்சுமி.

2. தமிழ் இலக்கியத்தில் பயணச் செய்திகள், கிருட்டிணசாமி

3. தமிழில் பயண இலக்கியம், இரா.ஞானபுஷ்பம்.

4. பயண இலக்கியம், மோகனா.

5. பயண நூல்கள் வழிப் பண்பாடு, ந.வேலுசாமி.

**இணைய தளங்கள்:**

1. www.thinnai.com

2. www.mattru.net

# அண்ணாவின் படைப்புகளில் நிகழ்ச்சித்திறன்

**வ.ஸ்ரீதர்**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*சென்னைப் பல்கலைக்கழகம்,*
*சென்னை - 5.*

**முகவுரை**

நிகழ்ச்சி என்ற சொல்லுக்கு, நிகழ்வு, சம்பவம் என்று வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதியும், சம்பவம் நிலைமை என்று செந்தமிழ் அகராதியும், ஒளி: சம்பவம்: நிலைமை: காரியம்: தற்காலம் என்று கழகத் தமிழ் அகராதியும் பொருள் கூறுகின்றன. இவ்வாறு பல பொருள் கூறப்படினும் அடிப்படையாகப் பார்க்கும்போது ஒரு செயலைக் கருவாகக் கொண்டது. நிகழ்ச்சி எனலாம். பலர் வாழ்க்கையோடு தொடர்புடைய பல நிகழ்ச்சிகளையும், பல்லுணர்ச்சியையும் நமக்குக் கற்பிப்பது மாத்திரம் இலக்கியமன்று. இலக்கியத்தின் சிறந்த கூறு புலவரின் எண்ணங்கள். நிகழ்ச்சிகளையும், உணர்ச்சிகளையும் எப்படி ஆராய்கின்றன. எப்படி ஒதுக்குகிறான், எப்படி வரவேற்கிறான். இதிலிருந்து நிகழ்ச்சியைக் காட்டுவது மட்டுமன்று இலக்கியம் நிகழ்ச்சியைப் புலப்படுத்தப் படைப்பாளன் கையாளும் திறத்தைக் காட்டுவதும் இலக்கியம் என்று அறியலாம்.

''சுவையான ஒரு நிகழ்ச்சி அல்லது சூழ்நிலை அமைப்பு: கவர்ச்சியான ஒரு காட்சி: நெருங்கிப் பின்னப்பட்ட நிகழ்ச்சிகள்: ஒருவனின் தனிப்பட்ட பண்பு: ஒரு சிறு அனுபவம்: வாழ்க்கையின் ஒரு வெற்றி: அற உணர்வால் விளைந்த ஒரு சிக்கல் இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது இவை போன்ற ஏதேனும் ஒன்று நல்ல சிறுகதையின் அடிப்படையாக அமையலாம்'' என்ற மு.வ.கருத்திலிருந்து நிகழ்ச்சி செறிவாக்கப்படும் போது அது இலக்கிய வடிவமாக மாற்றம் பெறுகின்றது என அறியலாம். அந்த இலக்கியத்தின்வழி ஆசிரியன் தான் உணர்ந்த கருத்தை உணர்த்த முற்படுகின்றான்.

இலக்கியங்கள் தோன்றும்போது தன் வாழ்வில் கண்ட பல்வேறு நிகழ்ச்சிகளையும், தான் கேட்ட, படித்த நிகழ்ச்சிகளையும், தன்னுடைய சொந்த அனுபவத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும், தன்னுடைய இலக்கியத்தில் பதித்து இலக்கியத்தைப் படைக்கின்றான் புலவன். இவ்வாறு படைக்கும்போது அவன் கூறும் கருத்துக்கள் மக்களை எளிதில் சென்று அடைகின்றன. அதனால் கருத்துப் புலப்பாட்டிற்கு நிகழ்ச்சிகள் களனாக அமைகின்றன. இது நெடுங்கதையிலிருந்து மாறுபட்டது என்றாலும், அந்நெடுங்கதையின் ஒரு கூறாகவே நிகழ்ச்சி விளங்குகின்றது. மேலும், இந்நிகழ்ச்சி நாடகம், கட்டுரை, மடல் போன்ற இலக்கிய வடிவங்களிலும் இடம் பெற்றுள்ளதால் அதன் செல்வாக்கை அறியலாம்.

எந்தவொரு நிகழ்ச்சியையும் எளிமையாகவும், நயமாகவும் விளங்கும் பண்பு அண்ணாவிடம் காணப்படுகின்றது. இவருடைய

படைப்புக்களில் நிகழ்ச்சி உயிரோட்டமாக அமைந்து கருத்துப் புலப்படுத்துகின்றது. மேலும், நிகழ்ச்சியாக்கம் காரணமாக அவரது இலக்கியங்கள் முருகியல் சுவை பயப்பனவாகவும், எளிமை உடையனவாகவும் விளங்குகின்றன. அண்ணா அவர்கள் தமிழ் படைப்புகளில் கையாண்டுள்ள நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

இளமை வாழ்க்கை நிகழ்ச்சி, எதிர்த்தவருக்கும் உதவிய நிகழ்ச்சி, நாடகத்திற்கு அண்ணா தலைமை ஏற்கும் நிகழ்ச்சி, மெத்த கற்றவரின் நிகழ்ச்சி எனப் பாகுபடுத்தலாம்.

**அண்ணாவின் சொந்த நிகழ்ச்சி**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவடைய வாழ்க்கையிலும் நிகழ்ச்சிகள் பல நடப்பதுண்டு. அதைப்போல் அண்ணாவின் வாழ்விலும் நிகழ்ச்சிகள் பல நடந்துள்ளன. அவை கருத்துப் புலப்பாட்டிற்கு அண்ணாவின் சொந்த நிகழ்ச்சியாக இடம் பெற்றுள்ளன.

இந்தச் சிறுவயதில் ஏற்பட்ட உயர்ந்த எண்ணம் அரசியலிலும் அண்ணாவிடம் ஒளிவிட்டதைக் காணலாம்.

**இளமை வாழ்க்கை நிகழ்ச்சி**

மாலை நேரத்தில் மண்ணெண்ணெய் விளக்கேற்றிக் கொடுத்து அண்ணாவைப் படிக்கச் சொல்லி தொத்தா பக்கத்தில் அமர்ந்து 'ம்' கவனித்துப் படி என்பார்களாம். ஆங்கிலப் பாடம் படிக்கும்போதும் 'ம்' கவனித்துப்படி என்பார்களாம்.

அண்ணா தொத்தாவைச் சோதித்துப் பார்க்க வேண்டும்: உண்மையிலேயே அவர்களுக்கு ஆங்கிலம் புரிகிறதா எனத் தெரிந்து கொள்ள வேண்டும் என நினைத்து, பாடத்தைத் தவறாகப் படிக்க, தொத்தாவிடம் எந்த மாறுதலும் ஏற்படாததால் தொத்தாவுக்கு ஆங்கிலம் தெரியவில்லை என்பதைப் புரிந்து கொண்டார். ஆனாலும் தன் பிள்ளை சரியாகப் படிக்க வேண்டும் என்பதற்காகத் தெரிந்ததுபோல் பானைச் செய்யும் தன் சிற்றன்னையின் மனது வாடக் கூடாது என நினைத்த அண்ணா, நன்றாகப் படித்தார். பித்துமனத்தை ஏமாற்ற நினைக்கவில்லை அந்தப் பிஞ்சு மனம்.

அண்ணா குழந்தை பருவத்திலிருந்தே மற்றவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்று எண்ணியதை தன் வாழ்க்கை நிகழ்ச்சியின் மூலம் காட்டுகிறார். மேலும் சிற்றன்னை தம்முடைய நன்மைக்காகவே படிக்கச் சொல்கிறார் என்பதையும் உணர்ந்து செயல்பட்டார் அண்ணா என்பதையும் அறியலாம்.

**எதிர்த்தவருக்கும் உதவிய நிகழ்ச்சி**

1948-ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் தளபதியாக இருந்தவர் அண்ணா. எனினும் திராவிடர் கழகத்தில் இருந்த முக்கிய சொற்பொழிவாளர். பட்டுக்கோட்டை அழகிரிக்கு அண்ணாமேல் எப்போதும் கசப்பு! அண்ணா அழகிரியைப் பாசமுடன் அண்ணன் என்றுதான் அழைப்பார்.

காசநோயால் பாதிக்கப்பட்டு, தாம்பரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார் அழகிரி. ஆதரவற்ற நிலை அரவணைப்பார் யாருமில்லை. இந்த நிலையில் அழகிரிக்கு உதவத் துடிக்கிறார் அண்ணா – மறுக்கிறார் பெரியார்.

துணிந்து முடிவெடுத்து முன்னொருமுறை தன்னுடைய 'சந்திரோதயம்' நாடக வசூலின் மிகுதியை மதியழகன் மூலம் கொடுத்தனுப்புகிறார். அதைப் பெற்றுக் கொண்ட அழகிரி, திரு.மதியழகனிடம் இதுவரை யாரை நம்பினேனோ, அவர் என்னைக் கைவிட்டார். யாரை ஆவேசமாக எதிர்த்தேனோ, ஆத்திரம் தீர திட்டித் தீர்த்தேனோ அவர் எனக்கு உதவுகிறார். மதியழகா அண்ணாவுக்கு என் நன்றியைச் சொல்லப்பா என்றார்.

அழகிரிக்கு தாம் செய்த உதவி இத்தோடு முடிந்துவிடக் கூடாதென நினைத்த அண்ணா, தம்மை கூட்டங்களுக்கு அழைக்கும் கழகத் தோழர்களுக்கு அழகிரி பெயருக்கு ரூ.100 பணவிடை அனுப்பிவிட்டு, அதற்குரிய சான்றைக் காட்டினால் கூட்டத்திற்குத் தேதி கொடுப்பேன் என அறிவித்தார் நிதியும் குவிந்தது.

தம்மை எதிர்த்தவர் அழகிரி என்று கருதாமல் பொன்மனத்தோடு உதவினார் அண்ணா. தன்னைப் பற்றிக் கருதாமல் இனத்துக்காக, மொழிக்காக, கொள்கைக்காக, உழைத்தவரை மதித்துப் போற்றுவது என்ற கொள்கையாளர் அண்ணா. அதனால் தான் அண்ணா அரசியல் வானில் என்றும் ஒளிவிடும் நட்சத்திரமாக ஒளி விடுகிறார்.

**நாடகத்திற்கு அண்ணா தலைமை ஏற்கும் நிகழ்ச்சி:**

அண்ணா ஓர் அரசியல்வாதி என்பதையும், அதனால் வரும் பதவி நிலைத்து நிற்பவை அல்ல என்பதையும் தன் சொந்த நிகழ்ச்சியில் காட்டுகிறார்.

'தம்பி! பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் என்று நினைக்கிறேன். சென்னையில், நான் ஒரு நாடகத்துக்குத் தலைமை வகிக்கச் சென்றிருந்தேன். எனக்கு வலப்புறம், நாடகக் குழுவின் உரிமையாளர் அமர்ந்திருந்தார். மறுபுறம், அவருடைய மகன், சிறுவன் – ஏழெட்டு வயதிருக்கும் அமர்ந்திருந்தான்.

நாடக முடிவில், பேசச் சென்றேன். சிறந்த முறையில் அமைந்திருந்த நாடகம் அது அன்று அந்தக் குழுவில் இருந்தவர்களில் பலர், இன்று திரையில் ஒளிவிடும் திறமைமிக்க நட்சத்திர நடிகர்களாக உள்ளனர். அவர்கள் அந்த நிலை பெறப் போகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டாகத் தக்க சிறப்புடனேயே, அவர்களின் அன்றைய நடிப்பு இருந்தது. பாராட்டிப் பேசினேன். உரிமையாளர், மாலை அணிவித்தார். அவர் மகன், மாலையை உற்றுப் பார்த்தான். சிறுவன், மாலையை மிக உன்னிப்பாகப் பார்த்துவிட்டு, தன் தகப்பானாரைப் பார்த்து, ''அப்பா! இவர் சின்ன மந்திரியா?'' என்று கேட்டான். எனக்கு அந்தக் கேள்வி வியப்பாக இருந்தது. அவர் சற்றுச் சிரமப்பட்டார். சிறுவர்களா, கேள்விக்குப் பதில் பெறாமல் விடுவர்கள்! கிளறியபடி இருந்தான். அவன், வேறு பக்கமாகப் பேச்சைத் திருப்பிப் பார்த்தார். ''இவர் தானடா... அண்ணா.... அண்ணாதுரை... தெரியாதா?'' ''ஓ! தெரியுமே! இவர்தான் அண்ணா. அது தெரியும். ஆனால் இவர் சின்ன மந்திரியா?'' என்று மீண்டும் கேட்டான். நான் சிறுவனைப் பார்த்து, ''தம்பி ஏன் அப்படிக் கேட்கிறாய்?'' என்று கேட்டேன். உரிமையாளர் திகைத்தார். சிறுவன் சொன்னான்: ''நேற்று ஒருவர் தலைமை வகித்தார். அவருக்கு எவ்வளவு பெரிய மாலை போட்டாங்க. அவர் யார் என்று அப்பாவைக் கேட்டேன். மந்திரி என்று சொன்னார். இப்ப உங்களுக்கு சின்ன மாலைதான் போட்டாங்க.. அதனாலே நான், சின்ன மந்திரியா என்று கேட்டேன்.''

அண்ணா நாடகத்தைக் காண்பதிலும், சுவைப்பதிலும், விருப்பு வெறுப்புப் பற்றிப் பாராட்டுவதிலும் அதிக ஈடுபாடு கொண்டவர். அதோடு அண்ணா நாடகத்திலும் நடித்திருக்கிறார்.

மாலை போன்ற மரியாதைகளைப் பெறுவதே, மந்திரிகள் என்ற பதவியில் இருக்கும் போதுதான். ஆனால் கலைஞன் என்ற பதவி என்றும் அழியாதது நிலைத்து நிற்கக் கூடியது. அரசியல் பதவி அப்படி இல்லை என்பதையும் தம் சொந்த நிகழ்ச்சியின் மூலம் காட்டுகிறார். அண்ணா தமிழ் கவின் கலைகளுக்கு உயிரூட்டியவர் என்ற கருத்தும் புலப்படுவதைக் காணலாம்.

**மெத்த கற்றவரின் நிகழ்ச்சி**

மெத்த கற்றவர் ஒருவர், இரயிலில் சென்று கொண்டிருந்தார். அவருடைய அருமை பெருமைகளைத் தெரிந்த ஒரு நண்பர், இரயிலில் ஏறினார், பெருமைக்குரியவர். இட நெருக்கடியில் சிக்கிக் கிடப்பதைக் கண்டார்: தாங்களா, இந்த இட நெருக்கடியிலா? ஏன் இந்த மூன்றாம் வகுப்பு வண்டியில் ஏறினீர்கள்? என்று கேட்கும்போது,

'பரவாயில்லை. இடம் கிடைத்ததே அது போதும்' என்றார் அவர். இதற்குள் நண்பன், அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு, தூங்கித் தூங்கி அவர் மேலே சாய்ந்து சாய்ந்து விழுந்து கொண்டிருந்த ஒருவரைக் கவனித்துவிட்டு, மெல்லத் தட்டி எழுப்பி, ''ஐயா! அவர் மேலே, விழுகிறீர்களே! கொஞ்சம் தள்ளி உட்காருங்கள். பாருங்கள், அவர் எவ்வளவு இடுக்கிலே கிடக்கிறார். கொஞ்சம் தள்ளி இடம் கொடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டான். அவர் ஒரு தடவை விழித்துப் பார்த்து. கனைத்துக் காட்டிவிட்டு, மீண்டும் பழையபடியே தூங்கலானார், நண்பனுக்குக் கோபம். கொஞ்சம், அதட்டும் குரலில், அந்த ஆசாமியை எழுப்பி, ''இரயில் என்னய்யா, உங்ன பாட்டன் வீட்டுச் சொத்தா? அவரை இப்படிப் போட்டு இடித்துத் தள்ளிக் கொண்டு இருக்கிறாயே. அவர் யார் தெரியுமா? அவருடைய யோக்யதை என்னவென்று தெரியுமா? திருவாசகத்தில் புலி ஐயா, புலி! தேன் சொட்டும், அவர் தேவாரம் பாடினால்! தெரியுமா? என்றான்.

விழித்துக் கொண்டிருந்த ஒரு குறும்புக்காரன், ''அப்படியானால் பாடச் சொல்லு, தாளத்தைத் தட்டிக் கொண்டு'' என்றான்.

''அட, விவரமறியாதவர்களே! அவர் பெரிய வேதாந்தி! பெரிய புள்ளி! போன மாதம், பொன்னாடை போர்த்திப் பத்தாயிரம் ரூபாய் பரிசு கொடுத்தார்கள். அவருடைய யோக்யதை தெரியாமல் உளறுகிறீர்கள்?'' என்று சிறிது கோபத்துடன் கூறினான்.

வேதாந்தியா... யாரு? இந்த மூஞ்சியா? அவன் யாரா இருந்தா எனக்கென்ன? காலிலே விழுந்து கும்பிடணுமா? ஏன்? அவன்தான் என் காலிலே விழுந்து கும்பிடட்டுமே!'' என்று வலுச் சண்டைக்கும் இழுத்தான் ஒரு வம்புக்காரன்.

*''கண்ணைப் பாரு கோட்டான் மாதிரி!''*
*''சாமியாரு கஞ்சா சாப்பிட்டிருப்பாரு''*

''ஆள் ஏமாந்த, மூட்டையை அடிக்கிற பயலெல்லாம் கொட்டை கட்டிக்கிட்டு, வேஷத்தைப்

போட்டுக்கிட்டு, ஊரை ஏமாத்துறானுங்க..''

பலர் பலவிதம் பேசினர், கேவலமாக.

நண்பனொருவன் தன் பற்றினைக் காட்டுவதற்காகப் புகழ்ந்து பேச, மற்றவர்கள் அதனாலேயே எரிச்சல் கொண்டு ஏசினர்.

இடம் பெற்றுத்தர முடியாது போனாலும், இழிமொழியை வாங்கித்தர முடிந்தது நண்பனால். பெருந்தலைவர்களில் நமக்குப் பிடித்தமானவரைப் பற்றி விமர்சனம் செய்வோர் புகழ்ந்து எழுத, அதனாலேயே தாறுமாறாக ஏசி எழுதுகிறார். இதுபோன்ற தவறுகளைச் செய்யாதீர் என்று அண்ணா கூறுகிறார்.

**முடிவுரை**

அண்ணா தம் படைப்புகளில் பயன்படுத்திய நிகழ்ச்சிகள் அனைத்தும் கதையோட்டத் தன்மை கொண்டவை. இந்த நிகழ்ச்சிகள் கருத்துப் புலப்பாட்டிற்கும் இலக்கிய இனிமைக்கும் ஏற்றவை என்பதை உணர்ந்தவர் அண்ணா. தம் இளமைக் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும், தம் சொந்த வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் பயன்படுத்திக் கருத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்**

1. வின்சுலோவின் தமிழ் ஆங்கில அகராதி, ப.667
2. தொ.ஆ.கந்தையா பிள்ளை, செந்தமிழ் அகராதி, (சென்னை, 1950) ப.370
3. கழகத் தமிழ் அகராதி, (சென்னை, 1964) ப.603.
4. வ.சு.ப. மாணிக்கம், இலக்கிய விளக்கம், மூன்றாம் பதிப்பு, (காரைக்குடி, 1978) பக். 59-60
5. மு.வரதராசன், இலக்கிய மரபு, (சென்னை, 1979) ப.1960.

# கீழ்க்கணக்கு நீதிநூல்களில் அறம் நுவலும் தனிமனித ஒழுக்கம்

**முனைவர் ப.திலீப்குமார்**

*நாமக்கல்.*

**முன்னுரை**

தனிமனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினன். தனிமனிதனின் வளர்ச்சி சமூக வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. உலகிலுள்ள அனைத்துச் சமுதாய வளர்ச்சிக்கும் தனிமனிதனின் ஒழுக்க முறையே அடிப்படையாகும். சமூகத்தில் பின்பற்றப்படும். கல்வி, நாகரிகம், பண்பாடு என்ற பலதரப்பட்ட கூறுபாடுகளின் ஒழுங்குமுறைகளும் தனி மனித ஒழுகலாறுகளும் ஒத்திசைந்து நடப்பதால் தான் சமூகம் நிலைபேறுடையதாய்ச் சிறந்து விளங்குகிறது. தனிமனிதன் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைமைகள் கூர்மையானதாக, குறிப்பிட்ட வரையறைகளுக்குள் அடங்குவதாக அமைந்துள்ளன. ஒவ்வொரு மனிதனும் தனித்தனியே பின்பற்றி நடக்க வேண்டிய தனிமனித ஒழுக்கமாகும்.

இதனை வலியுறுத்த எழுந்த நீதி நூல்களில் கூறப்பட்ட ஒழுக்கம் தனிமனிதனைச் சார்ந்துள்ளது. இவ்வொழுக்கத்தை வலியுறுத்தி அறநெறியைக் கூறும் உத்தி முறைகளைப் பற்றி இவ்வியல் விவாதிக்கிறது.

**நற்பயன் கூறல்**

பயனைக் கூறி நீதியைச் சொல்லும் முறையில் வீடுபேறு, புகழ், சிறப்புறு வாழ்க்கை இவற்றை வற்புறுத்துவதற்காகக் கூறப்படும் நீதிகள் அவற்றால் வரும் பயனையும் எடுத்துக் கூறுகின்றன. 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்' என்பது கற்பொழுக்கத்தை வற்புறுத்துகிறது. இதில் உலகம் கற்பிற் சிறந்தோரைப் புகழும் என்ற பயனும் கூறப்பட்டது. பெண்களின் கற்பொழுக்கத்தை இது வற்புறுத்துகிறது.

பிறிதோர் உயிர் வருந்தும்படி கொல்லாதிருத்தல் நன்மையைத் தரவல்லது எனப்பயன் குறிப்பிட்டுச் சொல்லப்படாது பொதுவாக 'உயிர் நோவக் கொல்லாமை நன்று' (பா.37) எனச் சிறுபஞ்சமூலம் சுட்டும். இது கொல்லாமையினால் உண்டாகும் பயனை உணர்த்துகிறது. ஏலாதி என்ற நூலில் பிற உயிர்களைக் கொல்லாதவன் நிலவுலகத்தாரால் மட்டுமல்லாது விண்ணுலகத்தாராலும் போற்றப்படும் சிறப்படைவான் எனக் கூறப்படுகிறது.

*''கொலைபுரியான் கொல்லான் புவால்மயங்கான் கூர்த்த*
*அலைபுரியான் வஞ்சியான் யாதும் - நிலைதிரியான்*

*மண்ணவர்க்கும் அன்றி மதுமலிபூங் கோதாய்*
*விண்ணவர்க்கும் மேலாய் விடும்''*

என்பது அப்பாடல். இதில் தேவர்களை விட உயரும் சிறப்புநிலை சொல்லப்பட்டது. ஈண்டு 'உம்' முற்றுமையாக வந்தது. அவரினும் சிறப்புடையோர் எங்குமில்லை என்பது இதன் கருத்து.

பிற உயிர்களைக் கொல்லாமலும் பிறர் கொள்வதற்குத் தான் உடன்படாமலும் கொல்லுவார் இனத்தைச் சேராமலும் ஊனுண்ணுதலை மேற்கொள்ளாமலும் வாழ்பவர் அரசர்களைத் தமக்கு அடங்கச் செய்யும் சிறப்படைவர் எனக் குறிப்பிடும் ஏலாதி (42) கொல்லாமை விரதம் மேற்கொள்வார்க்குக் கிட்டும் பயனை விளக்குகிறது.

வறியவர்க்கு ஈகை செய்வது என்பது ஒரு நீதி. ஈகை செய்வதால் மனநிறைவு கிடைக்கும். அறக்களி இல்லாதார்க்குக் கொடுப்பதற்கு முன்னரே தோன்றும் என மகிழ்ச்சியின் பயன் மிகுத்துச் சொல்லப்பட்டது. (நான்.34,35) இங்கு மனநிறைவும் ஒரு பயனாகச் சொல்லப்பட்டுள்ளது. மற்றவர்க்கு வழங்கும் செல்வம் அழியாது பெருகும் தன்மையுடையது என்கிறது பழமொழி.

*''பல்லாண்டும் ஈண்டிப் பழுதாய்க் கிடந்தது*
*வல்லான் தெரிந்து வழங்குங்கால் – வல்லே*
*வலிநெடிது கொண்டு தறாஅது; அறுமோ*
*குளநெடிது கொண்டது நீர்'' (380)*

இங்குக் குறையாத குளத்து நீர் பிறருக்குக் கொடுப்பதால் குறைவு படாத செல்வ வளத்தைக் குறிக்கிறது.

நல்ல இயல்புடைய கொடைத் தன்மையால் செல்வ நுகர்ச்சி உண்டாகும் (சிறு.34) ஈகை செய்பவர் தேவர்களால் போற்றப்படுபவர் (சிறு.82) பொருள் கொடுப்போர் தேவர்களால் போற்றப்படுவதை,

*''மென்மொழியால் உள்நெகிழ்ந்து ஈவானேல் விண்ணோரால்*
*இன்மொழியால் ஏத்தப் படும்''*
என்று தொடர் குறிப்பிடுகின்றது.

ஈகை என்பதற்குப் பொருள் கொடுத்தல், உணவளித்தல், மருந்து கொடுத்தல், வேண்டுவன அளித்தல் எனும் பலவகையான அறச்செயல்களின் பயன்களை நீதிநூல்கள் தனித்தனியே சுட்டுகின்றன. தம்மை நாடி வருவோர்க்கு அவர்கள் மகிழும்படி வேண்டியவற்றைக் கொடுப்பவர்கள் இப்பிறப்பில் பகைவர்களை வென்று அரசர்களாய் வாழ்பவர்கள் என்கிறது ஏலாதி (பா.58). எப்போதும் பிறருக்குக் கொடுத்து, பகுத்துண்டு வாழ்பவரைப் பசி எனும் தீய நோய் நெருங்காது என்கிறார் வள்ளுவர். இது,

*''பாத்தூண் மரீஇ யவனைப் பசி என்னும்*
*தீப்பிணி தீண்டல் அரிது'' (227)*
எனும் குறள்வழி உணர்த்தப்படுகிறது.

**தீப்பயன் கூறல்**

மக்கள் கைக் கொண்டிருக்கும் தீயொழுக்கங்கள் உண்டாக்கும் தீயவிளைவுகளால் துன்பம் வந்து சேரும்; பழி, பாவம் உண்டாகும்; குலப்பெருமை, குடிப்பிறப்பு ஆகியவற்றின் உயர்வு குன்றும் என்று பொதுவாகவும் பேரின்பநெறி செல்ல முடியாது; அருநரகத்தில் சென்று வீழ்வர்; நல்லுலகம் சேர முடியாது; மறுபிறப்பிலும் துன்பம் வந்தடையும் என்று குறித்துச் சொல்லியும் மக்களை நீதி நூல்கள் நல்வழிப்படுத்துகின்றன. மனம், மொழி, மெய் ஆகிய மூன்றன் வழிச் செயல்பாடான எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் தீயவிளைவுகளைக் குறித்து நீதிநூல்களில் கூறப்படுகின்றன. இது பற்றி இங்கு ஆராயப்படுகிறது.

புற்றில் வாழும் பாம்பு, அரசர், நெருப்பு, குகையில் வாழும் சிங்கம் ஆகியவற்றையும் அரசரையும் தாழ்வாகவோ, பழக்கத்தினால் எளிமையாகவோ கருதினால் துன்பம் உண்டாகும் (பா.84) எனும் ஆசாரக்கோவை நூற்கருத்து எவரையும் எளிதாக எண்ணக்கூடாது என்பதைக் கூறுவதாகும்.

பிறர்க்குத் தீங்கு விளைவிக்கும் சொற்களைத் தடையின்றிப் பேசுபவன் நல்லுலகம் சேரமாட்டான் (பா.99) என்று திரிகடுகமும் ஐம்பூதங்கள், அந்தணர், பசுக்கள், திங்கள், சூரியன் ஆகியவற்றைத் தன் உடம்பு போல எண்ணாது இகழ்வாரை விட்டு அவருடைய உடலிலுள்ள ஐம்பூதங்களும் அன்றே அகன்றுவிடும் (பா.15) என்று ஆசாரக் கோவையும் குறிப்பிடுகின்றன.

எளியாரை வலியார் வருத்தினால் அவரால் எதிர்த்து அழிக்க முடியாவிட்டாலும் அவர்கள் பெருக்கிய கண்ணீரே அவ்வலியாரை அழித்து விடும் என்பது,

*''ஆற்றாது அவரழுத கண்ணீர் அவையவர்க்குக்*
*கூற்றமாய் வீழ்த்து விடும்'' (பழ.166)*

எனக் குறிப்பிடப்படுகிறது. இது எளியராயினாரை வலியார் வருத்துதல் தகாது என்பதைச் சுட்டுகிறது.

பிறர்மனை விரும்புதல், கள்ளருந்துதல், களவு செய்தல், சூதாடல், கொலை செய்தல் எனும் இவ்வைந்து

பாவச் செயல்களை மனத்தாலும் எண்ணக்கூடாது. எண்ணினால் நல்லொழுக்க மில்லாதவர் என்று இகழப்படுவதோடு நரகத்திலும் இப்பாவச் செயல்கள் வருத்தும் என்பது ஆசாரக் கோவை கருத்து (பா.37)

*''கொலையே களவுகள் காமம் பொய்கூறல்*
*மலைவான பாதக மாம் அவை நீக்கித்*
*தலையாம் சிவனடி சார்ந்தின்பம் சார்ந்தோர்க்கு*
*இலையாம் இவைஞான ஆனந்தத்து இருத்தலே''*

எனத் திருமந்திரம் பாவச் செயல்களைச் சுட்டி, மீள வழி கூறுவது இங்கு எண்ணத்தக்கது.

**கடிந்து கூறுதல்**

நல்லொழுக்க முறைகளைப் பின்பற்றாத தனி மனிதர்களைப் பேதையார், மூடர், உயிருடன் இருந்தாலும் இறந்தவர் போன்றவர் என இழித்தும், அவர் தம் செயல்களைப் பேதைமை, மூடர்செயல், கீழ்மைக் குணம் என்று இழிவாகக் கூறியும் மக்களை நல்வழிப்படுத்துவது கடிந்து கூறுதலாகும்.

புலால் உண்ணுதலை இழிவாகக் கருதும் கருத்துத் திருக்குறளில் கூறப்படுகிறது. புலால் உண்பவரை இழித்தும் இந்நூல் கூறும். தன் உடலைப் பெருக்குவதற்காகப் பிறிதோர் உயிரின் ஊனை உண்பவனுக்கு இரக்கம் எனும் அருள் உண்டாகாது என்றும், ஊன் உண்பவன் அறிவில்லாத கொடியவன் என்றும் கடிந்து கூறப்பட்டுள்ளது. (குறள்.251) 'கொடியவன்' எனச் சுட்டல் வெளிப்படையாகக் கடிந்துரைப்பதாகும்.

உயிர்களைக் கொன்றால் மட்டுமின்றி ஊன் உண்டாலும் பாவம் கிட்டும்; ஊன் உண்டவர் பாவத்தால் நீண்ட காலம் நரகத்துள் அழுந்துவர் (குறள். 255) ஊன் உண்ணுதலை 'பேதைமை' (குறள்.256) என்று பலவாறு கூறப்படுகிறது. புலால் என்பது பிறிதோர் உடம்பின் புண் என்கிறார் வள்ளுவர். இதை உணர்ந்தவர்கள் ஊன் உண்ணமாட்டார். புண் என்று உணராதார் மட்டுமே ஊன் உண்ணுகின்றனர் எனக் கடிந்துரைக்கிறது குறள்.

*''உண்ணாமை வேண்டும் புலா அல் பிறிதொன்றன்*
*புண் அது உணர்வார்ப் பெறின்''  (257)*
இங்கு ஊன் உண்பவரைப் புண் உண்பவர் என இழித்துக் கூறப்பட்டுள்ளது.

இல்லறத்தார்க்குரிய அறமுறைகளைக் குறிப்பிடும் நாலடியார் குடும்பத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளை முடித்த பிறகு அறம் செய்வோம் என்றிருப்பது பெரிய கடலில் நீராடச் சென்றவர் கடலின் ஓசை அடங்கியவுடன் நீராடுவோம் என்று எண்ணுதல் போன்றது என்கிறது. குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய பணிகள் முடிவில்லாதவை. இவ்வகையில் பிறகு அறம் செய்யலாம் என்றிருப்பது பேதைமை என்றும் நாலடியால் கூறும் (பா. 332).

முதுமை வருவதற்கு முன்னே பொருளைத் தேடி வைத்துக் கொள்ளாதவர் அறிவற்றவர்கள். அவர்கள் இருகால் எருதுக்கு நிகரானவர்கள் (பா.18) என்று சிறுபஞ்சமூலமும், பழியுடையோரிடம் செல்வமிருப்பினும் இல்லாமை போன்றதாகும் (பா.40) என்று முதுமொழிக்காஞ்சியும் பொருளுடையார் கைக்கொள்ள வேண்டிய பண்பை உணர்த்துகின்றன.

தன்னிடமுள்ள செல்வத்தைத் தானும் நுகராமல் தேவைப்படுவோர்க்கும் கொடுக்காமல் வாழ்வோரை அறிவிலான் என்று நாலடியார் (283) இடித்துரைத்து அவர் வைத்திருக்கும் செல்வமே அவரைப் பார்த்து நகைக்கும்; உலகமும் அவனுக்கு உதவாது என்கிறது இந்நீதியை,

*''துய்த்துக் கழியான் துறவோர்க்கொன் றீயான்*
*வைத்துக் கழியும் மடவோனை வைத்துப்*
*பொருளும் அவனை நகுமே உலகத்து,*
*அருளும் அவனை நகும் ''  (283)*
என்ற பாடல் உணர்த்துகிறது.

பிறருக்குக் கொடுத்து வாழும் ஈகைக்குணம் பெற்றிருத்தலே சிறப்பு என்பதை,

*''ஆர்க்கும் இடுமின்; அவரின் என்னன்மின்*
*பார்த்திருந் துண்மின்; பழம் பொருள் போற்றன்மின்;*
*வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்;*
*காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே''*
என்ற திருமந்திரப் பாடல் வழி அறியலாம்.

பிறரிடம் யாசித்தல் மிகவும் இழிவானது என்பதை 'இரவின் இனிவந்தது இல்' என்று திருக்குறளும் (பா.1066), 'இரவினை உள்ளுங்கால் உள்ளம் உருகுமால்' என்று நாலடியாரும் (பா.315), இரத்தலைவிட ஒருவனுக்கு இகழ்ச்சியானது வேறெதுவுமில்லை (பா.59) என்று முதுமொழிக்காஞ்சியும் எடுத்துக் கூறுகின்றன. இக்கருத்திற்கு அரண்சேர்ப்பது போல்,

*''பல்லெலாம் தெரியக்காட்டிப் பருவரல் முகத்திற்கூட்டிச்*
*சொல்லெலாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டி*
*மல்லெலாம் அகலஓட்டி மான மென்பதனை வீட்டி*
*இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவு இழிவு எஞ்ஞான்றும்''*
என்ற குசேலோ பாக்கியானப் பாடல் அமைந்துள்ளது.

பிறரை வஞ்சித்து வாழ்பவரைப் போல வன்கண்மையை உடையவர் உலகத்தில் இல்லை என்று பேசும் குறள் வஞ்சனை மிக இழிவானது என்பதைச் சுட்டி நெறியப்படுத்துகிறது. (பா. 276).

மனத்தைக் கட்டுப்படுத்தித் தன்வழிப்படுத்தும் வலிமையில்லாதவர் தம்முடைய இல்லாளையும் துறந்து, வலிமையிழந்து பிறமகளிரை விரும்பினால் எப்பயனும் பெறமாட்டார் என்ற நீதிமுறையைப் புலித்தோல் போர்த்திய பசுவுக்கு ஒப்புமைப்படுத்துகிறார் வள்ளுவர். பசு, காவலர்க்கு அஞ்சிப் புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு உலவினாலும் புல்லை உண்டால், 'புலி பசித்தாலும் புல்லை தின்னாது' என்பதை அறிந்த காவலர்க்கு அஞ்சிப் பிறவற்றை உண்டு வாழும் இழிநிலை ஏற்படுவது போலப் பிறனில் விழைபவர் துன்பமடைவர் என்பது,

*''வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின் தோல் போர்த்துமேய்ந் தற்று''* (273)

என்ற குறள்வழி நெறியப்படுத்துகிறது.

இல்லற வாழ்க்கையானாலும், துறவற வாழ்க்கையானாலும் உறுதியாக இரண்டில் ஒன்றை மேற்கொண்டு வாழ்பவர் வாழ்ந்தவராவார். அவ்வாறு வாழாது தம் வாழ்நாட்களை வீணே கழித்தவர் பயனற்று வாழ்ந்தவராவார் எனச் சுட்டும் பழமொழி நூற்கருத்துக் கடிந்துரைக்கும் போக்கில் ஓர் உவமையையும் குறிப்பிடுகிறது. துணிந்து ஒரு வழி நடக்காதவர் வாழ்வு இருபக்கமும் சுமையைத் தொங்கவிட்டு எடுத்துச் செல்ல உதவும் காவடித் தண்டிலுள்ள சுமைகளை இருபுறமும் அகற்றிவிட்டு வெறுந்தண்டைச்சுமக்கும் நகைப்பிற்கிடமான வாழ்வு போன்றதாகும் என்பதை,

*''இல்வாழ்க்கை யானும் இலிங்கானும் மேற்கொள்ளார்*
*நல்வாழ்க்கை போக நடுநின்று - எல்லாம்*
*ஒரு தலையாச் சென்று துணியாதவரே*
*இருதலையும் காக்கழிப்பார்''* (பழ. 208)

எனும் பாடல் உணர்த்துகிறது.

### கட்டளையும் விதித்தலும்

உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற நோக்கம் நிலைபெறவும், மனிதநேயம் மலரவும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைக்குள் மனிதன் வாழ வேண்டியுள்ளது. ஒரு சமுதாயத்தில் வாழும் மனிதன் தவிர்க்க வேண்டியவற்றையும், கண்டிப்பாகச் செய்ய வேண்டியவற்றையும் எடுத்துக் கூறிச் செய்க, செய்யற்க என விதித்தல் முறையிலும் சொல்லப்பட்டுள்ளது. விதித்தல் என்பது வியங்கோளில் அடங்கும். மனித ஒழுக்கம் மனம், மொழி, மெய் எனும் மூன்றன் வழியும் அமைவதால் இவற்றைக் குறித்து நீதி நூல்களில் சுட்டப்படுபவை முதன்மை வாய்ந்தவை.

தான் கெட்டாலும் தக்கார்க்குத் தீங்கு செய்ய எண்ணாதிருக்க வேண்டும் என்பதைத் 'தான் கெடினும் தக்கார்கேடு எண்ணற்க' (80) எனும் நாலடியார் பாடல் உணர்த்துகிறது. இங்கு எண்ணற்க என்பது எண்ணாதே எனும் கட்டளைப் பொருளைக் குறிக்கிறது. அறநெறியை அறிய வேண்டும்; எமனுக்கு அஞ்ச வேண்டும்; அறிஞர் கூறும் கடுஞ்சொல்லை பொறுத்துக் கொள்ள வேண்டும்; வஞ்சனைக் குணம் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்; எப்போதும் பெரியோர் அறிவுரையைக் கைக் கொள்ள வேண்டும் என்பனவற்றை 'அறிமின்' அஞ்சுமின், பொறுமின், வெறுமின், போற்றுமின், பெறுமின் எனும் கட்டளைச் சொற்கள் வழி நாலடியார் நன்னெறி ஒழுகச் செய்கிறது (பா.172) உலக மக்களுக்கு நலம் தரும் உயர்ந்த கருத்துக்களைக் கூறி, சிலப்பதிகாரத்தை நிகழ்வதை நிறைவு செய்யுமிடத்து,

*''தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்*
*செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்*
*பொய்க்கரி போகன்மின் பொருள்மொழி நீங்கன்மின்*
*அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்*
*பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்*
*பிறர்மனை அஞ்சுமின் பிழை உயிர் ஓம்புமின்''*

என்று இளங்கோவடிகள் அறச்செய்கைகளைப் பட்டியலிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

துன்பக் காலத்தில் தனக்குப் பற்றுக் கோடானவரின் நட்பை விடக்கூடாது. (துறவற்க) அறிவொழுக்கங்களில் குற்றமற்றவரின் நட்பை மறக்கக்கூடாது. (மறவற்க) எனக் குறள் நட்பைப் போற்ற அறிவுறுத்துகிறது (குறள். 106). பிறர் பொருளை விரும்பி அதனால் ஆகும் ஆக்கத்தை விரும்பக் கூடாது (குறள். 177). ஏனெனில் பின் துய்க்கும் போது அவ்வாக்கத்தால் நன்மையில்லை என்பதை அறியலாம் எனும் குறள்நெறி பிறன்பொருள் வெஃகாமையை வலியுறுத்துவதாகும். எவ்வளவு பொருள் கிடைப்பதாயிருந்தாலும் உள்ளமறிய நடுவுநிலைமையிலிருந்து மாறக்கூடாது (பா.25). சினம் செல்லத்தகாதவிடத்தில் சினத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதைச் 'சுருக்ககு செல்லா இடத்துச் சினம்' (பா.87) என்று நான்மணிக்கடிகை குறிப்பிடுகிறது.

### வேண்டல் முறை

பலதரப்பட்ட எண்ண ஓட்டங்களும், விருப்பு வெறுப்பான சூழல்களும், முரண்பட்ட தேவைகளும்

கொண்ட சிக்கலான சமுதாயத்தில் வாழும் தனிமனிதர் நலமாய் வாழவும், வாழ்வில் முன்னேற்றம் காணவும், அவர் தம் உணர்வுகள் உயர்தரமாக்கப்படவும் தேவைப்படும் உயரிய பண்பான ஒழுக்கத்தின் உயர்வை எடுத்துக்கூறி மக்களை நன்னெறியில் நடக்கத் துணைபுரிவதை நீதிநூல்கள் அறமாகக் கொண்டுள்ளன. இம்முறையை 'வேண்டல்' எனும் உத்தியாகக் கொள்ளலாம். வேண்டல் என்பது விழைவு, விருப்பம் எனும் பொருள்படும். அதாவது இவ்வொழுக்க முறை சிறப்புடையது எனக்கூறி அத்தகைய முறையில் வாழ்தல் நன்று எனக் கூறுதலாகும்.

வயிற்றிலிருக்கும் கருவை வெளிப்படச் செய்து, தாய் அலறி அழுமாறு பிள்ளையை கூற்றுவன் கொண்டு போவதால் எமனுக்குப் பயந்து நல்வினை செய்தல் நல்லது என்பதை 'கள்ளம் கடைப்பிடித்தல் நன்று' என்கிறது நாலடியார் (பா.20). நமது புண்ணியப் பயனால் பெறற்கரிய மனித உடம்பைப் பெற்ற நாம் மேலும் மிகுதியாகப் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்.

இப்புண்ணியம் கரும்பிலிருந்து உண்டான சாறுபோல உயிருக்குப் பெரிதும் உதவும் (நால்.34) என்பதால் நல்லறம் செய்ய அறிவுறுத்துகிறது.

இறப்பு இன்று வருமோ, அன்று வருமோ, என்று வருமோ என்று நினையாமல் எமன் பின்புறத்திலேயே நிற்கிறான் என எணித் தீயச் செயல்களை விட்டுவிடுங்கள்; முடிந்த அளவு மாண்புடையோர் போற்றிய அறத்தைச் செய்யுங்கள் என வேண்டுகிறது நாலடியார்.

*"இன்று கொல்? அன்று கொல்? என்று கொல்? என்னாது*
*பின்றையே நின்றது கூற்றம் என்றெண்ணி*
*ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையில்*
*மருவுமின் மாண்டார் அறம்"* (36)
என்பது அப்பாடல்.

எப்படி வளர்த்தாலும் இவ்வுடம்பு அழியக்கூடியதே என்பதை உணர்ந்து அழியாத உயிருக்காக நல்லறங்களைச் செய்யுங்கள் என்று நாலடியார் வலியுறுத்துகிறது (பா.40). நாலடியார் விளங்காய் ஒருவரால் திரட்டப்படாமல் இயற்கையாகத் திரண்டிருப்பது போலவும், களங்கனி ஒருவரால் கறுப்பாக்கப்படாமல் தானே கறுப்பாய் இருப்பது போலவும் அவரவர் இன்பமும், புண்ணியமும் இயற்கையாய் அமைந்துள்ளன. எனவே இன்பம் விரும்பினால் நல்லறம் செய்க (நால்.103) என்கிறது இந்நூல்.

தூக்கணாங் குருவியினால் கட்டப்பட்ட கூடு, பேரெறும்புகளால் செய்யப்படும் அரக்கு, உலண்டு எனும் புழுக்களால் நூற்கப்பட்ட நூல், கோற்புழுவால் செய்யப்படுவதாகிய கூடு ஆகியன எவராலும் செய்ய முடியாதன. எளிய உயிர்கள் செய்யும் இச்செயல்களை மனிதர்கள் செய்ய இயலாது என்பது அடிப்படை. எனவே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செயலிலும் குறை ஏற்படும். ஆதலால் எல்லாம் தன்னால் தான் இது முடியும் என எண்ணக்கூடாது எனும் வாழ்வியல் உண்மையைச் சிறுபஞ்சமூலம் வெளிக்காட்டுகிறது.

*வான் குரீ இக்கூடு அரக்கு வால் உலண்டு நூல் புழுக்கோல்*
*தேன்புரிந்தது யார்க்கும் செயலாகா – தாம்புரீஇ*
*வல்லவர் வாய்ப்பன என்னார்; ஒரோ ஒருவர்க்கு*
*ஒல்காது ஓரொன்று படும் (சிறு. 25)*
என்பது அப்பாடல்.

**முடிவுரை**

ஒழுக்கம் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன. மனத்தால் குற்றமில்லாது நடத்தல் விளக்கப்பட்டுள்ளது. சினத்தின் தீமைகள் உணர்த்தப்பட்டுள்ளன. பிறர்மனை நயத்தல், கனவு போன்றவை எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இல்லற வாழ்க்கைச் சிறப்பு கூறப்பட்டுள்ளது. கற்றறிந்தோர் அவை உயர்த்தப்பட்டுள்ளது. வாழ்நாளைப் பயனுறக் கழித்தல் சொல்லப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்கள், காவியங்கள் போன்றவற்றில் சொல்லப்படும் அறங்கள் சுட்டப்படுகின்றன. செல்வத்தை மறைத்தல், பிறரிடம் யாசித்தல் ஆகியவை கடிந்துரைக்கப்பட்டுள்ளன. இல்லறம், துறவறம் ஆகிய இருவாழ்க்கையின் சிறப்புக்களும் சொல்லப்பட்டுள்ளன. வாழ்க்கை நிலையாமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. துறவறத்தார்க்கு இல்லறத்தார் செய்யும் கடமைகள் சொல்லப்பட்டுள்ளன. கல்விச் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

# சங்க இலக்கியத்தில் புராணங்கள்

சு.விமலா

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி,*
*மயிலாடுதுறை.*

புராணங்கள் பழமையின் சின்னங்களாகும். இறைவன் அவ்வப்பொழுது வேண்டிய உருவத்தில் தோன்றி வேண்டுவோருக்கு வேண்டியவற்றை அருளும் அருள் நிகழ்ச்சிகள் தொன்றுத்தொட்டு நிகழ்ந்து வந்துள்ளன. அவ்வருள் நிகழ்ச்சிகளே புராணங்கள் ஆகும். புராணக்கதையை ஆங்கிலத்தில் 'Myth' என்று வழங்குவர். 'Myth' என்ற சொல்லுக்கு இணையாகத் 'தொன்மம்' என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இதனைத் தொல்காப்பியம்,

*'தொன்மை தானே உரையோடு*
*புணர்ந்த யாப்பின் மேற்றே'* என்கிறது.

**புராண விளக்கம்:**

புரா – நவம் = புராணம், புரா என்பது பழமையையும், நவம் என்பது புதுமையையும் குறிக்கும். பழமை என்பது புதுமையைத் தன்னகத்தே கொண்டிருப்பது. உயிர்களின் தகுதிக்கேற்ப அவ்வப்போது பழமை தன்னகத்தே உள்ள புதுமையை வெளிப்படுத்துகிறது. எனவே பழமையிலிருந்து தான் புதுமை தோன்றுகிறது.

இப்படிப் பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் இருக்கும் பேரறிவுடைய பொருளே சிவபரம் பொருளாகும். இப்பரம் பொருளையே 'புராணன்' என்று இலக்கியங்கள் பேசுகின்றன. திருஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் 'புராணன்' என்ற சொல்லைக் கையாளுகிறார். இப்புராணருடைய வரலாறே புராணங்கள். இவர் பழங்காலந்தொட்டே அடியார்கட்கு அருளியச் செயல்கள் புராணம் என்று பேசப்படுகிறது.

*''ஆலனை ஆதி புராணனை*
*ஆனவ னாதிபு ராணன்''*

என அப்பர் பெருமான் கூறுகிறார். எனவே பழமையான பொருள்பற்றி பாடப்படுவது 'தொன்மம்' என்னும் பெயரால் வழங்கப்படுகிறது.

**புராண இலக்கியம்:**

புராணத்திற்கு இலக்கணம் கூறும் சுந்தரர் 'புராணம்' என்பது உலகத்தோற்றம், ஒடுக்கம், சூரிய சந்திரர்களின் வழிமுறை, முனிவர் மரபு, பெருமைப்பெற்ற அரசர் மரபு ஆகிய ஐம்பொருள்களையும் கூறுவதாக

அமையவேண்டும். இவ்வைந்தும் உடையவை பழங்காலத்தில் எழுந்த புராணங்கள் ஆகும்.

**புராணக்கதைகளின் நோக்கம்:**

புராணக்கதைகள், வாழ்க்கையின் நம்பிக்கை விளக்கினை ஏற்றி மக்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றன. மக்களுக்கு நன்னெறியினை ஊட்டி மனத்தினை வளம் பெறச்செய்யவும் பயன்படுகின்றன.

ஊழிஊழியாக நடந்தேறிய மனிதப் பண்பாட்டின் சுவருகளாகத் திகழும் புராணங்கள் இந்தியப்பண்பாட்டின் பழமையினைப் பறைச்சாற்றுவனவாய்த் திகழ்கின்றன. காலங்கடந்த கருத்துகட்கு உட்பட்ட நிகழ்ச்சிகளால் அளிக்கப்படும் அடையாள வெளியீடுகளே புராணங்கள் ஆகும்.

**சங்க இலக்கியத்தில் புராணங்கள்:**

சங்க இலக்கியத்தில் புராணங்கள் பற்றிய செய்திகள் நிரம்ப இடம்பெற்றுள்ளன. அவற்றுள்,

- *முருகக் கடவுளின் வடிவமும் வெற்றியும்*
- *முருகன் அவுணர்களை அழித்தல்*
- *சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல்*
- *முருகன் வள்ளித் திருமணம்*
- *முருகன் பிரணவப் பொருளரியாப் பிரமனை சிறயைில் இடல்*
- *சிவபெருமானின் தோற்றப் பொலிவு*
- *நான்மறைகளை அருளியப் பெருமான்*

**முருகக் கடவுளின் வடிவமும் வெற்றியும்:**

முருகப்பெருமான் தாமரை மலர் போன்ற அழகிய சிவந்த திருவடியை உடையவர். பவழத்தை ஒத்த செந்நிறத்தை உடையவர். குன்றி மணி உவக்கும் வண்ணம் ஆடையினைக் கொண்டவர் என்பதை,

*''தாமரை புரையுங் காமர் சேவடி*
*பவழத் தன்ன மேனி திகமொளிக்*
*குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றி''*

என்று குறுந்தொகை கூறுகிறது.

மேலும், கிரவுஞ்ச மலையின் நடுவிடம் பிளக்கச் செய்த வேற்படையினை உடையவர் என்பதையும், செம்மை நிறம் பொருந்திய வேலை தம்திருக்கரத்தில் ஏந்தியுள்ளார் என்பதை,

*''நெஞ்சு பக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்*
*சேவலும் கொடியோன் காப்ப*
*ஏம வைக லெய்தின்றா லுககே''*

என்று கந்த புராணம் கூறுகிறது.

சூரபதுமனின் மகேந்திரபுரியை காவல்புரிந்த இக்கிரவுஞ்சத்தையே பெருமான் தன் வேற்படையால் அழித்தார். இதனை,

*''குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து*
*விண்பொரு நெடுவரை குறிஞ்சிக் கிழவ''*

என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

**முருகன் அவுணர்களை அழித்தல்:**

சிவகுமரன் களம் செந்நிறம் ஆகும்படி அசுரர்களைக் கொன்று இல்லையென்று ஆக்கியவன். இரத்தம் படிந்த அம்பையும், இரத்தத்தினால் சிவந்த கொம்பினை உடைய யானேயேக் கொண்டவன் ஆவார். இதனை,

*''செங்களம் படர்கொன்ற வுணர்த் தேய்த்த*
*செங்கோலம் பிற் செங்கோட்டி யானை''*

என்று குறுந்தொகை விளக்குகிறது.

இச்செய்தியே திருமுருகாற்றுப்படையும்,

*''கால் கிளர்ந்தன்ன வேழமேல் கொண்டு''*
மேலும்,
*''ஓடாப் பூட்கை பிணிமுகம் வாழ்த்தி''*
என்று கூறுகிறது.

**சோமசுந்தரப் பெருமானின் திருவிளையாடல்:**

மதுரையை ஆண்ட செண்பக பாண்டியன் பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணமா? அல்லது செயற்கை மணம் கொண்டதா? என்ற சந்தேகம் எழுந்தது. தன்னுடைய சந்தேகத்தை தீர்ப்பவர்க்கு 100 பொன் பரிசு என அறிவித்து அப்பரிசை சங்க மண்டபத்தின் கண்வைத்தான். தருமி கடவுளிடம் முறையிட்டான். அதற்கு செவிசாய்த்த பெருமானும்,

*''கொங்கு தேர் வாழ்க்கை யஞ்சிறைத்தும்பி..*
................
*நறியவு முளவோற் றறியும் பூவே''*

என்ற பாடல் மூலம் உணரலாம்.

**முருகன் வள்ளித் திருமணம்**

அரக்கர்களின் குலத்தை அழித்த முருகன் மான் வயிற்றில் பிறந்து குறவர் மகளாக வளர்ந்த வள்ளியை மணந்து கொண்டான். இச்செய்தியை,

*''முருகு புணர்ந்து இயன்ற வள்ளிப்போல்''*

என்று நற்றிணைப் பாடல் விளக்குகிறது.

பிறையை ஒத்த நெற்றியைக் கொண்ட குறக்குலப் பெண்ணாகிய வள்ளியை முருகப் பெருமான் தன் இடபாகத்தில் சேர்த்துக் கொண்டான் என்பதனை,

*''கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்*
*குறிப்பறிந்த ருகணைந்துன்''*

என்ற முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் எடுத்துரைக்கிறது.

**முருகப் பிரணவப் பொருளறியாப் பிரம்மனை சிறையில் இடல்:**

படைத்தல் தொழிலினை செய்யும் பிரணவத்தின் பொருள் அறியாத பிரம்மனை 'ஓம் காரத்தின்' பொருளைக் கூறுமாறு முருகன் பணித்தான். பிரணவத்தின் பொருளறியாது விழித்த பிரம்மனை முருகன் சிறையிலிட்டான்.

*''அணங்குறு கிழங்கின் முதுவாய் வேலன்''*

என்று நற்றிணை விளக்குகிறது.

**சிவபெருமானின் தோற்றப் பொலிவு:**

சிவப்பெருமான் கார்காலத்தில் மலரும் பொன்னையொத்த கொற்றையின் புதிய மலர்களான தாரினை அணிந்தவன். மார்பில் நுண்ணிய முப்பிரி நூலை உடையவன். நெற்றியிடத்தில் இமைத்தல் இல்லாத கண்ணுடையவன். கையில் பகைவரைக் கொல்லும் குந்தாலியுடன் விளங்கும் மழுப்படையும் மூன்று தலையினை உடைய சூலப்படையும் உண்டு. காளை ஊர்தியின்மேல் உமையோடு இருப்பவன். வலிய புலியின் தோலை உடுத்தியவனும் ஆவான். நீலமணி மிடற்றினை உடையவன்.

*''கார்விரி கொன்றைப் பொன்னோர் புதுமலர்*
*...............................................................*
*தாவில் தாள் நிழல் தவிர்ந்தன்றால் உலகே''*

**நான்மறைகளை அருளிய பெருமான்:**

தெற்குத் திசை நோக்கிக் காட்சி தரும் சிவனை தட்சிணாமூர்த்தி என்று கூறுவர். இக்காட்சியினை இறைவன் சரண யாத்திரை செய்ய வாருங்கள் என்று உணர்ந்துவதற்காகத் தெற்கு நோக்கி காட்சி அளிக்கிறார்.

- சனகன்
- சனந்தனன்
- சனாதனன்
- சனத்குமாரன்

ஆகிய நால்வரும் வேதத்தின் உட்பொருளை எங்களுக்கு உபதேசித்து அருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். வேண்டுகோலுக்கு இணங்கிய சிவன் தட்சிணாமூர்த்தியாக ஆலமரத்தின் கீழ் அமர்ந்து பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளை அவர்களுக்கு உரைத்தார், ஆணவம், சூன்யம், மாயை ஆகிய மும்மலங்களை நீக்கி பசுவாகிய உயிர் பதியாகிய இறைவனை அடையும் தன்மையினை எடுத்துரைத்தார். இதனை,

*''நான்மறை முதுநூல் முக்கட்செல்வன்*
*ஆலமுற்றம் கவின் பெறத் தைய இய''*

என்ற அகநானூறு பாடல் மூலம் உணரலாம்.

முன்னைப் பழம்பொருட்கும் பழம் பொருளாய் பின்னைப் புதுமைக்கு புதுமையாய் இருக்கும் இறைவனின் அருட்செயல்கள் புராணங்கள் ஆகும். இப்புராணங்கள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் அதிக இடங்களே கையாளப்படுகிறது. என்பதனை இக்கட்டுரையின் வழி உணரலாம்.

# கடையெழு வள்ளல்கள்

அ. கார்முகிலன்

*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*திரு.வி.க அரசு கலைக்கல்லூரி,*
*திருவாரூர்.*

**முன்னுரை:**

பண்டைய தமிழுலகம் பெரும் வேந்தர்களின் மூவரின் கீழும், குறுநில மன்னர்களின் ஆளுகையாலும் ஆளப்பட்டு வந்தது. முடியுடைய வேந்தர்களின் ஆணைக்கிணங்கி குறு முடிக்குடிப் பிறந்தோர்களான வேளிர்களும் புகழ்பட ஆட்சி செலுத்தி ஆண்டுள்ளனர். வீரத்திலும், ஈரத்திலும் நெடுமுடி வேந்தர்களை இவர்கள் ஒப்புமுகி இருந்தமையால் புலவர்களால் பலநிலைகளில் பாராட்டப் பெற்றுள்ளனர். சங்க இலக்கியப்பாக்கள் இவற்றுக்குச் சான்றுகளாய் அமைகின்றன.

பாரி, பேகன், காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி என்ற கடை வள்ளல்களை கடையெழு வள்ளல்கள் என அழைக்கப்பட்டனர்.

**பாரி:**

பறம்பு மலைத் தலைவன் பாரி ஆவான். கபிலர் ஒருவரே பாரிவேளுக்கு நெருங்கிய நண்பர் மட்டுமல்லாது அவைப் புலவரும் ஆவார். பாரி மகளிர் கபிலரிடமே கல்விக் கற்றனர்.

திரும்பும் திசைகள் தோறும்புகை மண்டிலமாய்த் தோன்றும் மலைநாடு பறம்புநாடு. இங்குள்ள வயல்களில் விளைச்சல் குறையாது. குளங்கள் பாறைகளையும் சிறுவேடுகளையும் கரையாகக் கொண்டவை எனப்புறம் 118ம் பாடல் சான்று பகர்கிறது.

*‘‘அறையும் பொறையும் மணந்தலைய*
*எண்நாள் திங்கள் அனைய.........’’* (புறம். 118)

**பேகன்:**

பெரிய மலைநாட்டை உடையவன். ஆவியர் குடியிற்பிறந்தவன். ஆவினர்க்குப் பொதினி மலையும், பொதினி என்ற நகரமும் உரியவை. பொதினி தற்காலத்தில் பழனி என வழங்கப்படுகிறது.

புறநானூற்றுப் பாக்கள் பேகனை ‘‘ஆவியர் பெருமகன்’’ என்றும் ‘‘ஆவியர்க்கோ’’ என்றும் ‘‘ஆவி’’ என்றும் ‘‘வையாவிக்கோப்பெரும் பேகன்’’ என்றும் குறிப்பிடுகின்றன.

மிகக் குளிர்ந்த மலையின் கண் இருள் செறிந்த பெரிய முழையினையும் மலைதற்கரிய வலியினையும் உடைய தெய்வம் காக்கும் உணர்ந்த சிகரங்களையுடைய பெரிய மலை நாடனாகியப் பேகன் என்று பெருஞ்சித்திரனார் பேனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

*"ஈந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கும் உயர்ச்சிமைப்
பெருங்கல் நாடன் பேகனும்" (புறம். 158: 10-12)*

**மலையமான் காரி:**

இவன் திருமுடிக்காரி எனப் பெயர் பெற்றவன். சிறந்த போர்த்திறம் கொண்டவன். இவனை முப்பெரும் வேந்தரும் தமக்குத் துணையாக நின்று போர்ப் புரியும் படி அழைப்பது இயல்பு. அதற்காக அவர்கள் அவனுக்குப் பெரும் பொருள் வழங்குவர். இதனைக் கபிலர்,

*"கடல் கொளப்படா அது உடலுநர் ஊக்கார்
கழல் புனை திருந்து அடிக்காரி நின்னாடே"
(புறம். 122: 1-2)*

எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும், இவனது பேராண்மையை மாறோக்கத்து நப்பசலையார்,

*"........ உருமின் முரசு எழுந்து இயம்ப
அண்ணல் யானையொடு வேந்து களத்து ஒழிய,
அருஞ்சமம் ததையைத் தாக்கி நன்றும்
நண்ணாத் தெவ்வர் தாங்கும்
பெண்ணை அம்படப்பை நாடு கிழவோயே!"
(புறம். 126: 19-20)*

என்கிறார்.

**ஆய்:**

பொதியன் மலைநாட்டை ஆண்டு வந்தவன்; கையில் கொடியும்; காலிற் கழலையும் அணிந்தவன்; சுரபுன்னை பூமாலை அணிந்தவன்; இவனது பொதியின் மலை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகும்.

**கொடைச்சிறப்பு:**

நீலநாகம் ஆய்க்குக் கலிங்கம் வழங்க, அதனை அவன் தென்முகக் கடவுளான சிவனுக்குக் கொடுத்தான் என கீழ்க்காணும் சிறுபாணாற்றுப்படை சான்று பகர்கின்றது.

*"நீலநாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்து புலவர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆய்" (சிறுபாண். 96-99)*

**அதிகன்:**

ஔவையார் அதிகமானை "மழவர் பெருமகன்" என்று அழைக்கின்றார். நெடுமான் அஞ்சியான் குடிவழி வந்த அதிகன் தேவர்களைப் போற்றும் மரபில் வந்தவன்; வேள்விகள் பல செய்தக் குடியன்; கரும்பைத் தமிழகத்திற்கும் அறிமுகம் செய்தவன்; பனம் பூ மாலை அணிந்தவன்.

*"உடையன் ஆயின் உண்ணவும் வல்லவன்
கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்
மடவர் மகிழ்துணை நெடுமான் அஞ்சி
இல்இறைச் செரீஇய ஞெலிகோல் போல
தோன்றாது இருக்கவும் வல்லவன், மற்றதன்
கான்றுபடு கனை எரிபோல,
தோன்றவும் வல்லவன் - தான்தோன்றுங்காலே"
(புறம். 315)*

என்னும் புறநானூற்றுப் பாடல் வரிகள் அதிகன் வீரத்தைக் குறிப்பிடுகின்றது.

**நல்லி:**

நெடிய கொடுமுடிகளைப் பெற்ற மலைநாட்டுக்குத் தலைவன், போரில் சிறந்தவன். மதுரைக்குத் தெற்கிலுள்ள மலை நாட்டில் ஒரு பகுதி இவனுக்குரியதாய் இருந்தது. இவனது நாடு 'கண்டீர நாடு' எனப்பட்டது. அதனால் இவன் கண்டீரக்கோ எனப்பட்டான்.

*"திண்டேர் நள்ளி கானத் தண்டர்
பல்லா பயந்த நெய்யிற் றொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோ
றெழுகலத் தேந்தினுஞ் சிறிதென்றொழி
பெருந்தோ ணெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே"
(குறுந். 210)*

குறந்தொகையில் தலைவியைப் பிரிந்து மீண்டும் வந்த தலைவனிடம் தோழி கூறும் கூற்றாய் அமைந்த பாடலில் நள்ளிப் பற்றிய செய்தியைக் காணமுடிகின்றது.

**ஓரி:**

கொல்லிமலைக்குரியவன் ஓரி 'ஆதன் ஓரி', 'வல்வில் ஓரி' என்னும் பெயர்களைப் பெற்றவன். இவனது மலைநாட்டில் காந்தள் மலர்களே வேலியாய் அமைந்திருக்கும். இங்குள்ள மக்கள் உணவுக்காக யானைத் தந்தங்களை விற்கும் பண்பினராய்த் திகழ்ந்தனர். ஓரியின் நாட்டகத்தே மணம் தரும் பெருங்காடு இருந்ததாகப் பரணர் குறிப்பிடும்போது,

தலைவியின் கூந்தலில் அத்தகு மணம் இருந்ததாகப் பரணர் பின்வரும் பாடலில்,

*"பெறுவதியையாதாயினு முறுவதொன்*
*ஙண்டுமன் வாழிய நெஞ்சே திண்டோக*
*கைவள் ளோரி கானந்தீண்டி*
*ஏறிவளி கமழு நெறிபடு கூந்தல்"*

எனக் குறிப்பிடுகின்றார்.

**கொடைச்சிறப்பு:**

ஆவும் மற்றை விலங்கினங்களும் சென்று உண்ணக் கலக்கிய நீர் என்ற போதும் அந்நீர் நுலைக்கும் வழித்தடம் பல இரவலர். பரிசில் வேண்டி செல்லும் இடத்தில் கொடுப்பவரை நோக்காது தாம்புறப்பட்ட நிமிர்த்தங்களை பழிப்பர் இரவலர். வானத்தின் கண்மின்னல் மழைத்தொகுதி போல் யாவர்க்கும் வாரி வழங்கும் மழை போன்றே ஓரியே! நீவழங்க வில்லையெனினும் உன்னை இகழமாட்டேன். என காலந்தாழ்த்தியமைக்காகப் பாடப்பட்ட பாடலில், ஓரி பற்றியச் செய்தியை அறிய முடிகின்றது.

*"ஆவும் மாவும் சென்று உண கலங்கி*
*சேறொடு பட்ட சிறுமைத்து ஆயினும்*
*உன்நீர் மருங்கின் அதர் பல ஆகும்*
*புள்ளும் பொழுது பழித்தல் அல்லதை*
*உள்ளிச் சென்றோர் பழியலர் அதனால்*
*புலவேன் வாழிய ஓரி! விசும்பில்*
*கருவி வானம் போல"*

*(புறம். 204: 7-13)*

வரையாது சுரக்கும் வள்ளிபோய் நின்னே!.

# சங்க இலக்கியத்தில் சூழலியல்

**செ. மாரிமுத்து**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி,*
*தருமபுரம், மயிலாடுதுறை.*

**ச**ங்க இலக்கியத்திற்கு திணை இலக்கியம்[1] என்று ஒரு பெயர் உண்டு. சங்க இலக்கியத்தின் பாடுபொருள் அகம், புறம் என்ற திணைகளைப் பற்றியதாகவே அமைந்திருப்பதனால் இப்பெயர் ஏற்பட்டுள்ளது. திணை என்றால் இடம் என்றும், ஒழுக்கம் என்றும் இருபொருள் வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விரு பொருளுக்கும் காரணம் அங்கு நிலவுகின்ற சூழலே அடிப்படை காரணமாக அமைகிறது. திணை நிலங்களாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய இவ்வைந்து நிலங்களிலும் காணப்படுகின்ற சூழலியில் சார்ந்த கருத்துக்களைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சூழல் - சூழலியல் - விளக்கம்**

‘‘சூழல் என்பதற்கு ஆராய்தல், ஆலோசனை, இடம், கருத்து, குறிப்பு, கூட்டம் சுற்றுப்புறம்’’[2] என ஏழு பொருளிருப்பதை கதிரைவேல் அகராதி குறிப்பிட்டுள்ளது.

கழகத் தமிழ்க் கையராதி (1940) சூழல் என்பதற்கு ‘‘சூழ்கை, மணற்குன்று, கூட்டம், சுற்றுப்புறம் சூழ்ச்சி’’[3] என்ற ஐந்து பொருளைக் குறிப்பிட்டுள்ளது.

இவ்விரண்டிலும் சுற்றுப்புறம், கூட்டம் (கூட்டு வாழ்க்கை) என்ற பொருளடைவுகள் இணைந்து காணப்படுகின்றன. இதன் மூலம் இயற்கையுடன் கூடிய சுற்றப்புறத்தையும், கூட்டமாகக்கூடி இணைந்து வாழும் குழு வாழ்க்கை முறையும் சூழலியலுக்கு மிகவும் இன்றியமையாதனவாகிறது என்பதை அறிய முடிகின்றது. இயற்கை என்ற பாதை மதுரைத் தமிழ்ப் பேரகராதி ‘‘சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை, முறைமை, ஏது, குணம், தகுதி, பாக்கியம், இயல்பு, செயற்கைக்கு எதிரானவை’’[4] என்ற சொற்பொருள் விளக்கத்தின் மூலம் விளக்கியுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள இயல்பு என்ற சொற்பொருள் விளக்கத்தின் மூலம் விளக்கியுள்ளது. இதில் கூறப்பட்டுள்ள இயல்பு என்ற சொற்பொருள் சூழலியலின் தனித்தன்மையை விளக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

தொல்காப்பியம் - கிளவியாக்கத்தில் ‘‘இயற்கைப் பொருளை இற்றெனக்கிளத்தல்’’[5] என்று இயற்கையைக் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு இயல்பு என்ற பொருள் பலரது உரையின் மூலமும் வெளிப்பட, சேனாவரையர் இயற்கைப் பொருள் என்பதற்கு ‘‘தன்னியல்பில் திரியாது நின்ற பொருள்’’[6] என உரை எழுதியுள்ளார்.

இவைகளின் மூலமாக சூழலியல் வாழ்க்கைக்கு இயற்கையின் இயல்பினின்றும் மாறாத உண்ண உணவும், இருக்க இடமும், ஆற்றலும், அமைதியும் தேவை என்பதனையும் சங்க கால மக்கள் இவற்றை முழுமையாகப் பெற்று வாழ்ந்துள்ளனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

**இயற்கை – செயற்கை**

செயற்கைக் கலப்பின்றி தனித்திருக்கும் இயற்கைத் தன்மைக்கும், வாழ்க்கை முறைக்கும் சூழலியல் என்ற வரையறையை சமுதாயவாதிகள் ஏற்படுத்தியுள்ளனர். செயற்கைக் கலந்த இயற்கைத் தன்மைக்குச் சுற்றுச்சூழலியல் என்ற வரையறையை அறிவியல் வாதிகள் ஏற்படுத்தியுள்ளனர்.

**ஐம்பூதங்கள்**

சங்க காலத்தில் ஐம்பூதங்களும் ஒன்றுடன் ஒன்று கலந்த சூழலமைவு ஏற்கப்பட்டுள்ளதை முரஞ்சியூர் முடிநாகராயர்.

*''மண் திணிந்த நிலனும்*
*நிலன் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*
*வளித் தலைஇய தீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை''*[7]

எனப்பாடியுள்ளதை அறியமுடிகின்றது. ஐம்பூதங்களையும் சூழலியலுக்கான அடிப்படைக் காரணிகளாகக் கருதிப் பயன்படுத்தியுள்ளனர். சங்ககால மக்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்யும் நேரங்களில் சூரியக்குளியல் செய்துள்ளனர். மேலும் மக்கள் உழவுப் பணிகளின் மூலம் உடல் நலனையும், சூரியன் மூலம் கிடைக்கும் இயற்கைச் சக்தியையும் பெற்று உடல் ஆரோக்கியத்துடன் கூடிய சூழலியல் வாழ்வைக் கடைபிடித்துள்ளனர் என்ற குறிப்பை அறிய முடிகின்றது.

ஐம்பூதங்களைப் பற்றி கேள்விப்பட்டதோடு நில்லாமல் ஆய்ந்தறிந்து பின்பற்றியுள்ளனர் என்பதனை,

*''செஞ்ஞாயிற்றுச் செலவும்*
*அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்*
*பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்*
*வளிதிரி தரு திசையும்*
*வறிது நிலைஇய காயமும் என்றிவை*
*சென்று அளந்து அறிந்தார்''*[8]

என்ற புறநானூற்றுப் பாடலில் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் தெளிவுபட பாடியிருப்பதை அறிய முடிகின்றது.

**கருப்பொருட்கள்**

மக்களின் சூழலியல் வாழ்விற்கு ஐம்பூதங்களைப் போல கருப்பொருட்களும் முக்கிய இடம் வகிக்கின்றன என்பதை,

*''தெய்வம் உணாவே மா மரம் புள் பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
*அவ்வகை பிறவும் கரு என மொழிப''*[9] – என்ற

நூற்பாவில் தொல்காப்பியர் கருப்பொருட்களைப் பற்றி விளக்கியுள்ளார், இதன்படி தெய்வம், உணவு, விலங்குகள், மரம், செடி, கொடிகள், பறவை, தோற்கருவிகள், தொழில், யாழ், ஊர், நீர், பூ போன்றனவும் கருப்பொருட்களாகின்றன. இவைகள் குறித்த பாடுபொருளை சங்க அக இலக்கியங்களிலும், புற இலக்கியங்களிலும், அகப்புற இலக்கியங்களிலும் நிறைந்திருக்கின்றன. முதல் கருப் பொருளாகிய தெய்வம் சார்ந்த கடவுள் வாழ்க்கைச் சங்க இலக்கியங்களின் தொடக்கத்தில் காணமுடிகின்றது. இவைகளினால் சூழலியல் வாழ்விற்கு கருப்பொருட்கள் இன்றியமையாதன என்பதனை அறியமுடிகின்றது. சூழலியலின் அடிப்படையிலமையும் வாழ்க்கைக்கு அதனைப் பின்பற்றுவதற்கான நிலைக்களன்களாக ஏரி, குளம், ஆறுகள், அடர்ந்த மரங்கள், நிறைந்த காடுகள், கடற்கரைகள், மலையடிவாரங்கள் என்பன இன்றியமையாதனவாக அமைகின்றன. இவற்றில் இயற்கையாக அமைந்தவை போக, சிலவற்றை மன்னர்களே உண்டாக்கி வைத்து தன்குடிமக்களின் இயற்கையுடன் கூடிய சூழலியல் வாழ்விற்குத் துணை நின்றுள்ளனர் என்பதனை,

*''காடு கொன்று நாடாக்கி*
*குளம் தொட்டு வளம் பெருக்கி*
*பிறங்கு நிலை மாடத்துறந்தை போக்கிக்*
*கோயிலோடு குடி நிறீஇ''*[10] – என்ற

பட்டனப்பாலைப் பாடலடிகளின் மூலமாக அறிய முடிகின்றது. நீர் நிலைகளுக்கு அருகில் புதிய வாழிடங்களை உண்டாக்குவதன் மூலம் மக்கள் ஆரோக்கியமாகவும், செயற்கைக்கலப்பின்றி இயற்கையோடியைந்த சூழலியல் வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார் என்பதை அறிய முடிகின்றது.

**விளையாட்டு ஆயம்**

திடமான உடலை உடையவர்களே சூழலியலின் முன்னோடியாக விளங்குகின்றனர். இவர்களுக்கு விளையாட்டும், உடல் பயிற்சிகளும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இவற்றைச் சங்ககால மக்கள் பின்பற்றியுள்ளதையும், குழுக்களாக சேர்ந்து விளையாடியதையும்,

*''விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினாள் புன்னையது சிறப்பே''*[11]

என்ற நற்றிணைப்பாடல் மூலம் அறிவதுடன், விளையாட்டுக்கள் நடைபெறுமிடங்கள் குளிர்ச்சி தரும் புன்னை மரங்கள் பல நிறைந்திருக்கும் பகுதிகளாக விளங்கியுள்ளதையும் இதன் மூலமாக அறியமுடிகின்றது.

**வாழிடம்**

சூழலியலை நிலை நிறுத்துமிடமாக மக்களின் வாழிடம் அமைகின்றது. இங்கு பலவகையான கருப்பொருட்கள் ஒன்றுடன் ஒன்று கலந்த வாழ்க்கை முறை தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களும் மக்கள் வாழ்வதற்கு தகுந்த இடமாக இருப்பதற்குக் காரணம் அங்கு கருப்பொருட்கள் அனைத்தும் இயல்பாக அமைந்த சூழலே ஆகும். பாலை நிலத்தில் இத்தகைய சூழல் குறைவாக இருப்பதனால் மக்கள் அங்கு வாழ முடிவதில்லை, வாழிடம் சார்ந்த குடிநீர் தூய்மையானதாக இருப்பதையும் அதுவே முதல் ஆதாரம் என்பதையும் புறநானூற்றில் குடபுலவியனார் பாடிய ''நீரின்றியமையா யாக்கைக் கெல்லாம்''[12] என்ற அடி உணர்த்தியுள்ளது.

இயற்கை என்றால் ஐம்பூதங்களின் சேர்க்கை என்ற பொருளை சித்தரியல் தத்துவங்களும் வறையறுக்கின்றன. சங்க காலத்தில் அகத்திணை வாழ்க்கை முறை நிலமும் நிலம் சார்ந்த கருப்பொருளையும் ஒட்டியதாக அமைந்தன. இதனையே மக்கள் இயற்கையுடன் ஒட்டிய வாழ்வியலாக ஏற்று தொடர்ந்து கடைபிடித்து வந்துள்ளனர்.

**பூமியின் வகைகள்**

அபிதான சிந்தாமணியில் பன்னிரு வகையான பூமிகள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளன.[13] அவை சைவீபூமி, பிராம்ம பூமி, வைஷ்ணவி பூமி, ஐந்திர பூமி, ஆசுர பூமி, பைசா பூமி, ராட்சஷ பூமி, பசு பூமி, பூத பூமி, வாயு பூமி, வருண பூமி, ஆக்னேய பூமி என்பனவாகும். இந்த பன்னிரு வகையான பூமியிலும், பூமியுள்பட ஐம் பூதங்களின் சேர்க்கையுமுள்ளது. இவற்றுடன் கூடிய இயற்கையமைப்பே சூழலியல் எனப்படுகின்றது, சங்க காலத்தில் சூழலியல் என்பதை ''ஐம்பூதத்து இயற்கை போல''[14] - எனப் புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியுள்ளார்.

**இயற்கை உணவு**

இயற்கையில் உணவுப் பொருட்கள் மிக முக்கியமான சூழலியல் காரணியாக விளங்குகின்றன. கீரை உணவுகள் உண்டதை ''குப்பைக் கீரை கொய்க்கன் அகத்தை''[15] எனப் புறநானூற்றிலும், சிறுபாணாற்றுப்படையில் ''குப்பை வேளை உப்பிலி வெந்ததை''[16] என்ற அடியின் மூலமும் அறிய முடிகிறது. இத்தகைய உணவு முறைகளுடன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைச் சூழலியல் என்ற சொல் வரையறுக்கின்றது.

தானே உண்டானவை இயற்கை எனப்படுகின்றது. இவைகள் அழியாது அழிக்கவும் முடியாது, மனிதனால் உண்டாக்கப்பட்டவை செயற்கை எனப்படுகின்றது. இவைகள் அழியக்கூடியன, இவற்றின் மூலம் மற்ற பொருட்களும் அழிவுறுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் சூழலியல் வாழ்வென்பது இயற்கையோடியைந்து (ஒட்டி) கூடி வாழ்வதாகும். சங்ககால மக்களின் சூழலியல் சார்ந்த செய்திகளை மேற்கண்டவனவற்றின் மூலமாக கண்டுணர முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்:**

1. தமிழண்ணல் - புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, ப.116
2. கதிரை வேற்பிள்ளை தமிழ் மொழி அகராதி, ப.752
3. கழக கையடக்க அகராதி 1940. ப.116
4. மதுரைத் தமிழ்ப் பேரகராதி - தொகுதி 1. ப.252
5. தொல்காப்பியம் - களவியல். நு.19
6. மேலது - சேனாவரையர் உரை. 36
7. புறநானூறு. ப.2.1-6
8. மேலது
9. தொல்காப்பியம் - அகத்திணையியல். 283-286
10. பட்டினப்பாலை - அடிகள். 283-286.
11. நற்றிணை.பா. 172
12. புறநானூறு. 18:1.
13. அபிதான சிந்தாமணி. ப.1443.
14. புறநானூறு. 2:6.
15. மேலது. 159:9
16. சிறுபாணாற்றுப்படை. அடி.83.

ஓஓஓ

# திருமுறைகளின் பார்வையில் காமன்

**ம. எழில் பரமகுரு**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல் துறை,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி - 24.*

சிவபெருமானின் வீரச் செயல்களில் ஒன்றாகக் குறிக்கப் பெறுவது காமனை எரித்த நிகழ்வாகும். நிறுவனச் சமயத்திலும் நாட்டுப்புறச் சமயத்திலும் காமனுக்குத் தனியிடம் உள்ளது. நாடடுப்புற மக்கள் காமனை வழிபடுவதோடு காமனுக்கு விழா எடுப்பதனையும் மரபாகக் கொண்டுள்ளனர். காமன் பண்டிகையில் முக்கிய இடம் பெறுவது இலாவணி நிகழ்ச்சியாகும். மன்மதன் எரியுண்ட வரலாற்றைப் பாடி விழாவில் காமனுக்கு வழிபாடுகளைச் செய்வார்கள். மண்ணோடும் மண்ணின் மக்களோடும் தொடர்ந்து நிலைபெற்றிருந்த காமன் குறித்த வரலாறு திருமுறைகளில் எங்ஙனம் பதிவாகியுள்ளது என்பதனை இக்கட்டுரை நோக்குகின்றது.

**காமன்**

காமன் என்ற தமிழ்ச் சொல் காலந்தோறும் பல்வேறு பொருள்களைத் தாங்கி பல்பொருள் குறித்த ஒரு சொல்லாக நிலைபெற்றுள்ளது.

''காமப் பகுதி கடவுளும் வரையார்'' (புறத்திணையியல் 23) என்ற தொல்காப்பிய நூற்பா கடவுள் மீது மாந்தர் கொண்ட காதலைக் குறிப்பதாக நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.

''காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்'' என்ற தொல்காப்பியம் செய்யுளியல் நூற்பாவிற்கு இயற்கை புணர்ச்சி என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. புணர்ச்சி என்பதனை ''காமம் செப்பாது கண்டது மொழிமோ'' என்ற குறுந்தொகைப் பாடலடி (2:2) ஒன்றின் மீது சார்பு, பற்றின்றி நடுவுநிலையில் கூற வேண்டும் என்கிறது. இங்குக் காமம் என்பது ஒருபால் பற்று என்பதாயிற்று. விருப்பம், விழைவு, ஆசை, இச்சை, சிற்றின்பம் என்றவாறு பல பொருள்களை இச்சொல் கொண்டிருப்பதை அகராதிகள் (Tamil Lexicon Vol II P.872) விவரிக்கின்றன. காம உணர்வைத் தூண்டிக் காமத்தில் ஈடுபடவைப்பவனைக் காமன் என்ற பெயரால் குறித்தனர். காமம் உலக உயிரிகளுக்குப் பொதுவானது. அதே போன்று இவ்வுணர்வினைத் தூண்டி உலக இயக்கத்திற்கும் தொடர்புக்கும் காரணமாக உள்ள காமனும் அனைவருக்கும் பொதுவானவன். காமனை ஒவ்வொரு நாட்டிலும் வேறுவேறு பெயர்களில் அழைக்கின்றனர். அத்துடன் அவனைத் தெய்வமாகவும் கொள்கின்றார்கள். கிரேக்கர்களின் 'ஈரோஸ்' என்ற தெய்வமும் இலத்தீனில் 'கூப்பிட' என்ற தெய்வமும் பாலுணர்வினைத் தூண்டி உயிர்ப் பெருக்கத்திற்குக் காரணமாக விளங்குகின்றனர் என்பது

அம்மக்களின் நம்பிக்கை. தமிழர்களும் காமனைக் காதல் தெய்வமாகப் போற்றியதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

இளவேனிற் காலத்தில் காமக்கிழத்தியருடன் புனலாடும் ஆடவர்க்கு அமைந்தது காமன் விழா என்று கலித்தொகைப் பதிவு விளக்குகிறது. உயர்ந்தவன் விழவு (பாலைக்கலி 30: 12-13) வில்லவன் விழா (பாலைக்கலி 35:13-14), வில்விழா, காமவேள் விழவு (சிலம்பு 14: 114) என்று இலக்கியங்கள் காமன் விழாவினைக் குறிக்கின்றன. மேலும், காமனுக்குக் கோயில்கள் இருந்தமையையும் பெண்கள் காமனுக்கு நோன்பு நோற்றதையும் பெருங்கதை, சீவகசிந்தாமணி ஆகிய காப்பியங்கள் வாயிலாக அறியலாம். நீண்ட நெடுங்காலம் மக்கள் வாழ்வில் தொடர்கின்ற காமனையும் காமத்தையும் புத்த, சமண சமயங்கள் வெறுத்தன. ஆனால் தொன்மைச் சமயமான சைவ, வைணவ சமயங்கள் காமனுக்கு உரிய இடத்தை நல்கின.

**திருமுறைகளில் காமன்**

தேவார ஆசிரியர்களின் காலத்தில் சமண, பௌத்த சமயங்களின் ஆதிக்கம் தமிழகத்தில் மிகுதியாக இருந்தது. பெரும்பான்மையான மக்கள் இதனை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அரசு ஆதரவுடன் இச் சமய நிறுவனங்கள் செயல்பட்டன. ஆகவே, இவர்களை எதிர்த்து மக்களைச் சைவத்தின் பால் ஈர்த்திட ஞானசம்வந்தரும் நாவுக்கரசரும் பல்வேறு எதிர்ப்புக்களை அரசியல் மற்றும் சமூக ரீதியாக எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அந்நாளில் மக்கள் நன்கு அறிந்த தொன்மங்களைத் தங்கள் பக்திப் பனுவல்களில் பயன்படுத்திக் கொண்டார்கள். திருமுறைகளில் குறிப்பாக ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் காமன் தொடர்பான தொன்மங்களுக்குப் பாடல்களில் மிகுதியும் இடம் தந்துள்ளார்கள். இல்லறத்தை விலக்கிய துறவு வாழ்க்கையைத் தமிழர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. சிவபெருமான் யோகியராக இருந்தாலும் அம்மை அப்பனாகவும் அடியவர்கள் கண்டு போற்றினார்கள்.

ஞானசம்பந்தர் அனங்கன் (88: 3), ஐங்கணை விரிசிலையான் (1:18:4), ஒப்புடை ஒருவன் (267: 7) ஐங்கணைவேள் (201:9) கருப்பு வில்லி (75: 7), காமதேவன் (288: 8), மதனன் (374: 4), மன்மதன் (234: 8), மன்மதவேள் (293:2), சுறவக் கொடிகொண்டவன் (159:4), மன்மதவேள்(293:2), சுறவேந்தன் (155: 5), துளவமான்மகன் (246: 2) மால்மதலை (256: 3), வேள் (146: 7), வேனில் வேள் (256: 2), காமன் (4:7), என்றவாறு காமனைக் குறித்துள்ளார்.

அப்பரடிகள் மேற்சுட்டியதுடன் கரும்பு பிடித்தவர் (102: 5), களவு செய்தொழிற் காமன் (208: 9), வேனற் கோமான் (27: 3), வேனிலவன் (4:4), கோலான் (234: 7), தென்றல் நெடுந்தேரான் (309: 11), பூங்கணைவேள் (294: 5), மதனவேள் (279: 19), மதன் (246: 2), வன்மதவேள் (215: 6) என்று அடைகளுடன் காமனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களின் அடியொற்றிய சுந்தரரும் பாடியுள்ளார். எனினும் காமன் என்ற பெயரினையே மிகுதியும் கையாண்டுள்ளார். மாணிக்கவாசகரும் ''காமன்'', ''அனங்கள்'' என்ற பெயர்களையே திருவாசகத்தில் பயன்படுத்தியுள்ளார். பிற திருமுறைகளிலும் காமன், அனங்கன், மதன், மன்மதன் என்ற பெயர்களே பெருவழக்காகப் பயன்கொண்டிருப்பதைக் காண முடிகின்றது.

**காமன் பெயர் விளக்கம்**

| | |
|---|---|
| அனங்கன் | - உருவமற்றவன் |
| மதன் | - மிகு காமத்தில் அமுந்தச் செய்பவன் |
| மன்மதன் | - உள்ளத்தைச் சலனப்படுத்துபவன் |
| மாரன் | - காம இச்சை உடையார்க்கு மரண வேதனையைத் தருபவன் |
| வேள் | - விருப்பத்திற்குரியவன் |

இவை பொது வழக்கிலுள்ள காமனின் பெயர்களுக்குரிய விளக்கமாகும் மற்ற பெயர்கள் பெரும்பான்மையும். தொழில், படை, கருவி, தோற்றம் இவற்றினை அடையாகக் கொண்டு கூறப்பட்டுள்ளன. காட்டாகக் கருப்பு வில்லி என்பதற்குக் கரும்பை வில்லாகக் கொண்டவன் என்பது போலத் திருமுறைகளின் காமன் குறிக்கப் பெற்றுள்ளான்.

காமன் திருமாலின் மனத்தில் தோன்றியவன் என்பது தொன்மங்கள் தரும் செய்தியாகும். திருமுறையாளர்கள் அதனடியாக மால் மதலை என்று காமனைக் குறித்துள்ளதும் நினையத்தகும். இதுவன்றியும் காமனுக்குப் பல பெயர்களை நிகண்டுகள் (பிங்கல நிகண்டு. நூ.145, சேந்தன் திவாரகம் நூ.7) குறிக்கின்றன.

**காமனை எரித்தமை**

காமனைத் தழலுண்டதற்குக் காரணம் யோக நிலையிலிருந்த சிவபெருமானின் யோகத்தை மாரன்

கலைக்க யோக அனல் விழிவிழி காமனை நோக்க அவன் எரிந்தான் என்பதே. இதனைப் புராணங்கள் விரிவாகப் பேசுகின்றன. கந்தபுராணம் காமதனகப் படலம் கூறும் சாரச் செய்தியாவது, திருமால் மனத்தில் தோன்றிய காமன் அழகிய இளமையான காதல் தெய்வம். இவன் உயிர்களுக்குக் காமத்தை உண்டு பண்ணுபவன். இவனுடைய மனைவி இரதி என்பாள். சூரபதுமன் முதலான அரக்கர்களால் அமரர்கள் துன்பமுற்றனர். அத்துன்பத்தைப் போக்க முருகப் பெருமான் தோன்றுவதாக இருந்தது. சிவபெருமான் யோகத்திலிருந்த அவரது நிட்டையைக் கலைத்து உமையை மணம் புரியச் செய்ய எண்ணி அமரர்கள் காமனைச் சிவபெருமான் மீது அம்பெய்து மோனத்தைக் கலைக்கத் தூண்டினர். காமன் அமரர்களின் கோபத்திற்கு அஞ்சி இறைவன் மீது மலர்க்கணை தொடுத்தான். சிவபெருமான் மீது அம்பெய்து மோனத்தைக் கலைக்கத் தூண்டினர். காமன் அமரர்களின் கோபத்திற்கு அஞ்சி இறைவன் மீது மலர்க்கணை தொடுத்தான். சிவபெருமான் மீது மலர்க்கணை பட்டதும் சிவபெருமான் சிறிதே நெற்றிக் கண்ணைத் திறந்தார். அந்நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த தீயினால் மன்மதன் எரிந்து சாம்பலாயினான். சிவபெருமான் கொடுஞ்செயல் செய்த காமனை எரித்தாரன்றி இரதியை எரிக்கவில்லை. பின்னர் இரதியின் வேண்டுதலால் அவள் மட்டும் காணும் உருவமாகவும் ஏனையோர்க்கு அருவமாகவும் இருக்க அருளினார்.

*ஆலின் நல்லறம் உரைத்து ஞானமோடிருப்ப*
*நலிந் திடலுற்று வந்த அக் கருப்பு வில்லி (75: 7)*
*விண்ணவர்கள் வெற்பரசு பெற்ற மகள் மெய்த்தேன்*
*பண்ணமரும் மென்மொழியி னாளை யணைவிப்பான்*
*எண்ணிவரும் காமன் (167:6) என்ற ஞானசம்பந்தர் பாடிய குறிப்புகளும்*
*நின்ற மாதவத்தை ஒழிப்பான் சென்றணைந்து (99:7)*
*நீர் முன்கொண்ட உயர்தவத்தை அமரர்வேண்ட அழிக்க வந்த காமவேள் (6:2)*

என்று சுந்தரர் பாடிய செய்தியும் காமன் சிவன்பால் சென்ற நோக்கத்தை விளம்பும் சான்றுகளாகின்றன. இறைவன் யோக நிலையிலிருந்ததையும் அவனது யோகத்தைக் கலைத்த இறைவன் இறைவியோடு இணையவேண்டு மென்பதால் காமன் சிவனிடம் சென்றான் என்பதையும் சுட்டுகின்றன.

*''கழைபடு காடு தென்றல் குயில் கூவ அஞ்சு*
*கணையோன் அணைந்து புகலும்*
*மழைவடி வண்ணன் எண்ணி மகவோனை*
*விட்ட மலரான தொட்ட மதன்*
*எழில்பொடி வெந்து வீழ இமையோர்*
*கணங்கள் எரியென் நிறைஞ்சி யகலத்*
*தழல்படு நெற்றி யொற்றை நயனஞ் சிவந்த*
*தழல் வண்ணன் எந்தை சரனே'' (14:9)*
என்று நாவுக்கரசரும்,

*''கண்ணிற் கனலாலே காமன் பொடியாக''* (82:5)
என்று ஞானசம்பந்தரும்,

*''காமனை வேவக் கடைக் கண்ணினால் பொடிபட*
*நோக்கிய தென்னை கொல்லோ'' (9:4)*
என்று சுந்தரரும்,

*''காமன் தனதுடன் தழல் எழவிழித்த செங்கண் நாயகனே'' (29:3)*
என்று மாணிக்க வாசகரும்

*''ஒளிவி லிவன்மதனை ஒண்பொடியா நோக்கி''*
*(அற்புததிருவந்தாதி 132: 1-2)*
என்று காரைக்காலம்மையாரும்,

*''காமன் அழகழித்த கண் போற்றி''*

என்று நக்கீரர் (போற்றித்திருக்கலிப்பா - 9) பாடிய பாடலடியும் சான்றுகளாகின்றன.

மேலும் காமனை எரித்து அவன் மனைவி ரதி வேண்ட மீண்டும் அவளுக்கு அவள் கணவனை மீள அளித்தார் என்பதனைத் திருமுறைப் பாடல்கள் (சம்பந்தர் 8:5, 318:9) தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன.

முருகனின் அவதாரம் நிகழ்த்த வேண்டும் என்பதற்காக இறைவனின் யோகத்தைக் கலைக்க, தேவர்களின் ஆணையின்படி சென்ற காமன் இறைவன் நுதல்விழி நாட்டத்து நெருப்பால் சாம்பலாக அவள் மனைவியின் வேண்டுதலுக்கு அருளி அவள் மட்டும் காணுமாறு அருள்புரிந்தார் என்பதைத் திருமுறைகள் விவரிக்கின்றன.

**நோக்கம்**

இத் தொன்மத்தினைச் சைவ சமயிகள் மிகுதியும் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக, தேவார ஆசிரியர்கள் சிவனைக் காமனை வென்றவனாகவும் அதே போழ்து காமனுக்கு அருளியவனாகவும்

காட்டப்படுவதன் நோக்கம் சமய வரலாற்றில் விரிவாக ஆய்தற்குரியது.

காமத்தை வாழ்வியலுக்கு அடிப்படைத் தேவையான ஒரு குணமாகக் கருதுவது சைவ மரபு. ஆனால் புத்த சமண சமயங்கள் அவ்வாறு கொள்வதில்லை. மேலும் பிறப்பினை மிகவும் இழிவாக எண்ணுவர். பற்றற்ற ஆசையற்ற வாழ்க்கையைப் பயனுடைய வாழ்வாகப் போற்றுவார்கள். பற்றற்ற ஆசையற்ற வாழ்க்கைக்குக் காமம் தடையானது என்று கொள்வதில் வியப்பில்லை. இச்சமயங்களின் தாக்கம் ஞானசம்பந்தர், நாவுக்கரசர் காலத்தில் வேரூன்றியிருந்தது. எனவே, அக்காலத்தில் சைவ சமயத்தை மீட்கவும் சிவனின் தனித்தன்மையினை மக்கள் உணர்ந்திடச் செய்தலுமே திருமுறையாளர்களின் நோக்கமாக இருந்தது. உமையுடன் கூடிய உமாபதியாகக் காணும் அடியவர்கள் அவனைக் காமத்தைக் கடந்த யோகியாகவும் காண்பர். இல்லறத்திற்கும் உலகத் தோற்றத்திற்கும் அடிப்படையாகவிருக்கும் காமத்தை நெறியப்படுத்துவதற்கும் அக்காலத்தே இத்தொன்மத்தைத் திருமுறையாளர்கள் பயன்கொண்டார்கள்.

**முடிவுரை**

காமன் என்ற சொல் காலந்தோறும் பல பொருள்களைப் பெற்றிருந்தாலும் பாலுணர்வுடன் தொடர்புடையதாகவும் தொடர்ந்து நிலைபெற்றுள்ளது. காமத்திற்குக் காரணமாக விளங்குபவன் காமன். இவனை உலகெங்கும் வேறுவேறு பெயர்களில் வழங்குகின்றனர். காமனுக்குத் தனிக்கோயில்களும் வழிபாடுகளும் இன்றளவும் நாட்டுப்புற மக்களிடையே நிலவக் காணலாம். நாட்டுப்புற மக்களிடையே செல்வாக்குப்பெற்ற காமன் பற்றிய தொன்மத்தினைத் திருமுறை ஆசிரியர்கள் மிகுதியும் பயன்படுத்தியுள்ளார்கள். இத்தொன்மத்தைப் பயன்படுத்தி ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோர் சமண, பௌத்த சமயங்களின் ஆளுமையை அடக்கி சிவபரம்பொருளின் பெருமையினை மக்களிடையே உணர்த்தினர். காமங் கடந்த யோகியாகவும், உமையுடன் கூடிய உமாபதியாகவும் சிவனை அடியார்கள் கொண்டாடுவது உலக வாழ்வியல் நெறிக்குக் காமம் அடிப்படையானது என்பதனாலேயாம்.

**முதன்மை நூல்**

பன்னிரு திருமுறைகள் – தருமையாதீனம் பதிப்பு

**பார்வை நூல்**

1. தொல்காப்பியம், தமிழண்ணல் (உ.ஆ), மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்
2. கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை 1969
3. சேந்தன் திவாகரம்: கழக வெளியீடு, சென்னை 1958
4. பிங்கல நிகண்டு: கழக வெளியீடு, சென்னை 1968
5. சிலப்பதிகாரம்: உ.வே.சா பதிப்பு, சென்னை 1958
6. Tamil Lexicon Vol II: Madras University 1929

# சங்க இலக்கியங்களில் வண்ணங்களின் செல்வாக்கு

**ப.சிலம்பரசன்,**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல் துறை,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி - 24.*

**முன்னுரை**

தமிழர்கள் இயற்கை அழகில் தம் மனதைப் பறிகொடுத்தவர்கள். அதனால்தான் சங்க அகப்பாடல்கள் இயற்கையைப் போற்றும் பாடல்கள் எனப்படுகின்றன. இப்பாடல்களில் இயற்கை பல்வேறு வண்ணங்களாகக் காட்சியளிப்பதைப் புலவர்கள் பலபடப் பாடியுள்ளனர். கடல் சூழ் உலகத்தில் அழகியல் வளர்ச்சிக்காகவே நிறங்கள் பெருகிக் காணப்படுகின்றன. உலகில் சேர்கையாகிய ஐம்பூதங்களுக்கும் ஒவ்வொரு தனித்த வண்ணம் உண்டென்பதை நம் முன்னோர்கள் கூறியுள்ளனர். இதனடிப்படையில் சங்க இலக்கியங்களில் வண்ணங்களின் செல்வாக்கு இடம்பெறும் நிலையினை ஆராய இக்கட்டுரை முனைகிறது.

**வண்ணம் தோன்ற காரணம்**

வண்ணம் என்பது ஒரு பொருளினால் வெளிவிடப்படுகின்ற கடத்தப்படுகின்ற அல்லது தெறிக்கப்படுகின்ற ஒளியின் சேர்க்கையினால் ஏற்படுகின்ற ஒரு காட்சியின் விளைவாகும். புவியைப் பொறுத்தவரை கதிரவனே ஒளியின் மூலம் கதிரவனின் ஒளி வெண்மையாகக் காணப்பட்டாலும், ஏழு நிறங்களின் கலவை ஆகும். எனவே, மழைத்துளிகள் கதிரவன் ஒளிபட்டு, விண்ணில் ஏழு வண்ணங்களைப் பிரதிபலிக்கும் வானவில் தோன்றக் காண்கிறோம். வைரக்கற்கள், முப்பட்டகக் கண்ணாடி முதலியவற்றின் மீது ஒளிக்கற்றைகள் பாயும்போது ஏழு வண்ணங்கள் சுடர் விடுவதைக் காண இயலும். இதனை நிறமாலை என அறிவியல் குறிக்கிறது. ஆங்கிலத்தில் ஏழு 'VIBGYOR' என்னும் சொல்லை நிறமாலையைக் குறிக்கப் பயன்படுத்தினர் அறிவியலார்.

வண்ணம், நிறம் ஒரு பொருள் குறித்த சொற்கள். தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

*''ஈங்கைய வண்ணத் துய்ம்மலர் உதிர''* (குறு. 380 - 6)
*''வேனில் ஓதி நிறம்பெயர் முதுபோத்து''* (நற்.186: 5)
*என உரைக்கக் காண்கிறோம்.*

*''அணிநிறம் கொண்ட மணிமருள் ஐம்பால்''* (நற்.337 : 7)
*''வண்ணம் நோக்கியும் மென்மொழி கூறியும்''* (நற்.146 : 1)

என்னும் இவ்விரு அடிகளிலும் வண்ணம் என்ற சொல் அழகு என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**இயற்கைப் பொருள்களின் வண்ணம்**

இந்த உலகமானது நிலம், நீர், தீ, வளி, வெளி எனும் ஐவகைப் பூதங்களின் கூட்டாக உருவாகியது. இயற்கைக் கூறுகளாகிய ஐம்பூதங்கள்

ஒவ்வொன்றும் பல வண்ணங்களைப் பிரதிபலிப்பதைக் காண்கின்றோம்.

*''மெண்மணற் படப்பை''*
*(நற். 38:10, 123:4, 172:1, 260:4)*
*''வெண்மணல்''*
*(அகம். 137:8, 160:4, 240:73)*

எனும் சொற்றொடர் நெய்தல் நிலம் வெண்மையான மணற்பரப்பைக் கொண்டு இயங்குவதையும்,

*''செந்நிலப் புறவின்'' (நற்.321: 1)*
*''செம்புலப் பெயல் நீர்போல'' (குறு. 44 : 4)*

என்னும் சொற்றொடர்களின் மூலம் முல்லை நிலம் சிவந்த நிறம் கொண்டிலங்குவதையும் குறிக்கின்றன.

*''நீல் நிறப் பெருங்கடல்'' (நற்.45 : 3)*
*''மலை துணிந்தன்ன மாயிரும் பரப்பின்'' (நற். 159)*

என்னும் தொடர்கள் கடல்நீர் வண்ணம் நீலமாயிருப்பதைச் சுட்டும். நீல வானைப் பிரதிபலிக்கும் போது கடல்நீர் நீலமாகவும், வானில் கருமேகம் சூழும்போது கருமையாகவும், மழைநீர் செம்மண் நில்ததில் வீழ்ந்து ஓடும்போது சிவந்தும் விளங்கக் காண்கிறோம்.

'தீ' சிவந்த நிறம் கொண்டிலங்குவதை,

*''நெருப்பின் அன்ன செந்தலை அன்றில்'' (குறு.180 : 1)*
*''சுடர் செல் வானம் சேப்ப'' (குறு.234 : 1)*

என்னும் தொடரால் சிவந்த கதிர்களைக் கொண்ட கதிரவன் எழச் சிவந்த வானம் என உணர்த்துகின்றன.

*''நிலவே நீலநிற விசும்பு மீனொடு புரைய'' (நற்.199 : 9)*
*''நீல்நிற விசும்பின் பல்கதிர் பரப்பி'' (நற்.348 : 1)*

என்னும் தொடர்கள் வானவெளி நீலநிறம் பெற்றிலங்குவதைக் குறிக்கும். வானம் நீலநிறமாகத் தோன்றுவதன் காரணத்தை அறிவியல் நோக்கில், ''சூரியனின் ஒளி வளி மண்டலத்தில் நுழையும் போது அதில் கலந்துள்ள பெரும்பாலான நிறங்கள் எந்த இடையீடும் இல்லாமல் பூமியின் மேற்பரப்பை வந்து அடைந்து விடுகின்றன. ஆனால் நீலநிற ஒளி வளி மண்டலத்தில் உள்ள துகள்களின் அலை நீளத்தை ஒத்திருப்பதால் அது எல்லாத் திசைகளிலும் சிதறடிக்கப்படுகிறது. கிட்டதட்ட 100 கிலோமீட்டர் நீளம் கொண்ட வளிமண்டலத்திலுள்ள ஒவ்வொரு துகள் சிதறடிக்கப்பட்டு, கடைசியாக நம் கண்களை வந்தடையும் வரை துகள்களில் மோதிக் கொண்டே இருக்கிறது. இந்தக் காரணத்தால் வானத்தை எந்தப் பக்கத்திலிருந்து நாம் பார்த்தாலும், அது நீல நிறமாகவேத் தெரியும்'' என்று நிறஜாலம் என்ற அறிவியல் நூல் கூறுகிறது.

அந்தி நேரத்தில் அல்லது அதிகாலையில் கதிரவன் மிகத் தொலைவிலும் குறிப்பிட்ட அச்சில் சாய்ந்தும் இருப்பதால் சிதறடிக்கப்படும் நீலநிற ஒளி வேறு திசைக்குச் சென்று விடுகிறது. அப்போது வானம் மஞ்சள் (அ) செம்மஞ்சள் (ஆரஞ்சு) நிறத்திலிருக்கும் கண்ணால் காண இயலாக் காற்றுக்கு வண்ணமில்லை.

**இறையுரு வண்ணம்**

வண்ணத்தைப் பெயர்களின் முன் அடைமொழியாக் கொண்டு தெய்வங்களை வருணிக்கும் பாங்கை நம் இலக்கியங்கள் வழி அறிகிறோம்.

*''பவழத்தன்ன மேனியன்'' (குறு.கடவுள் வாழ்த்து)*

'சேயோன் எனக் குறிஞ்சி நிலத் தெய்வமாம் முருகனையும், நீலமால், கரியவன், கார்மேகவண்ணன், பச்சை மாமலைபோல் மேனியன் (திவ்ய.பிர) என்றும் முல்லை நிலத் தெய்வமாம் திருமாலையும், பச்சை நிறம் கொண்டவளாய் மதுரையில் வீற்றிருக்கும் மீனாட்சியையும், பவழத்தன்ன மேனியின் நீலமணி மிடற்றன் (புறம்) என்று பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவனையும் நம் தமிழ் இலக்கியங்கள் உரைக்கின்றன.

வழிபடும் தெய்வங்களின் திருமேனி வண்ணங்களை எண்ணி மகிழ்ந்த மக்கள், அடிப்படைத் தேவைகளில் முதலிடம் பெறும் உண்ணும் உணவில் பல வண்ணம் கண்டு மகிழ்வதை இன்றும் நாம் காணலாம்.

**உணவு**

உணவு பற்றிச் சங்க இலக்கியங்களில் பல செய்திகள் உள்ளன. பண்டைய காலம்தொட்டு இன்று வரை தமிழகத்தில் காணப்படும் வெண்சோறு (புறம். 362, 366, 372, 381, 382, 384) (குறுந்.210, அகம்.340) பற்றி அறிகிறோம். இலைக்கறி உணவு பற்றி இலக்கியங்கள் 'அடகு' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றன.

*''மென்பிணி அவிழ்ந்த குறுமுறி அடகு''*
*(மதுரை. 531)*

என்ற அடி புலப்படுத்துகிறது. உணவில் பச்சை நிறக் காய்கறிகளும், கீரைகளும் இரும்புச்சத்து மிக்கவை என்பதையும் உயிர்ச்சத்து மஞ்சள், ஆரஞ்சு வண்ணக்காய் கனிகள் என்பதையும் ஊட்டச்சத்தியல் வல்லுநர்கள் தம் ஆய்வுகளில் வெளிப்படுத்தி உள்ளனர்.

*''வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்''* (புறம். 392)

என்று ஔவையார் குறிப்பிட்டுள்ள உணவு இன்று உணவியல் ஆய்வாளரால் அவசியமான உணவு என்று அறிவுறுத்தப்படுகிறது.

**வண்ண ஆடைகள்**

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் உணவுக்கு அடுத்தப்படியாக ஆடை இடம்பெறுகிறது. சங்கத் தமிழர்கள் பலவகையான ஆடைகளை உடுத்தி ஒப்பனை செய்து கொண்டதுடன் மிகமிக மென்மையான வண்ண ஆடைகளையும் அக்காலத்தில் அணிந்திருந்தனர். ஆடைகளுக்கு வண்ணம் தோய்த்தும் பயன்படுத்தினர்.

**வெண்ணிற ஆடை**

இயல்பாகவே வெண்மையை விரும்புதல் தமிழர் வழி வந்த பழக்கம். பஞ்சுவின் இயல்பான வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளமாகக் கருதப்பட்டது. எனவே பண்டைத் தமிழர் பெரும்பான்மையினர் வெண்ணிற ஆடையையே உடுத்தினர் என்பதை,

*''ஆவி அன்ன அவிரிநூற் கலிங்கம்''*
(பெரும். 469)
*''போர் இலை பகன்றைப் பொதி அவிழ் வான்பூ''*
(குறு. 330 - 4)

இவ்வடிகளின் மூலம் அறிய முடிகிறது.

**கரிய நிற ஆடை**

மதுரையைக் காவல் புரிந்த காவலர் இரவில் பிற நிறங்களைத் தன்னிடத்தே வாங்கிக் கொள்ளும் கரிய நிற நீலக் கச்சியினை அணிந்திருந்தனர். என்பதை,

*''சிறந்த கருமை நுண்வினை நுணங்கு அறல்*
*நிறம் கவர்ப்பு புனைந்த நீலக்கச்சியினர்''*
(மதுரை. 638 - 639)

இவ்வடிகளின் மூலம் அறிய முடிகிறது.

**பொன்னிற ஆடை**

பட்டு நூலில் பொன்னிழைகளைச் சேர்த்து நெய்த ஆடைகள் பொன்னாடை எனப்பட்டன. பொன்னிழைகளையே சரிகை என்பர் இக்காலத்தினர். இந்த பொன்னாடைகள் தமிழர் பண்பாட்டுச் சடங்கு முறையில் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளமையை,

*''பொன்ஒக்கும் உடையவை''* (பரி.1 - 56)
*''பொன்மணி அருவியின் நிறனொடு மாறும் தார்''*
(பரி.13 : 1-2)
*''பொலம்புரி ஆடை வலம்புரிவண்ண''* (பரி. 9 : 88)

பரிபாடலின் அடிகள் கூறுகிறது. திருமாலைப் போற்றிப் பாடிய கடுவன் இளவெயினார் 'பொன்னிறத்தால் மிக்க ஆடையினை உடையாய்' எனப் பாடியதால் பொன்மை நிறம் தமிழர் அறிந்த ஒன்று எனக் கூறலாம்.

**சிவப்பு நிற ஆடை**

சங்க இலக்கியங்களில் செந்நிறம் அல்லது செம்மைநிறம் பலவிடங்களில் பயின்று வந்துள்ளது. சிவப்பு நிறத்திற்கும் முருகனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. முருகக் கடவுள் குறிஞ்சி நிலத்திற்குரிய கடவுள். குறிஞ்சி நில மக்கள் வேட்டைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்களின் எண்ணத்திலும் செயலிலும் சிவப்பு நிறம் அதிகமாகப் பிரதிபலிக்கிறது. அவர்தம் கடவுளுக்கு அணியும் ஆடையும் சிவப்பு நிறம் வாய்ந்ததாக அமைகிறது. என்பதை,

*''சிவந்த ஆடையன் செவ்வளர செயலை''*
(முருகு. 206)
*''நலம்பெற கலிங்கத்துக் குறங்கின் மிசை''*
(முருக.109)

என்ற அடிகள் முருகன் சிவந்த ஆடையை உடுத்தியுள்ளமையைச் சுட்டுகிறது.

திருமண விழாக்களில் மகள் சிவப்பு, மஞ்சள், வெண்மை ஆடைகளை உடுத்துவதும், மணமகன் மஞ்சள், வெண்மை இருகோட்டு அறுவை அணிவதும் நெடுங்காலத் தொட்டுப் பயின்று வரும் மரபாகும். பெண்கள் பூப்பணிச் சடங்கில் வெண்ணிற ஆடையை உடுத்துவதும், வளைகாப்புச் சடங்கில் பச்சைவண்ணப் புடவையை அணிவதும் இன்றும் பழக்கத்தில் உள்ளது.

**முடிவுரை**

- வண்ணங்கள் இயற்கையிலேயே அமைந்துள்ளன. அதில் ஏழு, முதன்மை நிறங்களாகக் கூறப்பட்டுள்ளன. இயற்கைப் பொருள்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நிறங்கள் இருப்பதைக் கண்டோம்.

- மனிதன் தெய்வங்களுக்குப் பல்வேறு நிறங்களின் குறியீட்டின் வாயிலாக பயன்படுத்தியிருப்பதை காணலாம்.

- சங்கத்தமிழர் பல வண்ணங் கலந்த உணவினையும், உடைகளையும் அணிந்திருந்தனர். இவ்வாறு மனிதனின் வாழ்வில் நிறங்கள் கலந்துப் பண்பாட்டை வளர்த்துள்ளது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

ஞஞஞஞ

# இரட்டைக்காப்பியத்தில் மணிமேகலையின் பாத்திர வளர்ச்சி நிலை

**ப.மாலதி**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழியல் துறை,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி - 24.*

**முன்னுரை**

உலகில் முதன் முதலில் தோன்றிய இலக்கிய வகை காப்பியமாகும். தமிழ் மொழியில் பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியம் காப்பியத்திற்கு தொன்மை, தோல் என்று பொருள் கூறுகிறது. தொல்காப்பியத்தையடுத்து தோன்றிய இலக்கண நூலான தண்டியலங்காரம் பெருங்காப்பியத்திற்கு வரையறைக் கூறுகிறது. தமிழில் தோன்றிமுதல் காப்பியம் சிலப்பதிகாரம். இக்காப்பியத்தைத் தொடர்ந்து எழுந்தது மணிமேகலை. இவை இரண்டும் இரட்டைக்காப்பியம் என்று அழைக்கப்படுகிறது. இது கதைத் தழுவிய வடிவமாக காணப்படுவதால் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றுத் திகழ்கிறது. இவ்வகையில் தமிழில் தோன்றிய இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் மணிமேகலை பாத்திர வளர்ச்சி நிலை எவ்வாறு வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு காப்பியம் சிறப்படைவதற்கு கதையமைப்பு, பாத்திரப்படைப்பு நிகழ்ச்சிகள் ஆகியவை மிகவும் இன்றியமையாத கூறுகளாக இருப்பினும் அவற்றில் தனித்தன்மை பெற்று விளங்குவது பாத்திரபடைப்பாகும். இவ்விருகாப்பியங்களிலும் ‘மணிமேகலை’ என்ற பாத்திரம் இன்றியமையாததாக அமைகிறது. மணிமேகலை என்ற பாத்திரத்தின் வளர்ச்சியானது சிலப்பதிகாரத்தில் தொடங்கி மணிமேகலை காப்பியத்தில் முடிவடைகின்றது.

மணிமேகலைப் பாத்திர வளர்ச்சியானது பத்து வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

1. தோற்றம்
2. வளர்ச்சி
3. பருவமடைதல்
4. காதல்
5. இல்லறவாழ்வில் பற்று
6. முற்பிறப்பு நிலை
7. புசியொழிப்பு

8. அறங்கூறல்

9. சமய அறிவு

10. துறவு ஏற்றல்

ஆகியவை ஆகும். இவ்வகைகளை விரிவாகக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

### 1. தோற்றம்

கோவலன் மாதவி இருவருக்கும் பிறந்த குழந்தையே மணிமேகலை ஆவாள். குழந்தை பிறந்துள்ள செய்தியை சிலப்பதிகாரம் அடைக்கலக்காதையில் மாடலமறையோன் கூற்று வாயிலாக காப்பியாசிரியர் கூறுகிறார். மாடலமறையோன் கோவலனிடம் மணிமேகலையின் பிறப்பு பற்றியச் செய்தியைக் கூறுகிறான். மாதவி பச்சிளம் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு பெயர் சூட்ட சித்திராபதியோடு வயதில் மூத்த கணிகைகுல ஆயிரம் பெண்களும் சேர்ந்து மாதவி பெற்ற மகளுக்கு பெயர் சூட்ட நினைத்து ஒரு நல்ல பெயரைக் கூறுங்கள் என்று கோவலனிடம் கேட்க 'முன்னொரு நாளில் என்னுடைய முன்னோர்களில் ஒருவன் நடுக்கடலில் தத்தளித்தபோது அவனைக் காப்பாற்றிய எம்குலத்தெய்வமான மணிமேகலை என்பதனையே என் குலமகளுக்கு இடுக' என்று கூறினான். அப்பெயரையே அக்குழந்தையின் காதில் ஆயிரம் கணிகைக் குலப்பெண் கூடி மணிமேகலை! மணிமேகலை! என்று கூறி வாழ்த்தியதாக கூறப்படுவதை,

*''வேந்துறுசிறப்பின் விழுச்சீர் ரெய்திய*
*மாந்தளிர் மேனிமாதவிமடந்தை*
*பால்வாய்க் குழவிபயந்தனளெடுத்து*
.....................................................
.....................................................
*எங்குலதெய்வப் பெயர்ஈங் கிடுகென*
*அணிமேகலையார் ஆயிரங் கணிகையர்*
*மணிமேகலையெனவாழ்த்தியநாற்பது*
*மங்கலமடந்தைமாதவி தன்னொடு*
*செம்பொன் மாரிசெங்கையிற் பொழிய''*

*(சிலம்பு. 15 : 21 - 41)*

என்ற அடிகள் விளக்குகின்றன.

### 2. வளர்ச்சி

மணிமேகலை பாத்திரம் பற்றிய செய்தி சிலப்பதிகார அடைக்கலக்காதையில் தொடங்குகிறது. மேலும், நீர்ப்படைக்காதை வரம் தருங்காதை ஆகியவற்றிலும் கூறப்பட்டுள்ளன. இருபத்து ஏழாவது காதையான நீர்ப்படைக்காதையில் மணிமேகலையின் துறவுப் பற்றி பேசப்படுகிறது.

மணிமேகலை அறியாத பருவத்தில் துறவு வாழ்வை அவளாகவே விரும்பி ஏற்காமல், மாதவியால் துறவரத்திற்கு தள்ளப்படுவதை,

*''நற்றாய் தனக்குநற்றிறம் படர்கேன்*
*மணிமேகலையைவான்துயர் உறுக்கும்*
*கணிகையர் கோலம் காணாது ஒழிகஎனக்''*

*(சிலம்பு : 27 : 104-106)*

என்ற அடிகளில் காணமுடிகின்றன.

வரம் தருங்காதையில் மணிமேகலையின் உடல் வளர்ச்சி நிலையையும் மாதவி, மணிமேகலையை துறவி ஆக்கிய செய்தியைப் பற்றியும் தேவந்தியின் கூற்று வெளிப்படுத்துகிறது.

மணிமேகலைப் பாத்திர வளர்ச்சிக்கு அவளுடைய உடல் வளர்ச்சியும் இன்றியமையாத ஒன்றாகும். மணிமேகலையின் உடல் வளர்ச்சிப் பற்றி சிலப்பதிகாரத்தில் ஒரு இடத்திலும் மணிமேகலையில் (4:97-101, 18:159-168, 21:11-26) மூன்று இடங்களிலும் பேசப்படுகிறது.

மணிமேகலையின் பாத்திர பண்பு மணிமேகலைக் காப்பியத்தில் முழுவதுமாக படிப்படியாக வளர்ச்சி அடைகிறது. மணிமேகலாதெய்வம், கந்திற்பாவை, தீவதிலகை போன்ற தெய்வங்களும், அறவணடிகள், சுதமதி, மாதவி, உதயகுமரன் போன்ற பாத்திரங்களும் மணிமேகலைப் பாத்திரம் வளர்ச்சியடைவதற்கு அடிப்படைக் காரணமாக அமைவதைக் காப்பியத்தில் காணமுடிகிறது.

### 3. பருவமடைதல்

மணிமேகலை பருவமடைந்த செய்தியை மணிமேகலைக் காப்பியத்தில் உதயக்குமரன் அம்பலம்புக்காதையில் சித்திராபதி உதயக்குமரனிடம் கூறுவதாக காப்பிய ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். அரிதாகப் பெறுகின்ற சிறப்பினையுடையதாகக் குருகினங்கள் கருவுயிர்ப்பவும் ஒப்பற்ற சிறப்புடையதாக வளர்ந்த அழகிய மணிக்காஞ்சியானது பாடல் சான்ற சிறப்பினையுடைய பரதகண்டத்தே புகழ்பெற்ற நாடுகளின் உள்ளிடமும் விரும்பும் வண்ணம் நல்ல அழகுகளோடும், நிறைவுற்று விரும்பப்படும் பக்குவத்தோடு இதழ் விரித்தது. அதனை உதயகுமாரனாகிய ஒப்பற்றவண்டானது உண்ணும்

பொருட்டாகச் செய்வதற்கு யான் விரைவாக வந்தேன் என்று சித்ராபதி கூறுவதை,

*''அரிதுபெறுசிறப்பிற் குருகருஉயிர்ப்ப*
*ஒருதனியோங்கிய திருமணிக் காஞ்சி*
*..................................................*
*..................................................*
*காமர் செவ்விக் கடிமலர் அவிழ்ந்தது*
*உதயகுமரனெனும் ஒருவன் குணீஇய''*

*(மணி: 18 : 55-60)*

என்ற அடிகள் மணிமேகலை பருவமடைந்த செய்தியை எடுத்தியம்புகின்றன.

மணிமேகலை பூப்படைந்து கூடுவதற்குரிய பக்குவத்தை எய்தினாள் என்பதை மேற்கண்ட உவமை மூலம் சுட்டுகிறார்.

**4. காதல்**

தலைவன், தலைவி ஆகியோர் உள்ளத்து எழும் உணர்வுகளே காதல் என்கிறோம். அதைத் தவிர்த்து தாய், தந்தை, உறவினர் மீதுகொண்டுள்ள அன்பும் ஒருவகை காதல் என்று கொள்ளப்படுகிறது. மணிமேகலை துறவு வாழ்வை சிறுவயதிலேயே மேற்கொண்டாலும் சராசரி பெண்களுக்கும் இருக்கக்கூடிய உள்ளத்து உணர்வு இருக்கத்தான் செய்கிறது. இங்கு மணிமேகலை கொண்டுள்ள காதலை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று உதயக்குமரன் மீது கொண்டுள்ள காதல், மற்றொன்று தாய் தந்தையின் மீது கொண்டுள்ள காதல்.

**5. இல்லற வாழ்வில் பற்று**

மணிமேகலை துறவு, வாழ்வை மேற்கொண்டாலும் கதைப்போக்கில் முற்பிறப்பை அறிந்த பிறகு, அவளுக்கு முந்தைய வாழ்வில் ஏற்பட்ட இல்லறப்பற்று சில இடங்களில் ஆசிரியரால் வெளிப்படுத்தப்படுகிறது.

பீடிகைக் கண்டுபிறப்புணர்ந்த காதையில் மணிமேகலை தன் முந்தையப் பிறப்பின் கணவன் யார் என்று அறிய முடியாததற்கு மணிமேகலை வருந்துகிறாள். மேலும் உதயக்குமரன் அம்பலம் புக்ககாதையிலும் கந்திற்பாவை வருவதுரைத்தகாதையிலும் மணிமேகலைக்கு இல்லறத்தின் மீதுள்ள பற்று வெளிப்படுவதைக் காணமுடிகின்றன.

**6. முற்பிறப்பு நிலை**

மணிமேகலைக் காப்பியம் முழுவதும் முற்பிறப்பு நிலை பேசப்படுகிறது. மணிமேகலைப் பாத்திர வளர்ச்சிக்கு முற்பிறப்பு என்ற கதை உத்தி இன்றியமையாததாக அமைகிறது.

இந்த முற்பிறப்பை உணர்த்துதல் இரண்டு நிலைகளில் வெளிப்படுகிறது. அவை,

1. மணிமேகலைக்கு முற்பிறப்பை உணர்த்துதல்.
2. மணிமேகலை மற்றவர்களுக்கு உணர்த்துதல்.

என்பனவாக அமைகின்றன. மணிமேகலைக்கு முற்பிறப்பை, மணிமேகலாத் தெய்வம், தீவதிலகை கந்திற்பாவை ஆகியவை எடுத்துக் கூறுகின்றன. மணிமேகலை ஆபுரத்தினுக்கு மட்டும் முற்பிறப்பை எடுத்துரைக்கிறார்.

**7. பசியொழிப்பு**

பசியொழிப்பு குறித்தப் புரட்சியை மணிமேகலைக் காப்பியம் மணிமேகலைப் பாத்திரம் வாயிலாக வெளிப்படுத்துகிறது. மணிமேகலைக் காப்பியத்தில் பசியொழிப்பை முதலில் மேற்கொண்டவன் ஆபுத்திரன். அவனையடுத்து செய்தவள் மணிமேகலை.

மணிமேகலை, காயச்சண்டிகையின் யானைப் பசியைபோக்குகிறாள். பின்பு, சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுகிறாள். அதன் பிறகு காஞ்சியில் உணவளித்து பசியைப் போக்கி அறம் செய்பவளாக விளங்குகிறாள். இவ்வாறாக மணிமேகலைப் பாத்திரத்தின் தன்மையை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

**8. அறங்கூறல்**

மனிதனை உலக பற்றுகளிலிருந்து மீட்டு, அறத்தின் வழி துன்பப்படுவோருக்கு எந்தவித எதிர்பார்ப்புமின்றி உதவுவதே சிறந்த அறமாகும். அறம் எனப்படுவது பிற உயிர்களின் துன்பத்தைப் போக்குவதாகும். இத்தகைய அறத்தின் இன்றியமையாமையை மணிமேகலை பிறருக்கு விளக்கியும் பிறரிடமிருந்து கேட்பதாகவும் ஆசிரியர் இப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்.

அறத்தின் பொருளை மணிமேகலைக் காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

*''அறம் எனப்படுவதுயாதெனக் கேட்பின்*
*மறவாது இதுகேள் மன்னுயிர் கெல்லாம்*
*உண்டியும் உடையும் உரையுள் அல்லது*
*கண்டதுஇல்............................................''*

*(மணி 25 : 228 - 231)*

என்ற அடிகள் உணவின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றன. காப்பியம் முழுவதும் அறவணடிகள், மணிமேகலைக் கூற்று வழியாக, அறச்செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**9. சமய அறிவு**

மணிமேகலை சிறுவயது முதல் பௌத்தமதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தாலும் அம்மதத்தில் ஆழ்ந்த புலமை இல்லாதவளாகக் காட்டப்படுகிறாள். கதைப்போக்கில் அவள் அப்புலமை பெறுவதாகவும் படைக்கப்பட்டுள்ளது. 'சமயத்திறம் கேட்டகாதை' என்ற ஒரு தனிக்காதையையே ஆசிரியர் படைத்துள்ளார். இக்காதையில் மணிமேகலை பல சமயவாதிகள் கொள்கைகளை அறிய விரும்பி, வைதிகம்,சைவம், பிரமம், வைணவம் வேதவாதம், ஆசீவகம், நிகண்டவாதம், சாங்கியம், வைசேடிகவாதம், பூதவாதம் ஆகிய சமயக் கொள்கைகளைக் கேட்டு இறுதியில் பௌத்தமதக் கொள்கைகள்தான் சிறந்தது என்று தெளிவுறுகிறாள்.

**10. துறவு ஏற்றல்**

மணிமேகலையின் துறவு இறுதி இரண்டு காதைகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இதன் மூலம் காப்பியாசிரியர் துறவு குறித்தச் செய்தியை அறவணடிகள் கூற்று வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். துறவுக்கு உறுதுணையாக இருந்து வழிநடத்துபவராகவும் அறவணடிகள் உள்ளதை,

*"வாய்வதாகவெண் மனப்பாட் டறம் என*
*மாலைவிட் டினாரஞ்சினள் மணிமேகலை"*
*(மணி : 244 - 245)*

'என் மனத்தினிடத்தே உளதாகிய அறநெறி உபதேசம் இன்று எனக்கு வாய்ப்பதாக' என உலக மயக்கங்கள் நீங்கியவளாக அறவணடிகளைத் தொழுது வேண்டி நின்றாள் மணிமேகலை.

**முடிவுரை**

1. சிலப்பதிகாரத்தில் மணிமேகலையின் பிறப்பு மாடலமறையோன் கூற்று வாயிலாகவும் துறவு தேவந்தியின் கூற்று வாயிலாகவும் வெளிப்படுவதைக் காணமுடிகிறது.

2. மணிமேகலை பருவமடைந்தச் செய்தியை அவள் பாட்டி சித்திராபதி உவமைச் சுட்டி விளக்குவதை அறியமுடிகிறது.

3. கதைப் போக்கில் சில இடங்களில் முற்பிறப்பு மீதுகொண்ட இல்லறப்பற்று வெளிப்பட்டாலும் உதயக்குமரன் இறந்தப்பிறகு மணிமேகலையிடம் மறைந்து போவதைக் காணமுடிகிறது.

4. மணிமேகலை காதல் வயப்பட்டப்போதெல்லாம் அதிலிருந்து மீட்டெடுக்க அறவணடிகள், சுதமதி, தீவதிலகை, மணிமேகலாதெய்வம் போன்ற பாத்திரங்கள் மணிமேகலையின் காதலைத் தடுத்து மேலும் மனவலிமைப்படுத்துபவர்களாக உள்ளார்கள் என்பதை உணரமுடிகிறது.

5. பசியொழிப்பு குறித்தப் புரட்சியை ஏற்படுத்தி அறத்தின் வழியாக உலகிற்கு மன்பதை உண்மையை எடுத்துரைத்து இறுதியில் துறவு வாழ்வு மேற்கொண்டதை அறியமுடிகிறது.

6. மணிமேகலை அறத்தின் வழிச் செல்வதற்கு முற்பிறப்புநிலை திருப்புமுனையாக அமைகிறது.

7. பௌத்தமதக் கருத்துக்களை மணிமேகலை முழுமையாக அறிந்து கொண்டவளாக சமயத்திறம் கேட்ட காதையின் மூலம் அறியமுடிகிறது.

# நற்றிணையில் தமிழர்களின் பழக்க வழக்கங்கள்

**இரா. வனிதா**

*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*காவேரி மகளிர் கல்லூரி,*
*திருச்சி – 18.*

பழங்காலத் தமிழர்களின் வரலாற்றையும், வாழ்க்கை முறைகளையும் அறிந்துக் கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றது. சங்க இலக்கியங்கள் இல்லை என்றால் பழந்தமிழர்களின் தொன்மைச் சிறப்புகளை அறிந்திருக்க முடியாது. சங்க இலக்கியங்களில் காணப்படும் தனிப் பாடல்களின் தொகுப்பு எட்டுத்தொகை சிறப்புக்களை அறிந்திருக்க முடியாது. சங்க இலக்கியங்களில் காணப்படும் தனிப்பாடல்களின் தொகுப்பு எட்டுத்தொகை எனவும், நெடும் பாடல்களின் தொகுப்பு பத்துப்பாட்டு எனவும் பாகுபாடு செய்யப்பட்டுள்ளன. நற்றினை என்பதற்கு நல்ல ஒழுகலாறு என்று பொருள் கூறுகின்றனர். இந்நூலை நற்றிணை நானூறு என்றும் அழைக்கின்றனர். இந்நானூறு பாடல்களையும் தொகுத்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி ஆவார். இப்பாடலை 175 புலவர்கள் பாடியுள்ளனர். தமிழர்களின் பழக்க வழக்கங்கள் நற்றிணையில் இடம் பெற்றுள்ளமை பற்றி விரிவாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**பழக்க வழக்கங்கள்:**

மக்களின் வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டுச் சிறப்புகளையும் மக்களுடைய பழக்க வழக்கங்களின் வாயிலாகவே அறிந்துக் கொள்ள முடிகிறது. நாட்டிற்கு நாடு, ஊருக்கு ஊர் பழக்க வழக்கங்கள் வேறுபடுகின்றன. கூட்டமைப்புச் சமூகத்தில் மக்கள் தங்களுக்கென்று பழக்க வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அப்பழக்க வழக்கமே அம்மக்களை அடையாளம் காட்டவும் சமூகத்தில் தங்களை பதிவு செய்யவும் பயன்படுகின்றது எனலாம்.

நாகரிகம் வளர்ச்சி பெற்றிருந்தாலும் கூட அப்பழக்க வழக்கங்களின் பாரம்பரியச் சிறப்பினை உணர்த்துவதாகவே அமைந்திருக்கின்றது. காக்கைக்கு பலியிடுதல், சகுனம் பார்த்தல், பெண்கள் தைநீராடுதல், இரவில் காவலர்கள் மணியடித்தல், வதுவைச் சடங்குமுறை விருந்தோம்பல், சிலம்புகழி நோன்பு, மாலை நேர விளக்கேற்றல் முதலிய பழக்க வழக்கங்கள் சங்க கால மக்களிடையே நிலவியுள்ளன. இப்பழக்க வழக்கங்கள் இன்றளவும் மக்களிடையே நடைமுறை வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றது.

**காக்கைக்கு பலியிடுதல்:**

காக்கைக்கு உணவிடும் பழக்கம் சங்க காலம் தொட்டு இன்று வரையிலும் இருந்து வருகின்றது. முன்னோர்களை நினைத்து வழிபடும்

பொழுதும், ஒவ்வொரு கடவுளுக்கும் உகந்த நாளில் விரதம் எடுக்கும் பொழுதும், சமைத்த உணவினைக் காக்கைக்கு இட்டபிறகே அவர்கள் உண்பது பழக்கமாகும். படைத்த உணவைக் காக்கைகள் உடனே எடுத்து விட்டால் தம் முன்னோர்கள் ஏற்றுக் கொண்டனர் என்று எண்ணி மகிழ்வடைகின்றனர். இச்செய்தி நற்றிணையில் (343 ஆம்)

*''நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து*
*உகுபுலி அருந்திய தொகுவின் காக்கை*
*புண்கண் அருந்தி இணைவயிற் செறியும்*
*படையொடு வந்த பைபுண் மாலை''*

என்ற பாடல் அடிகளின் வாயிலாக, ஆலமரத்தில் இறைவன் குடிக்கொண்டுள்ளார் என்று மக்கள் நம்பிக்கை கொண்டு உணவைப் படைக்கின்றனர். ஆனால் அவ்வுணவைக் காக்கைகள் உண்டு மகிழ்கின்றன. மாலைப் பொழுது வந்ததும் கூடியிருந்த காக்கைகள் எல்லாம், பிரிய மனம் இல்லாமல் தன் சுற்றம் நோக்கிச் சென்றதைக் கருவூர்க் கந்தப் பிள்ளைச் சாத்தனார் என்னும் புலவர் தன் பாடலில் அழகாகப் பதிவு செய்திருக்கின்றார். இக்கருத்திற்கு இணங்க மற்றொருப் பாடலில்

*''மாசுஇல் மரத்த பலிஉண் காக்கை*
*வளிபொடு நெடுஞ்சினை தனியொடு தூங்கி''*

என்று கழார்க்கீரன் எயிற்றியார் தன் பாடலில் குறிப்பிடுகின்றார். மக்கள் இறைவனுக்கென்று பலிக்கொடுத்த உணவைக் காக்கைகள் உண்டு மகிழ்வுற்றிருக்கின்றது. ஆனால் அக்காக்கைகள் மழையையும் பொருட்படுத்தாமல் நனைந்து கொண்டு, சோழர்களது கூடியாகிய கழார் எனும் ஊரில் படைக்கப்படும் புலால் உணவை உண்பதற்காக காத்திருக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பழக்கம் மக்களிடையே இருந்தது என்பதற்கு நற்றிணை மட்டுமல்ல

*'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'*

என்று குறுந்தொகையிலும், ஐங்குறுநூற்றில் 391 – ஆம் பாடலிலும், பொருநராற்றுப் படையிலும் காக்கைக்கு உணவிடுதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**சகுனம் பார்த்தல்:**

சகுனம் பார்க்கும் பழக்கம் தமிழர்களிடையே இருந்துள்ளது. நல்ல சகுனம், கெட்ட சகுனம் என்ற இரு நிலைகளில் சகுனம் பார்ப்பதுண்டு. சங்க கால மக்கள அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் சகுனம் பார்ப்பதைக் கடைப்பிடித்துள்ளனர். நற்றிணையில்

*''பெரும்பான் காவல் பூண்டென ஒருசார்த்*
*திருந்திழை மகளிர் விரிச்சி நிற்ப''*

என்று கோண்மா நெடுங் கோட்டனார் என்னும் புலவர் காவல்கள் நிறைந்த மாளிகையின் முன், தென்னங்கீற்றால் பந்தல் அமைத்தும், அவற்றில் புதுமணல் பரப்பியும் அப்பந்தலில் பாணர்கள் எல்லாம் தலைவனைச் சூழ்ந்து காவல் மேற்கொண்டனர். அவற்றைப் போல் அணிகலன்களை அணிந்த பெண்கள் எல்லாம் ஒன்று சூழ்ந்து நிற்கும் காட்சியைப் பார்த்து அவற்றை நன்னிமித்தமாக மக்கள் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்வு குறுந்தொகையில்

*''புள்ளும் ஒராம் விரிச்சியும் நில்லாம்''*

என்ற பாடல் அடிகளின் வாயிலாகப் பறவைகள் எழுப்பும் ஓசையை வைத்தும், மக்கள் நிமித்தம் பார்ப்பதுண்டு, என்பதற்கு குறுந்தொகைப் பாடல் சான்றாக அமைகின்றது. பறவைகளின் ஓசை, பல்லியின் ஒலி, உடம்பில் தோன்றும் வேறுபட்ட மெய்ப்பாடுகள் முதலியவற்றை வைத்து இன்றளவும் மக்கள் சகுனம் பார்த்து வருகின்றனர். விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றிருந்தாலும் கூட, மக்கள் பழைய மரபைக் கடைபிடித்திருக்கின்றனர் என்று நம்மால் அறிய முடிகிறது.

நெல்லையும் நீரையும் வைத்துக் கொண்டு முதுமையடைந்தப் பெண்கள் விரிச்சி கேட்கின்றனர் என்று (புறம் 280 – ஆம் பாடல்) மாறோக்கத்து நப்பசலையார் தன் பாடலில் சிறப்பாக எடுத்துரைக்கின்றார்.

அவை,

*''நென்னீர் றெறிந்த விரிச்சி யோர்க்கும்*
*செம்முது பெண்டின் சொல்லும்*
*புல்லென மாலையொரு பொருங்கொல்தானே''*

தலைவனை விட்டுப் பிரிந்திருக்கும் தலைவி, தலைவனின் வருகைக்காக பல்லியின் நற்சொல்லை எதிர் நோக்கி இருக்கின்ற நிலையை இப்பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றது. மக்கள் பல்லியின் ஓசையை நிமித்தமாகப் பார்ப்பது போல் விலங்குகளும் பல்லியின் ஓசையை நிமித்தமாக உணர்கின்றது என்பதை நற்றிணையில் 98 ஆம் பாடல் அடிகள் விளக்குகின்றது.

**கார்த்திகை விளக்கீட்டு விழா:**

சங்க காலம் முதற்கொண்டு இன்று வரையிலும் கொண்டாடப்பட்டு வரும் விழா கார்த்திகை விளக்கிடும் விழா ஆகும். இவ்விழா கார்த்திகை மாதத்திலும், கார்த்திகை நட்சத்திர நாள் அன்றும், முருகனுடைய விழாவாகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் ஒளி வழிபாட்டுத் திருவிழாவே கார்த்திகை விளக்கீட்டு விழா என்பதாகும்.

கார்த்திகை தீபம் என்பது தொல்காப்பியர் காலத்திலிருந்து தமிழ் நாட்டில் கொண்டாடப்படுகின்றது. வீடுகள் தோறும் கிளிஞ்சல் விளக்குகள் ஏற்றி வைத்து அலங்கரிக்கின்றனர். கார்த்திகை மாதம் முழுவதும் விளக்கேற்றி வைப்பவர்களும் உண்டு. சிலர் பரணி நட்சத்திர நாட்களில் மட்டும் விளக்கேற்றுவார்கள். கார்த்திகைத் தீபம் அன்று மக்கள் சொக்கபனைக் கொளுத்தியும், வெடிகள் வெடித்தும், சிறுவர்கள் தீபந்தம் ஏந்தியும் அருகில் உள்ளவர்களுக்கு பொறி, பழம், மிட்டாய் முதலியவை மக்களுக்குப் பகிர்ந்துக் கொடுத்தும் மகிழ்கின்றனர்.

சொக்கப்பனைக் கொழுத்திய இடத்தில் இருக்கும் குச்சிகளையும், சாம்பலையும் எடுத்து ஆநிரைகளின் மேலும், வயல்களிலும் இடுகின்றனர். இவ்வாறு செய்தால் ஆநிரைகளும், விளைச்சலும் பெருகும் என்று பண்டைய கால மக்களின் நம்பிக்கை ஆகும். இந்நம்பிக்கைகள் இன்றளவும் மக்களிடம் நடைமுறையில் இருந்து வருகின்றது.

விளக்கேற்றும் விழா பற்றிய குறிப்புத் தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. இவ்விழாவை அகநானூற்றில் பெருவிழா என்றும், களவழி நாற்பதில் கார்த்திகைச் சாறு என்றும் குறிப்பிடுகின்றது.

*"ஆறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்*
*செல்சுடர் நெடுங்கொடி போலப்*
*பல்பூங் கோங்கம் அணிந்த"*

என்ற பாடல் அடிகள் சான்றாக அமைகின்றது.

கார்த்திகை மாதத்தில் ஏற்றி வைக்கப்படும் விளக்குகள் எத்திசைகளில் இருந்து பார்த்தாலும் வரிசையாகவே காட்சிளிக்கின்றது. இவ்விளக்குகளின் வரிசையைப் போன்று மரங்களில் மலர்ந்திருக்கும் பூக்கள் வரிசையாகப் பிரதிபலிக்கின்றன. இவ்விளக்கேற்று விழாவின் சிறப்பையும், பெருமையையும் பாலைப்பாடிய பெருங்கடுங்கோ தன் பாடலில் அழகாக விளக்கியுள்ளார். இந்நிகழ்விற்கு சிறப்புச் சேர்க்கும் வண்ணம் கார் நாற்பதில் (பாடல் 26), அகநானூற்றில் 141 – ஆம் பாடலிலும் விளக்கேற்றும் விழாப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

**ஊர் காவல்படை:**

பண்டைய காலத்தில் மக்களைப் பாதுகாப்பதற்காக இரவு நேரங்களில் காவலர்களை நியமிக்கின்றனர். அக்காவலரை ஊர்காவல் படை என்று அழைக்கின்றனர். இப்பழக்கம் சங்க காலத்தில் இருந்தன. இவ்வாறு நியமிக்கப்பட்ட காவலர்கள் இரவு நேரங்களில் நாழிகை தோறும் மணியடித்து எச்சரிக்கைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றர். இந்நிகழ்வை நற்றிணை குறிப்பிடுகின்றது.

*"காப்புடை வாயில் போற்றோ என்னும்*
*யாமம் கொள்பவர் நெடுநா வொண்மணி"*

என்ற பாடல் அடிகள் (நற் 132) தலைவியைப் பாதுகாப்பதற்கு வீட்டின் வாயிலில் காவலர்கள் காவல் காப்பது போல மக்களைப் பாதுகாப்பதற்கும் காவலர்களை நியமிக்கின்றனர். அக்காவலர்கள் இரவு நேரங்களில் மணியடித்து எச்சரிக்கைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர். பண்டைய காலத்திலேயே மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்ததைப் இப்பாடலின் வழி அறியமுடிகிறது. மேற்கூறப்பட்டக் கருத்திற்கு வழுவூட்டும் வண்ணம் முல்லைப் பாட்டிலும் இக்கருத்து இடம் பெற்றுள்ளன. அவை,

*"நெடுநா வொண்மணி நிகழ்த்திய நெடுநாள்*
*துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்*
*பெருமுதான் ரேமஞ் சூழப்"*

இவ்வடிகள் மணியோசைகளை எழுப்பி மக்களுக்கும், ஆநிரைகளுக்கும், துன்பம் பயங்காமல், பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு ஊர்க்காவலர்களுக்கு இருக்கின்றது என்று முல்லைப்பாட்டு வலியுறுத்துகின்றது.

**மாலை நேர விளக்கேற்றல்:**

விளக்கு என்பது தமிழர்களின் வாழ்வில் புற இருளை அகற்றும் ஒரு கருவி மட்டுமல்ல. தமிழர்களின் பண்பாட்டில் ஓர் அடையாளமாகவும் திகழ்கின்றது. தமிழர்களின் வாழ்க்கையில் நடைபெறும் சடங்குகளிலும், விழாக்களிலும், வழிபாட்டு

முறைகளிலும் மங்களகரமான சின்னமாகவும், ஆனால் மனைக்கு மங்களம் தரும் பெண்ணை வீட்டின் விளக்காகவே கருதுகின்றனர். இவ்விளக்குகளின் செயல்பாட்டை நற்றிணை குறிப்பிடுகிறது.

*''சுரன் முதல்வந்த உரண்மாய் மாலை*
*உள்ளினென் அல்லனோ யானே – உள்ளிய*
*வினை முடித்த அன்ன இனியோள்*
*மனைமான் சுடரொடு படர்பொழுது எனவே''*

என்ற பாடல் அடிகள் வாயிலாக கிழக்குத் திசையில் தோன்றி மேற்கு திசையில் மறையும் சூரியனைப் பார்த்தும், முல்லை மலர் மலர்வதைக் கண்டும் மாலைப் பொழுது வந்து விட்டன என்று அறிகின்றனர். பொருளீட்டச் சென்ற தலைவன் வினைமுடித்து இல்லத்திற்கு திரும்பி இருப்பார் என்று எண்ணி, விளக்கேற்றி வைத்து தலைவனின் வரவை எதிர்நோக்கி இருக்கின்றாள் என்று இளங்கீரனார் தன் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவன் மேல் வைத்துள்ள அன்பும், விளக்கேற்றும் பழக்கமும் பண்டைய காலத்தில் இருந்திருக்கின்றது என்று அறியமுடிகின்றது. இக்கருத்திற்கு வழுவூட்டும் வகையில்

*''மங்கையர் நெய்யுமிழ் அரையர் நெடுந்திரிக்*
*கொளீ இக்கைமை விளக்க தந்தொறு மாட்ட''*

என்று முல்லைப்பாட்டு பாடல் அடிகள் மாலை நேர விளக்கேற்றலுக்குச் சான்றாக அமைகின்றது.

**கணிவாய் பல்லி:**

பல்லியின் சொல்லைச் சகுனமாகப் பார்க்கும் பழக்கம் பண்டைய காலம் முதல் இன்று வரையிலும் நிலவிவரும் மரபாகும். மனித உடம்பில் எந்தப் பகுதியில் பல்லி விழுந்தால் என்ன பலன் என்று கணித்துச் சொல்லும் பழக்கம் இன்றளவும் மக்களிடையே நிலவி வருகின்றது. பல்லியின் ஓசையைக் கேட்டு தன் விரலால் தரையை மூன்று முறை தட்டும் வழக்கம் இன்றளவும் நடைமுறையில் உள்ளது. பொருளீட்டச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லையே, என்று தலைவி தன் மனதில் நினைக்கும் வேலையில், பல்லியின் ஓசை கேட்க அவ்வோசையை நன் நிமித்தமாக அறிகின்றாள். சங்க காலம் முதல் இன்று வரையிலும் தமிழர்களிடம் நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருப்பதை நம்மால் அறிய முடிகிறது. நடைமுறை வாழ்க்கையில் இருக்கும் இந்நிகழ்வை இலக்கியங்களும் குறிப்பிடுகின்றது. நற்றிணையில்,

*''இடூஉ உங்கண் இனிய படூஉம்*
*நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றம்''*

என்ற பாடல் அடிகளின் வாயிலாக, தலைவனின் பிரிவை எண்ணி வருந்துகின்ற நிலையில் தோழி தலைவியை சமாதானப்படுத்தும் சூழலில் பல்லியின் ஓசை கேட்கின்றது. அவ்வோசையை அறிந்து தலைவன் விரைவில் வந்து விடுவான் என்று தலைவிக்கு தோழி நம்பிக்கை ஊட்டுகின்றாள்.

இந்நிகழ்வை போன்று அகநானூற்றிலும்,

*''பகுவாய் பல்லி படுதொறும் பரவி*
*நல்ல கூறென நடுங்கிப்*
*புல்லென மாலையொடு பொருங்கொல் தானே''*

என்ற பாடல் அடிகள் குறிப்பிடுவது, தலைவனை விட்டு பிரிந்திருக்கும் தலைவி, தலைவனின் வருகைக்காக பல்லியின் நற்சொல்லை எதிர்நோக்கி இருக்கின்ற நிலையைக் குறிப்பிடுகின்றது.

பண்டைய கால மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றை சங்கப் பாடல்கள் நமக்கு விளக்குகின்றன. நற்றிணையில் குறிப்பிடுகின்ற பழக்க வழக்கங்களில் பெரும்பான்மையானவை தமிழரின் மரபாகத் தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்நிலை தமிழர்களின் மரபு வழிபட்ட பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. நம்முன்னோர்களின் வாழ்க்கை முறையினையும் அவர்களைப் பற்றி மதிப்பீடு செய்வதற்கும் இப்பழக்க வழக்கங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

# தலித் இலக்கியத்தில் முற்போக்கு கோட்பாடு

**முனைவர் அ.கோவிந்தராஜன்,**

*உதவிப்பேராசிரியர் &*
*இயக்குநர் (பொ),*
*பாரதிதாசன் உயராய்வு மையம்,*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்,*
*திருச்சிராப்பள்ளி - 620 024.*

**முன்னுரை:**

இந்தியச் சமுதாயத்தில் ஒரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளையும் தீர்மானிக்கும் சமூக நிறுவனங்களுள் முக்கியமான ஒன்றாக சாதி விளங்கி வருகின்றன. தலித் மக்கள் சாதி வரிசையில் ஐந்தாம் நிலையில் இருப்பதால் சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு ரீதியாகப் பின்தங்கியுள்ளனர். இதனால் சாதியத்தின் நிலைப்பாடும் இலக்கியத்தில் சாதி உள்ளடக்கமாகின்ற தேவையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தலித் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை விளக்கும் கருவியாகச் செயல்படக்கூடிய தலித் இலக்கியத்தின் தேவை அவசியமாகிறது. தலித் மக்கள் தமிழ் இலக்கியத்தில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதைப் பற்றி இக்கட்டுரை விளக்கப்படுகிறது.

**தொல்காப்பியத்தில் தலித்தியம்:**

இலக்கியத்திற்கு இலக்கணமாக விளங்கும் தொல்காப்பியத்தில் சாதி பற்றிய குறிப்புகள் வெளிப்படையாக இல்லை. தொல்காப்பிய அகத்திணையியலில் வரும் ‘அடியோர்’, ‘விளைவலர்’ என்ற சொற்கள் சாதி நோக்கில் இழிந்தவர்களா? பொருளாதார நோக்கில் இழிந்தவர்களா? என்ற ஐயத்தை எழுப்புகிறது. அதை விளக்கும் போது தொல்காப்பியம்,

*‘‘அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினுங்*
*கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்’’* (தொல். அகம். நூ.25)

‘‘அடித்தொழில் செய்வார் பாங்கினும் வினை செய்வார் பக்கத்தினும், கடிந்து நீக்கும் நிலைமையில்லை’’. ஐந்திணைப் புறத்தவாகிய கைக்கிளை பெருந்திணைக்கண் புலவர் சொல்வர் என்று இளம்பூரணர் உரை எழுதியுள்ளார். இதன் வாயிலாக ‘அடியோர்’, ‘வினைவலர்’ முறையே தொண்டு புரிவோர், குற்றவேள் புரிவோர் என அறியலாம். எனினும் தொல்காப்பியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிய குறிப்புகள் தெளிவாகச் சுட்டப்படவில்லை.

**சங்க இலக்கியத்தில் தலித்தியம்:**

தமிழ் சமுதாயத்தில் இழி தொழில் செய்பவர்கள் இழிந்தவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். சங்க இலக்கியத்தில் ‘புலைமகன்’, ‘இழிப்பிறப்பாளன்’, ‘துடியன்’, ‘பாணன்’, ‘பறையன்’, ‘கடம்பன்’, ‘புலைபன்’, ‘இழிசினன்’ எனப் பல்வேறு சொற்களால் மக்கள் சிலர் குறிக்கப்

பெற்றுள்ளனர். அவர்களது தொழிலும் சமூக மதிப்பும் சில பாடல்களில் குறிப்பிடப்பெறுகின்றன.

*''சாறுதலைக் கொண்டெனப் பெண்ணிற்றூற்றெனப்*
*பட்டமாரி ஞான்ற ஞாயிற்றுக்*
*கட்டி னிணக்கு மழிசினன் கையது*
*போழ்தூண் டூசியின் விரைதன்று மாதோ''*
*(புறம்.82)*

புறநானூற்றுப் பாடலில் இழிசினன் என்னும் சொல் புலைமகன் என்ற பொருளைக் குறிக்கிறது.

இப்பாடலுக்கு உ.வே சாமிநாத ஐயர் உரை எழுதும் போது ''ஊரின் கண் விழாத் தொடங்கிற்றாக அவ்விழாவிற்கு உதவப் போகவும் தன் மனைவி பிள்ளை பெறுதலை பொருந்தினாளாக அவள் மெய்ந்நோவிற்கு உதவப்போகவும் வேண்டி, பெய்கின்ற மழையையுடைய ஞாயிறு வீழ்ந்த பொழுதின்கட் கட்டிலைப் பிணிக்கும் புலைமகன் கையதாகிய வாகைச் செலுத்தும் ஊசியினும் விரைந்தது ஊரை கொள்ள வந்த வீரனோடு ஆத்தியாற் தொடுக்கப்பட்ட கண்ணியுடையது பொருந்தனையது போர்'' என்று விளக்கியுள்ளார்.

இப்பாடலின் வாயிலாகப் புலைமகனையும் அவனது தொழிலையும் 'இழிசினன்' என்ற சொல்லால் குறிப்பதை அறிய முடிகிறது.

நற்றிணையில் கபிலரின் குறிஞ்சித் திணைப் பாடலில்

*''மலையமா ஊர்ந்து போகி புலையன்*
*பெருந்துடி கிறங்கப் பிற்புலம் புக்கவர்''* (நற். 77)

என்ற பாடல் வரிகள் பெரியதுடியைக் கொண்டு கொட்டி முழங்கும் புலையன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் இழிந்த தொழிலைச் செய்பவர்கள் 'இழிசினன்', 'இழிபிறப்பாளன்', 'புலையன்', 'இழிந்தோர்' என அழைக்கப்பட்டுள்ளனர். இது அன்றைய நிலையில் இருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை அவர்களின் சமூக மதிப்பை அளவிடுகிறது எனக் கருதலாம்.

சிலப்பதிகாரத்தில் சாதியைப் பற்றிய குறிப்புகள் தென்படினும், அவை தெளிவாக விளக்கப்படவில்லை. ஆயின் ஏற்றத்தாழ்வுகள் பற்றியக் குறிப்புகள் ஓரளவு தென்படுகின்றன. நாடுகண் காதையில் தாழ்த்தப்பட்ட மக்களை 'கடைசியர்' என அழைக்கப்பட்டுள்ளனர்.

*''ஒருங்கு நின்று ஆர்க்கும் ஒலியே அன்றியும்*
*கடிமலர் களைந்து முடிநாறு அழுத்தித்*
*தொடி வளைத்தோளும் ஆகமும் தோய்ந்து*
*சேறு ஆடு கோலமொடு வீறு பெறத் தோன்றிச்*
*செங்கயல் நெடுங்கண் சின்மொழி கடைசியர்''*
*(சிலம்பு. நாடுகாண்காதை. 125 - 130)*

இப்பாடலில் 'கடைசியர்' என்ற சொல்லை வழுதுண்ணும் வேளாளர் மக்களைக் குறிப்பதை உணர முடிகின்றது.

**சங்கம் மருவிய இலக்கியத்தில் தலித்தியம்:**

சங்கம் மருவிய கால நூல்களிலும் சாதி மறுப்புக் கருத்துகள் வலியுறுத்தப்பட்டன. சான்றாக நீதி நூல்களுள் முதலாவதாகத் தோன்றிய திருக்குறள்,

*''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்''* *(குறள் - 972)*

என வலியுறுத்திக் கூறியதன் காரணமாக 'சாதி' என்பது இருந்தது என்பதை என வலியுறுத்திக் கூறியதன் காரணமாக சங்கம் மருவிய கால நூல்களிலும் சாதி பற்றிய கருத்துக்கள் மறைமுகமாகக் கூறப்பட்ட நிலை, பக்தி இலக்கிய காலத்தில் மாறத் தொடங்கியது. சங்கம் மருவிய காலத்திற்கு பின் வந்த சிற்றிலக்கியங்களுள் பள்ளு மற்றும் குறவஞ்சி ஆகிய இருவகை இலக்கியங்களும் ஒடுக்கப்பட்ட மக்களினுடைய இலக்கியகளாகத் திகழ்கின்றன.

**முடிவுரை:**

சாதி இந்தியாவில் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு உறுதியான சமூக நிறுவனமாக விளங்குகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் சாதி பற்றிய குறிப்புகளும் சாதி குறித்த எதிர்ப்புக் குரல்களும் காணப்படுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் சாதி பற்றிய, பிரிவினைகள் இப்போது உள்ளது போலத் தெளிவாக இல்லை. எனினும் ஏதோ ஒரு வகையில் பாகுபாடு இருந்தது என்பது தெரிய வருகிறது. சங்க இலக்கியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிய குறிப்புகள் அவர்கள் செய்யும் தொழிலைப் பொறுத்து அவர்களை அடையாளப்படுத்துகின்றன.

ଔଷଔଷ

# சங்க இலக்கியத்தில் கடவுள் கோட்பாடு

**சு. சுமதி**

*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*தருமபுரம் ஞானாம்பிகை*
*அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,*
*மயிலாடுதுறை.*

**முன்னுரை:**

மக்கள் சமுதாயத்தை நேரிய வழிமுறையில் கொண்டு செல்வது இறை நம்பிக்கையாகும். அச்ச உணர்வின் காரணமாகக் கடவுள் வழிபாடு பின்பற்றபட்டு வருகின்றது. இன்றைக்கும் மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி உண்டு என நம்புவதால்தான் பண்பாட்டுக்குள் கடவுள் வழிபாடும் அடங்கி இருக்கின்றது. இக்கொள்கையை இலக்கிய வழிகண்டறிவதே இக்கட்டுரையாகும்.

கடவுள் என்ற சொல்லாட்சி சங்க நூல்களுள் மிகுந்து காணப்படுகிறது. கடவுள் என்ற பொதுச் சொல் இங்கு சிவன்; முருகன்; திருமால்; தேவர்; முனிவர்; வெற்றித்திரு; கொற்றவை எனப் பலப் பொருட்களில் பயின்று வருகின்றன.

**தொல்காப்பியம்:**

தொல்காப்பியர் கடவுள் என்னும் சொல்லினை, 'காமப்பகுதி கடவுளும் வரையார்' (தொல்: புறத்திணை - 1029) என்னும் நூற்பாவில் கடவுளிடம் தெய்வ மகளிர் மட்டுமின்றி மானுடப் பெண்களும் காதல் கொள்வர் என்னும் கூற்றிலே கடவுள் என்ற சொல்லினைக் கையாண்டுள்ளார். இதனைப் போன்றே பாடாண் திணையில் பிறப்பு, இறப்பு இல்லாது உள்ள கடவுளுக்கும் பாடாண்திணை பாடுவது பொருந்தும் என்பதை,

*'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே'* *(தொல்.புறத்திணை - 1034)*

எனக் குறிப்பிடுகின்றார். மேலும்,

*'ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்'* *(தொல்: கற்பியல் - 1092)*

என்னும் நூற்பாவில் கடவுளை வணங்குதல் பொருட்டு ஆபத்து நீங்கு கடவுளும் நம்மைக் காப்பார்; என்னும் கூற்றினை, களவு காலத்தில் தீங்கு விளையுமோ என அஞ்சிய தலைமகளும், தோழியும் கடவுளைத் தொழுவர் எனப் பொதுமைப் பொருளில் கூறுகின்றார்.

**சங்க இலக்கியம்:**

சங்க கால மக்களிடையே கடவுள் குற்றத்தால் உடற்பிணித் தோன்னும் என்ற நம்பிக்கை இருந்திருக்கின்றது. இதனை கீழ்க்காணும்

பாடல்வரி மூலம் அறியலாம்.

*'அருந்திறல் கடவுள் அல்லன்'* (ஐங். 182:3)

தலைவி களவின் காரணமாக மெய்ப்பிணி கொள்கிறாள், என்ற போதும் கடவுளின் குறையால்தான் இந்நிலை தோன்றியது என குடும்பத்தார் நம்புகின்றனர். 'கடவுள்' என்னும் சொல் பொதுமையில் கூறப்பட்டாலும் 'வேலன்' என்கிற முருகனைக் குறிக்கும் உட்பொருளாக உள்ளதை அறிய முடிகிறது.

*'கறிவளர் சிலம்பில் கடவுள் பேணி'* (ஐங். 243:1)

என்னும் பாடல் அடி தலைவி மெய்ப்பிணி மணம் புரிதலாலே நீங்கும். வேலனுக்கு வெறியாடல் நிகழ்த்துவதால் அல்ல, என்னும் உண்மை உணர்த்துகிறது. கடவுள் என்னும் சொல்லானது இங்கு முருகப்பெருமானைக் குறிப்பிடுகின்றது.

சங்கத் தமிழர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வினை மேற்கொண்டனர். அவர்கள் தங்களின் செயல்பாடுகள் அனைத்திலும் கடவுளை முன்வைத்தே செய்தனர் என்பதை பின்வரும் குறுந்தொகைப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

*'கடியுண் கடவுட் இட்ட சில் குரல்'* (குறுந். 105: 2)

தினைக் கதிர் அறுவடையின் பொழுது கடவுளுக்கென சில கதிர்களை ஒதுக்கியப் பின்பே தங்கள் செயலினை துவங்குவது மரபாகக் கொண்டிருந்தனர். மேலும் குறுந்தொகைப் பாடல் ஒன்றில் கடவுள் என்னும் சொல்லினை, தலைவனின் பண்பு நலன்களுக்குப் புலவர் கையாண்டுள்ளார்.

*'கடவுள் எண்ணிய பாலோர் போல'* (குறுந். 203: 4)

என்னும் பாடல் வழி அதனை அறிய முடிகின்றது.

பண்டைய மக்கள் தாம் நினைத்த காரியம் நிறைவு பெற வேண்டும் என்றால் கடவுளின் அருள் தேவை என்று நம்பினர். அந்நம்பிக்கையின் பேரில் கடவுளுக்கு நேர்த்திக் கடன்கள் செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். எச்செயல் செய்யும் முன்னும் கடவுளை வேண்டித் துவங்குவர். அச்செயல் வெற்றி பெற்றால், தம் நேர்த்திக் கடனை செலுத்துவர், இச்செய்தியை,

*''நிலையுயர் கடவுட்கு கடம் பூண்டு தன் மாட்டுப்*
*பலசூழும் மனத்தோடு பைத லேன்யானாக''*
(கலி - 46; 16-17)

என்னும் பாடல் வரிகளில் காணமுடிகின்றது.

சங்க காலத்தில் மழைவளம் வேண்டிய மழை தெய்வமான வருணனுக்கு படையலும், பலியும் இட்டு பாடி வழிபட்டால், மழை தெய்வம் மனம் குளிர்ந்து மழை பொழியும் என்று நம்பினர். இதனை கீழ்க்கண்ட புறநானூற்றுப் பாடல் வரிகள் நிறுவுகின்றன.

*''மழைவான் கொள்க! என உயிர் பலி தூஉய்*
*மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க! எனக்*
*கடவுட் பேணிய குறவர் மக்கள்''* (புறம். 143; 1-3)

இங்கு கடவுள் என்னும் சொல் மழை தெய்வத்திற்கு கையாளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு நாட்டிற்கும் காவல் தெய்வம் என்பது ஒன்று உண்டு, இக்காவல் தெய்வம் நாட்டில் வறுமையும் பிணியும் ஏற்படாமல் காக்கும் தன்மையைக் கொண்டு விளங்கும். இக்காவல் தெய்வத்தை மக்கள் விழா நடத்தி வழிபடுவர்.

*''அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்*
*பெருங்கல் நாடன்''* (புறம். 158; 11-12)

என்ற புறநானூற்று வரிகளில், அரியத் திறத்தையுடைய காவல் தெய்வம் காக்கும் உயர்ந்த மலை நாட்டினை உடையவன் பேகன் என்று கூறப்படுகின்றது.

மனிதர்களின் அசாதாரணச் செயல்களை எல்லாம் கடவுளின் செயல்பாடுகளுக்கும், கடவுளின் தோற்றத்திற்கும், கடவுள் உறையும் இடத்திற்கும் ஒப்பிட்டு கூறுவது அக்கால மக்களிடையே நிலவிய வழக்கமாக இருந்துள்ளது. இதற்குச் சான்றளிக்கும் வகையில் சிறுபாணாற்றுப்படை பாடல் வரி அமைகின்றது.

*'கடவுள் மால்வரை கண்டு விடுத்தன்ன'*
(சிறுபாண். 205)

இவ்வடியின்கண் நல்லியக் கோடனின் கோட்டைக் கதவு திறந்திருப்பது கடவுள்கள் தங்கும் மேரு மலையின் ஒரு கண் திறந்திருப்பது போல காட்சியளிக்கின்றது. இங்கு 'கடவுள்' என்னும் சொல் மேரு மலையின்கண் உறையும் கடவுள்களுக்கு உரியதாய் அமைகிறது.

**கடவுள் உறையும் இடங்கள்**

நம்பிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் கடவுள் உறைவதாய் மக்கள் நம்பினர்.

**கடவுள் - இல்லில் உறைதல்:**

பண்டையத் தமிழர்கள் தங்களின் வீட்டின் ஒரு பகுதியில் கடவுள் உறைவதாகவும், அக்கடவுளை

வணங்கினால் நன்மை கிடைக்கும் என்றும் நம்பினர். அதனால் கடவுளுக்கு பலியிட்டும் வழிபட்டனர்.

*'இல்லுறை கடவுட்கு ஒக்குதும் பலியே'*

*(அகம். 282: 18)*

**கடவுள் பொற்றாமரைக் குளத்தில் உறைதல்:**

பண்டையத் தமிழர்கள் இயற்கைப் பொருளான குளம், மரம், மலர் போன்றவற்றில் கடவுள் உறைவதாக எண்ணி வழிபட்டு வந்தனர். இதனை,

*''கடவுட் கயத்து அமன்ற சுடரிதழ்த் தாமரைத்*
*தாதுபடு பெரும்போது புரையும் வாண்முகம்''*

*(மதுரை. 710-7)*

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. கடவுள் உறைவதற்கு இடமாகத் தாமரை மலரும் ஒன்றாக அமைந்துள்ளதை அறியலாகிறது.

**கடவுள் கிணையில் (பறை) உறைதல்:**

பண்டையத் தமிழர் செய்யும் தொழிலை தெய்வம் என்னும் பண்பினராகத் திகழ்ந்தனர். அவர்கள் செய் தொழிலைக் கடவுளாக வழிபட்டு வந்ததை,

*'கடியாம் உணவு என்னக் கடவுட்கும்......'*

*(புறம். 399: 26)*

என்னும் புறநானூற்றுப் பாடல் வரியின் மூலம் காணலாம். மேலும்,

இரவலன் ஒருவன் தன் அறுந்த தடாரியை சரிசெய்து அதற்கு புதுப் போர்வை போர்த்தி பூசைகள் செய்து மலர்களைச் சூட்டியும் வழிபட்டு வந்தான் என்னும் செய்தியிலிருந்து தொழிலுக்கு பயன்படும் பொருட்களில் தெய்வம் உறைவதாய் மக்கள் நம்பினர் என்பதை அறியமுடிகின்றது.

**கடவுள் குவளைப் பூவில் உறைதல்**

*''கடவுள் கல்சுனை அடை அறந்து அவிழ்ந்த*
*பறியாக் குவளை....................''* *(நற். 34: 12)*

கடவுள் தன்மைப் பொருந்திய குவளை மலர்களைப் பறித்துச் சூடிக்கொண்டு சூரமகளிர் நீராடினர். கடவுள் உறைவதற்கு இடமாகக் குவளை மலரும் உரியதென அறியலாகிறது.

**கடவுள் மரத்தில் உறைதல்:**

சங்கத் தமிழர்கள் இயற்கை வழிபாட்டில் மரங்களுக்கு முக்கியத்துவம் அளித்து வழிபட்டு வந்தனர். இதனை,

*''கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய''* *(நற். 83: 2)*

என்னும் நற்றிணைப் பாடல்வழி அறியலாம்.

**கடவுள் மரா மரத்தில் உறைதல்:**

கடவுள் உறைவதற்கு மரமும் உரியது என்றாலும் மராமரத்தில் தெய்வம் உறைவதை சிறப்பாகக் கூறுகிறது குறுந்தொகைப் பாடல்,

*''மன்ற மரா அத்தபோ முதிர் கடவுள்*
*கொடியார்த் தொறூஉம்....................''*

*(குறுந். 87:1-2)*

இப்பாடல் வரிகளின் மூலம் மராமரத்தில் உறையும் தெய்வம் தீயவர்கள் வருத்தும் தன்மை உடையது என்ற செய்தி பெறப்படுகிறது. மேலும்,

*'கடவுள் ஆலத்துத் தடவுச் சின்னப் பல்பழம்'*

*(புறம். 199:1)*

இப்பாடல் அடியின் மூலம் தெய்வம் ஆலமரத்தின் கண்ணும் தங்கும் இயல்புடையது என அறிய முடிகின்றது.

**கடவுள் நடுகல்லில் உறைதல்:**

இயற்கையோடு இணைந்து வாழ்ந்த பண்டைத் தமிழர்கள், இயற்கையைக் கடவுளாக வழிபட்டனர். நாளடைவில் இயற்கைப் பொருள்களில் கடவுள் உறைவதாகவும் எண்ணி இயற்கைப் படைப்புகளான தாவரங்கள், கற்குவியல்கள், மலைகள் போன்ற இடங்களைக் கடவுள் உறையும் இடங்களாகக் கண்டனர்.

*''வில் ஏர் வாழ்க்கை விழுதொடை மறவர்*
*வல்லான் பாதுக்கைக் கடவுட் போண்மார்''*

*(அகம். 35: 6-7)*

இங்கு தங்களுக்கு வெற்றி தரும் தெய்வமாகப் பாதுகைத் தெய்வம் குறிப்பிடப்படுகின்றது. இக்கூற்றில் இருந்து நடுகற்களிலும், கற்குவியல்களிலும் தெய்வங்கள் உறையும் என்ற செய்தி புலப்படலாகிறது. மேலும்,

'நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே'

(புறம். 353:12)

இப்பாடல் மூலம் அக்கால மக்கள் இறந்தோருக்கு எழுப்பப்படும் நடுகற்களை வீர வழிபாட்டின் அடையாளமாக நெல் இட்டு வழிபட்டு வந்தனர் என அறியமுடிகின்றது.

# திருக்குறளில் பெண்மையக் கருத்தியல்கள்

**முனைவர் ப.சு.மூவேந்தன்**

*உதவிப்பேராசிரியர்,*
*தமிழியல்துறை,*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,*
*அண்ணாமலை நகர் - 608 002.*

தமிழ்மொழி பழமையும் இலக்கிய, இலக்கண வளங்களும் நிறைந்த ஒரு செவ்வியல் மொழியாகும். உலகின் செம்மாந்த மொழிகளின் வரிசையில் தமிழ்மொழியின் சிறப்பு மொழி அறிஞர்களால் பாராட்டப்பெறுகின்றது. உலகச் செவ்வியல் மொழிகளின் வரிசையில் தமிழ்மொழியும் இடம்பெற்றிருப்பது அதன் சிறப்பினைக் காட்டுவதாகும்.

தமிழின் பெருமையை உலகுக்கு நிலைநாட்டி நிற்கும் சிறப்பு மிகு நூல்களுள் தொல்காப்பியமும், திருக்குறளும் சிறந்து விளங்குகின்றன. அவை, தமிழ் இனத்துக்கும் தமிழ் நிலத்துக்கும் தமிழ் மொழிக்கும் பெருமை சேர்க்கும் சிறந்த நூல்களாகும் என்பது தமிழறிஞர்களின் முடிபான கருத்தாக உள்ளது. மேலும், அவை வாழ்வியல் அறங்களைப் பேசும் நூல்களாகவும் விளங்குகின்றன.

திருக்குறள் தன்னேரில்லாத் தனிப்பெருநூல்; உலகமே போற்றும் ஒரு பெரு நூல். உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள், மனித வாழ்வியலின் சிறப்புக் கூறுகளான அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருள்களையும் சிறப்பித்துக் கூறும் நூலாக விளங்குகின்றது. மேலும், அது அற இலக்கியங்களில் முதன்மைபெற்ற நூலாகத் திகழ்கின்றது. புதுமையான யாப்பமைப்பில் மிகச்சுருக்கமான மொழியமைப்பில் அமைந்து, மிகப்பெரும் கருத்துகளைச் சுருக்கித் தருவதாக அமைந்துள்ளது. தனக்குப்பின்னர் எழுந்த இலக்கியங்களுக்கெல்லாம் வழிகாட்டும் தலையாய நூலாகவும் விளங்குகிறது. இனம், மொழி, சமயம், காலம் முதலான எல்லைகளைக் கடந்து எல்லா மக்களும் ஏற்கத்தக்க அறங்களைக் கூறும் திறன்மிகு நூலாகவும் அமைந்துள்ளமை இதன் தனிச்சிறப்பு எனலாம். உலகமொழிகளில் மிகுதியான மொழிபெயர்ப்பினைக் கொண்டு விளங்கும் தமிழ் நூலாகவும், மிகுதியான பதிப்பினையும், உரையினையும் கொண்டு விளங்கும் நூலாகவும் விளங்குவது திருக்குறளின் மேன்மையினை எடுத்துரைக்கின்றது.

தமிழ்மறை என்று போற்றப்படும் திருக்குறளை இயற்றிய பேராசான் திருவள்ளுவர் ஆவார். இவரைப் பற்றிய வேறு குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை. உலகம் முழுவதும் ஏற்கத்தக்க அறநெறிகளை வகுத்தளித்த அப்பெருமகன் தம்மைப் பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறளின் சிறப்பினை உணர்ந்த தமிழ்ப்புலவர்கள் நீண்டகாலமாகவே அந்நூற் கருத்துக்களைத் தம் படைப்புகளில் ஆங்காங்கே எடுத்தாண்டு விளக்கங்கள் தந்துள்ளனர்.

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் குறிக்கப்படும் சமூக மேம்பாட்டுக் கருத்தியல்கள் பெண்மைய நோக்கில் இடம்பெற்றுள்ள திறம் குறித்து இக்கட்டுரையில் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் நிலைப்பாட்டினை அறிந்து கொள்வதற்கு இலக்கியங்களே துணை செய்கின்றன. சங்க இலக்கியங்கள் முதலாக வெளிப்படுத்தப் படும் தமிழர்தம் வாழ்வியலில் ஆண் - பெண் குறித்த நிலைப்பாடுகள் அறியத்தக்கனவாக உள்ளன. தொல்காப்பியம் முதலான இலக்கணங்களும், சங்க இலக்கியங்கள் முதலான இலக்கியங்களும் ஆண்-பெண் குறித்த வரையறைகளை, ஒவ்வொருக்குமான தனித்த சித்தாந்தங்களை வகுத்துகைக்கின்றன. இவற்றின் மூலமாகவே அக்காலச் சமூகத்தில் ஒவ்வொருவரின் இருப்பையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

**சங்க இலக்கியத்தில் மகளிர் நிலை**

உலகின் தொன்மைக்குடிகளில் ஒன்றான தமிழ்க்குடியில், சங்க இலக்கியத்தில் குறிக்கப்படுகின்ற மகளிர் சமூகத்தில் குறிக்கத்தக்க நிலையில் விளங்கியுள்ளதனை இலக்கிய வழி அறியமுடிகின்றது. அவர்கள் மற்ற ஆண்களைப் போலவே, கல்வியிலும் பிற சமூகப் பணிகளிலும், வாழ்வியல் வளங்களிலும் தங்கள் பங்களிப்பைச் சிறப்புறவே செய்துள்ளனர்.ஔவையார், நச்செள்ளையார், வெள்ளிவீதியார், நக்கண்ணையார், ஆதிமந்தியார், நப்பசலையார் போன்ற பெண்பாற் புலவர்களின் இருப்பியல் சங்கப் பெண்கள் அறிவுப்புலத்தில் பெற்றிருந்த ஆளுமையை எடுத்துரைக்கின்றன.

இதற்குப் பின்னர் வந்த காலங்களில் அறிவுப்புலம் சார்ந்த ஆக்கங்களில் பெண்கள் நிலை கண்கொள்ளப்படாமலேயே இருந்துள்ளது. இதற்குக் காரணமாகச் சமயம், அரசியல், இனம், மொழி போன்ற கூறுகள் பின்னணியாக இயங்கியதனை உணர முடிகின்றது.

அற இலக்கியங்களின் சமூகப் பின்னணியை உற்று நோக்கின் அது சமயங்களின் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த காலகட்டத்தில் எழுதப்பெற்றவை என்பது புலனாகும். தமிழ்ச் சமூகத்தில் சமயங்கள் ஆழமாக வேரூன்றி இருந்தமையினாலேயே அற இலக்கியங்கள் தமது சமயச் செல்வாக்கை மக்களிடம் செலுத்துவதற்குரிய கருவியாக இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்டன. எந்தவொரு இலக்கியப் படைப்பாளிக்கும் இனம்/மொழி/சமயம்/நாடு சார்ந்த இன்ன பிற உணர்வுகள் பின்னணியாக இயங்கும். இக்கூறுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட படைப்பாளியாகத் திருவள்ளுவரைக் காணமுடிகின்றது. இதன் காரணமாகவே திருக்குறள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தேவைப்படுகிறது என்று சொல்லலாம்.

அறஇலக்கியங்களைப் படைத்த புலவர்கள் பெண்களை முற்றிலுமாக வெறுத்து ஒதுக்குபவர்களாகவும், பெண்களை ஒரு பொருட்டாகக் கண்டுகொள்ளாமல் நடப்பவர்களாகவும் சமூகத்தில் பெண்களின் இருப்பை மழுங்கடிக்கச் செய்பவர்களாகவும் இருந்த காலகட்டத்தில் இதிலிருந்து விதிவிலக்காகத் திருவள்ளுவர் ஆண்-பெண் ஆகிய இருசாராரையும் ஒன்றாகச் சமமாகக் கருதி, அவர்கள் பின்பற்றி ஒழுகத்தக்க நெறிகளை அறங்களாக வகுத்துரைத்துள்ளார். இது திருவள்ளுவரின் சமநோக்குச் சிந்தனைக்கும், பொதுமைச் சிந்தனைக்கும் வலுச்சேர்ப்பனவாக அமைந்துள்ள காரணங்கருதி இத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.

**திருவள்ளுவரின் சமநோக்கு**

ஆண் குழந்தை பெறுவதையே உயர்வாகக் கருதிக் கொண்டிருந்த ஆண் மையச் சமூகத்தில் மக்கட்பேறு என்னும் ஓர் அதிகாரத்தை இயற்றி, அதில் ஆணாயினும் - பெண்ணாயினும் அறிவார்ந்த மக்களைப் பெறுவதே புதல்வரைப் பெறுதல் என்று குறிக்கப்பெறும் என்ற கருத்தினைத் திருவள்ளுவர்.

*''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பேறு அல்ல பிற''  (61)*

என்னும் குறட்பாவின் மூலம் வகுத்துள்ளார். இதில் யாமறிந்த பெறத்தக்க பேறுகளில் மக்கட்பேறு போன்ற சிறந்த ஒன்று இல்லை என்று கூறியதோடு நிறுத்தாது. அறிவார்ந்த மக்கட்பேறே சிறந்த பேறு என்கிறார்.

ஒரு நாட்டின் வளத்துக்கும், பெருமைக்கும் அடித்தளமாக அமைபவர்கள் அந்நாட்டில் வாழும் மக்களே ஆவர். மக்கள் பெறும் அறிவுத்திறனே நாட்டின் உயர்வுக்கு ஆதாரமாக அமைகின்றது. சிறந்த அறிவுடைய மக்களைப் பெற்ற நாடு எதற்கும் கவலை கொள்ளத் தேவையில்லை. இங்கு மக்கள் என்ற சொல் ஆண்-பெண் ஆகிய இருபாலரையும் குறித்து வருவதனைக் காணலாம்.

ஒரு சமூகம் எவ்வளவு செல்வங்கள் பெற்றிருந்தாலும், அது செய்யக்கூடிய முதற்பணி தான் பெற்றுள்ள மக்களை அறிவில் சிறந்தவர்களாக ஆக்குவதே ஆகும். பிற செல்வங்கள் எல்லாம் ஒரு காலத்தில் பயனற்றுப் போகும் அல்லது களவும் போகும். தனக்கும் தன் மக்களும் பலனளிக்காதும் போகும். ஆகவே, மற்ற எல்லாச் செல்வங்களை விடவும் அறிவார்ந்த மக்கட் செல்வமே சிறந்தது என்ற கருத்தியலைப் பொதுநோக்கில் இதில் எடுத்துரைப்பதனைக் காணலாம்.

அறிவார்ந்த மக்களே மக்கள் என்று பொதுநோக்கில் குறிப்பிடுவதோடு அது இருபாலர்க்கும் பொதுவாக நிற்கும் தன்மை கருதியே மக்கள் என்று சிறப்பித்து உரைத்துள்ளதனைக் காணலாம். இதே நோக்கில்,

*''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கல நன்மக்கட் பேறு''* (60)

*''தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது''* (68)

என்னும் குறட்பாக்களிலும் அறிவார்ந்த மக்களையே மக்கட்பேறு என்று குறிக்கக் காணலாம்.

தம்மைவிடவும் தம் மக்கள் அறிவுடையராய் இருத்தல் பெற்றோர்க்கு மகிழ்வு தரும் ஒரு செயல் என்பதைத் தனிநிலையில் நின்று உரைத்தாலும் அது மண்ணுலகிற்கும் நலம் தரும் ஒன்றாகவே முடியும் என்ற பொதுமைக் கருத்தினை இக்குறளில் விளக்கக் காணலாம். இங்கும் அறிவார்ந்த சமூகமே மானுட வளர்ச்சிக்குத் துணை செய்யும் என்ற நோக்கிலேயே இவ்வாறு எடுத்துரைத்தார் என்று கருதலாம்.

**திருவள்ளுவரின் சமநோக்கு**

*''குழலினிது யாழ்இனிது என்ப தம்மக்கள்*
*மழலைச்சொல் கேளாதவர்''* (66)

என்னும் குறளில் திருவள்ளுவரின் சமநோக்கிலான சமூக உணர்வினைக் காணலாம். இவையேயன்றி அறிவால் சிறந்த சான்றோரைப் பெறுவதையே ஒரு தாய் மிக உயர்வானதாகக் கருதுவாள் என்பதனை,

*''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்''* (69)

என்னும் குறள்வழி வெளிப்படுத்துகின்றார். அதாவது தான் பெற்றபொழுது பெற்ற மகிழ்ச்சியைவிட மற்றவர் தன் மகனைச் சான்றோன் என்று கூறக்கேட்ட பொழுது ஒரு தாய் அடையும் மகிழ்ச்சி பெரிது என்பதாம். தன் மகனைச் சான்றோன் என்று தானுணர்ந்து மகிழ்ந்ததைவிட மற்றவர்களும் உணர்ந்து அவனைப் போற்றும் நிலையைப் பெறும்போது தாய் உள்ளம் பெறும் மகிழ்ச்சியை இக்குறள் வெளிப்படுத்துகின்றது. திருவள்ளுவர் காலத்தில் சான்றோன் என்ற சொல் தரும் பொருள் அறியத்தக்கது. அது கல்வி, கேள்விகளில் சிறந்த வல்லவரை மட்டும் குறித்து வருவதாகப் பயன்படுத்தப்பட்டது.

இவையன்றி, இல்லறப் பண்புகளை முறைப்படுத்தும் திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலம் என்ற ஓர் அதிகாரத்தினைப் படைத்து, மாண்புடையாள், வளத்தக்காள், இல்லாள், இல்லவள், தொழுது எழுவாள், பெண்புகழ் மிகுந்த இல், மனை என்ற சொல்லாட்சிகளை நோக்குகையில் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் கொள்கை நெறியினை வகுத்துரைப்பதனைக் காணலாம். இவை சமூகப் பின்புலத்தோடு ஆராயின் இதன் வலிமை புலனாகும்.

**திருவள்ளுவரும் சமுதாயமும்**

வள்ளுவர் தாம் கண்ட சமுதாயத்தையும், காண விரும்பிய சமுதாயத்தையும் ஆய்ந்து அதனைத் திருத்தி உயர்த்த விரும்பியிருக்கிறார். அவர் கண்ட சமுதாயம் மனித வாழ்க்கை உய்வதற்குரியது. அது உலகளாவிய நிலைப்பாட்டினைக் கொண்டது. உலகம் முழுவதற்குமான சமுதாய மேம்பாட்டு நோக்கம் கொண்டது.

திருக்குறளின் சமுதாயச் சிந்தனையினை, ''தமிழ் மரபின் விழுமியங்களிற் காலூன்றி நின்று, அயல் மரபுகளின் உயரிய பண்புகளை உள்வாங்கிக் கொண்டு அனைத்துலக மானிடத்திற்கும் பொதுவானதாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட வாழ்வியல் நூல் திருக்குறள் தான்'' (வள்ளுவம் - 2005) என்று எடுத்துரைப்பர் நா.சுப்பிரமணியன்.

''ஒவ்வொரு மனிதரும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான விழுமிய தீர்வுகளைத் தரவல்ல திறமிகு நூல் திருக்குறள் என்று திண்ணமாய்க் கூறலாம். மேலும் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை எளிதில் தீர்ப்பதற்கு ஏதுவான அறத்தீர்வுகளை நல்கக்கூடிய கொள்கலமும் திருக்குறளேயாகும்'' (மேலது) என்று திருக்குறளின் சமூக நோக்கினைக் குறித்து விளக்குவர்.

மேலும், ஒரு பண்பட்ட உயர்ந்த வாழ்வியலைக் கட்டமைத்துக் காட்டும் முயற்சியாகக் குறள் அமைந்துள்ளது. தனிமனித நிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர்கள் நிலை, நாட்டு குடிமக்கள் நிலை ஆகிய தளங்களில் ஒருவன் பேணிக்கொள்ள வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய கடமைகள், பெறவேண்டிய அனுபவங்கள் ஆகிய பல்வேறு கூறுகளையும் ஒருங்கு திரட்டி ஒழுங்கமைத்துள்ளதன் மூலம் ஒரு முழுமையான வாழ்வியலை அது முன் வைத்துள்ளது'' என்றும் குறிப்பிடுவர்.

**புத்துலகப் பெண்மையக் கருத்தியல்கள்**

இன்றைய புத்துலகம் அறிவியல், தகவல் தொழில்நுட்பப் புரட்சிகளைச் சார்ந்து பீடுநடை போட்டு வருகின்றது. அதன் வளர்ச்சிக்கேற்ப மக்கள் தங்கள் தேவைகளை வலுப்படுத்தி வருகின்றனர். தகவல் தொழில்நுட்பப் புரட்சியால் இன்றைய சமூகம் பொருளாதாரத்தில் மிகச் சிறப்பான நிலையை அடைந்துள்ளது. கற்றவர்களது செல்வாக்கு உயர்ந்துள்ளது. அறிவின் திறம் போற்றப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் இளைய தலைமுறையினர் குறிப்பாகப் பெண்கள், தம்முடைய முன்னோர்கள் பெற்று வந்த அறிவுலகம் சார்ந்த, பொருளியல் சார்ந்தவற்றை விட அளவுக்கதிகமாகவே பெறத் தொடங்கியுள்ளனர். இன்றைய பெண்ணுலகம் அறிவுசார் தளத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. இதன் பயனை அவர்கள் நுகரத் தொடங்கியுள்ளனர். மிகப் பெரும் நிறுவனங்களில் கல்வி நிலையங்களில் அரசுப் பொறுப்புகளில் நீதிவழங்கும் தன்மைகளில் ஆட்சித்திறன், நிர்வாகம் போன்ற பொறுப்புகளில் பெண்கள் அமர்ந்து தங்களுக்கு இட்ட பணியைத் திறமாகவும், சிறப்பாகவும், பிறர் போற்றும் வகையிலும் எடுத்துரைக்கத் தொடங்கிவிட்டனர். இதனால் அவர்கள் பல நேரங்களில் உடல் அளவிலும், உள்ள அளவிலும் மனத்திடம், உள்ள உறுதி முதலான ஆற்றல்களைப் பெறவேண்டிய தேவை உள்ளது.

இவற்றை வளர்த்துக் கொள்வதற்குத் திருவள்ளுவர் கூறும் கருத்தியல்கள் தான் என்ன? என்பதும் இக்காலத்தில் பெண்கள் குறிப்பாகத் தலைமைப் பொறுப்பிலுள்ள பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் திருக்குறளில் தீர்வுகள் உண்டா? என்பதனை ஆராய்ந்து அவற்றிற்குரிய திருவள்ளுவக் கருத்தியல்களைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது முதன்மையான பணியாக உள்ளது.

இவற்றை வளர்த்துக் கொள்வதற்குத் திருவள்ளுவர் கூறும் கருத்தியல்கள் தான் என்ன? என்பதும் இக்காலத்தில் பெண்கள் குறிப்பாகத் தலைமைப் பொறுப்பிலுள்ள பெண்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்குத் திருக்குறளில் தீர்வுகள் உண்டா? என்பதனை ஆராய்ந்து அவற்றிற்குரிய திருவள்ளுவக் கருத்தியல்களைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது முதன்மையான பணியாக உள்ளது.

திருவள்ளுவர் தாம் வாழ்ந்த காலத்தை முன்னிறுத்தித் தமது கருத்துக்களை எடுத்துரைத்திருந்தாலும் அவர் வகுத்துரைத்த அறக்கருத்துக்கள் எக்காலத்திற்கும் பொருந்தி வருவதனைக் காணலாம். இதற்குக் காரணம் திருவள்ளுவரின் பரந்துபட்ட நோக்கு என்று சொன்னாலும், இன்னும் சமூகத்தில் ஏற்படவேண்டிய மாற்றங்கள் நிறையவே உள்ளன என்பதனை இவை எடுத்துரைக்கின்றன. திருவள்ளுவர் காணவிழைந்த புத்துலகம் அறிவுப்புலத்தைச் சார்ந்தது. அது அறிவின் செயல்பாடுகளால் விளைவது. அறிவையே மூலதனமாகக் கொண்டமைந்தது. அதனால் தான் அவர் பார்க்கும்/வகுக்கும் யாவற்றையும் அறிவின் திறன் கொண்டே நோக்குகிறார். திருவள்ளுவர் வகுக்கும் புத்துலகக் கருத்தியல்களை

1. அகக்கருத்தியல்கள்
2. புறக் (சமூக) கருத்தியல்கள்

என்று வகைப்படுத்தி இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

**புத்துலகப் பெண் சமூகம் பெறத்தக்கவை**

தனிமனிதன் தன்னை வளப்படுத்திக் கொள்ள திருத்திக் கொள்ளும் வழிவகைகளை வகுத்துரைக்கின்றார். அவை எல்லா மக்களுக்கும் பொதுவானவை என்றாலும், சமூகத்தின் சரிபாதியாகத் திகழ்கின்ற பெண்களுக்கும் பொருந்தும் என்ற கருத்தியலில் அவை இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன.

தனிமனிதன் தன்னைச் செம்மைப்படுத்திக் கொள்ளும் கருத்தியல்களாக அன்புடைமை, அறிவுடைமை, பண்புடைமை, இனியவை கூறல் செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலைமை, ஒழுக்கமுடைமை, பொறையுடைமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, ஒப்புரவு போன்ற பண்புகளை எடுத்துரைத்துள்ளார். இவற்றில் புத்துலகச் சமூகம் பெறத்தக்கவையாகப் பல இருப்பினும் குறிக்கத்தக்க சில பண்புகள் மட்டும் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது.

**கல்வி பெறுதல் - அறிவுடைமை**

இன்றைய நிலையில் கல்வியின் சிறப்பினை எல்லோரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஒரு காலகட்டத்தில் பெண்களுக்குக் கல்வி தேவையில்லை என்ற கருத்துருவாக்கம் சமூகத்தில் ஆழமாக வலுப்பெற்றிருந்தபோது, திருவள்ளுவர் ஆணாயினும் பெண்ணாயினும் அவர்கள் கல்வி பெறுவது அவசியம் என்று வலியுறுத்தியுள்ளார்.

சங்க காலத்தில் கல்வியின் சிறப்பினைக் கூறியிருந்தாலும் திருவள்ளுவர் குறிப்பிடும் கல்வி வலுவான பொருளைத் தரவல்லது. கல்வி, கல்வியைப் பெறும் முறை, கல்வியால் ஏற்படும் சமூக மதிப்புகள், சமூக மாற்றங்கள், கல்வியின் மூலமாகப் பெறும் அறிவுத்திறன் போன்றவற்றைப் பற்றி மிகவிரிவாக எடுத்துரைத்துள்ளார். இவை அறியத்தக்கவை.

திருவள்ளுவர் கல்வியை அரசியல் என்னும் இயல் பகுப்பில் வைத்துப் பேசியுள்ளார். இது அரசாள்பவர்க்குத் தேவையான மிக முக்கியமான தகுதியாக வைத்துக் கூறுகின்றார். திடமான, திறமான கல்வி பெற்றவர்களாலேயே திறமையான ஆட்சித்தலைவர்களாக, அரசியல் தலைவர்களாக, சிறந்த நிர்வாகத்திறன் பெற்றவர்களாக விளங்க முடியும் என்னும் கருத்திலேயே இதனை இங்கு வைத்துள்ளார். ஒரு சமூகம் மிகப்பெரும் மாற்றங்களைக் கல்வியால் பெறமுடியும் என்றாலும், தனிமனிதன் தன்னை வளப்படுத்திக்கொள்ள கல்வியையே அடிப்படையான மூலதனமாக்கிக் கொள்ள வேண்டி உள்ளது. இதனை நோக்கியே இவ்வாறு உரைத்தார் எனலாம்.

*''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து'' (398)*

என்னும் குறள் தரும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும். ஆணாயினும் பெண்ணாயினும் ஒருவர் பெறும் கல்வி அந்தத் தலைமுறைக்கு மட்டும் உதவிசெய்வதாய் நின்று விடுவதில்லை. அது பிறவிகள் தொறும் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். அது ஒரு புதிய சமூகத்தின் அடிவேராக நின்று வளப்படுத்திக் கொண்டே இருக்கும் என்பது இதன் கருத்து.

அறிவுப்புலத்தின் அடிப்படையாக விளங்கும் கல்வி பெறுதலைத் தனி மனிதன் பெறத்தக்க செல்வமாகக் குறிப்பதனை,

*''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை'' (400)*

என்னும் குறட்பாவில் காணலாம். ஒருவர்க்குக் கேடு தராத செல்வம் கல்வியே. மற்றைய பொருட்செல்வங்களின் நிலையாமை கருதி பெண்கள் பெறத்தக்க செல்வமாக இதனைக் கூறும் கருத்தியலாகக் கொள்ளலாம். பிற்காலத்தில் கல்வி பற்றி பேசிய பெரியவர்களுக்கெல்லாம் திருவள்ளுவரின் கல்வி பற்றிய கருத்தியலே அடித்தளமாக அமைந்தது எனலாம்.

**ஒழுக்கமுடைமை**

மனித வாழ்க்கையில் பின்பற்றத்தக்க நெறிகளில் ஒழுக்கமே மிக உயர்வானதாகக் கூறப்படுகின்றது. இதன் சிறப்புக் கருதியே திருவள்ளுவர் தனிமனிதன் தன் அகக்கருத்தியலாகப் பின்பற்றத்தக்கதாக ஒழுக்கமுடைமை பற்றிக் கூறுகின்றார்.

*''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்'' (131)*

என்னும் குறள் தரும் கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். ஒழுக்கம் அது உடையார்க்குச் சிறப்பினைத் தருவதால் அது உயிரைவிட அரிய பொருளாகக் கருதப்பட்டு பாதுகாக்கப்படும். விழுப்பம் என்பது சிறப்பு. எல்லா உயிர்க்கும் விழுப்பம் தருவது ஒழுக்கமே என்பதால் இதனைக் குறித்தார்.

**புறவயக் கூறுகள்**

சமூகத்தில் யாரும் தனித்து வாழ்வதில்லை. எல்லோரும் ஒன்று சேர்ந்து கூடி வாழவேண்டிய தேவை உள்ளது. சில நேரங்களில் சமூகத்தின் ஒரு நிறுவனத்தின் அலுவலகத்தின் தலைமையேற்று நடப்பவர்கள் தங்களால் மற்றவர்களோடு இணங்கிப் போக முடியாத நிலைப்பாடு உள்ளதனைக் காணமுடிகின்றது. மற்றவர்களுடனான சமூக ஒப்புரவுகள் இயல்பாக நிகழ்வதற்குப் பல நேரங்களில் இணங்கியும், விட்டுக் கொடுத்தும் சில சமயங்களில் தன் நிலையில் இருந்து தாழ்ந்தும் கூட வாழ்வேண்டிய நிலைப்பாடு உள்ளது. இது பல நேரங்களில் சாத்தியமாவதில்லை. இதற்கு வள்ளுவர் சொல்லும் தீர்வுதான் என்ன? ஒரு தனிமனிதனின் தன்னையொத்த மனிதர்களைத் தன்னைப்போலவே நடத்தாமைக்குக் காரணங்கள் என்ன? இதனை எவ்வாறு களையலாம்? இதற்குச் சரியான தீர்வுகள் என்ன என்பதனைப் பொதுநிலையில் வைத்து நோக்குகிறார் திருவள்ளுவர்.

அரசு அலுவல் நிர்வாகப் பொறுப்புகளில் இன்று பெண்கள் தங்கள் ஆளுமையைச் சிறப்புறச் செய்து

வருகின்றார்கள். என்றாலும் தலைமையேற்று நடத்தும் மகளிர்க்கான கருத்தியலாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவன காலமறிதல், இடனறிதல், மெய்யறிதல், வினைசெயல் வகை, வினைத்திட்பம், வினைத்தூய்மை, குற்றம்கடிதல், கண்ணோட்டம், செங்கோன்மை, சொல்வன்மை, தெரிந்துசெயல் வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், நடுவுநிலைமை, பொறையுடைமை, என்பவையாகும். இவற்றுள் பல பண்புகள் இன்றைய காலகட்டத்தில் தேவை என்றாலும் இங்குச் சிறப்புக் கருதிச் சில பண்புகள் மட்டும் சுட்டப்படுகின்றன.

சமூகத் தலைமையேற்று நடத்தும் பெண்கள் – ஆண்கள் ஆகிய இருவர்க்கும் தேவையான பொதுப்பண்புகளாகத் திருவள்ளுவர்.

*''அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்*
*எஞ்சாமை வேந்தற் கியல்பு''* *(382)*

*''தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவர்க்கு''* *(383)*

என்னும் கருத்துக்களை வகுத்துரைக்கின்றார். நிலத்தை ஆள்பவர்க்கு அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கு பண்புகளோடு, தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்னும் மூன்று தகுதிகளும் தேவை என வலியுறுத்துகின்றார். இன்றைய நிலையில் மன்னராட்சி இல்லை. மக்களாட்சி நிலவுவதால், மக்கள் தலைவர்களாக விளங்குபவர்கள் பெறத்தக்க பண்புகளாக இவற்றைக் கூறலாம்.

**வினைத்திட்பம்**

வினைத்திட்பமாவது கருதிய வினையைக் கருதிய முறையில் முடிக்கத்தக்க மனத்திண்மை, வினையை முடிக்கத்தக்க மனத்திட்பம் வினைத்திட்பம் ஆகிறது.

*''வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்*
*மற்றைய எல்லாம் பிற''* *(661)*

எல்லா வினைத்திட்பத்திற்கும் உயிர்நாடிபோல் அமைந்திருப்பது அவரது மனத்திட்பமே. மனத்திட்பம் இல்லாத வினைகள் வெற்றி பெறுவது இல்லை என்பதனை உணர்தல் வேண்டும்.

**தெரிந்து செயல்வகை**

*''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு''* *(467)*

ஒரு செயலைச் செய்ய விரும்புபவர் அதனைப் பற்றிய எல்லா வகைமைகளையும் எண்ணிப் பார்த்து, ஆராய்ந்து, அதனை முற்றமுடிவாகச் செம்மையாக நிறைவேற்றுகின்ற வழியைக் கருதிப் பார்த்து, அதன் பின்னரே செய்தல் வேண்டும். முதலில் தொடங்கி விடுவோம் பிறகு பார்த்துக் கொள்ளுவோம் என்று கருதுவது அவருக்கு வெற்றியைத் தராது. எதை முதலில் செய்ய வேண்டும். எதை அடுத்துச் செய்ய வேண்டும் என்ற துணிவு ஒருவர்க்கு வேண்டும் என்பது திருவள்ளுவர் கூறும் கருத்தியல் ஆகும்.

**ஆள்வினையுடைமை**

ஆள்வினையுடைமையாவது இடைவிடாது வினையினை ஆளும் தன்மை. நிர்வாகத்திறன் எனக் கூறலாம். ஆள்வினையாளர்க்கு அல்லது நிர்வாகப் பொறுப்பேற்று நடத்துபவர்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் ஒரு பண்பாகும். இதன் சிறப்பினைக் கருதியே திருவள்ளுவர்,

*''முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை*
*இன்மை புகுத்தி விடும்''* *(676)*

*''தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்''* *(619)*

என்னும் குறட்பாக்களைப் படைத்தளித்தார். தெய்வத்தால் அல்லது ஊழின் வலியால் தாம் கருதியது நிகழவில்லை என்றாலும் அவர் உடல் வருத்திப் பாடுபட்டமைக்குக் கூலி நிச்சயம் உண்டு. இதில் முயற்சிக்கு என்றும் தோல்வி இல்லை என்ற கருத்தியல் உணர்த்தப்படுகின்றது.

இதே போன்று வினைத்திட்பம் மிகுந்தவர்களாலேயே எண்ணியதை நிறைவேற்றிக் காட்டமுடியும் என்ற கருத்தியலை.

*''எண்ணிய எண்ணியாய் கெய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்''* *(666)*

என்றும் குறள்வழி வெளிப்படுத்துகின்றார். ஒருவினையை எண்ணியவர் வினைத்திட்பம் மிகுந்தவராக இருந்தால் அவர் எண்ணியவற்றை எண்ணிய அளவிலேயே அடைவர். மனத்திண்மை உடையவர் வினைத்தின்மையும் சேரும்போது நினைத்ததை நினைத்தபடி அடைவர். வினைத்திட்பம் உடையவர் நினைத்ததை நினைத்தபடி முடிப்பர் என்பது கருத்து.

**புகழ்பட வாழ்தல்**

புகழாவது, சிறந்த செயல்களைச் செய்வோர்க்கு வந்து சேர்கின்ற ஒரு பயன். புகழுக்குரிய காரியங்களைச் செய்வதன் மூலமாகவே புகழ்பெற முடியுமே தவிர பிறவற்றால் புகழ் பெறுதல் அறக்கேடாய் முடியும்.

*"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாடை நன்று"* (236)

என்னும் குறளில், புத்துலகம் எதிர்நோக்கும் கருத்தியலைத் திருவள்ளுவர் எவ்வாறு குறிப்பிடுகின்றார் என்று பார்க்கலாம். இங்கு புகழ்பட வாழ்தலாவது புகழத் தக்க காரியங்களைச் செய்தலாகும். புகழில்லாமல் வாழ்தல் இழிவு என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒரு துறையில் அல்லது அவையில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு செயல்பட முனைபவர் அதற்குரிய தகுதிகளை, முன்னேற்பாடுகளை முறையாகச் செய்து கொண்டு அதில் சிறப்புறும் வகையில் செயலாற்றுதல் வேண்டும். அப்படிச் செய்யும் திறமை குறைந்தவர்கள் அந்தத் துறையில் செயலாற்றுவதைவிட செயலாற்றாமல் இருப்பது நல்லது என்பது இதன் பொருளாகும். தோன்றல் என்பதற்குப் பிறத்தல் என்று பொருள் கொள்வது பொருத்தமாகப்படவில்லை. பிறத்தல் நம்முடைய கட்டுப்பாட்டில் நிகழ்வது அல்ல என்பதனை உணர்தல் வேண்டும். இவை எல்லோர்க்கும் பொதுவாக நிற்றலைக் காணலாம்.

மேற்குறித்த கருத்தியல்களோடு வெகுளாமை, பொறையுடைமை முதலானவற்றையும் பின்பற்றி வாழும்போது சமூகத்திற்குப் பயனுள்ளவர்களாக வாழலாம் என்பது திருவள்ளுவர் கருத்தியலாக உள்ளது.

பொறையுடைமை அல்லது பொறுத்துப்போகும் பண்பு இக்கால மக்களுக்குத் தேவையா? என்ற கருத்தியலை முன்வைத்துப் பேசும் திருவள்ளுவர்,

*"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
*இகழ்வார்ப் பொறுத்தல் தலை"* (151)

என்று குறிப்பிட்டார். மேலோட்டமாகப் பார்த்தால் இப்பண்பு தேவையில்லாதது போலத் தோன்றும். சமுதாயம் சிறப்புற வாழ்வதற்கும் இத்திறம் தேவைப்படுகின்றது. பல நேரங்களில் அல்லது சமுதாயத்திற்குத் தேவையான நன்மை ஒன்றனைச் செய்கையில் பலரிடமிருந்து இகழ்ச்சியே பரிசாகக் கிடைக்கிறது. அதனால் தான் தன்னை இகழ்வாரையும் பொறுத்தல் தலையாய கடமை என்றார். தன்னை இகழ்வாரைத் தானும் இகழ்தல் எளிது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட அவரை இகழாமல் மதிப்பதற்கு மிகுந்த மனத்திண்மையும் ஆற்றலும் வேண்டும். தன்னுள் எழுகின்ற உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்கி ஆள்வதோடு தான் நிலை பிறழாமல் பிறரை மதிப்பது பொறுமையுள் எல்லாம் தலையாய பொறுமை என்றார் திருவள்ளுவர். இதற்குச் சான்றாக அன்னை தெரசா அவர்களின் வாழ்வியலையே காட்டலாம்.

திருவள்ளுவரின் சமூகநோக்கில் உலக உயிர்கள் அனைத்தும் ஒன்றே. அவற்றுள் பிறப்பால் எந்த வேறுபாடும் இல்லை. அவரவர்கள் செய்கின்ற செயலின் விளைவால் மட்டுமே வேறுபாடுகள் தோன்றும் என்பதைக் கருத்தில் கொண்டே,

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்"* (972)

என்று குறித்தார். இதன் மூலம் அவர் சொல்ல வருகின்ற கருத்து, ஆண் பெண் பால் பாகுபாடு பேதம் பார்பதெல்லாம் அவரவர்கள் செய்கின்ற செயல்களால் மட்டுமே. ஆதலால் ஆணாயினும் பெண்ணாயினும் பிறப்பால் ஒன்றே. அவர்கள் செயல்களால் மட்டுமே அவர்கள் சிறப்புப் பெறுவார்கள் என்பதாம்.

**தொகுப்புரை**

திருக்குறள் உலகப்பொதுமறை என்பதோடு அது எக்காலத்திற்கும் எல்லாத் தரப்பு மக்களுக்கும் உரிய கருத்துக்களை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளது. திருவள்ளுவர் தம் கால வழக்காறுகளை அடியொற்றித் தன் நூலைப் படைத்திருந்தாலும், அவர் சொல்லியுள்ள கருத்துக்கள் இன்றைக்கும் தேவைப்படுகின்றன. திருவள்ளுவர் மக்கள் என்ற பொதுச்சொல்லை ஆண்-பெண் இணைந்த கூட்டுறவான வாழ்க்கைக்கே உரிய பொதுச்சொல்லாகப் பயன்படுத்துகின்றார். திருவள்ளுவர் நோக்கில் பால் பாகுபாடு இல்லை.

# தமிழன்பன் கவிதைகளில் எண்வகை மெய்ப்பாடுகள்

**மு. அனு**

*உதவிப்பேராசிரியை,*
*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*காவேரி மகளிர் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி – 18.*

நாட்டுக்கு நல்லது காண 'உண்மை தெரிந்து சொல்வேன்' என்ற உயர்ந்த கொள்கையைத் தனது இலட்சிய நோக்கமாகக் கொண்டிருந்தவர் மகாகவி பாரதியார். அவர் வகுத்த பாதையில் தற்காலக் கவிஞர்கள் பலர் மிடுக்குடன் முன்னேறிச் செல்வது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

சமூகச் சீர்கேடுகளையும், மனித பலவீனங்களையும், வாழ்க்கை அவலங்களையும், அரசியல் தகிடுதத்தங்களையும் ஒதுங்கிக் கிடக்கும் மக்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம் எடுத்துரைக்க நல்ல எழுத்தாளர்களால்தான் முடியும். தங்கள் கவிதைகள் மூலம் இச்சமூகத்தைச் சாடுகின்ற இன்றைய கவிஞர்கள் அதற்குத் தீர்வு காணும் பார்வையுடன் பிரச்சினைகளை அணுகுகிறார்கள். அவற்றை எடுத்துக் காட்டுவதோடு நின்று விடாது. எதிர்கால விடியலுக்கும் வாழ்வின் வளத்துக்கும் நம்பிக்கை குரல் கொடுத்து, இளைய தலைமுறையினரை விழப்புணர்வு பெறத் தூண்டுகிறார்கள்.

இவ்வாறு கவிதை புனையும் புதுமைக் கவிஞர்கள். தத்தமது தனித் தன்மையை நிரூபித்துள்ள ஒருசில முன்னணிப் படைப்பாளிகளில் ஈரோடு தமிழன்பனும் ஒருவர். மரபுக் கவிதைகள் மூலமும், புதுக் கவிதைகள் மூலமும் இவர் தமது ஆற்றலை நன்கு புலப்படுத்தியிருப்பதை பலரும் அறிவர். அந்த வகையில் தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களுள், ஒருவரான தமிழன்பன் கவிதைகளில் எண்வகை மெய்ப்பாடுகள் இடம் பெற்றிருப்பதை எடுத்துரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

*'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும் போர்த்தும பெற்றியனே'*

என்ற வரிகளுக்கு இணங்க தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களுள், முதன்மையான நூல், முதல் நூல், தலை நூல், தாய் நூல், எழுத்து, சொல், பொருள் என்ற முப்பொருளைக் கூற 27 இயல்களில் 1610 நூற்பாக்களைக் கொண்ட உலகப் பொதுநூல் தொல்காப்பியம்.

உலக இலக்கியங்களில், இலக்கணங்களில் இல்லாத புதுமையைத் தன்னகத்தே கொண்டவை தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரம். இதில் ஆறாவது இயலாகவுள்ள எண்வகை மெய்ப்பாடுகளை விளக்கிக் கூறுகின்ற மெய்ப்பாட்டியலில்,

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பால் எட்டாம் மெய்ப்பாடென்ப"*[1]

என்று தொல்காப்பியர் சுவை எட்டாகக் கூறுகின்றார். இவற்றுடன் 'சமநிலை' என்ற ஒன்றையும் இணைந்து நவரசமாகக் குறிப்பார் வடநூலார்.

மக்களது அகவாழ்வும், புறவாழ்வும் ஆகிய உலகியல் வழக்கில் புலப்பட்டுத் தோன்றும் இம்மெய்ப்பாடுகளைப் புனைந்துரை வழக்கமாகிய நாடக வழக்கிற்கும் புலனெறி வழக்கமாகிய செய்யுள் வழக்கிற்கும் அங்கதமாகக் கொள்ளுவதற்குத் தொன்று தொட்டு வருவது தமிழிலக்கண மரபாகும். அதனால் தொல்காப்பியர் செய்யுளுக்குரிய உறுப்புகளுள் ஒன்றாகக் கொண்டு இவற்றை விளக்குகின்றார்.

### அ) நகை

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்று நகை. நகை என்பது இகழ்ச்சியிற் பிறப்பதாகும். 'சிரிப்பு, இன்பம், பல், மகிழ்ச்சி, அவமதிப்பு, நட்பு, மலர், ஒளி, முத்து, அணி' என்ற பல பொருட்களைக் கொண்ட இந்நகை தோன்றும் நிலைக்களன் நான்காகும். அவை,

*"எள்ளல் இளமை பேதைமை மடனென்று*
*உள்ளப் பட்ட நகை நான்கென்ப"*[2]

அதாவது எள்ளல், இளமை, பேதைமை, மடம் முதலாகச் சொல்லப்பட்ட நான்கும் நகைப்பொருளாகும்.

### i) எள்ளல்:

நகையின் நிலைக்களன்களில் ஒன்றாகிய எள்ளல் என்பதற்கு 'இகழ்ச்சி' என்பது பொருளாகும்.

*"சாராயக் குப்பியில்*
*கிருமிகளைச் சேர்ப்பித்து*
*அவை செத்து*
*அழிவதைக் காட்டிப்*
*புரிகிறதா என்றால்*
*புரிகிறது .... என்கின்றார்*
*என்ன புரிகிறது*
*என்றவுடன்...*
*சாராயம் சாப்பிட்டால் வயிற்றிலுள்ள*
*கிருமிகள்...*
*சாகும்*
*என்கின்றார்"*[3]

என்ற கவிதை எள்ளல் தன்மையை வெளிப்படுத்துவதை உணரலாம்.

### ii) இளமை

இளமை என்பதற்கு சிறுபருவம், அறிவின்மை, மென்மை போன்றப் பல பொருட்கள் உள்ளன.

*"கண்ணாடியைப்*
*பார்த்துப் பல் விளக்கிக்*
*கொண்டிருந்த*
*பாட்டியிடம் கவின் சொன்னான்*
*கண்ணாடியைப் பார்த்துக்*
*கண்ணை விளக்குங்க பாட்டி"*[4]

என்ற இக்கவிதை மூலம் சிறுகுழந்தையின் அறியாமையால் நகை தோன்றும் என்பதை அறியலாம்.

### iii) பேதைமை மற்றும் iv) மடம்

பேதைமை, மடம் என்ற இவை இரண்டும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள். ஒன்றன் தன்மை இன்னொன்றுக்குப் பொருந்திவரும் இயல்புடையது.

'பேதைமை' என்பது கேட்டதனை உய்த்து உணராது மெய்யாக ஏற்றுக் கொள்ளுதல்.

*"எங்கள்*
*தமிழனுக்கு அறிவு*
*இரண்டாம் தாரம்தான்*
*மூடநம்பிக்கையே முதல்தாரம்"*[5]

என்ற வரிகளின் மூலம் மனிதனின் ஆராய்ந்து உணராத தன்மையினை எடுத்துயியம்புகிறார் கவிஞர் தமிழன்பன்.

'மடம்' என்பதற்கு பொருண்மை அறியாது திரியக் கேட்பதாகும். மடம் என்பதற்கு 'அறியாமை, பேதைமை, மென்மை, முனிவர் வாழிடம், இளமை, கொளுத்துக் கொண்டு கொண்டது விடாமை' போன்ற பல பொருட்களைக் கொண்டது.

*"திருப்பதிக்கும்*
*பழனிக்கும்*
*காணிக்கைதர*
*மயிர் வளர்த்தோம்*
*அறிவையா வளர்த்தோம்"*[6]

என்று கூறி மனிதனின் பொருளறியாத் தன்மையினை எடுத்துரைப்பது இகழ்ச்சியை (நகையை) ஏற்படுத்துவதாக அமைவதை அறியலாம்.

**ஆ) அழுகை**

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான அழுகை அவலத்திற் பிறப்பதாகும். இவ்வழுகைத் தோன்றும் நிலைக்களன்கன் நான்கு. அவை,

*"இழிவே இழவே அசைவே வறுமையென*
*விளவில் கொள்ள அழுகை நான்கே"*[7]

அதாவது, இழிவு, இழவு, அசை, வறுமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் அழுகைக்குப் பொருளாகத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

**i) இழிவு**

இழிவு என்பது பிறர் தன்னை, தன் இனத்தை இழிவாகக் கூறி எளியனாக்குவதால் பிறக்கிறது. இழிவு என்பதற்கு 'தாழ்வு, இகழ்ச்சி, குறைவு, கேடு, குற்றம், திட்டு, பள்ளம்' போன்ற பல பொருட்கள் உள்ளன.

*"வெங்கொடுமைச் சாக்காட்டில்*
*விளையாடும் வெற்றித்*
*தோள்கள்....*
*எவரெவர்க்கோ*
*பல்லக்குச் சுமக்கின்றன"*[8]

என்று கூறி தன்னிலையில் தாழ்ந்த இனத்தின் இழிவு நிலையை எடுத்தியம்புகின்றார்.

**ii) இழவு**

இழக்கை, கேடு, சாவு போன்ற பல பொருட்களைக் கொண்ட இழவு உயிரானும் அல்லது பொருளானும் இழப்பதால் தோன்றுவதாகும்.

*"மரணத்தை*
*ஒருவகையில் தடுத்து நிறுத்திக்*
*கொண்டு*
*மறுகையால்*
*தாயைத் தந்தையைத்*
*தறிகெட்ட தண்ணீருக்குள்*
*துழாவும் பிள்ளைகளின்*
*மார்புத் துடிப்போதை...."*[9]

என்ற வரிகள் கடல்கோளில் அலைக்கழிக்கப்பட்டு மரணத்தின் பிடியில் நின்ற ஒரு மகனின் மன அழுகையை வெளிப்படுத்துகிறது.

**iii) அசை**

அசை என்பது தளர்ச்சி, தன்னிலையில் இருந்து தாழ்தல் போன்ற நிகழ்வுகளால் தோன்றுவதாகும். தாழ்தல் என்றால் 'சாய்தல்' நிலைகெடுதல் என்ற பொருட்களும் உள்ளன.

*"உடலிளைத்து மெலிவுறினும் புலியின் பக்கம்*
*ஓடிவந்து நாய் மோத்தால் உண்டா? ஆனால்*
*கடைகெட்ட காவலன் சீர்க் கணைக்கால் தன்னைக்*
*கண்டபடி இழித்துபின் நீர் கொணர்ந்தான்"*[10]

என்ற இக்கவிதை தன்னிலைத் தாழ்ந்ததால் உயிர்நீத்தக் கணைக்கால் இரும்பொறையின் அசையை வெளிப்படுத்துகின்றது.

**iv) வறுமை:**

அழுகையின் நிலைக்களன்களில் ஒன்றான வறுமை என்பதை நல்குரவு என்றும் கூறுவர்.

*"கிழிசல்களைத்*
*தைக்கும் இவன்*
*உடம்பெங்கும்*
*ஊசித் துளைகள்"*[11]

என்ற இவ்வரி ஆழமானக் கருத்தை அழகாக அவலத்துடன் எடுத்துரைக்கின்றது.

**இ) இளிவரல்:**

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான இளிவரல் இழிப்பிற் பிறப்பதாகும். இளிவரல் என்பதற்கு இழிப்புச்சுவை என்றும் இழிப்பு என்பதற்கு நிந்திக்கை என்பதும் பொருளாகும். இவை தோன்றும் நிலைக்களன்கன் நான்கு. அவை,

*"மூப்பே பிணியே வருத்த மென்மையொடு*
*யாப்புற வந்த இளிவரல் நான்கே"*[12]

அதாவது மூப்பு, பிணி, வருத்தம், மென்மை முதலாகச் சொல்லப்பட்ட நான்கு பொருண்மையும் தன்மாட்டுத் தோன்றினும் பிறர்மாட்டுத் தோன்றினும் நிகழும்.

**i) மூப்பு**

மூப்பு என்பது இளிவரல் நிலைக்களன்களில் ஒன்றாகும். பிறர் மாட்டுத் தோன்றும் முதுமையைக் கூறுவதால் இளிப்புத் தோன்றுகிறது.

*"என்னைப்
பார்க்கவந்த இளம் பேராசிரியர்
வில்லாளனையும்
தாத்தா என்றான் கவின்
மாமா என்று
மாற்றிச் சொல்லச் சொன்னேன்
சொன்னான்
வயதானவராக்கிய வருத்தம்
சற்றே தணிந்தது அவருக்கு"*[13]

என்ற இக்கவிதை மூப்பு நீங்கிய மாமாவின் மனம் மகிழ்ந்தாலும் கவின் கூறிய தாத்தா என்ற வார்த்தையின் பொருள் ஆய்ந்துணரத்தக்கதாகும்.

### ii) பிணி

பிணி என்பது பிணியுறவு, கண்டு இழித்தல், உடம்பு நோயினால் வாடும் தன்மையினை இழித்தலாகும். 'கட்டு, நோய், பின்னால், துன்பம்' போன்ற பொருட்களைக் கொண்ட இப்பிணி,

*"முப்பது வருடப்
புகை முற்றுகை
பூசிவைத்த களிப்பால்
முழுதும் கறுத்துவிட்ட
நுரையீரல் சுவரோரம்
தேம்பியபடி மனைவி
திகைத்தப்படி பிள்ளைகள்"*[14]

என்ற கவிதையானது புகைப்பிடிக்கும் பழக்கத்தால் நுரையீரல் பாதிக்கப்பட்டு நோயோடு போராடுபவனைக் கண்டு குடும்பமே வருந்தும் அவலத்தை எடுத்துக் காட்டியக் கவிஞர்.

*"தாய்
பாலூட்டி வளர்ப்பது
கொஞ்சகாலம்
நோய் மருந்தூட்டி வளர்ப்பதுவோ
மிச்ச காலம்"*[15]

என்று கூறி மனித வாழ்வின் நிதர்சனத்தை ஆழமாக எடுத்தியம்புகின்றனர்.

### iii) வருத்தம்

வருத்தமென்பது தன்மாட்டும் பிறர் மாட்டும் உளதாகிய வருத்தத்தானும் இழிப்புப் பிறக்கும்.

*"இறந்ததற்கு
வருத்தப்பட்டவன்
இறுதிப் பயணத்தில்
எத்தனை பேர் வருகிறார்கள்
என்று
ஒருமுறை கண்களைத்
திறந்து பார்த்தான்
வாழ்ந்ததற்கு
வருத்தப்பட்டு மறுபடியும்
ஒரே அடியாய்க்
கண்களை மூடிக்கொண்டான்"*[16]

என்ற வரிகள் மூலம் வாழ்ந்த வாழ்க்கையின் மீது வருத்தம் கொண்டவனின் இறுதிப் பயணத்தை எடுத்துரைக்கின்றார்.

### iv) மென்மை

மென்மை என்பது நல்குரவு, நல்குரவு என்பதற்கு வறுமை என்பது பொருளாகும்.

*"பசி, பட்டினி, கவலையோடு
படுத்துக்கிடக்கும் மக்கள்
கண்மூட முடியவில்லை
விடிய விடியக் குரைக்கிறது
வாழ்க்கை"*[17]

என்ற வரிகள் வாழ்க்கை வெறுமையான வறுமை என்பதை எடுத்துரைக்கின்றது.

### iv) மருட்கை

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான மருட்கை வியப்பிற் பிறப்பதாகும். இவைப் பிறக்கும் நிலைக்களன்கள்.

*"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே"*[18]

அதாவது புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் முதலாகச் சொல்லப்பட்ட இந்நான்கினானும் மருட்கை பிறக்கும்.

### i) புதுமை

புதுமை என்பது யாதொன்றானும் எவ்விடத்தும் எக்காலத்தும் தோன்றாததொரு பொருள் மற்றும் கருத்து தோன்றியவழி வியத்தலாகும். 'அற்புதம், அபூர்வம், பழக்கமின்கை, எழில்' போன்ற பொருட்களையும் கொண்டது.

*"வெள்ளையனே வெளியேறு
என்றோம்*

*வெளியேறி விட்டான்*
*கொள்ளையனே வெளியேறு*
*யாரைப் பார்த்து*
*யார் சொல்வது''*[19]

என்ற கவிதை, தன் தாய் நாட்டுக்குள் கொள்ளையடிக்கும் நம்மவர்களின் யார்? என்ற அற்புதமான ஆழமான கேள்வி அனைவரையும் வியக்க வைக்கிறது.

### ii) பெருமை

பெருமை என்பது பண்டு கண்ட பொருள்கள் போலல்லாது அவ்வளவிற் பெருத்தன கண்டு வியத்தலாகும்.

*''தாடி வளர்த்த ஈரோடு*
*தமிழர் பூமி முழுவதும் பரவி*
*மாற்றம் செய்தது வேரொடு''*[20]

என்ற வரிகள், தந்தை பெரியாரால் தமிழகம் கண்ட மாற்றத்தை பெருமையோடு கூறுகிறது.

### iii) சிறுமை

சிறுமை என்பது பிறவும் நுண்ணியன கண்டு வியத்தலாகும். சிறுமை என்பதற்கு 'அற்பத்தனம், இளமை, குறைபாடு, வறுமை, துன்பம், குற்றம், மிக்ககாமம், நோய்' போன்ற பல பொருட்கள் உள்ளன.

*''புலியோடு*
*முற்றிவிட்ட பகை என்றால்*
*போராடு அதை விட்டுவிட்டு*
*ஓடிப்போய்*
*நரியிடம் நட்புக் கொள்ளாதே''*[21]

என்ற வரிகள், மனிதம் நாகரிகம் மறந்து இந்நிலையையே நாடுகிறது என்பதை வெளிக்காட்டுகிறது.

### iv) ஆக்கம்

ஆக்கம் என்பது ஒன்றன் பரிணாமங்கண்டு வியத்தலாகும். ஆக்கம் என்பதற்கு 'உண்டு பண்ணுகை, பெருக்கம், உயர்வு, நுகர்பொருள், செல்வம், பொன், பருவம், ஆசி, கொடிப்படை' என்ற பல பொருட்கள் உள்ளன.

*''எடுபிடியாகித்*
*தலைவர்களின் வீட்டுவாசலில்*
*வாலைக் குழைத்தது போதும்*
*வரலாறு – இனி*
*வாழத்துடிக்கும் மானுடனின்*
*மீட்சிப் போராட்டத்தின்*
*சாட்சியம் ஆகட்டும்''*[22]

என்ற கவிதை அடிமைதனத்தில் இருந்து விடுபட்டு வாழத்துடிக்கும் ஒரு சமூகத்தின் ஆக்கத்தினை எடுத்துரைக்கின்றது.

### உ) அச்சம்

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான அச்சம் என்பது அஞ்சத் தகுவனவற்றால் பிறப்பதாகும். 'பயம், இலேசு, சரிசமானம்' என்ற பல பொருட்களைக் கொண்ட இவ்வச்சம் தோன்றும் நிலைக்களன்கள் நான்கு. அவை,

*''அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்*
*பிணங்கல் சாலா அச்சம் நான்கே''*[23]

அதாவது அணங்கு, விலங்கு, கள்வர், இறை முதலாகச் சொல்லப்பட்ட இந்நான்கையே தொல்காப்பியர் கூறுகின்றார்.

### i) அணங்கு

அணங்கு என்பதற்கு 'வருத்தம், அச்சம், ஆசை, மோகினி, நோய், அழகு, பெண், பேய்மகள், தேவர்க்காடுங்கூத்து, கொல்லிப்பாவை' போன்ற பல பொருட்கள் உள்ளன. அவற்றுள்,

*''கடைசியாகக்*
*கண்ணகி வருந்தினாள்*
*ஒருவனைத் திருத்த முடியாமல்*
*ஊரையே எரித்து விட்டேன்''*[24]

என்ற கவிதை வரிகள் பெண்ணாகிய கண்ணகி வருந்துவதாக கூறுகின்றது.

### ii) விலங்கு

அச்சம் தோன்றும் நிலைக்களன்களில் ஒன்றான விலங்கு என்பதற்கு 'மிருகம், பறவை, குன்று, குறுக்கானது, தடை' போன்ற பல பொருட்களைக் கொண்டது.

*''இயற்பெயர் என அறியாதவனை*
*விலங்கென்று சொன்னால்*
*ஆடுகளும், மாடுகளும் நம்மேல்*
*வழக்குப் போடும்''*[25]

என்ற வரிகள் தன்னையே அறியாதவன் வாழ்க்கைப் பயணம் அச்சம் நிறைந்தது என்பதை கூறுகின்றது.

### iii) கள்வர்

அச்சம் தோன்றும் நான்கு நிலைக்களன்களில் ஒன்று கள்வர். உறங்காமல் விழிப்பாக இருந்தும் தம் உடைமை கள்வனால் களவாடப்பட்டதால் அச்சம் அடைந்தப் பெண்ணின் வருத்தத்தை,

*“இரவெல்லாம்*
*உறங்காமல் வந்திருக்கிறாள்*
*உறங்காமல் வந்தும்*
*திருடு போய்விட்டது*
*அவள் கைப்பை*
*திண்டுக்கல்லில் இறங்கியவள்*
*திடுக்கிட்டாள்”*[26]

என்ற வரிகள் எடுத்தியம்புகிறது.

### iv) இறை

இறை என்பதற்கு ‘அரசன், கடவுள், நடுவுநிலைமை, முதன்மை, இரேகை, கை, முன்கை, சந்து, வீட்டின் இறப்பு, கடமை, அரசிறை, மூட்டுவாய், விரல்வரை, விடை, உயரம், மாமரம், மூலை’ போன்ற பல பொருட்கள் உள்ளன.

*“.......... நாட்டு மன்னன்*
*நடுவுநிலைதனைப் புதைத்தான்*
*ஆராயாமல் பொய்ம்மைநின்ற குறைசாட்டி*
*கள்வனென்றே*
*புரிந்தானே கொடுங்கொலை”* [27]

என்ற வரிகள், ஒரு நாட்டை ஆளும் மன்னன் ஆராயாமல் வழங்கும் தீர்ப்பால் ஏற்படும் கொடுமைகளைக் கண்டு அச்சம் கொண்டு வருந்தும் மக்களின் நிலையை நம் கண்முன் கொண்டுவருகிறது.

### ஊ) பெருமிதம்

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான பெருமிதம் என்பது வீரத்திற் பிறப்பதாகும். ‘மேம்பாடு, பேரெல்லை’ போன்ற பொருட்களைக் கொண்ட இவை,

*“கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்*
*சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே”*[28]

அதாவது, கல்வி, தறுகண், புகழ், கொடை என்ற இந்நான்கும் பெருமிதம் தோன்றும் நிலைக்களன்களாகும்.

### i) கல்வி

பெருமிதம் தோன்றும் நான்கு வகைகளின் ஒன்றானக் ‘கல்வி’ என்பதற்கு ‘கற்கை, கல்வியறிவு’ என்ற பொருட்கள் உள்ளன.

*“சுதந்தரக் காற்றைச் சுவாசிக்க வைக்கும்*
*கம்பீரமான கல்வி”*[29]

என்று கூறி, மனிதனின் பெருமையை மெருகேற்றுவது கல்வியே என்பதை ஆணித்தரமாகக் கூறுகின்றார் கவிஞர் தமிழன்பன்.

### ii) தறுகண்

தறுகண் என்பது ‘அஞ்சுவதஞ்சாமை, கொல்லுகை, கொடுமை’ போன்ற பொருட்களைக் கொண்டவை.

*“குடும்பத்துக் காவியத்தில் கொடுமைக்காரி*
*கொலைகாரி பழிகாரி என்று சொற்கள்*
*தொடுத்தென்னைத் தூற்று கின்றார்*
*என்னைக் கொள்ளிக் கண்ணால் பார்த்து*
*கொல்லாமல் கொல்கின்றார் ஆட்சி பற்றச்*
*சதி செய்யும் பகைவனைப் போல் கருதுகின்றார்*
*சரிந்திடுமா இமயமலை வீசுங்காற்றால்”*[30]

என்ற இக்கவிதை, பல கொடுமைகளையும், பழிச் சொற்களையும் அனுபவித்து வாழும் அன்னையானவள் அச்சத்தை கைவிட்டு தன் குடும்பத்துடன் இணைந்து வாழ்வதே பெருமிதம் என்பதை தாயுள்ளத்தின் வழி கூறுகின்றது.

### iii) புகழ்

புகழ் என்பதற்கு ‘புகழுடைமை, விருப்பம், வெற்றி’ போன்றப் பொருட்கள் உள்ளன. மனிதனாய் வாழும் அனைவரும் புகழப்படுவதில்லை. புகழ் என்பது இறந்தப் பிறகும் இப்பூமியில் அவரின் பெருமைகளைப் பேசுவதே,

*“அருட்தந்தை இராமலிங்கர்*
*அணைத்துயிரும்*
*கடைத்தேற வந்த*
*சன்மார்க்கப் பாதிரியார்*
*பசிச் சிலுவையில்*
*அறையப்பட்டவர்களை*
*மீட்க வந்த இரட்சகர்”* [31]

என்ற கவிதை, ‘வாடியப்பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய’ இராமலிங்கரின் பெருமையை எடுத்துரைக்கின்றது.

### iv) கொடை

'தியாகம், ஈகை' போன்ற பொருட்களைக் கொண்ட 'கொடை' பெருமிதம் தோன்றும் நான்கு நிலைக்களன்களில் ஒன்றாகும்.

*"திருப்பூர்த் தெருவில்*
*அன்று ...........*
*ஆவியையும்*
*அன்னை நாட்டிற்கு – அவன்*
*தியாகம் செய்தான்"*[32]

தன் உயிரையே தந்து தாய்நாட்டுக் கொடி உயர்த்தியவனின் தியாகம் வார்த்தைகளால் வருணிக்க முடியாது என்பதை மேற்கொண்ட வரிகளின் வழி அறியலாம்.

### எ) வெகுளி

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான 'வெகுளி' என்பது வெறுக்கத் தக்கனவற்றால் பிறப்பதாகும். இவ்வெகுளி தோன்றும் நிலைக்களன்கள் நான்காகும். அவை,

*"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன*
*வெறுப்ப வந்த வெகுளி நான்கே"*[33]

அதாவது உறுப்பறை, குடிகோள், அலை, கொலை முதலாகச் சொல்லப்பட்ட நான்கானும் வெகுளியானது பிறக்கும் என்கிறார் தொல்காப்பியர்.

### i) உறுப்பறை

உறுப்பறையாவது அங்கமாயினவற்றை அறுத்தலாகும். உறுப்பறை என்பதற்கு 'அங்கவீனன், உறுப்புக் குறைத்தல் என்பது பொருளாகும்.

*"விரல் நகத்தை*
*வெட்டி எறிந்ததைப்போல்*
*ஊருக்கு வெளியே மனிதன்*
*வீசி எறியப்பட்டான்"*[34]

என்ற கவிதை, உதாசினப்படுத்தப்பட்டு, ஒதுக்கி எறியப்படும் தன்மை மனித இனத்தில் மட்டுமே நிகழும் என்பதை கூறுகின்றது.

### ii) குடிகோள்

குடிகோள் என்பதற்கு சூழ்ச்சி செய்து குடியைக் கெடுத்தல் என்பது பொருளாகும். அதாவது தனக்குக் கீழ்வாழ்வாரை நலிதல்.

*"கணவனுக்குப்*
*பங்குவைக்கும் பணக்காரச் சீமாட்டி*
*தோட்டி நிழல் பட்டாலே*
*தீட்டாகி விடுவாளாம்"*[35]

என்ற இவ்வரிகள், பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பவர்களை வெறுக்கும் தன்மை மனித இனத்தில் மட்டுமே உள்ள உண்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

### iii) அலை

'நீரலை, கடல், மிகுதி, வருத்துகை' போன்ற பொருட்களைக் கொண்ட அலை என்பது வைதலும் புடைத்தலும் ஆகும்.

*"எங்கள்*
*தமிழனுக்கு அறிவு*
*இரண்டாம் தாரம்தான்*
*மூடநம்பிக்கையே*
*முதல் தாரம்"*[36]

என்று கூறி, வெளிப்படையாக மனிதனை வைதலைக் காணலாம்.

### iv) கொலை

வெகுளித் தோன்றும் நிலைக்களன்களில் ஒன்றான கொலை என்பது 'கொல்லுதற் கொருப்படுதலாகும்'.

*"நடவுசெய்த தோழர்களின்*
*நாலணாக் கூலியில்*
*வெடிமருந்து தயாரித்து*
*ஆஸ்தானங்கள் அதிர்ந்து விழ*
*வீசச்*
*சொன்னவன் நீ*
*பண்ணிப் பழகடா பச்சைப் படுகொலை*
*என – நீ*
*அர்த்தமுள்ள கொலைகளை ஆமோதித்தாய்"*[37]

என்ற இவ்வரி, கொலைக்கான காரணத்தையும் கூறிச் செல்கின்றது.

### ஏ) உவகை

எண்வகை மெய்ப்பாடுகளில் ஒன்றான உவகை என்பதற்கு 'களிப்பு, மகிழ்ச்சி, அன்பு போன்றப் பொருட்கள் உள்ளன. இவைத் தோன்றும் நிலைக்களன்கள் நான்காகும். அவை,

*"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென*
*அல்லல் நீத்த உவகை நான்கே"*[38]

அதாவது, செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என நான்குவகையாகும் என்கிறார் தொல்காப்பியர்.

### i) செல்வம்

உவகையின் நான்கு நிலைக்களன்களில் ஒன்றான 'செல்வம்' என்பதற்கு 'ஐஸ்வரியம், செழிப்பு, நுகர்ச்சி, சுவர்க்கம், வீறு, கல்வி' போன்ற பொருட்கள் உள்ளன.

*"பணம்*
*எதையும் செய்யும் தெரிந்தவர்கள்*
*பணம் செய்தார்கள்"*[39]

என்று மகிழ்வாய் வாழ்ந்த மக்களைக் கண்டு,
*"குருக்களாகிவிட்ட கடவுள்*
*மறுபடியும் கடவுளாகவில்லை*
*தட்டுநிறையக் காணிக்கை"*[40]

கண்டதும் மனம் மகிழ்ந்த கடவுளைக் கொண்டு செல்வத்தின் நுகர்ச்சியால் ஏற்படும் இன்பத்தை எடுத்தியம்புகின்றார் கவிஞர் தமிழன்பன்.

### ii) புலன்

புலன் என்பதற்கு 'அறிவு, ஐம்புலன், காட்சி, வயல்' போன்ற பல பொருட்கள் உள்ளன.

*"கயிறின்றிக் கையின்றி நெஞ்சைக் கட்டி*
*இழுக்கின்ற கண்பார்வை காதற் பார்வை"*[41]

என்ற வரிகள், ஐம்புலன்களில் ஒன்றாகிய கண்கள் சந்திப்பதால் காதல் தோன்றும் இனிமையை அழகாகக் கூறுகின்றது.

### iii) புணர்தல்

புணர்தல் என்பதற்கு இயைதல் என்பது பொருளாகும்.

*"உன்மேனி பொன்மேனி பூமேனி*
*உவட்டாத இன்பத் தோனி*
*என்மேனி என்னுள்ளம் அஃதடைய*
*ஏக்கமுறல் பொய்யே இல்லை"*[42]

என்ற வரிகள், மகளிரோடு புணர்தலால் ஏற்படும் உவகையை எடுத்துரைக்கின்றது.

### iv) விளையாட்டு

விளையாட்டு என்பது உவகையின் நிலைக்களன்களில் ஒன்றாகும்.

*"குடைராட்டினம்*
*என்றால்*
*கொள்ளை ஆசை*
*கவினுக்கு*
*குடைராட்டினத்துக்கும்*
*அப்படித்தான்*
*அவன் கனவுக்குள்*
*வந்து சுழல்கிறது"*[43]

என்ற வரிகள், விளையாட்டில் உலகம் மறந்த குழந்தையின் மகிழ்ச்சி (இன்பம்) உறக்கத்திலும் உடன்வருவதை அழகாக எடுத்துரைக்கின்றது.

கவிஞர் ஈரோடு தமிழன்பன் கவிதைகளில் செய்யுள் உறுப்புக்களில் ஒன்றான எண்வகை மெய்ப்பாடுகள் இடம் பெற்றுள்ளது என்பதை இவ் ஆய்வுக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம் நூற்பா எண் – 247
2. மேலது – 248
3. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1. ப.27
4. மேலது தொகுதி 5. ப.599
5. மேலது தொகுதி 1. ப.238
6. மேலது தொகுதி ப.293
7. தொல்காப்பியம் நூற்பா எண் – 249
8. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1. ப.572
9. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 5. ப.587
10. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1. ப.88
11. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 5. ப.69
12. தொல்காப்பியம் நூற்பா எண் – 250
13. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 5. ப.598
14. தமிழன்பன் கவிதைகள் தொகுதி ப.73
15. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 4. ப.457
16. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 5. ப.369
17. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 4. ப.435
18. தொல்காப்பியம் நூற்பா எண் – 251
19. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 4. ப.253

20. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 4. ப.548
21.தமிழன்பன் கவிதைகள் தொகுதி 4. ப.238
22. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 4. ப.237
23. தொல்காப்பியம் நூற்பா எண் - 252
24. மின்மினிக்காடு, ப.45
25. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.497
26. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.663
27. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.69
28. தொல்காப்பியம் நூற்பா எண் - 253
29. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 3, ப.58
30. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 2, ப.148
31. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.490
32. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1 ப.251
33. தொல்காப்பியம் நூற்பா எண் - 254
34. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.500
35. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.502
36. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.233
37. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 1, ப.241
38. தொல்காப்பியம், நூற்பா எண் - 255
39. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 3, ப.660
40. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 3, ப.661
41. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 2, ப.33
42. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 2, ப.53
43. தமிழன்பன் கவிதைகள் தொகுதி 5, ப.648

# கபிலரின் இயற்கைப் புனைவுத்திறன்

**தி.மணிமொழி**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ்த்துறை,*
*காவேரி மகளிர் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி – 18.*

பண்டையத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டனர். இயற்கையை தெய்வமாக வழிபட்டனர். இயற்கைப் பொருள்கள் அனைத்திலும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்களாய் வாழ்ந்தனர். இயற்கையைப் பேணி தங்களைக் காத்துக் கொண்டனர். தனி மனிதன் இயற்கையை அனுபவிப்பதோடு விட்டு விடுகிறான். கவிஞன் இயற்கையை காட்சியாக்கி தனது பாடலில் அழகுற பதிவு செய்கிறான். இதன் மூலம் தனிமனிதன் ஒரு காட்சியை பார்ப்பதற்கும் வேறுபாடு உண்டு என்பதை அறியலாம். அந்த வகையில் கபிலர் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்தவராக இருப்பதால் பறம்பு மலையின் வளத்தை துய்த்துணர்ந்து அதன் அழகை தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பாடலில் குறிஞ்சி வளமும் அவர் தம் புலமையும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. குறிஞ்சி நிலத்தில் காணப்படும் மரம், செடி, கொடி, விலங்குகள், பறவைகள், மலை, அருவி, ஆறு, சுனை இவற்றின் இயற்கை அழகையும் தம் கவிதையில் கவினுற குறிப்பிட்டுள்ளார்.

**குறிஞ்சியும் கபிலரும்**

குறிஞ்சிப் பாடல்களில் அதிகமான பாடல்களைப் பாடிய கபிலர், பாரியின் உற்ற நண்பர். பறம்பு மலையின் அழகில் தோய்ந்தவர். குறிஞ்சி நிலத்தின் செல்வ வளங்களைக் கண்டு, கேட்டு நன்கு அறியும் ஆற்றல் படைத்தவர். சங்க நூல்களில் மிகுதியான குறிஞ்சிப் பாடல்களைப் பாடிய கபிலர் பிற திணைகளை விட குறிஞ்சித்திணையே இவரை மிகவும் ஈர்த்திருக்கின்றது.

“நிலம் பொழுது என்று இருவகை முதற்பொருளாலும் தம் கவித்துறைக்கு ஒரு வரையறை செய்து கொண்டாராகையால் ஏனைய திணைகளைக் குறித்த இயற்கை சொல்லோவியங்கள் தீட்டுவதில் கபிலர் பெரிதும் ஈடுபடவில்லை” என்பர் மு.வரதராசன். கபிலருக்கு பறம்பின் பல்வேறு தோற்றங்களும், அப்பெரு மலையகத்தே நிகழ்ந்த பல்வேறு காட்சிகளும், கபிலரின் மனதிற்கு உவகையூட்டியதோடு, அவர்தம் கவிதைத்திறத்திற்கும் உரமூட்டுவனவாய் அமைந்தன.

கபிலர், மலையின் தன்மை, சூழல் முதலியவற்றைத் தக்கவாறு எடுத்துரைக்கின்றார். அதன் இயல்பின் மாரிக்குன்றம், மணி நெருங்குன்று, நறுந்தண் சிலம்பு, நறுங்கார் அடுக்கம், பண்மலர்ச் சாரல், படுமழை பொழிந்த சாரல், வான்தோய் வெற்பு முதலிய தொடர்களால் உணர்த்துகின்றார். மலையின் பருவ மாறுபாடு, பயிரின் மிகுதி, மலையின்

உயர்ச்சி, அடர்ந்த மாறுபாடு, பயிரின் மிகுதி, மலையின் உயர்ச்சி, அடர்ந்த காடுகளின் தோற்றம், மேகம் சூழும் தன்மை, மணம் பரப்பும் மாண்பு முதலியவற்றை இத்தொடர்களால் அறியலாம். மலை பற்றிய கபிலரின் நுண்ணறிவினை இத்தொடர்கள் புலப்படுத்துகின்றன.

தமிழர்கள் உயர்ந்தோருக்கு மலையை உவமையாகக் கூறினர். மலையின் உயர்ச்சியையும், பரப்பினையும், திண்மையையும் கண்டு பவணந்தி முனிவர்,

*அளக்கலாகா அளவும் தோற்றமும்*
*துளக்க லாகா பொருளும் மேன்மையும்*
*வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே*
*(நன்னூல்)*

என்று மலையின் இயல்புகளைப் போற்றி அதனை நல்லாசிரியருக்கு உவமையாகக் கூறுகின்றார்.

மலை வாழ்க்கையரான கபிலர், மலைத் தொடர்புள்ள அனைத்தையும் நுணுகி அறிந்து பாடுகின்றார். மற்ற நிலப்பகுதிகளைவிடக் குறிஞ்சி நில நோக்குப் பரந்துபட்ட ஒன்றாக இருப்பதால் கபிலர்க்கு மலையின் எல்லாக் காட்சிகளும் இன்பம் அளித்தன. ஒரு புலவன் தான் வாழ்கின்ற சூழலை நன்கு படம் பிடித்துக் காட்ட இயலும் என்பதற்குச் சான்றாக,

*''பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்*
*பயிலருஞ் சிலம்பில் கலைபாய்ந் துகளவும்*
*கலையும் கொள்ளா வாகப் பலவும்*
*கால மன்றியும் மரம்பயம் பகரும்*
*யாண ரறாஅ வியன்மலை''*

இப்பாடலில் மலைவளத்தினை சிறப்பித்துக் கூறுகிறார். மலைப்பகுதியில் உள்ள இயற்கைக் காட்சிகள் தன்னை வியப்பில் ஆழ்த்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

**உயிரினங்களை காட்சிப்படுத்தல்**

குறிஞ்சி நிலத்து உயிரினங்களின் வாழ்க்கையைப் பாடுவதிலும் கபிலர் திறம்மிக்கவராகத் திகழ்கின்றார். யானை ஒன்று நீருண்ணத் துறைக்கண் வருகிறது. அதனை எதிர்பார்த்திருந்த புலி, யானையைக் கொல்லச் சமயம் பார்த்திருக்கிறது. இதற்குள் யானை, புலியினைத் தாக்கி விடுகிறது. யானையின் கொம்புகள் குருதியால் செந்நிறம் பெறுகின்றன. குருதிக் கரையை நீரில் கழுவி விட்டு மெல்ல அருகில் உள்ள மலைப்பக்கம் செல்கிறது யானை, அதனிடத்துத் தோன்றிய மதநீரை வண்டுகள் மொய்த்த படியே, யானை தன் துணையோடு வாழை அடர்ந்த பகுதிக்கு வந்து துயில் கொள்ளத் தொடங்குகிறது. இச்செய்தியை அகநானூறு குறிப்பிட்டுள்ளார்.

*''முளைவளர் முதல் மூங்கில் முருக்கி*
*கிளையோடு மேய்ந்த கேழ்கிளர் யானை*
*நீர்நசை மருங்கின் நிறம்பார்த்து ஒடுங்கிய*
*பொருமுரண் உழுவை தொலைச்சி கூர்நுனைக்*
*குருதிச் செங்கோட்டு அழிதுளி கழாஅ*
*கல்முகை அடுக்கத்து மென்மெல இயலி''*
*(அகநானூறு - 332)*

இப்பாடலில் யானை தன் கோட்டினைக் கழுவிக் கொண்டு மெல்ல மெல்லச் செல்வதை படம் பிடித்துக் காட்டியுள்ளார் கபிலர். வெற்றியால் யானைக்குப் பெருமிதம் உண்டாவது இயல்பு. வலிமை கொண்ட புலியைத் தாக்கிக் கொன்ற யானைக்குக் களைப்பு ஏற்படுகிறது. யானையின் நடையில் அனைத்தையும் குறிக்கத் துடிக்கிறது கபிலரின் உள்ளம். இதனை எண்ணியே 'மென்மெய இயலி' என்னும் தொடரினைக் கையாளுகிறார். அண்மையில் ஏற்பட்ட வெற்றி, அதன் காரணமாகத் தோன்றிய சோர்வு, பெருமிதம், பெருமிதத்தால் உண்டான மதநீர்ப் பெருக்கு ஆகிய அனைத்தையும் பாடலின் தொடர்கள் உணர்த்துகின்றன.

இதனைப் போன்றே யானை பற்றிய காட்சியைப் பிறிதோர் இடத்தில் அழகுறக் காட்டுகிறார். நனவில் புலியைப் பொருது வென்ற யானையொன்று, கனவில் புலியைக் கண்டு வேங்கையைப் புலியெனக் கருதித் தன் கோட்டால் அதனைச் சிதைத்து விடுகிறது எனப்பாடுகின்றார்.

*''கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு*
*நெடுவரை மருங்கின் துஞ்சும் யானை*
*நனவில் தான் செய்தது மனத்தது ஆகலின்*
*கனவில் கண்டு கதுமென வெரீஇ*
*புதுவதாக மலர்ந்த வேங்கையை'' (கலித்தொகை - 49)*

இதைப் போன்று மற்றொரு பாடலில் மலர்ந்த வேங்கையைப் புலியெனக் கருதி, அஞ்சி மலையின் கண் வளர்ந்த மூங்கில்கள் முரிந்து படுமாறு ஓடுகின்ற ஓர் யானையைப் பற்றியும் கபிலர் தம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

*“வேங்கை தாஅய தேம்பாய தோற்றம்*
*புலி செத்து வெரீஇய புகர்முக வேழம்*
*மழைபடு சிலம்பில் கழைபட பெயரும்”*
*(அகநானூறு - 12)*

இவ்வாறு கபிலரின் பல பாடல்களில் யானைகளின் வாழ்வு படம் பிடித்துக்காட்டப்படுகிறது. யானை மட்டுமல்லாது கிள்ளை, குரங்கு, மஞ்ஞை முதலிய குறிஞ்சி நில உயிரினங்களை ஐங்குறுநூற்றில் சிறப்பித்துக்காட்டியுள்ளார்.

விலங்குகளில் யானையை அடுத்து குரங்குகளின் குறும்புச் செய்கைகளையெல்லாம் கபிலர் அழகுற ஐங்குறுநூற்றில் குரங்குப்பத்தில் அழகுற காட்டியுள்ளார். பலாப் பழத்தினைப் புணையமாகக் கொண்டு குரங்கொன்று மலைச் சாரலில் உள்ள வேற்றூர்க்கண் கரையேறுகின்றது. அவரைக் காய்களைத் தின்ற ஒரு குரங்கு பை சுமக்கின்ற வணிகனைப் போலத் தோற்றமளிக்கிறது. மூங்கிற்கோலின் மீதிருந்த குரங்குக் குட்டி வேறிடத்திற்குத் தாவுகின்ற போது அம்மூங்கிற்கோல் நிமிர்கிறது. மூங்கிற்கோல் நிமிர்கின்ற தோற்றம் மீனைப் பிடித்த தூண்டில் நிமிர்வது போல் உள்ளது. பாறையின் கண் இடையில் இட்டிருந்த முட்டையைக் குரங்கின் குட்டி உருட்டி விளையாடுகின்றது.

கானவர் அம்பிற்குத் தப்ப எண்ணிய ஒரு குரங்கு பற்றிய இத்தகைய செய்திகளையெல்லாம் கபிலர் தம் பாடல்களில் காணலாம். ஐங்குறுநூற்றில் குரங்குப்பத்தில் இடம்பெறும் காட்சிகள் அனைத்தும் கபிலரின் இயல்பான கற்பனையின் வெளிப்பாடாக விளங்குகின்றன.

*“அவரை அருந்த மந்தி பகர்வர்*
*பக்கின் தோன்றும் நாடன் வேண்டின்*
*பசுப்போல் பெண்டிரும் பெறுகுவன்*
*தொல்கேள் ஆகலின் நல்குமால் இவட்கே”*
*(ஐங்குறுநூறு - குரங்குப்பத்து - 271)*

இதன் மூலம் கபிலர் உயிரினங்களின் செயல்பாடுகளை காட்சிபடுத்தியிருக்கும் தன்மையை அறியலாம்.

**இயற்கைப் புனைவுத்திறன்**

குறிஞ்சி நிலத்தில் வாழ்கின்ற ஒவ்வோர் உயிரினத்தையும் கண்டு அழகுற வர்ணிப்பதில் கபிலரின் கவித்திறன் நன்கு புலனாகிறது. குறிஞ்சி நிலத்தில் உள்ள மூங்கிலின் துளையில் காற்றுப் புகுதலால் ஒலி எழுந்து இன்னிசையாகின்றது. அருவி ஓசை முடிவாகின்றது. மானின் குரல் தூம்பு என்னும் இசைக்கருவி போல் ஒலிக்கிறது. வண்டின் ஒலி யாழிசையாகிறது. குரங்குகள் இவற்றைக் கேட்டு மருள்கின்றன. மயில் அவ்வரங்கில் விறலிபோல் ஆடுகிறது.

*“கழை வளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்*
*நனவுப் புகு விறலியின் தோன்றும் நாடன்”*
*(அகநானூறு - 82)*

இப்பாடலில் இயற்கையின் அழகை சொல்லோவியமாகத் தருகிறார் கபிலர்.

மற்றொரு காட்சியாக பிடியினை மேகம் மறைக்க, அதனைக் காணாத களிறு, பிளிறுதலும், காந்தளின் தாது படிதலால் நிறம் வேறுபட்டுத் தோன்றும் தாய்ப் பசுவைக் கண்டு, கன்று மருளுதிலும் கபிலர் காட்டும் குறிஞ்சிக் காட்சிகளாகும்.

*“துஞ்சு பிடி மருங்கின் மஞ்சுபட காணாது*
*பெருங்களிறு பிளிறும் சோலை” (நற்றிணை - 222)*

மற்றொரு அகநானூற்றுப் பாடலில் மலையிலிருந்து ஓடிவரும் அருவியின் ஒலியோடு வண்டின் ஒலி சேர்ந்து, முதுவொலியோடு யாழ்ஒலி சேர்ந்து ஒலிப்பது போல் இம்மென்று ஒலிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

*“வரைகிழி அருவிப் பாட்டொடு பிரசம்*
*முழவுசேர் நரம்பின் இம்மென் இமிரும்”*
*(அகநானூறு - 318)*

இயற்கையைக் கபிலர் காட்டும் திறம் எண்ணி வியக்காமல் இருக்க இயலாது. மழை பொழியும் போது அருவியிலிருந்து கொட்டுகின்ற நீரின் வேகத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் இப்பாடலில் விளக்கியுள்ளார். ஒளிரும் அருவியானது பாய்ந்து வந்து, பெரிய மூங்கிலின் அழகிய தண்டு முறியும் படித் தாக்கி, வளவிய குதிரை மரங்களைச் சாய்த்து சேதத்தை உண்டு பண்ணுவதை இப்பாடலில் காட்சிப்படுத்தியுள்ளார்.

*“பெருமலை மீமிசை முற்றின ஆயின்*
*வாள்இலங்கு அருவிதா அய் நாளை*
*இருவெதிர் அம்கழை ஒசியச் தீண்டி*
*வருவது மாதோ வண்புரி உந்தி” (அகநானூறு - 278)*

திணைப் புனத்தைக் காட்டும் கபிலரின் சிந்தனை மிக சிறப்புடையதாக அமைகிறது. யானை மருப்பிலே கிடத்திய வளைந்த துதிக்கையைப் போன்று தினைக் கதிர்கள் செழித்து வளர்ந்துள்ளன. தினைக்கு யானையின் துதிக்கையை உவமையாக்குகின்றார்.

பாரியின் பறம்புமலை வளமானது என்பதை நற்றிணைப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். தக்க பருவத்தில் இடியுடன் கூடியமழை மிகுதியாக பெய்வதால் பலாப்பழங்கள் அதிகமாக விளைந்தன. அதனால் பறம்பு மலையில் உள்ள மக்கள் மகிழ்ச்சியோடு கள்ளினை பனங்குடையிலிட்டு அருந்தினர். இக்கருத்தினை நற்றிணையில்,

*''பேர் இசை உருமொடு மாரிமுற்றிய*
*பல்குடைக் கள்ளின் வண்மகிழ்ப் பாரி''*
*(நற்றிணை - 253)*

மற்றொரு பாடலில் குறிஞ்சிக்குரிய கருப்பொருளையே உவமையாக கூறுகின்ற திறம் போற்றுதற்குரியது. மகளிரின் செவ்வரி படர்ந்த கண்களுக்குக் குருதி தோய்ந்த அம்பினை ஒப்பிடுகின்றார். வாழை ஈன்ற கூரிய முகைக்கு யானையின் குருதி படிந்த கோட்டினை உவமையாக்குகின்றார். மூங்கிலின் கணுவில் உள்ள தோட்டிற்கு மானின் நுண் செவியினை உவமிக்கின்றார். கொடிச்சியரின் கூந்தல், மயிலின் தோகையினையும், அவர்கள் நடை, மயிலின் நடையினையும் ஒத்து விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சிக் காட்சியில் கபிலர் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் என்பதனை இச்சான்றுகள் விளக்குகின்றன.

*''முருகு உறழ் முன்பொடு கடுஞ்சினம் செருக்கிப்*
*பொருத யானை வெண்கோடு கடுப்ப*
*வாழை ஈன்றவை ஏந்து கொழுமுகை*
*மெல்இயல் மகளிர் ஓதி அன்ன'' (நற்றிணை - 225)*

இப்பாடலில் கபிலரின் உவமை நயம் வெளிப்படுகிறது. மகளிரின் கண்களுக்கு அம்பினையும், வாழையின் முகைக்கு யானையின் கோட்டினையும், மூங்கில் கணுவிற்கு மானின் செவியினையும் உவமையாக கூறுகிறார்.

இதன் வாயிலாக கபிலர் இயற்கையைப் பாடிய புலவர் என்பதை அறியலாம். திளைத்தாட அருவியும், களைத்தாடச் சுனையும், பசியாறக் கனியும், தெவிட்டாத தேறலும் கொண்ட குறிஞ்சி நிலம் கபிலரது உள்ளத்தைக் கவர்ந்து கவிபாடத் தூண்டியது எனலாம். எனவே, ''கருதும் குறிஞ்சிக் கபிலர்'' என்னும் புகழ்மொழிக்கு அவர் உரியவராகின்றார் என்பதை இதன் வழி அறியலாம்.

குறிஞ்சித்திணைப் பாடல்களை மிகுதியாகப் பாடிய புலவர்களில் கபிலர் முதன்மையானவர் என்பதை மேற்கூறிய சான்றுகள் மூலம் அறியலாம். இயற்கை அழகைத் தோற்றுவிப்பதில் மலையை விட வேறொன்றாலும் முடியாது என்பதை இவர் பாடல்களின் வழி அறியலாம். மலையைக் கண்டால் வேறொன்றையும் பார்க்க முடியாதவாறு கவர்ந்திழுக்கும் ஆற்றல் மலைக்கு இருக்கிறது என்பதை கபிலரின் அனுபவத்தின் வெளிப்பாடு மூலம் அறியலாம். மலையின் அழகு மட்டுமல்லாது மலையில் வாழும் பறவைகள், விலங்குகளின் செயல்பாடுகளையும் கவினுற பறவைகள், விலங்குகளின் செயல்பாடுகளையும் கவினுற காட்சிப்படுத்தியுள்ளார். பண்டையத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொண்டனர் என்ற கருத்திற்கு இணங்க கபிலரின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தே காணப்படுகின்றது. இயற்கையின் அழகை தான் மட்டும் அனுபவித்ததோடு விட்டுவிடலாம். தன் அனுபவத்தை பிறருக்கும் அழகு பட கூறியுள்ள பாங்கு வியக்கத்தக்கதாக அமைந்துள்ளது. 'குறிஞ்சிக் கபிலர்' என்பதற்கு முழுமையாக உரியவராகின்றார் என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாம்.

# தொல்காப்பியர் காலச் சமூக அமைப்பு

**ஜெ. கோபிகிருஷ்ணா**

*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*கொங்கு கலை அறிவியல் கல்லூரி,*
*கரூர் - 6.*

**முன்னுரை:**

தொல்காப்பியர் காலம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் அறிஞர்களிடையே தோன்றினாலும் கிட்டதட்ட 5000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்பது பலரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. இருப்பினும் தமிழிலே இன்றுள்ள நூல்களில் தொல்காப்பியந்தான் பழமையான நூலாக உள்ளது. தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் மக்களிடையே உயர்வு தாழ்வு காணப்படவில்லை. ஆனால், அக்கால கட்ட சமூக அமைப்பு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நான்கு பிரிவுகளைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றது.

**சாதிப்பிரிவு**

சாதி என்பது தமிழ்ச் சொல்லன்று வடமொழிச் சொல் ஆகும். இச் சொல்லும் பண்டைக் காலத்தில் மக்களைக் குறிக்க பயன்படுத்தவில்லை. தொல்காப்பியத்தில் சாதி என்ற சொல் வழங்கப்படுகின்றது. ஆனால் இது மக்களைச் சுட்டவில்லை.

*''நீர் வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய''* (தொ.பொ.அக.40)

*''நீர் வாழ் சாதியுள் நந்தும் ஒன்றும்''* (தொ.பொ.அக.60)

என்பன தண்ணீரில் வாழும் உயிரினங்களை மட்டுமே குறிக்கின்றது. பிற்காலத்தில் சாதி என்ற சொல் மக்களைச் சுட்ட பயன்படுத்தப்பட்டது.

பழைய நூல்களில் நால்வகைச் சாதிகள் காணப்படுகின்றன. தமிழ் நூல்களும் இந்நால் வகைப் பிரிவுகளை எடுத்துரைக்கின்றன. சாதிப்பிரிவு தொல்காப்பிய காலத்தில் பிறப்பில் வேற்றுமையை காட்டவில்லை. அது தொழில் காரணமான வகுப்புப் பிரிவையே காட்டுகின்றது. பிற்காலத்தில் தான் அவை மக்களிடையே உயர்வு, தாழ்வுகளை புகுத்தியிருக்க வேண்டும்.

தொல்காப்பிய காலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் போன்றோர் தொழில்கள் பற்றியும், அவர்தம் கடமைகள் குறித்தும் குறிப்பிடுகின்றது.

**அந்தணர்:**

முப்புரி நூல், நீர்க்கரகம், முக்கோல், ஆசனம் இவை அந்தணர்க்குரியவை.

*''நூலே கரகம் முக்கோல் மணையே*
*ஆயங்காலை அந்தணர்குரிய''* *(தொல்.பொ.மர.66)*

அரசர்க்கு ஆலோசனை கூறுவது. நாட்டு மக்களுக்கு நல்லுரை வழங்குவது மக்களின் நல்வாழ்வுக்காகக் கடவுளரை வேண்டித் தவங்கிடப்பது இவைகளும் அந்தணர் கடமை. அந்தணர்கள் அரசு செய்வதற்கும் உரியவர்கள்.

*''அந்த ணாளர்க்கு அரசுவரை வின்றே''*
*(தொ.பொ.மர. 80)*

அறிவு ஆராய்ச்சி, நல்லொழுக்கம் தந்தநலந் துறந்த தன்மை இவைகளை உடையவர்களெல்லாம் அந்தணர் என்று அழைக்கப்பட்டனர்.

அந்தணர், ஐயர், பார்ப்பான் போன்றோர் வெவ்வேறு பிரிவினர் என்ற கருத்தும் அறிஞர்களிடையே நிலவுகின்றது. இருப்பினும் தொல்காப்பியர் கால அந்தணர் ஆரியரல்லாமல் தமிழர்களேயாவர்.

**அரசர்:**

ஆயுதமும், கொடியும், குடையும், முரச வாத்தியமும், சிறந்த நடையுடைய குதிரையும், யானையும், தேரும், மலர்மாலையையும், முடியும், பொருத்தமான வேறுபல பண்டங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட செங்கோலையுடைய அரசர்க்குரியனவாகும்.

*''படையும், கொடையும், குடையும், முரசும்*
*நடைநவில் புரவியும், களிறும், தேரும்,*
*தாரும், முடியும், நேர்வன பிறவும்,*
*தெரிவுகொள் செங்கோல் அரசர்க்கு உரிய''*
*(தொ.பொ.மர.67)*

வேட்டையாடுவதில் வல்லமை, பகைவர்களை எதிர்த்துப் போர் செய்து அவர்களை முறியடித்து வெற்றிபெறும் வீரத்தன்மை, தந்நலந் துறந்து என்றும் பொதுமக்களின் நல்வாழ்வுக்காகப் பொறுமையுடன் உழைக்கும் உறுதியுள்ளம். நடுவுநிலைமை தவறாத நல்லொழுக்க முடைமை. நீதி வழங்கும் நேர்மைக் குணம் இவைபோன்ற உயர்ந்த குணமுடையவர்களே பண்டைத் தமிழர்களால் அரசர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தெரிவுகொள் என்ற சொற்றொடர் இவ்வுண்மையை நமக்கு உணர்த்துகின்றது.

**வணிகர்:**

வணிக செய்யும் வாழ்க்கையை வைசியன் பெறுவான்.

*''வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை''*
*(தொ.பா.மர. 73)*

இதனால் வியாபாரம் செய்யும் தொழிலே வைசியனுடைய தொழில் என்பதை அறியலாம். வியாபாரத்தோடு விளைவிக்கும் தொழிலும் வைசியனுக்கு உண்டு.

*''மெய்தெரி வகையின் எண்வகை உணவின்,*
*செய்தியும் வரையார் அப்பா லான''*
*(தொ.பொ.மர. 74)*

உண்மை தெரிந்து வகையினால் எட்டு வகையான உணவுத் தானியங்களை உண்டாக்கும் செய்தியும் வைசியனுக்கு உண்டு.

*''கண்ணியும் தாரும் எண்ணினர் ஆண்டே''*
*(தொ.பொ.மர. 75)*

என்றதனால், வைசியர்களுக்கும் அரசர்களைப்போல மலரும் மாலையுங்கூட உண்டு என்று உணரலாம்.

*''வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது,*
*இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி''*
*(தொ.பொ.மர.76)*

அரசர்கள் கொடுத்தால் படைக்கலமும், மாலையும் வேளாளர் பெறக்கூடிய பொருள்கள் என்று சொல்லுவார்கள்.

*''வேந்துவிடு தொழிலிற் படையும் கண்ணியும்,*
*வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே''*
*(தொ.பொ.மர.77)*

ஆகவே வேளாளர்கள் உழு தொழிலோடு படைக்கலம் பெற்று மாலை பூண்டு போர் வீரர்களாக ஊழியஞ் செய்வதற்கும் உரியவர்களாயிருந்தனர். அவர்கள் படைக்கலப் பயிற்சி பெற்றுப் போர் வீரர்களாவது, வேந்தர்களின் விருப்பத்தைப் பொறுத்ததாகும்.

**பிறவகுப்பினர்:**

அடிமைகள், தொழிலே வல்லவர்கள், நடனமாடுவோர். யாழ் வாசிப்போர், நாடகம் ஆடுவோர் ஆகிய வகுப்பினரும் தமிழ் நாட்டில் இருந்தனர்.

*''அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்''*

*(தொ.பொ.அக.25)*

என்பன போன்றே பகுதிகளும் இவ்வுண்மையைக் காட்டுகின்றன. இவைகளைத் தவிர நால்வகை நிலங்களிலே வாழ்ந்த வேறு பல மக்களும் இருந்தனர்.

**முடிவுரை:**

தொல்காப்பியர் காலத்திலிருந்து இத்தகைய வகுப்புப் பிரிவுகள் பிறப்பால் ஏற்பட்டவை அல்ல. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை காரணமாகவே மக்களுக்கு பல பிரிவுகள் ஏற்பட்டிருந்தன. சாதி என்னும் சொல் தொல்காப்பியத்திலே காணப்படுகின்றது. ஆனால் அச்சொல் ஓரிடத்திலேனும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்படவில்லை.

பிறப்பினால் உயர்வு தாழ்வுண்டு என்ற கொள்கை தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை. ஒழுக்கம், தொழில் முதலியவைகள் காரணமாகவே வகுப்புப் பிரிவுகள் தோன்றின. இவைகள் தமிழகத்திலே தாமே தோன்றியனவேயன்றி யாராலும் புகுத்தப்பட்டவையல்ல. இவ்வுண்மைகளை மேலே கூறியவற்றால் காணலாம்.

**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

தொ – தொல்காப்பியம்
பொ – பொருளதிகாரம்
மர – மரபியல்
அக – அகத்திணையியல்
புறத் – புறத்திணையியல்

**துணைமை நூல்கள்**

1. சாமி சிதம்பரனார் – பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்.
2. சாமி சிதம்பரனார் – தொல்காப்பியத் தமிழர்.
3. மறைமலையடிகள் – வேளாளர் நாகரிகம்.

ஞஞஞஞ

# நாலடியாரில் வினைப்பயன் நிலைப்பாடு

**ந.இராசேந்திரன்,**

*உதவிப்பேராசிரியர்,*
*மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,*
*சென்னை – 600 006.*

இருவினைப்பயன் செய்வதவரைத் தப்பாது வந்தடையும், வினைப்பயன் வந்தடையுங்கால் சான்றோராயினும் அதை அனுபவித்தே ஆக வேண்டும். தாய்ப்பசுவைக் கன்று அடையாளம் கண்டு அதனை வந்தடைவது போன்று ஒருவன் செய்த வினையாயின் பயனும் அவனை விடாது வந்தடையும் என்கிறது நாலடி.

*''பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று*
*வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் தொல்லைப்*
*பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த*
*கிழவனை நாடிக் கொளற்கு''        நாலடி – 10*

வராத மழையை வருவிக்கவோ, அதிக மழை பொழிந்தால் அதைத் தடுக்கவோ இயலாத தன்மை உடையன வினைப்பயன். வினையின் பயனால் வரும் நன்மை தீமைகளைச் சான்றோர் ஆயினும் அனுபவித்தே ஆகவேண்டும் தடுத்து நிறுத்திவட முடியாது என்கிறது நாலடி.

*''உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா*
*பெறற்பா லனையவும் அன்னவாம்'' நாலடி – 104*

அறத்தினின்று விலகினால் அரசனுக்கும் வினைப்பயன் விலக்கல்ல என்று சிலப்பதிகாரம் சுட்டியதை இவ்விடம் நாம் எண்ணலாம். ஒருவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தான் செய்த முன்வினைப் பயனால் வரத்தக்கவை வராமல் போகாது என்று நாலடி கூறுவதிலிருந்து வினையின் பயன் தவறாது தானே வரும் என்பது தெளிவு.

*''வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால*
*தீண்டா விடுத லரிது''        நாலடி – 109*

ஒருவருடைய கரு அமைந்த காலத்தில் உண்டான ஊழ்வினைகள் குறையாது; வளராது; முறைமாறி வராது. துன்பம் வந்த காலத்தில் ஊன்று கோலாக மாட்டா. எவையும் வரவேண்டிய காலத்தில் வந்தே தீரும். ஆகையால் மரண காலத்தில் வீணாக வருந்த வேண்டியதில்லை.

*''சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா*
*உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே யாகும்*

*சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்*
*இறுகாலத் தென்னை பரிவு''          நாலடி – 110*

இவ்விடம் வினையின் பயனானது ஒன்றன்பின் ஒன்றாக முறை மாறாமல் வரும். அது பிறக்கும் போதே உறுதி செய்யப்பட்டது என்கிறது நாலடி. மேலும், நல்வினையின் பயன் தீர்ந்தால் தீவினையும், தீவினையின் பயன் தீர்ந்தால் நல்வினையும் ஒருவனைச் சென்று சேரும் எனக் கூறியிருப்பதையும் நாம் காணமுடிகிறது.

*''விளக்குப் புக இருள் மாய்ந்தாங் கொருவன்*
*தவத்தின் முன் நில்லாதாம் பாவம் – விளக்கு நெய்*
*தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை*
*தீர்விடத்து நிற்குமாம் தீது''          நாலடி – 51*

வாழ்க்கையில் பெறும் இன்ப நுகர்வு என்பதும் அவரவர் செய்கையிலிருந்து அமையும் பயன்தான் என்கிறது நாலடி.

*''வளம்பட வேண்டாதார் யார் யாருமில்லை*
*அளந்தன போகம் அவரவ ராற்றான்'' நாலடி – 103*

இவ்விடம்,

*''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்''          குறள் – 505*
என்று திருக்குறளும்,

*''நிறைவழிப்படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப்படூஉம்''          புறம் – 182*

என்று புறநானூறும் கூறியிருப்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கன.

இறந்துபட்டாலும் உடன் வருவது வினையின் பயன் அன்றி வேறொன்றும் இல்லை. நல்வினையாயினும் தீவினையாயினும் எப்பிறவியிலும் உடன் வரும் என்கிறது பாடல்.

*''தாஞ்செய் வினையல்லால் தம்மொடு செல்வது மற்*
*றியாங்கனும் தேரின் பிறிதில்லை''          நாலடி – 120*

அறிவுடையவர் வறுமையில் இருக்க, கல்லாத மூடர் செல்வத்தில் செழித்திருப்பது அவர்களின் முன்வினைப் பயனால்தான் உண்டானதென்று அறிந்து சான்றோர் அறிவிலிகளை மதியார் என்று கூறுவதில், வினைப்பயன் பிறவிதோறும் தொடரும் என்பதும் செல்வத்திற்க்குக் காரணமும் வினைப்பயன்தான் என்பதும் பாடல் வழி தெளிவாகிறது.

*''நல்லார் நயவர் இருப்ப நயமிலாக்*
*கல்லார்க் கொன்றாகிய காரணம் – தொல்லை*
*வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்*
*நினைப்ப வருவதொன் றில்''          நாலடி – 265*

நான் மணிக்கடிகையும் உலகத்து மக்கள் தங்கள் வினையினால் சிறப்புப் பெற்று விளங்குவர் என வினைப்பயன் குறித்துப் பேசுவதை இவ்விடம் எண்ணலாம்.

*''வினையினான் நந்துவர், மக்களும் தம்தம்*
*நனையினான் நந்தும் நறா''          நான்மணி – 47*

ஒருவர் எவ்வளவுதான் முயன்று செலவழித்தாலும் சேர்த்து வைத்தாலும் வினை தன் பயனைத் தரத்துவங்கினால் செல்வம் வளர்வதையும் நீங்கிச் செல்வதையும் தடுக்க இயலாது என்று வினைப்பயன் வலிமையைப் பறைசாற்றுகிறது நாலடி.

*''நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்*
*கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால்ஈண்டும்*
*இடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்*
*விடுக்கும் வினையுலந்தக் கால்''          நாலடி 93*

செல்வம் மட்டுமின்றி புகழும் வினையைச் சேர்ந்தே நிற்பதும் நீங்குவதும் ஆகும் என்றும் நாலடி கூறுகிறது.

*''திணைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்*
*பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்*
*நினைப்ப கிடந்த தெவனுண்டாம் மேலை*
*வினைப்பய னல்லாற் பிற''          நாலடி –105*

எல்லாம் அறிந்தவராய் இருந்தும் ஒருவர் பழியுண்டாகும்படியான செயல்களைச் செய்வதற்கு அவருடைய வினையே காரணம் என்கிறது பாடல்.

*''அறியாரும் அல்லர் அறிவ தறிந்தும்*
*பழியோடு பட்டவை செய்தல் – வளியோடி*
*நெய்தல் நறவுயிர்க்கும் நீள்கடல் தன்சேர்ப்ப*
*செய்த வினையான் வரும்''          நாலடி – 108*

அகநானூறு சான்றோர் பழியுடன் கூடிய செயல்களைச் செய்யார் என்கிறது.

*''சான்றோர் பழியோடு வரூஉம் இன்பம் வெஃகார்''*
*அகம் - 112*

ஆயினும் அனைத்தும் அறிந்தும் பழிபெறுவதற்கான செயல்களைச் செய்யக் காரணம் வினைப்பயன்தான் என்கிறது நாலடி. இதன்வழி செய்த வினை நம்மை விட்டு விலகாது தன் பயனைத் தப்பாமல் தரும் என்பது அறிய வருகிறது.

**தீவினையின் தாக்கம்**

தீவினை தன் பயனைத்தரும் நேரம் வந்தால் பல படைகளுக்குத் தலைமை தாங்கிச் சென்ற அரசரும் அந்நிலையிலிருந்து தாழ்ந்து, மனைவியைப் பிற அரசன் கவர்ந்து கொள்ள வறுமை நிலைக்குத் தள்ளப்படுவர் என்கிறது நாலடி. இவ்விடம் தோல்வியடைந்த அரசனது மனைவியினைப் பிற அரசர்கள் கவர்ந்து கொள்வர் என்ற செய்தியினையும் நாம் அறிய முடிகிறது.

*''யாரன யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்*
*சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை*
*வினை உவப்ப வேறாகி வீழவர்தாம் கொண்ட*
*மனையாளை மாற்றார் கொள''* நாலடி - 3

சிற்றின்ப ஆசையினால் ஒருவன் பிறர் மனைவியினை விரும்பும் தீவினையினைச் செய்தால் நரகவேதனை அடையும் நிலையை எய்துவர். அரசன் கொலைத் தண்டனை அளிக்கும் நிலையும் வரலாம் என்கிறது நாலடி.

*''அச்சம் பெரிதால் அதற்கின்பம் சிற்றளவால்*
*நிச்சம் நிலையுங்காற் கோக்கொலையால் - நிச்சலும்*
*கும்பிக்கே கூர்ந்த வினையால் பிறன்தாரம்*
*நம்பற்க நாணுடை யார்''* நாலடி - 81

பெரியோர், பிறர் தன்னை இகழ்ந்தால் இவ்வாறு இவர் இகழ்ந்த தீவினைக்கு மறுமையில் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர் என்றெண்ணி இரக்கம் கொள்வர் எனக் கூறும் நாலடி மூலம் பெரியோரை இகழ்தல் தீவினையாதலால் அத்தீவினைக்கு ஆட்படாதிருக்க வேண்டும் என்பது அறிய வருகிறது.

*''தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற்*
*றெம்மை கிகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை*
*எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று*
*பரிவதம் சான்றோர் கடன்''* நாலடி - 58

தீவினைகளுக்கெல்லாம் தலையாயதான கொன்றுண்ணும் தீவினைக்கு அஞ்ச வேண்டும் என்பதனை நாலடி தீவினையச்சம் என்ற இயலில் முதல் கருத்தாகக் கூறியுள்ளது.

*''துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்கலா*
*மக்கள் பிணத்த சுடுகாடு - கொக்க*
*விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே - புலன்கெட்ட*
*புல்லறி வாளர் வயிறு''* நாலடி - 121

சிற்றுயிர்களின் சுடுகாடாய் மனிதவயிறு ஆகாமலிருக்க கொன்றுண்ணும் தீவினைக்கு அஞ்ச வேண்டும் என்கிறது நாலடி. முற்பிறவியில் நண்டின் ஊனை விரும்பி அதன் கால்களை ஒடித்துத் துன்புறுத்தியவர் இப்பிறவியில் கை விரல்கள் அழுகிப் போகும் நிலைக்குத் தள்ளப்படுவர் என்று கூறியும் ஊன் உண்ணுதல் எண்ணுந்தீவினைக்கு அஞ்ச வேண்டுகிறது நாலடி.

*''அக்கே போல் அங்கை யொழிய விரலழுகித்*
*துக்கத் தொழுநோய் எழுபவே அக்கால்*
*அலவனைக் காதலித்துக் கண்முளித்துத் தின்ற*
*பழவினை வந்தடைந்தக் கால்''* நாலடி -123

பிழைப்புக்காகவும், செல்லப் பிராணி என்று கூறியும் சிற்றினங்களைச் சிலர் சிறைப்படுத்தி வைத்திருப்பர். இது தீவினை என்றும், இத்தகைய செயல்களின் விளைவாய்ப் பிறருக்கு அடிமைப்பட்டும், சிறைப்பட்டும் வாழ நேரிடும். ஆதலால், இத்தகைய செயலுக்கு அஞ்சுவீர் என்கிறது நாலடி.

*''இரும்பார்க்குங் காலராய் ஏதிலார்க் காளாய்க்*
*கரும்பார் கழனியுட் சேர்வர் - சுரும்பார்க்கும்*
*காட்டுளாய் வாழுஞ் சிவலும் குறும்பூழும்*
*கூட்டுகளாய்க் கொண்டுவைப் பார்''* நாலடி - 122

பூவை கிளி உள்ளிட்ட சிற்றுயிர்களைத் தன் சுற்றத்திலிருந்து பிரித்துச் சிறை செலுத்துவோர் தன் சுற்றத்தைப் பிரிந்து வாழ்வது உறுதி என்று சீவக சிந்தாமணியும் உரைத்துள்ளது.

*''பூவை கிளி தாகை புணர் அன்னமொடு பன்மா*
*யவையவை தங்கிளையின் நீங்கி அழவாங்கிக்*
*காவல் செய்து வைத்தவர்கள் தங்கிளையின் நீங்கிப்*
*போவர்புகழ் நம்பி இது பொற்பிலது கண்டாய்''*
*சிந்தாமணி 13.277*

இதன் வழி தீவினைகளின் தாக்கம் எத்தகையது என்பது அறியவருகிறது.

**நல்வினை செய்யும் காலம்**

நல்வினையை மூப்பு அடைந்த பின்னரே செய்ய வேண்டும் என்று காத்திருக்காமல் இளமைக் காலத்திலேயே செய்யத் துவங்க வேண்டும். இளமையில் இருப்பவரும் இறந்துபோதல் உண்டு என்பதை உணர்ந்து காலந்தாழ்த்தாமல் உடனே நல்வினையைச் செய்க என்கிறது நாலடி.

*''மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது*
*கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்''*
*நாலடி – 19*

இளமை மட்டுமல்லாது உடம்பும் நிலையில்லாதது. உறுதியான இவ்வுடம்பு முன்பு செய்த நல்வினையினால் பெறப்பட்டது. இவ்வுடம்பு உறுதியாக இருக்கும்பொழுதே நல்வினைகளைச் செய்திட வேண்டும் என்கிறது நாலடி. இவ்விடம் உறுதியான நல்ல உடம்பு வாய்ப்பதற்கும் நல்வினை தேவையாகிறது என்பது உணரப்பட்டது.

*''யாக்கையைப் யாப்புடைத்தாய் பெற்றவர் தாம் பெற்ற*
*யாக்கையா லாய பயன்கொள்க யாக்கை*
*மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே*
*நிலையாது நீத்து விடும்''* *நாலடி – 28*

தோல் பையாகிய உடம்பில் இருந்து, நாம் செய்ய வேண்டிய தொழில்களை முழுமையாகச் செய்து அப்பயனைத் தானே அனுபவிக்கின்ற கூத்தாடியாகிய உயிர் உடலைவிட்டுச் சென்றால் அவ்வுடம்பால் பயன் இல்லை. அதனை என்ன செய்தாலும் எங்கு போட்டாலும் பயன் இல்லை.

*''நார்த் தொடுத்து ஈர்க்கில் ஏன்? நன்று ஆய்ந்து அடக்கில் ஏன்?*
*பார்த்துழிப் பெய்யில் என் பல்லோர் பழிக்கில் என்*
*தோற்பையுள் நின்று தொழில் அறச் செய்து ஊட்டும்*
*கூத்தன் புறப்பட்டக் கால்''* *நாலடி – 26*

செய்யும் வினைகளின் பயனை உயிரே அனுபவிக்கும் என்பதும் நிலையில்லா உடம்பைவிட்டு உயிர் நீங்கும் முன் நல்வினைகளைச் செய்து நற்கதி அடைய வேண்டும் என்பதும் நாலடி வழி இவ்விடம் நாம் அறிய முடிகிறது.

*''புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி*
*இன்னினியே செய்க அறவினை''* *நாலடி – 29*

புல்லின்மீது இருக்கும் பனித்துளி இல்லாமல் ஆவது போன்றது வாழ்க்கை என்பதை அறிந்து இப்பொழுதே நல்வினைகளைச் செய்க என்று நாலடி கூறக் காரணம் உடம்பு நிலையில்லாதது என்பதும் நல்வினையை என்பதும் நல்வினையே உயிருடன் வருவது என்பது அறிந்துமாம். இவ்வாறு நல்வினை குறித்த நிலைப்பாடுகளைத் தெரிவித்துள்ளது நாலடி.

**முடிவுரை**

ஒருவரின் பிறப்புக்குக் காரணம் வினையின் தொடர்பே என்பதும், தீவினையின் தாக்கமும் நல்வினையின் அவசியமும் நாலடியில் தெள்ளிதின் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. இதன்வழி நாம் செய்யும் செயல்களில் தீவினை தவிர்த்து நல்வினை வலியுறுத்தும் நாலடியின் நிலைப்பாட்டை மனதில் நிறுத்த வேண்டியது நமக்கு அவசியம் ஆகிறது.

# கடவுள் முருகனோடு தமிழ் ஒப்பாய்வு

**ஆ.சுரேஷ்**

*உதவிப்பேராசிரியர்,*
*ஸ்ரீ தேவி கலை மற்றும்*
*அறிவியல் கல்லூரி,*
*கிருஷ்ணாபுரம்,*
*பொன்னேரி - 601204.*

**முன்னுரை:**

ஒரு தந்தைக்குத் தனது முதல் குழந்தையின் மிது அதிகப்பற்று இருப்பது இயற்கை. அது போல முருகனுக்குத் தான் ஏற்படுத்திய முதல் மொழியாகிய தமிழின் மீது சற்று விருப்பம் அதிகமாக இருப்பதும் இயற்கை தானே! அதனால் தான், என்னைத் திட்டுவதாய் இருந்தாலும், தமிழில் திட்டுப் பொறுத்துக் கொள்வேன் என்பானாம் முருகன். இதை முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைப்போன் என்று பாடியுள்ளார் அருகிரியார். இவ்வாறு முருகனுக்குத் தமிழின் மீதுள்ள விருப்பத்தையும், அவரின் ஆற்றலையும் வெளிப்படுத்தி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**முருகனோடு தமிழ்**

ஏனையோர் கண்ட கடவுள் உருவங்களைவிட, தமிழர் கண்ட கடவுளான முருகனே பரிபூரணமான பரம்பொருள் உருவம் என்பது யோகிகளின் அனுபவ அறிவாகவும் வெளிப்படுகிறது. அதனால் தான் முருகனுக்கு அவனது இளமைத் தோற்றத்தையும் உடன் கூட்டி இளம்பூரணன் என்று ஒரு பெயரும் வழங்கலாயிற்று.

இவ்வாறு முத்தமிழர் கண்ட கடவுளான முருகனிடம் தமிழர், தமிழ் இலக்கணங்களையும் அழகாகப் பொருத்திக் கண்டது நயந்து, வியந்து போற்றத்தக்கது. முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள ஒப்புமையைக் கீழே அட்டவணையாகக் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

| **முருகன்** | | **தமிழ்** |
|---|---|---|
| 1. பன்னிரண்டு தோள்கள் | - | 12 உயிரெழுத்துக்கள் |
| 2. பதினெட்டுக் கண்கள் | - | 18 மெய்யெழுத்துக்கள் |
| 3. ஆறு தலைகள் | - | வல்லினம், மெல்லினம், இடையினம் |

என இனம் ஒவ்வொன்றிற்கும் எழுத்துக்கள் ஆறு

4. வேலாயுதம் - ஃ என்று ஆயுத எழுத்து (மூன்று புள்ளிகளையும் இணைக்க வேலின் இலைப்பாகம் கிடைக்கும்)

இந்த ஒப்புமையால் முருகனே தமிழ். தமிழே முருகன் என்று காட்டுகிறது. புலவர் புராணப் பாடல் ஒன்று. பாடல் வருமாறு.

*“கண்ணிகர் மெய்யும் சென்னிக் கணநிகர் இனத்தின் கூறும்*

*திண்ணமை தோள்களேபோல் திகழ்தரும் உயிரும் வேறொன்று*
*எண்ணுதற்கரிய தான எஃகமும் இயலில் காட்டும்*
*புண்ணிய முனிக்கோன் செவ்வேள் பொற்பதத்தடிமையாகும்'' -*[2]

''முருகு கள் இளமை நாற்றம் முருகவேள் விழா வனப்பாம் என்று ஓர் தமிழ் நிகண்டு முருகு என்ற சொல்லிற்கு உள்ள ஆறு பொருள்களைக் காட்டுகின்றன.

*''இளமையும் நாற்றமும் கள்ளும் விழவும்*
*முருக வேளும் அழகும் முருகே''*[3]

என்று பிங்கலந்தை நிகண்டும் மேலதை வழி மொழிகிறது.

''முருகு'' என்ற சொல்லிற்கு ஆறு பொருளைக் கூறி, அந்த ஆறு பொருளிலும் பரம் பொருளின் குணங்கள் ஆறினையும் குறிப்புத் தோன்ற அமைத்தது மேலும் போற்றத்தக்கது.

எனவே, முருகு என்ற சொல்லிற்குக் கள், இளமை, இனிமை, மணம், முருகவேள் என்னும் தெய்வம், விழா, வனப்பு என்று ஆறு பொருள்கள் கிடைக்கின்றன.

| | | |
|---|---|---|
| கள் | - | விரம்பிலா இன்பம் உடைமை |
| இளமை | - | வரம்பிலா ஆற்றல் உடைமை |
| நாற்றம் (மணம்) | - | முற்றறிவு உடைமை |
| முருகவேள் | - | இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கல் |
| விழா | - | தன் வயத்தனாதல்(சுதந்திரம்) |
| வனப்பு | - | பேரருள் உடைமை |

இங்கே கள் என்பது தற்காலத்தில் செயற்கையாகப் பனைமரம் அல்லது தென்னை மரத்தில் இரக்கிடும் கள்ளைக் குறிக்காது. இயற்கையாக மலரில் உற்பத்தியாகும் தேனுக்குக் ''கள்'' என்று தமிழில் பெயர் கூறுவர்.

*''கள் கமழ்நெய்தல் ஊதி ஏற்படக்*
*கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்''*[4]

என்ற பாடல் வரிகள் திருமுகாற்றுப்படையில் நெய்தல் மலரில் வந்த தேனை கள் என்று குறிப்பிட்டுள்ளது கண்டு கொள்ள முடிகிறது. தேனின் இனிமை இறைவனது வரம்பிலா இன்பமுடைமையைக் குறித்தது.

**முதல் மொழி**

இந்த உலகில் தோன்றிய முதல் மனிதன் தமிழன் தான் என்று ''புறம்பொருள் வெண்பாமாலை'' என்ற நூலில் அதன் ஆசிரியர் ஐயன் ஆரிதனார் கூறுகிறார் பாடல் வருமாறு,

*''பொய்யகல நாளும் புகழ்விளைத்தல் என் வியப்பாம்!*
*வையகம் போர்த்த வயங்கொலி நீர்-கையகலக்*
*கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு*
*முன் தோன்றி மூத்த குடி''*[5]

இப்பாடலில் பொய்ம்மை நீங்க நாடோறும் கீர்த்தி உண்டாக்குதல் என்ன அதியமாம்? பூமியை மறைத்த தெளிந்த கறங்கும் யுகாந்த வெள்ளம் விட்டு நீங்க, முற்பட மலை தோன்றிப் பூமி தோன்றாத அளவிலே வாளுடனே, எல்லாரிலும் முற்ப மலையிடத்திலே தோன்றிப் பழையதாகிய குடி என்று பெறப்படுகிறது. இதனால், தமிழ்க்குடி உலகில் தோன்றிய முதல் குடி என்பது கூறப்படுகிறது.

**முத்தமிழ்க் கடவுள்**

முருகன் குறிஞ்சி நிலத்திற்கு மட்டும் உரிய தெய்வமல்ல. உலகத்தில் முதல் தோற்றமான மலையில் வைத்துக் காட்டியதால் அவனே முதற்கடவுள் என்பதும், அம்மலையில் இருந்து இறங்கு வந்து கடல் வரை செல்லும் போது வகுக்கப்படும் முல்லை, மருதம், நெய்தல் என்ற நிலங்களிலும் முருக வழிபாடான முதற் தெய்வ வழிபாடே, அந்தந்த நிலத்திற்கேற்ப ஏனைய வழிபாடுகளாகக் கிளைத்தெழுந்தன என்றும், அவனது தோற்றத்தை வடமொழி கந்த புராணம் சரியாகக் காட்டாததுடன் ஆபாசமாகக் காட்டியது என்றும் தமிழ்க் கந்தபுராணம் காட்டிய வரலாறே ஏற்கத்தக்கது என்பது அதன் வழி உணர முடிகிறது.

முருகனின் தோற்றத்தாலும், உருவத்தாலும், துணைவியராலும், வேலாலும், மயிலாலும், சேவலாலும் பரம்பொருளின் அனைத்து இலக்கணங்களும் பொருந்தி வரக் காட்டப்பட்டுள்ளதால், ஒரு குறிப்பிட்ட நிலத்திற்கு மட்டுமே அல்லாமல் பிரபஞ்சம் அனைத்தையும் படைத்து, காத்து, ஒடுக்கும் பரம் பொருள் முருகன் என்பது விளங்கும்.

**முடிவுரை**

முருகனை முத்தமிழ்க் கடவுள் என்பதால், அவன் ஒரு மொழிக்கு மட்டுமே உரியவன் அல்லன். முதலில் தோன்றிய மனிதனாகிய தமிழனின்

நினைவோசையில் இருந்து, இறைவன் எழுத்துக்களைத் தூண்டிவிட முதலில் தோன்றிய மொழியாகிய தமிழ் மொழியில் தானாக்கிய முதல் மொழியில், ஒரு தந்தை மூத்த மகனிடம் அதிக விருப்பம் காட்டுவது போல் தமிழ் மொழியின் மீது முருகன் தனி விருப்பம் உடையவன். இதனால், ஒரு தந்தைக்கு தன்னுடைய பிற பிள்ளைகள் மீது விருப்பமோ, உரிமையோ, தொடர்போ இல்லை என்றாகாது என்பது போல, முருகன் எல்லா மொழிக்கும் உரியவன் என்பதை உணர்ந்து செயல்படுதல் எல்லோர்க்கும் நலம் பயக்கும்.

**அடிக்குறிப்புகள்:**

1. மு.பெ. சத்தியவேல் முருகனார், திருமுறுகாற்றுப்படை, பக்கம் – 69.

2. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பிங்கலந்தை நிகண்டு, பதிப்பு – 1978.

3. திருமுருகாற்றுப்படை, மூலநூல், வரி – 74.

4. திருவாசகம், காந்தனகம் பதிப்பு – 1993, பக்கம் – 22.

5. டாக்டர் உ.வே.சா. உரை, புறப்பொருள் வெண்பாமாலை, பாடல் – 14.

# அகநானூறு - மருதத்திணைப் பாடல்களில் மக்கட்பேறு

**செ.மணிகண்டன்**

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத் துறை,*
*தேசியக் கல்லூரி,*
*திருச்சி – 1.*

சங்க அக இலக்கியங்களில் தலைவன் தலைவி இணைந்து வாழும் இல்வாழ்க்கைக்கு சிறப்பினைத் தருவது மக்கட்பேறு. மணவாழ்க்கையில் எவ்வளவு பொருட்செல்வங்களைப் பெற்று மகிழ்வோடு வாழ்ந்தாலும் மக்கட்செல்வம் இல்லையெனில் அவர்களின் வாழ்வு சிறப்பதில்லை. பெற்றோர்களும், உறவினர்களும் மிகவும் எதிர்பார்ப்பது இல்வாழ்க்கையில் ஒரு பெண் தாய்மை அடைவதைத்தான். சமூகமும் அதைத்தான் எதிர்பார்க்கிறது. மருதநிலத்தில்தான் ஆணும், பெண்ணும் முறையாக குடும்ப வாழ்வினை மேற்கொண்டனர். என்பதை சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அவ்வாறு, அகநானூற்றின் மருதத்திணைப் பாடல்களில் மக்கட்பேறு எந்நிலையில் போற்றப்பட்டுள்ளது என்பதை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**மக்கட்பேற்றினால் பெறும் இன்பம்:**

மழலைச் செல்வத்தால் உண்டாகும் இன்பத்தை வள்ளுவர்,

*''மக்கள் மெய்த்தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்*
*சொற்கேட்டல் இன்பம் செவிக்கு''* (குறள் : 65)

என குறிப்பிடுகிறார்.

*''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோனங என கேட்ட தாய்''* (குறள்: 69)

என மக்கட்பேறால் கிடைக்கப்பெறும் இன்பத்தை வள்ளுவர் குறிப்பிடுகிறார். தொல்காப்பியமும் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

*''காமம் சான்ற கடைக் கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''* (தொல். 1138)

என்ற நூற்பா துறவறத்திற்கு இல்லறத்தில் மக்களோடு வாழ்ந்த வாழ்க்கையே பயனாக அமைகிறது என்று உணர்த்துகிறது.

எல்லா வளங்களையும் உடைய செல்வவேந்திரராக இருந்தாலும் மக்கட்பேறு இல்லாத வாழ்க்கை பயனற்றதாக முடியும் என்ற கருத்தை.

*''படைப்புப் பலபடைத்துப் பலரோடு உண்ணும்*
*உடைப்பொருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்*
*குறுகுறு நடந்து சிறுகை நீட்டி*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்*
*மயக்குறு மக்களை இல்லோர்க்குப்*
*பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே (புறம் : 188)*

என்று கூறும் புறநானூற்றுப் பாடல் ஈண்டு நோக்கத்தக்கது.

**தளர் நடைப் புதல்வன்:**

தலைவன் தன் இல்லத்திலிருந்து பரத்தையின் இல்லத்திற்குப் புறப்படுகிறான். தோரோடு தேரோட்டியும் தயார் நிலையில் இருக்கிறான். தேரில் ஏறிப் புறப்படுகிறான். தலைவன், அப்போது வீட்டில் இருந்து புதல்வன் தந்தையைக் காண தளர் நடையிட்டு ஓடி வருகிறான். தன் புதல்வன் வருவதைக் கண்டுத் தேரை நிறுத்தச் சொல்கிறான் தலைவன். தேரை விட்டு கீழே இறங்கி தளர் நடையிட்டு ஓடி வரும் தன் புதல்வனை வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொள்கிறான். அன்று தான் பரத்தை வீட்டுக்கு செல்லவிருந்த பயணத்தை ரத்து செய்து தோரேட்டியை வீட்டிற்கு அனுப்பிவிடுகிறான். இந்நிகழ்வை தோழியிடம் கூறுகிறாள் தலைவி.

*''இம்மை உலகத்து இசையொடும் விளங்கி*
*மறுமை உலகமும் மறுவின்று எய்துப,*
*செறுநரும் விழையும் செயிர்நீர் எனப்*
*பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்*
*வாயே யாகுதல் வாய்த்தனம்'' (அகம் : 66)*

இப்பாடலடிகள் பிள்ளையில்லோர்க்குப் புண்ணியலோகம் இல்லை என்ற பழமொழியை நினைவுட்டுவதைக் காணமுடிகிறது.

*''நிரைதார் மார்பன் நெடுநல் ஒருத்தியொடு*
*வதுவை அயர்தல் வேண்டி புதுவதின்*
*இயன்ற அணியன் இத்தெரு இறப்போன்*
*மாண்தொழில் மாமணி கறங்க கடைகழிந்து*
*காண்டல் விருப்பொடு தளர்பு தளர்பு ஓடும்*
*பூங்கண் புதல்வனை நோக்கி நெடுந்தேர்*
*தூங்குமதி வலவ! என்று இழிந்தனன் தாங்காது*
*மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்*
*புல்லி பெரும! செய் இனி அகத்து எனக்*
*கொடுப்போர்க்கு ஒல்லான் கலுழ்தலின் தடுத்த*
*மாநிதிக் கிழவனும் போன்ம் என மகனொடு*
*தானே புகுந்தந்தோனே'' (அகம்.66)*

எனக் கூறி மகிழ்கிறாள் தலைவி.

பல நாட்களாக தலைவி சொல்லி கேட்காத தலைவன் புதல்வனின் தளிர்நடையில் நெஞ்சைப் பறிகொடுத்து இல்லத்தில் தங்கினான் என்பதை இப்பாடலால் அறிய முடிகிறது.

**ஊடல் தணித்த புதல்வன்:**

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் மீது ஊடல் கொண்டிருந்த தலைவி தன் புதல்வனால் ஊடல் தணிக்கப் பெறுகிறாள். என்ற கருத்தை

*''கண்டிசின் பாண! பண்பு உடைத்து அம்ம*
*மாலை விரிந்த பசுவெண் நிலவின்*
*குறுங்காற் கட்டில் நறும்பூஞ் சேக்கை*
*பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ,*
*புதல்வற் தழீஇயினன் விறவலன்*
*புதல்வன் தாய்அவன் புறம்கவைஇ யினளே''*
*(குறுந்.359)*

எனும் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகிறது.

தலைவியின் ஊடலை அறிந்த தலைவன் பேசாமல் வீட்டுக்குள் புகுந்தான். அவன் கட்டிலில் உறங்கும் தன் புதல்வனை அணைத்துக்கொண்டு படுத்து விட்டான். அதைக் கண்ட மனைவி, தானும் கட்டிலில் ஏறித் தன் கணவனுடை முதுகுப் புறத்தை அணைத்துக் கொண்டு படுத்து விட்டாள். இந்நிலையோடு இவர்களின் பிணக்குத் தீர்ந்து விட்டது.

எனவே, கணவன் மனைவிக்குள் ஒற்றுமை நிலவப் புத்திரப் பேறு ஒரு முக்கிய பங்கினைப் பெறுகிறது என்ற கருத்து இப்பாடலில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

**பரத்தைக்குப் பெருமை சேர்த்த புதல்வன்:**

தேரோடும் வீதியில், குற்றமற்ற பிஞ்சுக்கைகளையும், மழலை மொழி பேசும் இனிய சொற்களையும் உடைய, யாவரும் விரும்பும் பொன்மாலை அணிந்த அழகோடு வீட்டை விட்டு வீதியில் தனியாக வந்து நிற்கிறான். அவன் நிற்பதைப் பார்த்த அழகிய பெண்ணொருத்தி அவன் அருகிலே வருகிறாள். சுற்றுமுற்றும் பார்க்கிறாள் யாரும் பார்க்கவில்லை.

உடனே அச்சிறுவனை வாரி எடுத்து தன் மார்போடு கொஞ்சிகிறாள். மகனை வெளியே காண வந்த தாய் இக்காட்சியைப் பார்க்கிறாள். அப்பெண் புதல்வனின் தாயைக் கண்டதும் நாணப்பட்டு நிற்கிறாள். இதை கவனித்த தாய்.

*''மாசுஇல் குறுமகள் எவன்பே துற்றனை?*
*நீயும் தாயை இவற்கு?'' (அகம்: 16)*
என்கிறாள் புதல்வனின் தாய்.

தன் புதல்வனை வாரி அணைத்தவள் பரத்தை. அவளை பார்த்து, குற்றமற்ற இளம்பெண்ணே! ஏன் அச்சப்படுகிறாய்? நீயும் இவனுக்கு தாய்தான் என தலைவி கூறுவதை இங்கு காண்கிறோம். அதுமட்டுமன்று அவளை தெய்வம் என போற்றுகிறாள்.

*''வானத்து அணங்கு அருங்கடவுள் அன்னோன்*
*நின்மகன் தாய் ஆதல் புரைவது ஆங்கெனவே''*
என்கிறாள்.

இங்கு பரத்தையை தன் மகனுக்கு மற்றொரு தாயாக ஏற்றுக் கொள்வதொடு, குற்றமற்றவள், வானத்து வணங்கும் கடவுள் என தலைவி கூறுவது ஒழுக்கத்தின் உச்சநிலையைக் காட்டுகிறது.

**சடங்குகளில் தாய்மார்களின் பங்களிப்பு:**

சமுதாயத்தில் அன்றும் இன்றும் சடங்குகள் அனைத்திற்கும் புதல்வனைப் பெற்ற தாய்மார்களே முன்னிலை வகிப்பதைக் காணமுடிகிறது.

மருதப் பாடலில் வரும் திருமணச் சடங்கு நிகழ்ச்சியில் இந்நிகழ்வைக் காணமுடிகிறது.

*''புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று*
*வால்இழை மகளிர் நால்வர் கூடிக்*
*கற்பினன் வழாஅ நற்பல உதவிப்*
*பெற்றோற் பெட்கும் பிணையை ஆக! என'' (அகம்.86)*
எனும் பாடலடிகள் நோக்கத்தக்கது.

மகனை ஈன்ற மங்க மகளிர் நால்வர் கூடி நின்று மணமகளை நீ விரும்பும் கணவன் உன்னைப் பெரிதும் விருப்பம் உடையவன் ஆகுக. என தாய்மார்கள் வாழ்த்துவதை இப்பாடல் காட்டுகிறது.

**தொகுப்புரை:**

இல்வாழ்க்கையின் நிறைவாக மக்கட்பேறைதான் சங்ககால மக்கள் பெரும் செல்வமாக கருதியுள்ளனர். ஆக இலக்கியங்களில் மக்கட்பேற்றை முன்னிலைப்படுத்தும் புலவர்கள் ஆண்மகனுக்கே முன்னுரிமை தந்துள்ளனர். இதன் காரணமாக ஆணாதிக்கச் சமுதாயம் அன்றும் இருந்துள்ளதை உணர முடிகிறது. கற்பு வாழ்க்கையில் மக்கட்பேறு இல்லையெனில் பயனற்றதாக எண்ணியுள்ளனர். மக்கட்பேறு தலைவன் தலைவியினிடத்து சடங்குகளிலும், விழாக்களிலும் முன்னிலை வகிப்பதை சங்க அகநானூற்று மருதத்திணைப் பாடல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

# வைரமுத்து கவிதைகளில் கிராமியம்

**பா. சரவணகாந்தி,**

*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத் துறை,*
*தேசியக் கல்லூரி,*
*திருச்சி – 1.*

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் பல்வேறு பரிமாணங்களையும், வடிவ வளர்ச்சியையும் பெற்று வளர்ந்து வருகின்றன. சமுதாயத்தின் மீது ஈடுபாடும், அக்கறையும் கொண்ட படைப்பாளர்கள் சமுதாயத்தில் நிகழும் நிகழ்வுகளை இனம் கண்டு இலக்கியப் படைப்புகளாக உருவாக்கி வருகின்றனர். காலமாற்றத்திற்கேற்ப இலக்கியத்தின் கருப்பொருளும், படைப்பாளுமையும் உருமாறிக் கொண்டே வருகின்றன. நவீன காலகட்டப் படைப்பாளர்களில் தவிர்க்க இயலாத படைப்பாளராக கவிஞர் வைரமுத்து விளங்கிவருவதை மறுக்க முடியாது.

**வேளாண்மை**

காடுகளில் சுற்றித் திரிந்த மனிதன் தன் மனைவி, மக்களைத் தன்னுடன் அழைத்துச் செல்லாமல் நீர் வளமுள்ள ஆற்றோரங்களின் மேட்டுப்பகுதியில் குடியமைத்துச் சென்றான். குழந்தைகளைப் பராமரிக்கும் நேரம் போக பெண்கள் அருகில் விளையும் காய், கனிகள், கிழங்குகள் போன்றவற்றை சேகரிக்க முற்பட்டனர். பயிர்கள் வளர்ந்துவரும் நிலையைக் கண்ட பெண்கள் விதைகளைச் சேகரிக்கவும் பயிரிடவும் கற்றுக்கொண்டனர். இந்நிலை வேளாண்மையே பிற்கால வேளாண்மைக்கு அடித்தளமாக விளங்கியது. வேளாண்மைமுறை நம் நாட்டில் தோன்றிய விதத்தினை க.ப.அறவாணன் பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார்.

''மேடு பள்ளத்தில், காடு, ஆறுகளில் அலைந்து திரிந்து நடக்க இயலா மென்மை உடல்நலம் வாய்ந்த பெண்கள் கூட்டம் கருவுறும் காலங்களிலும், மாதவிடாய் காலங்களிலும் அலைந்து திரிய முடியாமல் மிகுதியும் துன்பப்பட்டிருக்க வேண்டும். இந்தத் துன்பத்திலிருந்து அவர்களை விடுவித்தது நில வேளாண்மை'' என்ற கருத்து வேளாண்மை தோன்றிய நிலையினை எடுத்துக் காட்டுகின்றது.

சங்க கால மக்களின் வாழ்வியல் நிலைகளை ஓவியம்போல் படம்பிடித்துக் காட்டும் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகையில் வேளாண்மையெனும் சொல் இடம்பெறுவதை அறியலாம்.

*''தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கு, ஒருநாள்*
*கேளான் ஆகாமை இல்லை அவற் கண்டு*
*வேளாண்மை செய்தன கண்''*

இவ்வாறாகச் சங்ககால இலக்கியங்களில் வேளாண்மையும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன.

விவசாயிகள் சேற்றில் கால்களை வைத்தால் தான் நமக்கு சோறு கிடைக்கும் என்பார்கள். வசதி படைத்தவர்களுக்கு பணம் இருந்தும் கொடுப்பதற்கு மனம் இல்லை. விவசாயிகளுக்கு கொடுப்பதற்கு மனம் இருந்தும் அவர்களுக்கு பணம் இல்லை. இந்த காரணத்தினால் ஏழை விவசாயிகள் விதை நெல்லைக் கூட விலைக்கு வாங்கும் அவல நிலை காணப்படுகிறது என்பதை வைரமுத்து தன் கவிதை வரிகளில்

*''கால் மூட்ட வெதச்சோளம்*
*கடனாகத் தா தாயி*
*கால் மூட்ட கடனுக்கு*
*முழு மூட்ட அளக்குறண்டி''*

*(பெய்யென பெய்யும் மழை பக்.23)*

எடுத்துக்காட்டுகிறார்.

வேளாண் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் உழவுத்தொழிலுக்கு மழைநீர் உயிரூட்டுகிறது. வானத்தை எதிர்நோக்கியுள்ள மக்களை ஏமாற்றும்போது பல இன்னல்களையும், இழப்புகளையும் வேளாண் மக்கள் எதிர்கொள்கின்றனர். மழையின்றி வாழும் விவசாய மக்களின் வாழ்வியல் துன்பங்களைத் தம் கவிதை வழியே தெளிவுபட எடுத்துக்காட்டுகிறார்.

*''பொட்டு மழை பெய்யலையே*
*புழுதி அடங்கலையே*
*உச்சி நனையலையே*
*உள்காடு உழுகலையே''*

*(பெய்யென பெய்யும் மழை பக். 22)*

என்ற கவிதை அடிப்படையில் மழையின்மையால் உழவுத் தொழில் முற்றிலுமாகத் தடைப்பட்டுள்ளமையை வெளிப்படுத்தியுள்ளார். வேளாண் தொழில் பாதிக்கப்படுவதால் அம்மக்களின் வாழ்வு துன்பம் நிறைந்தவையாக மாறுவதை உணர்த்துகிறார்.

மழை தொடர்ந்து பொழிவதால் அதனால் கிராமப்புற விவசாய மக்களின் வாழ்வாதாரங்கள் முடிவை நோக்கி பயணிக்கும் நிலையும் சுட்டிக்காட்டுகிறார். மழை மிகுதியால் பயிர்த்தொழில் முழுமையாக முடங்கிப் போய் விடுவதைத் தெளிவாக வைரமுத்து எடுத்துக்காட்டுகிறார்.

*''வெதப்புக்கு விதியிருக்கோ*
*வெறகாக விதியிருக்கோ*
*கட்டிவைச்ச வெங்கலப்ப*
*கண்ணீர் வடிச் சிருச்சே''*

*(பெய்யென பெய்யும் மழை பக்: 27)*

என்று மழை மிகுதியின்மையால் கலப்பையே கண்ணீர் வடிப்பதாக எடுத்துக்காட்டுகிறார்.

**வேளாண் கல்வி**

கால்நடை மருத்துவர் கூட அறிந்திராத செய்திகளை மாடுமேய்ப்பவன் தன் அனுபவத்தின் மூலமாகக் கற்றுக்கொண்டு அனுபவ மருத்துவராக சிறந்து விளங்குகிறான். இதனை வைரமுத்து தன் கவிதை வரிகளில்

*''மாட்டுக்கு*
*இடப்பக்கம் இரை வயிறு*
*வலப்பக்கம் நீர் வயிறு*
*நடுப்பல்*
*வயது சொல்லும்*
*மாடு வாங்க வேண்டுமா?*
*கண்டதும்*
*வலக்கால் தூக்கி தலை சொறிந்தால்*
*வாங்கு*
*கண்டதும்*
*சாணமிட்டால் பசுவைக்கொள்*
*நீரிட்டால் எருதுகொள்*
*நெற்றிச்சுழி ஆகாது*
*காளைக்கு நன்று''*

*''செவலை*
*பசுவுக்கு நன்று*
*மயிலை*
*ஈனும் சுபதினம்*
*எருமைக்கு வெள்ளி*
*பசுவுக்கு வியாழன்''*

*(இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, பக் – 88)*

கல்விக் கற்றவர்கள் எல்லாம் அனைத்தும் தெரிந்தவர்கள் அல்ல என்றும், கல்வி கற்காதவர்கள் எல்லாம் அனைத்து விசயத்தையும் அறியாதவர்கள் அல்ல. அனுபவமே சிறந்த கல்வி என்று வேளாண் மக்களின் தரத்தை உயர்த்திக் காட்டுகிறார். இதனை,

*''மாடு மேய்த்தல் கல்வி*
*மாடு மேய்த்தல் தவம்*
*மாடு மேய்த்தல் ஞானம்''*

என்று வைரமுத்து தம் கவிதைகளில் எடுத்துக்காட்டுகிறார்.

**மூடநம்பிக்கை**

கிராமப்புற மக்கள் இன்றளவும் பின்பற்றும் கொள்கையில் மூடநம்பிக்கை முக்கியமானவை. மூடநம்பிக்கை இன்று மக்கள் மனதில் பேய்போல் ஆட்டிவிக்கின்றன. பேய் என்றால் இல்லாததை இருக்கு என்று பொருள்.

*''வேப்ப மர உச்சியில் நின்று*
*பேய் ஒன்று ஆடுதடா என்று*
*விளையாடப் போகும் போது*
*சொல்லி வப்பாங்க - உந்தன்*
*வீரத்தை கொளுந்திலேயே*
*கிள்ளி வப்பாங்க'' (பட்டுக்கோட்டையார்)*

குழந்தையின் செயலை தடுக்கும் வண்ணம் பெரியோர்களால் சொல்லப்படும் பொய்யாகும்.

*''வஞ்சனை பேய்கள் என்பார் இந்த*
*மரத்தின் என்பார்'' (பாரதியார் பாடல்)*

விவசாயி தன் உழைப்பினால் மண்ணை செப்பம் செய்து நிலத்தை வளமாக்கும் மனிதன். தன் உழைப்பின் மேல் நம்பிக்கை வைக்காமல், தெய்வத்தை நம்பும் பழக்கம் இன்றளவும் வழக்கத்தில் கொண்டுள்ளனர் என்பதை வைரமுத்து தன் கவிதை வரிகளில்

*''இல்லாம தீத்துவச்ச*
*எங்காத்தா கோயிலுக்கு*
*வெள்ளாம வெளஞ்சதுக்கு*
*வேலடிச்சு நட்டுரணும்''*
*(கொஞ்சம் தேனீர் நிறைய வானம் பக் - 104)*

என்று விவசாயி மூடநம்பிக்கை வைத்து நல்ல விளைச்சல் தந்தால் உனக்கு வேலடிச்சு நட்டு வைக்கும் பழக்கம் கடைபிடித்து வருவதை சுட்டிக்காட்டுகிறார். இதனையே கவி.கோ.அப்துல் ரகுமான் மூடநம்பிக்கை பற்றி

*''மதியை மதித்தவன்*
*வானத்தில் ஏறி*
*மதியை பதித்து வந்தான் - தலை*
*விதியை நம்பி*
*விழுந்தவனே! நீ*
*விழுந்தே கிடக்கின்றான்'' (சுட்டுவிரல் பக். 122)*

**முடிவுரை**

மண்ணினுடைய மகத்துவத்தையும், மனத்தின் வேதனை தாக்கத்தையும், வேளாண் மக்களின் துயர போக்கையும், மக்களின் மூட நம்பிக்கையையும் வெளிப்படுத்துவதோடு கிராமங்கள் நாடுகளுக்குள்ளே நாடு கடத்தப்படும் நிலையை சுட்டிக்காட்டி இந்தியர் ஒவ்வொருவருக்கும் உனக்குத் தலைநகரம் கிராமம்தான் என்று கவிஞர் வெளிப்படுத்துகிறார்.

# தற்காலக் கவிதைகளில் பெண் தொழிலாளர்கள்

**வீ.தனலெட்சுமி,**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி,*
*அரியலூர்.*

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியங்கள் வாழ்க்கையின் தன்மையையும் போக்கையும் பிரதிபலிக்கின்றன. தற்கால இலக்கியங்கள் எதார்த்த வாழ்க்கையின் எண்ணப்படாத பிரச்சனைகளைப் படிமமாக்குகின்றன. அவ்வகையில் 20-ஆம் நூற்றாண்டு கவிஞர்கள் முழங்குகின்றனர். குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் குடும்ப வாழ்விலும் பணியிடத்திலும் சந்திக்கும் அவிழ்க்க முடியா முடிச்சுகளைத் தம் கவிதைகளில் அடிகோடிட்டுக் காட்டுவதோடு தீர்வும் கூறுகின்றனர். பெண்ணினம், வேலைக்குச் செல்வதற்கான காரணங்கள், இயந்திரமாக உழைத்தல், திருமணம், தாயானபெண், குழந்தைகள் சபதம் எடுத்தல், தீர்வுகள் முதலியவற்றைக் கவிதைகளின் வழியாக இக்கட்டுரை ஆராய்கிறது.

**முன்னுரை:**

பெண்கள் மிகச் சாதாரணமான ஒரு நாள் கூலி வேலை, நிரந்தரப்பணி என்று தேடித் தேடி ஓடி ஓடி பணி வாய்ப்பினை அடைந்து மூச்சடைக்கும் பல சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். உழைக்கும் பெண்கள் இருவகைப்படுவர். 1.படிக்காதவர்கள், 2.படித்து வேலைக்குச் செல்பவர்கள் இவர்களில் படிக்காதவர்கள் அறியாமையாலும் படித்தவர்கள் தம் கல்வியறிவைச் சரியான முறையில் பயன்படுத்தாமையாலும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். அலுவலகங்களில் பணிபுரியும் பெண்ணின் அவலத்தை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண் தொழிலாளர்கள்:**

மக்கள் நலமுடன் வாழப் பொருளாதாரம் இன்றியமையாததாகிறது. பொருளாதாரத் தேடல் காரணமாகவும் சூழல் காரணமாகவும் வேலைவாய்ப்பினைத் தேடி ஓடும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக உள்ளனர். ‘‘ஆணுக்குப் இணையில்லை காணென்று கும்மியடி’’ என்று பாரதி பாடினாலும் பெண்களுக்கான உரிமைகளும், விதிகளும் வேறுவேறாகவே உள்ளன. ‘‘பெண்களின் உரிமைகள்’’ என்ற நூலில் பொருளாதார ரீதியாகப் பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. 1970-1990 ல் ஐ.நா. ‘‘உலகப் பெண்கள்’’ என்ற தலைப்பில் ஓர் ஆய்வை மேற்கொண்டது. அதில் ஆசியா மற்றும் ஆப்ரிக்க நாடுகளில் பெண்கள் சராமாரியாக ஆண்களைக் காட்டிலும் 13 மணிநேரம் அதிகமாக ஒரு வாரத்தில் வேலை செய்வதாகக் கண்டறிந்தது. வீட்டில் பெண்கள் செய்யும் வேலைக்கு மதிப்பும் இல்லை. மாறாக ஒரு மனிதாபிமானமும்

இல்லை என்று இடம் பெற்றிருந்தது. இது பெண்களின் வேலைப் பளுவாகவும், வேலை செய்யும் இடத்தில் அடிமையாக நடத்தப்படுவதையும் தெளிவுபடுத்துகிறது.

**பெண்கள் வேலைக்குச் செல்வதற்கான காரணங்கள்:**

பொருளாதார நெருக்கடியில் தனக்கு விருப்பமில்லாத ஒரு தொழிலை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஆண்களுக்கு ஏற்படுவதைப் போல பெண்களுக்கும் ஏற்படுகிறது. ஆனாலும் அதிகம் பாதிப்படைபவர்கள் பெண்கள். அவள் வேலைக்குச் செல்வதற்கான காரணங்களாகப் பொருளாதாரத் தேவை, குடும்ப வளர்ச்சிக்கு உதவுதல் போன்றவற்றைக் குறிப்பிடுவர்.

**பெண்ணினம்:**

உழைக்கும் பெண்கள் வரிசையில் பெண் கடவுளாக இருந்தாலும் விதிவிலக்குக் கிடையாது. அவளும் தன் அன்றாடக் கடமைகளைச் செய்தாக வேண்டும். இதனை,

*''கலைமகள்*
*வீணையும் கையுமாகத்தான்*
*எப்போதும் இருப்பாளென்று*
*யார் சொன்னது?....*
*... அவனோடு உரையாட*
*அவன் பணியின்*
*நிறை குறை கேட்க*
*வசிப்பிடத் தூய்மை*
*விருந்தோம்பல்*
*சுற்றம் பேணல்*
*சூழல் காத்தல் என்று*
*சுழன்று பணி முடித்த பின்பே*
*கையில் புத்தகத்தோடு*
*கமலாசனத்தில் வந்து*
*வீற்றிருக்கிறாள்....'' (மீண்டும் சரஸ்வதி, ப.146)*

என்ற வரிகளில் பொன்மணி வைரமுத்து சுட்டிக்காட்டுகிறார்.

பெண்கள் வீட்டுச் சூழலிலிருந்து விடுபட்டு வெளியுலகில் சுதந்திரமாக வேலைக்குச் செல்ல முடிவதில்லை. வேலை முடிந்து வீட்டிற்கு வந்தால் கணவனுக்கும், வீட்டு வேலைக்கும் கட்டுப்பட்டவளாய் இருக்கிறாள்கள். மொத்த உழைப்புச் சக்தியில் ஆண் 30%, பெண் 70% உழைப்பையும் வழங்குகின்றனர். பெண்ணுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. பெண் எல்லா இடத்திலும் இப்படிச் சுரண்டப்படுகிறாள். இக்கருத்தினை,

*''ஆலைகளில் அலுவலகங்களில் கழனிகளில்*
*கட்டில்களில் சாலைகளில்*
*இன்னும் சமூகச் சந்திகளில்*
*உன் சாபக்கல்*
*இங்கே தான் கிடக்கிறது'' (கண்ணீர் கண்ணீர் ப.18)*

அரங்கபாரி முன்மொழிவதோடு பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவதையும் எடுத்துரைக்கிறார்.

**இயந்திரமாக உழைத்தல்:**

வாழ்க்கை பயணத்தில் பணத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலை பரிதாபத்திற்குரியது. வீட்டை விட்டுப் புறப்படும்போதே இரும்பாய் மனசு கனத்து விடுகிறது. அலுவலகத்தில் இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு இயல்புக்கு மாறாக வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. இந்நிலையைக் கவிஞர் திலகவதி ''நானே நானாய்'' என்ற தலைப்பில் படிமம்படுத்துகிறார்.

*''ஆபிஸில்*
*எஃகுக் கவசம் அணிந்த மலராக*
*நான் இருப்பேன்*
*இயல்புக்குப் பொருந்தாத*
*ஓர் அதிகாரப் பூச்சுடன் தான்*
*என்னை*
*அங்கு நானே காண்கிறேன்*
*அப்போதும்*
*நான் சில புன்னகைகள் செய்வதுண்டு*
*அவை உதடுகள் புரியும்*
*ஒருவிதப் பயிற்சியே''*

இந்த புன்னகை புரிவது கூட இயல்பாக அல்ல. தான் ஒரு இயந்திரமாக நின்றுவிடக்கூடாது என்ற கவலையில் தான் என்று கூறுகிறார்.

**திருமணம்:**

படித்து வேலை கிடைத்து விட்டால் நல்ல வாழ்க்கைத்துணை கிடைக்கும் என்று மகிழ்ச்சியோடு படித்தார்கள். வேலையும் கிடைத்தது. ஆனால் எதிர்பார்த்த வாழ்க்கைத்துணை தான் கிடைக்கவில்லை. ஒரு சில பெற்றோர்களோ வருமானத்திற்கு ஆசைப்பட்டு பெண்ணின் திருமணத்தைப் பற்றி சிந்திப்பதும் இல்லை.

*''வாசிக்கப்படாத*
*வயதான கவிதை*
*முதிர் கன்னி''*

*(வைரமுத்து - இன்னொரு தேசியகீதம், ப.42)*

இதில், பெண்கள் ஒரு கூட்டிற்குள் சுருங்கி போகும் நத்தைகளாகி திருமணமாகாமல் பிறந்த வீட்டிலேயே காலம் கழிப்பதை வைரமுத்து சுட்டிக்காட்டுகிறார்.

**தாயானப் பெண்:**

பெண் விடுதலை என்று கூறி வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் வாழ்வில் வேலைப் பளுவை அதிகரித்துக் கொண்டதுதான் மிச்சம். அவசர உலகில் வேலைக்குச் செல்லும் பெண்கள் வீட்டில் காலைப்பொழுது பரபரப்பாகக் காட்சியளிக்கும் கோபமும், எரிச்சலும், புலம்பலும் அங்கே இருக்கும். இதனை கவிஞர்,

*''வாழப்போவது எத்தனை காலமடி?*
*அன்பை....*
*இந்தக் கணிப்பொறி யுகத்தில்*
*காணாமல் போட்டு விடாதே*
*குடும்பத்திற்காக நீ*
*உன்னை அழித்து உரமாக்க வேண்டாம்*
*உன் அன்பெனும் அமுதை*
*வரமாக்கினால் போதும்''*

*(பொன்மணி வைரமுத்து கவிதைகள், ப.73)*

இன்னொரு சகோதரிக்கு அலுவலகம் சென்ற பின் குழந்தையை நினைத்தவுடன் பால் சுரக்கிறது. செய்வதறியாது அலுவலகக் கழிவறையில் கண்ணீரோடு குழந்தையின் நினைவையும், சுரக்கும் பாலையும் சிதறவிட்டு வருகிறாள். இதனை,

*''சுரந்த பாலை*
*கறந்து விடுகிறாள்*
*அலுவலகக் கழிவறையில்''*

*(இரவி - நீரில் பூத்த ஹைக்கூ ப.78)*

என்ற வரிகளால் உணரமுடிகிறது.

தாய் வேலைக்குச் சென்று திரும்பி வீடு வரும்வரை குழந்தை பொம்மையாக இருக்கிறது. அவளும் உணர்ச்சியற்ற ஜடமாய் அலுவலகத்தில் இருக்கிறாள். இதனை

*''ஆபிஸ் முடிந்து அம்மா வந்தாள்*
*உயிர்ப்பித்தது*
*பதினெட்டு மாத பொம்மை''*

*(கழகியூரன், இலக்கிய மணிகள் ப.53)*

என்ற வரிகள் குறிக்கின்றன. இதில் தாய் சேய் மனநிலையை உணரமுடிகிறது.

**குழந்தைகள் சபதம் எடுத்தல்:**

தாயின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கி, அழுது பழகிப்போன குழந்தைகள் சபதம் செய்கிறார்கள். வருங்காலத்தில் நாங்கள் மட்டுமே வேலைக்குச் செல்வோம்.

*''நாளைக்கு நான் போவேன்*
*நான் மட்டும் ஆயிஸ் போவேன்*
*வேலைக்குப் போகாத*
*வெறும் மனைவி எனக்குப் போதும்''*

*(பாலா - புதுக்கவிதை ஒரு பார்வை ப.90)*

இதில் தன்னைப் போல் தன் குழந்தையும் நாளைக்கு தாயன்பிற்கு ஏங்கக்கூடாது என்ற இளங்குழந்தையின் எதிர்காலத் திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தீர்வுகள்**

*''எங்களுக்கு வேண்டியது*
*சலுகைகள் அல்ல*
*உரிமைகள்..''*

*(மு.மேத்தா, வெளிச்சம் வெளியே இல்லை ப.48)*

*''அடிமைப் புழுதியை*
*அவ்வப்போது பெய்யும்*
*சில*
*சலுகைத் தூரல்களால்*
*சலவை செய்ய முடியாது''*

*(வைரமுத்து - திருத்தி எழுதிய தீர்ப்புகள் ப.19)*

பெண்கள் தங்களுக்குள் உள்ள தாழ்வு மனப்பான்மையை போக்கிக் கொண்டு உரிமைக்காக போராட வேண்டும் என்றும் சில சலுகைகளைப் பெற்றுக் கொண்டு வாய் மூடியிருக்காமல் முழு உரிமையைப் பெற போராட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

*''பெண் வலிமை*
*நெருப்பினும் சுடும்*
*நெருப்பையும் சுடும்''* *(சுயம் பேசும் கிளி - ப.9)*

என்ற வரிகளில் ஆண்டாள் பிரியதர்ஷினி குறிப்பிடுகிறார்.

**முடிவுகள்:**

■ பெண்ணுக்கென்று ஒரு தனித்தன்மை உண்டு. அது வீட்டிலும், சமுதாயத்திலும் ஆடவரை விஞ்சிக் காரியங்களை முடிக்கும் சாதுர்யம் பெற்றது.

■ ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம். பெண்ணுரிமைக்கான நலவாரியம் மற்றும் பணியிடங்களில் பெண்களுக்குத் தகுந்த பாதுகாப்புப் போன்றவற்றில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

■ ஆணாதிக்கவெறி, பாலியல் வன்முறைகளுக்கு எதிராக சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

■ பெண்கள் தன்முனைப்புடன் செயல்பட்டு, கல்வியறிவைச் சரியான முறையில் பயன்படுத்தினால் நிச்சயம் ‘பெண்மை வெல்லும்’, பெண்களின் தரம் உயரும் என்பதை உணர்வோம்! உழைப்போம்! உய்வோம்!

# தேவாரத்தில் வழிபாட்டு முறைகள்

**ப. ஆனந்த்,**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக் கல்லூரி,*
*அரியலூர் - 621 713.*

**சை**வ சமய மீட்டுருவாக்கப் பணியில் ஈடுபட்டவர்கள் நாயன்மார்கள். அவர்கள் மக்களை ஒன்று திரட்டப் பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தனர். சிவனின் தலங்கள் தோறும் சென்று அவன் பெருமைகளைப் பக்திப் பாசுரங்களாகப் பாடியுள்ளனர். அப்பாடல்களின் தொகுப்பே தேவாரமாகும். மனிதன் இறைவன் மீது காட்டும் அன்பைப் பக்தி எனவும் அப்பக்தியை வெளிப்படுத்தும் முறையினை வழிபாடு எனவும் கூறலாம். நாயன்மார்கள் இறைவனை வழிபடுதலில் நெறிமுறைகளைப் பின்பற்றியுள்ளார். திருஞானசம்பந்தர் கிரியை நெறியும், திருநாவுக்கரசர் சரியை நெறியும், சுந்தரர் யோக நெறியும், வழிபாட்டு முறைகளாகப் பின்பற்றி உள்ளனர். இக்கட்டுரையில் தேவாரத்தில் காணப்படும் வழிபாட்டு முறைகள் பற்றி ஆராயப்படுகிறது.

**வழிபாடு சொற்பொருள் - விளக்கம்**

''வழிபாடு என்பது வணங்குதல், கடம்படல், போற்றுதல், ஏத்துதல், வேண்டுதல், பிராத்தனை முதலிய சொற்களின் பொருளை உணர்த்தும் ஒரு சொல்லாகும்.''[1]

''வழிபாடு என்னும் சொல் வழிபடு என்ற வேர்சொல்லில் இருந்து பிறந்தது என்பர். இதனை வழியிற்செல்லுகை, (Proceeding on the way), பின்பற்றுகை (Following), வணக்கம்(Reverence adoration), பூசனை(Ritual worship) என்பர்''[2]

சமயத்தில் வழிபாடு என்ற சொல் கௌரவம், கண்ணியம், வணக்கம் என்ற பொருட்களைப் பெற்று விளங்குகின்றது. வழிபாடு என்பது மனிதன் இறைவனைத் தன் உள்ளத்து உணர்வால் உணர்ந்து வணங்குதல் எனலாம்.

இது பூவினைக் கொண்டு செய்யப்படும் வழிபாட்டின் அடிப்படையில் தோன்றியதாகும். இவ்வுலகம் முழுவதும் உள்ள மக்கள் ஒன்றுபடவும், கலந்து இன்புறவும் தாம் விரும்பி செய்யப்படும் வழிபாடே 'பூசை' ஆகும். எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைத் தத்தம் வழிபாட்டு தெய்வ வடிவங்களாக அமைத்து மலரினைத் தூவித் துதித்து வழிபடுகின்றனர்.

''தமிழில் இறைவழிபாட்டைக் குறிக்கும் 'பூசை' என்னும் சொல் வடமொழியில் எடுத்தாளப்பட்ட பொழுது, 'பூஜா' என்னும் சொல் 'பூ', 'செய்'

எனும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். பூவினைக் கொண்டு, செய்யப்படும் வழிபாடு (புஷ்பகருமம்) என்பது இச்சொல்லிற்குப் பொருள்''[3] என்பர்.

### வழிபாட்டு முறைகள்

வழிபாட்டு முறைகள் வழிபடுவோரால் செய்யப்படுவது. வாழ்வியல் இன்பங்களைப் பெறுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டது. வழிபாடு மனிதனைப் பக்குவப்படுத்துகிறது. மனதால் இறைவனை நினைந்து வழிபடுதலும், தொண்டு செய்து வழிபடுதலும், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவைகளும் இறைவனை அடைவதற்குரிய படிநிலைகளாகும். வழிபாடு பணிவு, கனிவு, அன்பு, உண்மை, நேர்மை, உழைப்பு, மனத்தூய்மை, மன ஒருமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. வழிபாடு அனைவருக்கும் பொதுநலப் போக்குடையதாய் அமைந்துள்ளது.

உயிர்கள் இறைவனை அடைவதற்கு வழிபாடு செய்கின்றன. அவ்வழிபாடு உயிர்களின் பாதுகாவலுக்கும் கல்வி, அறிவு, பொருள், புகழ் முதலான செல்வங்கள் பெறுவதற்கும் அடிப்படையாகிறது.

### தேவாரத்தில் தமிழர் வழிபாட்டு முறைகள்

தேவாரத்தில் ஆடி, பாடி, அழுது வழிபடுவது திருஞானசம்பந்தரின் காலத்தில் நடைப்பெற்றுள்ளது. தொண்டு செய்தல், கோவில் வழிபாடு, தலயாத்திரை, அடியார்களின் ஒற்றுமையுணர்வு, சிவபெருமானுக்குரிய பூசை முறைகள் ஆகியவை அப்பரின் காலத்தில் நடைப்பெற்றுள்ளது. கோவிலைப் பெருக்குதல், மெழுகுதல், மாலைகளைத் தொடுத்து கட்டுதல், திருவிளக்கு ஏற்றுதல் ஆகியவை சுந்தரர் காலத்தில் நடைப்பெற்றுள்ளது.

இவ்வழிபாடுகளில் இளநீர், எலுமிச்சைப்பழம், பால் முதலிய பொருள்களால் திருமஞ்சனம் செய்து பின்பு அத்திருவுருவங்களுக்குத் திருநீறு, சந்தனம், குங்குமம் இட்டு, பட்டாடை அணிவித்து மலர் மாலைகள் சூடி, நெய்யினால் விளக்கு ஏற்றி, பச்சரிசியால் வெண்பொங்கல் செய்து, மூன்று அல்லது ஐந்து வாழை இலைகளில் பொங்கலை உருட்டி (பள்ளையம்) நடுவில் தேன், பால், கற்கண்டு, வாழைப்பழம் ஆகியவற்றை வைத்து படையலிடுவர். பின்பு, சூடம், சாம்பிராணி(துணல்-(நெருப்பு) மீது கொட்டி நறுமண புகையோடு தூபம் காட்டி வழிபடுவர். நாள்தோறும் சிவாலயங்களிலும் இவ்வழிபாடு நடைபெற்று வருகிறது.

### திருக்கோவில்களில் மூவரின் வழிபாடுகள்

''தேவார காலத்துக்கு முன்னர் அன்பு, மதம் அத்துணை அளவுக்குப் பரவி இருக்கவில்லை. வேதத்தில் கூறப்பட்டுள்ள சடங்குகளைச் செய்வது ஒன்றே போதுமானது என்று கருதினார்களாம். மக்கள் பெருவாரியாக எண்ணியிருந்த காலம், இச்சடங்குகளைச் செய்யும் அதிகாரம் மக்களில் ஒரு சிலர்க்கே என்பதால் மக்களின் பெரும்பாண்மையோருக்கு இறைவனை வழிபடவே வாய்ப்பில்லாமல் போய்விட்டது''[4] என்கிறார்.

தமிழர்களின் மதம் பலம் குறைந்து மங்கி இருந்த காலம். அக்காலக்கட்டத்தில் சம்பந்தரும், அப்பரும், சுந்தரரும் தோன்றியிராவிட்டால் நம் தமிழர்களின் இனமே அழிந்து போய் இருக்கவும் கூடும். இறைவனை உளம் நிறைந்த அன்பினால் வழிபடும் முறையைத் தமிழர்களுக்கு முதன் முதலாகத் தெளியக்காட்டியது நாயன்மார்களே ஆவர்.

திருஞானசம்பந்தர் பெருமான் தொடங்கி, அப்பர், சுந்தரர் மூவராகிய பெரியோர்கள் எல்லாம் வல்ல சிவபெருமானது திருவருள் இன்பத்துள் திளைத்து மகிழும் நிலையில் தாம் உணர்ந்த மெய்ஞானங்களையெல்லாம் தமிழ் மக்கள் அனைவரும் பெற்று இன்புறும்படித் தெளிவும் இனிமையும் பொருந்திய செந்தமிழ்ப் பாடல்களால் பாடி வழிபாடு செய்துள்ளனர். இவர்களின் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத்தமிழ் பாடல்களே சிவாலயங்கள் தோறும், தேவாரத்திருமுறைப்படிப்போற்றிப் பாடி வழிபட்டு வந்தனர்.

நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் ஊர் ஊராகப் பயணம் செய்து அங்குள்ள சிவன் கோயில்களை மக்களுக்கு அடையாளம் காட்டினர். அக்கோயில்களில் வழிபாடுகள் நடைபெற வழி வகுத்தனர். சேதமடைந்த கோயில்களைப் புதுப்பித்தனர். கோயில்கள் சமூக சேவை மையங்களாக மாறுவதற்கு மூவரும் வழி செய்தனர்.

### திருஞானசம்பந்தரின் கிரியை நெறி வழிபாடு

''சம்பந்தர் இறைவனைத் தம் தந்தையாகக் கொண்டார். இறைவன் புகழைப் புறத்தே பாடுதலும், அகத்தே நினைத்தலும் கிரியை நெறியாக அமைந்தன.''[5]

கிரியை என்பது அகத்தோடு புறமும் கலந்த பயிற்சியாகும். அதாவது உடல் உறுப்புக்களைக்

கொண்டு செய்யப்படும் வழிபாட்டில் உள்ளமும் ஈடுபடுவதாகும்.

கிரியை வழிபாட்டில் பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்க சுத்தி ஆகிய ஐந்து சுத்திகள் செய்யப்பெற வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. மனத்தால் பாவித்து கிரியை வழிபாடு செய்வர். நாள்தோறும் கிரியைத் தொண்டில் தலை நிற்பவர் இறைவனால் சாமீப பதவி (அது கடவுளது சமீபத்திருத்தல், ஒரு பதவி) அளிக்கப்பெறுவர் என சிவஞான சித்தியர் விளக்கியுள்ளார்.

கிரியை நெறி மார்க்கத்தைச் சத்புத்திரமார்க்கம் என்பர். இதனை,

*"புத்திரமார்க் கம்புகலின் புதிய விரைப்போது*
*புகைஒளி மஞ்சனம் அமுது முதற்கொண்டு ஐந்து*
*சுத்திசெய்த ஆசனம் மூர்த்தி மூர்த்திமானாம்*
*சோதியையும் பாவித்து ஆவாகித்து சுத்த*
*பத்தியினால் அருச்சித்துப் பரவிப் போற்றிப்*
*பிரிவினொடும் ஏரியில் வருகாரயமும் பண்ணி*
*நித்தமும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்*
*நின்மலன்தன் அருகிருப்பர் நினையுங்காலே"*[6]

என்ற பாடலில் கிரியை மார்க்கம் பற்றி மெய்கண்டர் குறிப்பாகச் சுட்டி விளக்கியுள்ளார்.

மலர் கொண்டு சிவபெருமானை வழிபடுவதை,

*"நறுமலர் நீருங்கொண்டு நாடொறு மேத்தி வாழ்த்தி"*[7]

என்ற பாடலில் மலரிட்டு வழிபடுதலைக் காட்டுகிறது. சிவபெருமானுக்குரிய எட்டு மலர்களின் சிறப்பு அவற்றைக் கொண்டு வழிபடுவதால் கிட்டும் பெரும்பயனும் 'திருவதிகை வீரட்டம் எட்டு நாண்மலர்" எனத் தொடங்கும் பதிகத்தில் முழுமையாக விளக்கியுள்ளார்.

**கிரியை நெறியில் அகப்பூசை**

புறத்தாலும், அகத்தாலும் இறை உருவத்திருமேனியை நோக்கிச் செய்யப்படும் வழிபாடு கிரியை ஆகும். இக்கிரியைத் தொண்டின் வழி நின்றவர் திருஞானசம்பந்தர்.

இதனை சேக்கிழார்,

*"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஒருங்கிய ஞானம்*
*உவமை இலாக் கலைஞானம் உணர்வறிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நாளில்"*[8]

என்ற பாடல் வாயிலாக எடுத்துரைக்கிறார்.

கிரியை நெறியின் சிறப்பு மனத்திற்குள் செய்யும் அகப்பூசை (உள்வழிபாடு) ஆகும். இதை செய்ய வேண்டிய முறை குறித்தும் அதனால் உயிர்கள் பெறும் பயன் பற்றியும் திருநாவுக்கரசர் பாடல்களில் விளக்கியுள்ளார்.

*"முந்திச் சூடிய முக்கண்ணினானடி*
*வந்திப் பாரவர் வானுல காள்வரே"*[9]

என்ற பாடல்கள் மூலம் கிரியை நெறியின் இறுதி நிலை இறைவனை அகத்தில் வழிபட்டு பெறும் அனுபவ உணர்வே ஆகும் என்கிறார்.

**திருநாவுக்கரசரின் சரியை நெறி வழிபாடு**

திருநாவுக்கரசர் இறைவனை அடைவதற்குரிய வழிமுறைகளைத் தம் பாடல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

"தாசமார்க்கம் சாற்றில் சங்கரன் தன் கோயில்
தலம் அலகிட்டு இலகு திருமெழுக்கும் சாத்தி
போதுகளும் கொய்து பூந்தார் மாலை கண்ணி
..............................
இயற்றுவது இச்சரியைச் செய்வோர் ஈசன் உலகிருப்பர்"[10]

சிவபெருமானுடைய திருக்கோயில் பணி, உருவத்திருமேனி வழிபாடு ஆகியவை சரியை எனப்படும். கோயில் தலம் அலகிடுதல், திருமுழுக்கிடுதல், மலர்தூவி வழிபடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் வளர்த்தல், தவவேடம் உடைய சிவனடியாரைக் கண்டல் அவரை வணங்கி அவருக்கு வேண்டுவன அளித்தல் முதலிய சரியை நெறி வழிபாடாகும்.

**சுந்தரமூர்த்தி யோக நெறி வழிபாடு (சகமார்க்கம்)**

யோகம் என்பது சகமார்க்கம். இறைவனிடம் நட்புறவு கொண்டு வழிபடும் முறையினை யோகநெறி ஆகும். புலன் பொருள்களின் தடுமாற்றத்தினின்றும் மனத்தை வெளிப்படுத்தி மிக உணர்ந்த தியானத்தில் ஈடுபட்டுக் கடவுளை வேண்டுகிறது ஆன்மா. இந்நிலையே யோகம் எனப்படுகிறது.

யோக நெறியில் இறைவனை வழிபட்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவர். யோகநெறி எனப்படும் தவநெறியில் தம்மைச் செலுத்துமாறு அவர் இறைவனை வேண்டிப்பாடுகிறார்.

*''கத்தங் கமழ்காரகில் சந்தாம் உந்திச்*
*செந்தண் புனல் வந்திழி பெண்ணை வடபால்*
*மந்தி பலமா நடமாடும் துறையூர்*
*எந்தால் உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே''*[11]

என்றும்,

*''நாதா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறிய''*[12]

*''ஐயா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே''*[13]

என்று பத்துப்பாடல்களிலும் இவர் வேண்டுவது யோக நெறியின் மீது இவருக்குள்ள ஈடுபாட்டினைக் காட்டுகிறது என்கிறார்.

தேவாரம் சைவர்களின் வழிபாட்டு முறைகளை வெளிப்படுத்துகிறது. மக்கள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்தும் முறையை வழிபாடு என்று வழங்குவர். சிவன் மீது பற்று கொண்டு பூ, கற்பூரம் முதலிய பூசை பொருள்களைக் கொண்டு ஆடியும் பாடியும் வழிபட்டுள்ளனர். திருஞானசம்பந்தர் இறைவனை தந்தையாகப் பாவித்து வழிபட்டுள்ளார். அவற்றைக் கிரியை நெறி என்று அழைத்துள்ளனர். திருநாவுக்கரசர் கடவுளிடம் தன் உடலை வருத்தி, பிறருக்குத் தொண்டு செய்தும் இறைவனின் ஆலயத்தைத் தூய்மை செய்தும் வழிபட்டுள்ளார். அவற்றைச் சரியை நெறி என்கிறோம். சுந்தரர் இறைவனிடம் நட்புறவுக் கொண்டு வழிபட்டுள்ளார். அவற்றை யோக நெறி என்று குறிப்பிடுவர்.

**சான்றெண் விளக்கம்**


1. தமிழ்ப பேரகராதி.

2. ச.வே.சுப்பிரமணியன், தமிழ் அகராதி, 1045.

3. க.த.திருநாவுக்கரசு, தமிழ்ப்பண்பாடு, ப.72.

4. திருஞானசம்பந்தர் புராணம், பெரியபுராணம், 28.1.

5. மாக்டர் டி.பி.சித்தலிங்கம், சைவ சமயத்தோற்றமும், வளர்ச்சியும், ப.31.

6. சிவஞானசித்தியார், சூத்திரம்.8, செய்யுள்.20.

7. திருநாவுக்கரசர், தேவாரம், ப.4.62.8.

8. திருஞானசம்பந்தர் புராணம், பெரியபுராணம், செய்யுள்.70.

9. திருநாவுக்கரசர், தேவாரம், பா.76.4

10. சிவஞான சித்தியார், சூத்திரம்.8, செய்யுள்.9.

11. சுந்தரர், தேவாரம், பா.7.13.3.

12. மேலது, பா. 7.13.3.

13. மேலது, பா.7.13.8.

# தற்காலக் கவிதைகளில் தாய்மொழி வழிக்கல்வி

**சி.அனிதா**

*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத்துறை,*
*அரசு கலைக் கல்லூரி,*
*அரியலூர் - 621 713.*

கல்வி செயல்பாட்டின் நோக்கமே மாணவர்களுக்குப் பாடம் சென்றடைவதுதான். மாணவனின் அறிவை வளர்த்து, அவனை சிந்திக்கத் தூண்டுவதே கற்பித்தலின் இலக்காக அமைந்துள்ளுது. கற்பிக்கும் பாடம் மாணவனின் மனதில் பதிந்து, அவனை மேலும் சிந்திக்கச் செய்து, தேர்வில் நல்ல மதிப்பெண்கள் வாங்க செய்வதுதான் கற்றல் கற்பித்தலின் உயர்ந்த கொள்கையாகும். அதனை சேதாரமில்லாமல் நிறைவேற்றும் ஆற்றல் தாய்மொழி வழிக்கல்வி ஒன்றுக்கு மட்டுமே உண்டு. தாய்மொழி வழிக் கல்வியால் பாடப்பகுதிகள் ஐயமின்றி நேரடியாக மாணவர்களுக்குச் சென்றடைகின்றன. இதன்மூலம் சுயமான சிந்தனைத் தூண்டல் ஏற்படுகிறது. கற்றலில் இனிமை ஏற்படுகிறது. கற்பித்தலும் எளிமையாய், உயிரோட்டமாய் அமைகிறது.

**தாய்மொழி வழிக்கல்வியின் சிறப்பு:**

தாய்மொழிவழிக் கல்வியே உயர்வானது, உன்னதமானதென கல்வியலாளர்கள் கருதுகின்றனர். ‘‘மொழி வழிப்பட்ட இன வளர்ச்சியே மனித குலத்தைப் பரிபூரண மனித இலட்சியங்களை நோக்கி மேலும் செலுத்தும்.’’[1] தாய்மொழிவழிக் கல்வி மனித இனத்தை நேர விரையமின்றி முன்னேற செய்கிறது. ‘‘மொழியே இனத்தைத் தோற்றுவித்தது, அறிவைத் தோற்றுவித்தது, கலையைத் தோற்றுவித்தது, அழகைத் தோற்றுவித்தது. ஆண்டவனைத் தோற்றுவித்ததே அதுதான். பண்பாட்டின் உட்கரு மொழியே. ஓர் இனத்துக்கு ஆளுமை தருவது. சுய சிந்தனை தருவது, தனி அழகு தருவது, பெருமிதமும் கர்வமும் தருவது தாய்மொழியே’’[2] என்பார் பொன்னீலன். ‘‘ஒரு குழந்தை கருவிலிருந்து அனைத்தையும் தாய்மொழியில் உணர்கிறது. அடிப்படைக் கல்வி தாய்மொழியில் இருந்தால் அதன் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்பது உலகம் முழுவதும் உள்ள அறிவியலாளர்கள், உளவியலாளர்கள், கல்வியாளர்கள் சொல்லும் கருத்து’’[3] என்றுரைக்கின்றார் டி.எல்.சஞ்சீவி குமார்.

பிறமொழி வாயிலாகக் கற்றல் என்பது நேரவிரையத்தையும், மனதளவில் மொழிபெயர்ப்புச் செய்து கற்றல் என்னும் தேவையற்ற மூளை சுமையையும், மற்றொன்று விடுத்தல் என்ற வகையில் கற்றலின் உழைப்பு வீணாகிப் போவதையும், தேவையற்ற குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது. பிறமொழிவழிக் கல்வியால் செயற்கையான, உயிரோட்டமில்லாத கற்றல், கற்பித்தலே நிகழ்கிறது. பிறமொழி மோகத்தாலும், பிறமொழி கற்பதால் வேலைவாய்ப்பு கிடைக்குமென்ற போலியான கருத்துருவாலும், பிற உலக

நாடுகளுக்குச் செல்ல முடியுமென்ற நம்பிக்கையாலும் தாய்மொழிவழிக் கல்வி புறந்தள்ளப்பெற்றுள்ளது. தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்பையும், தேவையையும் உணர்ந்த தற்காலக் கவிஞர்கள் அதனைத் தங்கள் கவிதைகளில் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளனர்.

**ஆங்கிலக் கல்வி மோகம்**:

ஆங்கிலவழிப் பள்ளிக்கூடங்களின் விளம்பரங்களும், மேல்தட்டு வர்க்க மக்களின் ஆடம்பர கல்வி மோகமும் நடுத்தர மற்றும் ஏழை மக்களை ஆங்கில வழிக்கல்வி மோகத்திற்கு அழைத்துச் செல்கின்றன. இத்தகைய மோகத்தால் தாய்மொழி வழிக்கல்வி சமூகத்தில் இழிவான பார்வைக்கு உட்படுத்தப்படுகிறது.

இதனை,

*''பள்ளிக்குப் போய் வந்த ஓசை*
*பையை உதறியது*
*டாடி*
*மம்மிகள்*
*உற்சாகமாய் ஓடி உருண்டார்கள்!*
*அம்மா அப்பா*
*அகராதிக்குள்ளிருந்து*
*முகம் வேர்த்துப் போனார்கள்!''*[4]

என்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஆங்கில வழிக்கல்வி மோக நிலையை வருத்தத்தோடு பதிவு செய்கின்றார்.

ஆங்கில வழிக்கல்வி கற்பது அவரவர் உரிமையாகும். ஆனால் அதனைக் காரணமாகக் கொண்டு தமிழ்மொழியை இழிவுபடுத்துவது பொறுத்துக்கொள்ள முடியாததாகும். இதனை,

*''ஆங்கிலமும்*
*தமிழும்*
*கலந்தே பேசும்*
*மழலை ஒருத்தி*
*ஒருநாள்*
*அம்மாவை 'மம்மி' யெனச்*
*சொல்லும்*
*அவசரத்தில்*
*'அம்மி' என்றாளாம்!*
*தப்பில்லை,*
*சொன்னவள்*
*'குழவி' என்பதால்*
*குழவியைத் தாங்குவது*
*அம்மிதானே*
*இதே போல*
*அப்பாவை*
*'டாடி' யாக்கிய மழலை*
*'ஆடி 'என அழைத்தால்*
*மொழியெல்லாம்*
*ஆடிப் போகாதா?*
*அழிந்து தேயாதா?''*[5]

என்று முனைவர் அ.அறிவுநம்பி ஆங்கிலவழி மோகத்தால் தாய்மொழி தேய்ந்து போவதை வேதனையோடு பதிவு செய்துள்ளார்.

*ஏட்டுக்கல்வி ஆங்கிலேயே*
*மேட்டுக் கல்வியாய்*
*நாற்காலி இட்டு வீற்றிருந்தது*
*நாட்டுத் தமிழ்க்கல்வி – குப்பை*
*மேட்டுக் கல்வியாய்*
*குடியும் பெயர்ந்தது.*

*ஆயிரங் காலப்பயிர் – நம் மொழி*
*ஆங்கில வெந்நீர் பாய்ச்சலில்*
*அழுகி அழுகி அழுகித் தொலைந்தது.*
*கல்விக் கூடங்கள் – ஆங்கிலச்*
*செலவிக் கூடங்களாய் மாற*
*தாய்ப்பால்*
*தண்டனையைச் சந்தித்தது..*[6]

என்று கவிஞர் சிற்பி தமிழ் வழிக்கல்விக்குச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள அவலநிலையைக் குறிப்பிடுகின்றார்.

*''தமிழ்வழிக் கல்வி*
*ஆங்கில வாடை*
*அலிகளின் கும்மி''* [7]

என்று புலவரேறு அரிமதி தென்னவன் தமிழ் வழிக்கல்வியைக் கேள்விக்குறியாக்கியவர்களைச் சாடுகின்றார்.

ஆங்கில வழிக்கல்வி தாய்த் தமிழ் மொழியின் சிறப்பைக் கொடுத்துவிடுமோ என்று தற்காலக் கவிஞர்கள் அச்சம் கொள்கின்றனர். பிஞ்சு உள்ளங்களில் தாய்மொழி பற்றிய தரக்குறைவான மதிப்பீட்டை உருவாக்குவதைத் தற்காலக் கவிஞர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். ஆங்கில வழிக்கல்வி

கற்றாலும் பரவாயில்லை, அதற்காக தாய்மொழியை இரண்டாம் தரமாகக் கருதக்கூடாது என்பது தற்காலக் கவிஞர்களின் அழுத்தமான கருத்தாகும்.

**தாய்மொழிவழிக் கல்வி சிறக்க:**

தாய்மொழி வழிக்கல்வி தாய்ப்பால் போன்றது என்பர். இயல்பான தொப்புள்கொடி உறவாக, எந்தவித ஒப்பனையுமின்றி தாயின் அன்போடு கலந்தது தாய்மொழி வழிக்கல்வியாகும். ''மனித கம்பீரம் உள்ள இனங்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்மொழியிலேயே கற்பிக்கின்றன''[8] என்பார் பொன்னீலன். ''தாய்மொழியே கல்விமொழி''[9] என்றுரைக்கின்றார் புதிய கல்வியின் தந்தை டாக்டர் ஜாகீர் உசேன்.

தாய்மொழி வழிக்கல்வி மேலும் சிறக்க வேண்டுமென்றும், இத்தகைய கல்வியை அரசும் ஆதரிக்க வேண்டுமென்றும் தற்காலக் கவிஞர்கள் கருதுகின்றனர்.

*''பூவென்றால் எப்போதும் மணத்தல் வேண்டும்*
*புகழென்றால் நாள்தோறும் வளர்தல் வேண்டும்*
*பாவென்றால் கற்பனைகள் மிளிர்தல் வேண்டும்*
*பழமென்றால் சுவையேதான் இருத்தல் வேண்டும்*
*நாவென்றால் சொன்ன சொல்லைக் காத்தல் வேண்டும்*
*நாடென்றால் குளிர்தென்றல் உலவ வேண்டும்*
*கல்வியெனில் தமிழ்க்கல்வி ஓங்கள வேண்டும்''*[10]

என்று கவிஞர் குலோத்துங்கன் தமிழ் வழிக்கல்வியைச் சிறப்பிக்கின்றார். தமிழகத்தில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிற்று மொழியாக தமிழ்தான் இருக்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.[11] தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்டார் ஜீவா. தமிழ்மொழி கல்விக்கான எல்லா பாடத்திட்டமும் தயாரித்தளிக்க முயன்றார் ராஜாஜி.[12] இத்தகையோரின் முயற்சிக்குத் தடையாக பணம் படைத்தோரும், அதிகார வர்க்கத்தில் இருப்போரும் செயல்புரிகின்றனர்.

*''மழலையர்*
*ஆங்கிலப் பள்ளி*
*வெள்ளையர் மடம்!''*[13]

என்று கவிஞர் அரிமதி தென்னவன் தாய்மொழி வழிக்கல்விக்கு எதிரானவரைச் சாடுகின்றார். இதயையே,

*''புட்டிப்பால் அருந்தும் குழந்தைக்கு*
*எங்கே தெரியப் போகிறது*
*உயிரின் சூடு''*[14]

என்று கவிஞர் சுகன் தாய்மொழி வழிக்கல்வியைச் சிறப்பித்து, ஆங்கில வழிக் கல்வி மோகத்தை வன்மையாகக் கண்டிக்கிறார். கல்வியின் பெயரால் தாய்மொழி நசுக்கப்படுவதைக் கவிஞர் பொறுத்துக் கொள்ளவில்லை. இத்தகைய கோபம் தற்காலக் கவிஞர்களில் பெரும்பான்மையானோருக்கு உள்ளது.

**தாய்த்தமிழ்ப் பள்ளி:**

தமிழ் வழிக்கல்விக்காகத் 'தாய்த்தமிழ்ப் பள்ளி' என்னும் புத்தம் புதுவகை அமைப்பு தோன்றியிருக்கிறது. தமிழ்க்குழந்தையைத் தரமான மனிதக் குழந்தையாக வளர்க்கும் உயர் பணியை அர்ப்பணிப்பு உணர்வோடு இது செய்து வருகின்றது.[15] தமிழக அரசு சமச்சீர் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி தாய்மொழி வழிக்கல்வியை ஓரளவு ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழகத்தில் கோபிச்செட்டிப்பாளையத்தில் இயங்கும் தாய்த்தமிழ்ப் பள்ளி, தாய்மொழி வழிக் கல்வியை மிகச்சிறப்பாக செயலாற்றி வருவதனை இதழ்கள் பாராட்டுகின்றன. மழலையர் கல்வி தொடங்கி உயர்கல்வி வரை தமிழிலேயே சாத்தியமாகும் என்பதை நிரூபிக்கிறது தாய்த்தமிழ்ப் பள்ளி.[16] அரசும் தமிழ்ப் பற்றாளர்களும் நினைத்தால் தாய்மொழிவழிக் கல்வியை எளிதாக நிறைவேற்றிட வாய்ப்புண்டு.

**நிறைவுரை:**

தாய்மொழி வழிக்கல்வியானது கற்றலையும் கற்பித்தலையும் உயிரோட்டமாகக அமைத்திட உதவுகின்றது. பிறமொழி வாயிலாகக் கற்றல் மனச்சோர்வையும், நேர விரயத்தையும் ஏற்படுத்துகின்றது. பிறமொழி மோகத்தால் பொருளாதார சேதாரமும், தாய்மொழியை நசுக்குதலும் நிகழ்கின்றது. ஆங்கில வழி மோகத்தால் தமிழ் வழிக்கல்வி அவல நிலைக்கு ஆளாகிறது. தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தாய்மொழி வழிக்கல்வியை வளர்தெடுக்க முயற்சியை மேற்கொண்டுள்ளன. உயிரோட்டமுடைய தாய்மொழி வழிக்கல்வியைச் சிறப்பித்தும், வணிக நோக்கத்தில் இயங்கும் ஆங்கிலவழிக் கல்வி மோகத்தைக் கடுமையாகச் சாடியும் தற்காலக் கவிஞர்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். கல்வியின் செயல்பாடு முழுமையானதாக, சிறப்புடையதாக அமைய வேண்டுமென்பதே தற்காலக் கவிஞர்களின் அவா ஆகும்.

**சான்றெண் விளக்கம்:**

1. பொன்னீலன், தாய்மொழிவழிக் கல்வி, ப.5

2. மேலது, ப.5

3. தி.இந்து, 18.09.2013, ப.2

4. தமிழன்பன், ஊர் சுற்றி வந்த ஓசை, ப.91

5. அறிவுநம்பி, புள்ளிகள், ப.50.

6. சிற்பி, தேவயானி தேர்ந்தெடுத்த கவிதைகள், ப.195

7. அரிமதி தென்னவன், நிலவுக்குள்... நிலா... நிலா!., ப.36.

8. பொன்னீலன், தாய்மொழிவழிக் கல்வி, ப.11

9. மேலது, ப.14

10. குலோத்துங்கன், குலோத்துங்கன் கவிதைகள், ப.87.

11. பொன்னீலன், தாய்மொழிவழிக் கல்வி, ப.27.

12. மேலது, ப.33

13. அரிமதி, தென்னவன், நிலவுக்குள் நிலா... நிலா!, ப.58.

14. பொன்னீலன், தாய்மொழிவழிக் கல்வி, ப.7

15. மேலது, ப.26.

16. தி.இந்து, 18.09.2013, ப.2.

# ஐம்பெருங்காப்பியங்களில் மனித நேயப் பண்புகள்

**த.குமுதவள்ளி**

*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ் ஆய்வுத்துறை,*
*அரசு கலைக்கல்லூரி,*
*அரியலூர் - 621 713.*

தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பவை ஐம்பெருங்காப்பியங்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பவையாகும். செவ்வியல் இலக்கியம் என்பது மிக உயர்ந்தது. 41 இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியம் வாய்மொழி இலக்கியம் தான் முதன்முதலில் தோன்றிய செவ்வியல் இலக்கியமாகும். வாய்மொழி இலக்கியமும் வரி வடிவ இலக்கியத்தாக்கமும், தான் செவ்வியல் இலக்கியமாகும்.

மனித உயிர் மகத்தானது பிறவிகளில் மனிதப்பிறவி என்பது அரிய ஒன்றாகும். எந்த ஒரு பிறவிக்கும் இல்லாத தனித் தன்மை மனிதப் பிறவிக்கு மட்டும் தான் உண்டு. மனிதன் தான் பேசுகிறான், எழுதுகிறான், படிக்கிறான், பணிகளில் ஈடுபடுகிறான். போராடுகிறார், வறுமையால் உழல்கிறான். வேறு எந்தப் பிறவிக்கும் இது இல்லை. அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்பார்கள். சிலம்பில் மனிதநேயம் ஓர் உயிர் ஆதரவற்று தவிக்கும் பொழுது அவ்வுயிரை ஆதரித்து, ஆறுதல் கூறி தானும் ஒன்றிப் போகிறோம்.

பிறர் துயிரைப் போக்குவது மனித நேயத்தின் மிகச் சிறந்த பண்பாகும். இளங்கோவடிகள் அடைக்கல நேயத்தின் மாண்பை உணர்த்த சமணத் துறவியாகிய கௌந்தியடிகளைத் தேர்ந்தெடுக்கிறார். சமணர்கள், உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி ஆகிய நான்கு செயல்களைத் தானமாகக் கருதியதோடு அதை மக்களுக்குச் செய்வதைத் தமது பிறவிப் பயனாகவே கருதுகின்றனர். மனிதனுக்கு மனிதனே அடைக்கலம் கொடுத்துக் கொள்ளல் என்பது மனித சமுதாயத்தின் போக்கால் அது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

உலகப் பற்றுக்களை எல்லாம் விடுத்துப் பெருந்தவம் புரியும் துறவிகளுக்கும் ஞானிகளுக்கும் கிடைக்கக் கூடிய சாதாரண மக்களுக்கு அரிதில் கிடைக்கப் பெறாத வீடுபேற்றின் பயனை இல்லற ஒழுக்கத்தினை அறநெறியில் ஒழுகும் சாதாரண மக்களும் ஆதரவற்ற உயிர்களைப் பாதுகாத்து அடைக்கலத் தானத்தை செய்து வந்தால் மனித சமுதாயத்தின் மிகப்பெரிய வீடு பேற்றினைப் பெறலாம் என்பதைக் கௌந்தியடிகள், மாதரிக்கு உணர்த்துகிறார். அதன் வாயிலாக மனித நேயத்தை இளங்கோவடிகள் மக்களுக்கு உணர்த்தவே அடைக்கலக் காதையை அமைத்தார் எனத் தெரிகிறது.

மாதவியுடன் கோவலன் வாழ்ந்த காலத்தில் மாதவி மகளுக்கு மணிமேகலை எனப் பெயர் சூட்டி வாழ்த்தித் தானம் வழங்குகிறான். தானம் பெற வந்த ஒரு முதிய மறைவனை மதயானை இழுத்துப் பற்றிக் கொள்கிறது. அவ்வேளையில் சட்டென்று பாய்ந்து யானைத் துதிக்கையிலிருந்து முதியவரைக் காப்பாற்றுகிறான். இந்த இடத்தில் கோவலன் கருணை மறவனாக விளங்குகிறான்.

பார்ப்பனப் பெண் ஒருவள் தன் குழந்தையின் உயிரைப் பாம்பிடமிருந்து காப்பாற்றிய கீரியைத் தவறாகவுணர்ந்து கொன்று விடுகிறாள்.

இந்தப் பழி பாவச் செயலுக்காகக் கணவனால் துறக்கப்பட்ட அந்தப் பார்ப்பனியின் பாவம் நீங்கப் பரிகாரம் காணும் வகையில் நிரம்பத் தானம் செய்தும் கணவனுடன் அவளைச் சேர்த்தும், அவர்கள் வாழ்க்கையில் மனித நேயத்துடன் செல்வத்தை வாரி வழங்கியவன் கோவலன்.

**மணிமேகலையில் மனித நேயம்**

இல்லற மாட்சியை இனிது எடுத்து விளக்கிச் சொல்வது சமணக் காப்பியமாகிய சிலப்பதிகாரம் துறவற மாட்சியை இனிது. எடுத்து விளக்கிச் செல்வது பௌத்தக் காப்பியமாகிய மணிமேகலை இரண்டும் பல சிறப்பான செய்திகளில் ஒருமைப் பாட்டுடன் இயங்குவதால் இரட்டைக் காப்பியம் என்றழைக்கப்படுகிறது.

*''பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்க என வாழ்த்தி''*

என வரும் அடிகள் இரண்டு காப்பியங்களிலும் பயில்வதைக் காணலாம். துறவில் மனித நேயத்தால் பலரிடமும் அருள் சுரந்து பழகக் கூடியவர்கள் எனினும் பொருட் சேமிப்பினைக் கொள்ள விரும்பாதவர்கள். இல்லறத்தார்களோ பொருட் சேமிப்புடன் துறவியர்க்கும் வறியவர்க்கும் தன்பால் வந்து இரந்துவர்க்கும் துணைபுரியக் கடமைப்பட்டவர்கள். வள்ளுவரும் இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் இதனைத்

*''துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் – இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை''* (குறள் 43)

எனக் கூறப்படுகிறது.

அமுத சுரபி வாயிலாக மக்களின் பசிப்பிணி தீர்க்கும். மனித நேயத்தை மணிமேகலையில் காணப்படுகிறது.

*''பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்*
*தவப்பெரு நல்லறம் சான்றின்''*
என்னும் அடிகள் இதை உரைக்கின்றன.

**சிந்தாமணியில் மனித நேயம்**

சமணமும் பௌத்தமும் பிறவி நோய் நீங்குவதற்குத் துறவறத்தை வலியுறுத்திச் சென்றாலும் இல்லறத்தை முற்றிலும் கடிந்து ஒதுக்கவில்லை. கந்துக்கடன் மூலம் மனிதநேயத்தை உணர்த்துகிறார். திருத்தக்கதேவர். கச்சந்தன போருக்குச் செல்கையில் நிறை மாத கர்ப்பிணியாகிய மனைவியை மயிற்பொறியில் ஏற்றி அனுப்பினான். சச்சந்தனின் குழந்தையை கந்துக்கடன் எடுத்து வளர்த்தான் என்பது வரலாறு பிறர் குழந்தையைத் தன் குழந்தையாகப் பாவித்து வளர்க்கும் மனிதநேயத்தை சீவக சிந்தாமணியில் காண முடிகிறது.

*''உடற்றும் பணித்தியுடைம்பின் உயிர் பெய்திட்டு*
*அடுத்துணர்வு நெய்யாக ஆற்றல் துவையாகக்*
*குடித்துண்ணங் கூற்றங் குழல் பிரியா முன்னே*
*கொடுத்துண்டின் கண்டிர் குணம் புரிமின் கண்டீர்''*

என்னும், மனிதநேயச் சிந்தனை சீவக சிந்தாமணியில் வரையுறுத்தப்படுகிறது.

**வளையாபதியின் மனிதநேயம்**

*''பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை மேவத்*
*துறையிலா வசைவாவிடது கிலிலாக் கோத்தூய்மை*
*நறையிலா மாலை கல்வி நலமிலப்புலமை நன்னீர்ச்*
*சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வமன்றோ''*

என்ற பாடல் வளையாபதிக் காப்பியத்தில் மனிதநேயம் வலியுறுத்தப்படுவதைக் காணமுடிகிறது.

**குண்டலகேசியில் மனிதநேயம்**

நாகுத்தனார் எழுதிய இக்காப்பியம் வாதக் காப்பியங்களுள் ஒன்றாதலால் இக்காப்பியம் மத வேறுபாடுகள் தலையெடுத்தக் காலத்தில் எப்படியோ மறைந்து போய்விட்டது. உலகிலே உற்றவர்கள். இறந்து போனால் அழுது அரற்றி, ஆறுதல் அடைகின்றனர். மக்கள் பிறர் சாவதற்கு அழுகின்ற மக்கள் தங்களுக்கு நேரிடும் நிலையாமையைப் பற்றி ஏனோ சிந்திப்பதில்லை. குழந்தைத் தன்மை செத்தும் இளைஞனாகியும் இளமைப் பருவம் செத்தும் முதியவனாகியும் இவ்வாறே நாளும் நாளும் சாவது பற்றி

ஏன் அழவில்லை என்று வாழ்வின் நிலையாமையைக் காட்டுகிறது.

*''பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மைசெத்தும்*
*காளையாம் தன்மை செத்தும் காமுறும் இளமை செத்தும்*
*மீளும் இவ்வியல்பும் இன்னே மேல்வரும் மூப்புமாகி*
*நாளும் நாம் சாகின்றோமே நமக்கு நாம் அழாத தென்னே''*

இன்பத்துக்கு மட்டுமல்லாமல் துன்பத்துக்கும் அவலச் சுவைக்கும் அடித்தளமாக விளங்குவது மனிதநேயமே என அறிய முடிகிறது.

மனிதனை மனிதனாக்குவது இலக்கியத்தின் பணி. தமிழ் இலக்கியம் காலந்தோறும் எழுந்து மக்களை நல்ல நெறியில் அழைத்து செல்கிறது. காப்பியங்களும் புராணங்களும் மனித உணர்வுகளைக் கதைகளின் வழியாக வெளிப்படுத்தி தம் பங்கை ஆற்றியிருக்கிறது. மனிதனிடம் அன்பு, இரக்கம் போன்ற உணர்வுகள் குன்றிவிடக் கூடாது என்ற நோக்கில் புலவர்கள் மனித உணர்வுகளைத் தத்தம் படைப்புகளில் பதிவு செய்து வந்துள்ளனர். துயர் போக்கும் வகையில் பொருள் தந்து உதவி நிற்கிறான் கோவலன். மனிதநேயம் காரணமாகத் தன் உயிரையும் தியாகம் செய்யுமளவிற்குக் கோவலன் துணிவதையும், பொருட் கொடை நல்குவதையும் தன் உயிர்ப் பண்பாகக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. இவ்வாறாக ஐம்பெருங் காப்பியங்களில் மனிதநேயம் நிறைந்துள்ளதை அறிய முடிகிறது.

*''சின்னஞ்சிறு குருவிபோலே – நீ*
*திரிந்து பறந்து வா பாப்பா*
*வண்ணப்பறவைகளைக் கண்டு – நீ*
*மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா''*

எனக் கவிஞர் குழந்தைகளுக்குக் கூறிய அறிவுரை மனித குலம் அனைத்திற்கும் ஏற்புடையது. இறைவா எல்லோருக்கும் குழந்தை மனத்தைக் கொடு, சிகரம் தொடுவோம் மனிதம் மலரச் செய்வோம் மகிழ்ச்சி அடைவோம்.